சாமுவேல் வேதநாயகம் அசரியா

ஜி. வி. ஜோப்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

சாமுவேல் வேதநாயகம் அசரியா

டோர்னக்கல் அத்தியக்ஷர்

ஜி. வி. ஜோப்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
(In association with the United Society for Christian Literature)
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
and at
MYSORE BANGALORE TIRUVALLA

G.L.
COPYRIGHT
First published 1954

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1954. B7408

பொருளடக்கம்

அத்தியாயம்		பக்கம்
1.	இளமைப் பருவம்	1
2.	ஒய். எம். ஸி. ஏ. காரியதரிசி	10
3.	இந்திய மிஷனெரி சங்கம்	16
4.	முதல் இந்திய அத்தியட்சர்	32
5.	டோர்னக்கல் அத்தியட்ச ஆதீனம்	36
6.	உயர்குலத்தோர் வருகின்றனர்	54
7.	ஆந்திர தேசத்தில் கிறிஸ்து சமய வளர்ச்சி ...	63
8.	அசரியாவின் தேச டக்தி	72
9.	திருச்சபை ஒன்றிப்பு	81
10.	அசரியா இந்தியத் திருச்சபைத் தலைவர் ...	93
11.	கிறிஸ்தவ உலகின் தொண்டன்	106
12.	இரண்டாவது மகா யுத்தம்	115
13.	ஓட்டத்தின் முடிவு	124

அத்தியாயம் 1

இளமைப் பருவம்

கற்பாறையெனும் சிறப்புப் பெயர் புனைந்த பேதுரு, இடி முழக்கத்தின் மக்களுள் ஒருவராம் யாக்கோபு, இயேசுபெருமானை இருதயகமலத்தில் இருத்தி இடையருது தியானித்த பரமார்த்திகராய யோவான், ஆயத்துறையிலிருந்து தடுத்தாட்கொள்ளப்பெற்ற மத்தேயு, வைத்திய நிபுணராம் லூக்கா, பாலிய சீடனாகிய மார்க்கு, கலைவாணரும் சொல்வன்மையுடையவருமான பவுல் ஆகிய அப்போஸ்தலர் கிறிஸ்து சமயமாகிய இளம் பயிரைத் தம் வாழ்க்கைத் திறனாலும், வாக்காலும், எழுத்தாலும், சலியா உழைப்பாலும், தியாகத்தாலும் நீர்ப்பாய்ச்சி வளர்த்தனர். அவர்கட்குப்பின், கிறிஸ்துபெருமானிடம் தாம் கொண்ட அளவில்லா அன்பினால், அவரை மறப்பதினும் இறப்பதே நலமெனக் கருதிய ஆண் பெண் பாலகராகிய பிராணத் தியாகிகள் திருச்சபையாகிய தருவிற்கு எருவிட்டார்கள். மத விரோதிகளும் அவர்கள் இழைத்த தீங்குகளும் நீங்கித் திருச்சபை சாவதானமாக வளர்ந்தோங்கத் தொடங்கிய காலங்களில், சபைப் பிதாக்களென்று போற்றப்பெறும் பக்தசிகாமணிகள் பலர் பதிதங்களைக் கண்டித்துச் சுத்த சுவிசேஷப் போதனையைக் கிறிஸ்தவ மக்களுக்குப் புகட்டினர். பின்னர் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் கிறிஸ்து மதத்தைத் தழுவியது; செல்வமும், பதவியும், அரசாங்கச் சலுகைகளும் வறிஞரின் நற்செய்தியாகத் தோன்றிய ஆடம்பரமற்ற திருச்சபையைக் கறைப்படுத்தி, மக்கள் விண்ணை நோக்காது மண்ணையே நோக்குமாறு தூண்டிவிட்டன. அப்பொழுது சிறந்த பக்தர் தோன்றி, துறவு பூண்டு, சந்நியாச ஆசிரமங்களை ஆங்காங்கு நிறுவிச் சபைகளுக்குப் புத்துயிரும், புனித நோக்கமும் அளித்துதவினர். அவ்வாறே தெய்வ பக்தி குன்றி சுகபோக நாட்டமது மிஞ்சி, சபை நசிந்துபோகும் தருவாயிலிருந்தபொழுதெல்லாம் சபையின் உயிர் நாடியாய் மறைந்துறையும் பரிசுத்த தெய்வ ஆத்துமன் மதவைராக்கியம் கொண்ட சீர்திருத்தக்காரரை எழுப்பி, அன்பைப் பிரவாகித்திருக்கின்றார். நவ நாகரிகத்தின் மூலகாரணமாக இயந்திரங்கள் அமைக்கப்பெற்றுத் தொழிலும், வாணிபமும், பூத பௌதிக சாஸ்திரமும் தீவிர முன்னேற்றமடைந்திருக்கும் நிகழ்காலப் பகுதியில், கிறிஸ்தவ நாடுகளிலிருந்து கப்பற் பிரயாணிகளும், வியாபாரிகளும்

அவர்களைப் பின்பற்றி யுத்த வீரரும், ஆப்பிரிக்கா, ஆசியாக் கண்டங்களின் நாடுகளுக்குள் ஓயாத வெள்ளப் பெருக்காகப் போந்தனர். இதனால் மேற்குத் தேசங்களின் செல்வமும் ஆதிக்கமும் ஓங்கின; கீழ்நாடுகளின் செல்வமும், சுதந்திரமுங் குன்றின. இங்ஙனம் மேனாட்டின் நாகரிகத்தின் ஓர் பகுதி கீழ்நாடுகளில் படர்ந்து, அவைகளை நெருக்கிப் பிழிந்துகொண்டிருக்கையில், அந்நாகரிகத்திற்கு அடிகோலிய சுவிசேஷமொன்றே மேற்குக் கிழக்கு நாடுகளின் உறவில் தோன்றிய கருநிற மேகத்தின் வெண்ணிற விளிம்புபோன்று, சிந்திப்போர்க்குச் சிறிதளவு நம்பிக்கையைக் கொடுக்கின்றது. ஸெஸில் ரோட்ஸ் தென்னாப்பிரிக்காவின் நிலவளத்தையும் நீர்வளத்தையும் இயற்கைச் செல்வத்தையும் கண்ணுற்று வாயூறி அவற்றைத் தன் தேயத்திற்குச் சொந்தமாக்கிவிடவேண்டுமென விரும்பினன். டேவிட் லிவிங்ஸ்டன் எனும் கிறிஸ்துவின் அடியான் அந்நாட்டையே பார்த்து, அதன் வளத்தையும் வனப்பையுங் கண்டு வியந்தானெனினும், அஞ்ஞானாந்தகாரத்திலிருந்த அந்நாட்டு மக்களைச் சுவிசேஷத்தின் பிரகாசத்திற்குள் கொண்டுவரவேண்டுமென்ற பேராவல் கொண்டான். முன்னவன் முயற்சியால் தென்னாப்பிரிக்கா ஆங்கில நாட்டிற்குச் சொந்தமாயிற்று. அவனும் குபேர சம்பன்னனாக மரித்தான். லிவிங்ஸ்டனோ அஷ்ட தரித்திரனாக அந்நிய நாட்டில் உயிர் நீத்தனன். அவன் ஈட்டிய பொருள் கல்வியறிவற்ற நாட்டு ஜனங்களின் அன்பும், லிவிங்ஸ்டோனிய மிஷன் என்றோர் கிறிஸ்தவ ஸ்தாபனமுமேயாகின்றன. ஒருவன் சேகரித்த பொருள் ஓயாத சச்சரவுக்கும், காலாகாலத்தில் உலகத்தைக் குலுக்கியெடுக்கும் யுத்தத்திற்கும் காரணமாயிருக்கின்றது. மற்றவன் செய்த சேவையின் ஞாபகச் சின்னமாகிய மிஷன் அன்பின் உறைவிடமும், ஞானச்சுடர் வீசும் தீப ஸ்தாபியுமாக விளங்குகின்றது. ஒருவன் அழிந்துபடும் உலக இராஜ்யங்களுள் ஒன்றின் சேவகன். மற்றவன் கிறிஸ்து அரசனின் முடிவற்ற தர்ம இராஜ்யத்தின் சேவகன்.

அந்த இராஜ்யத்தின் செங்கொடியை நம் நாட்டின் தென் பகுதியில் ஊன்ற இரண்டு ஜர்மானியரான பக்தர் கங்கணங்கட்டிக் கொண்டு வந்து தரங்கம்பாடித் துறைமுகத்தில் கப்பலை விட்டிறங்கித் துவேஷ நெஞ்சினனாகிய டேனிஷ் கவர்னர் துரையைப் பேட்டி காண வேகாத வெயிலில் நாளெல்லாம் அவன் மாளிகையின் முன்னின்று தவித்தனர். அவர்கள் ஆங்கு ஏற்றிய திருவிளக்கில் தத்தம் தீபங்களைக் கொளுத்திக்கொண்டு ஸ்வார்ட்ஸ் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஜில்லாக்களுக்கும், ரிங்கல்டாப் திருவிதாங்கூருக்கும் சென்றனர். ஜாதி மத எதிர்ப்புகளாகிய காற்றுகளினின்றும் தம் தீபங்களை விசுவாசமென்னும் கரங்களால் பொதிந்து காத்துத்

தாம் சென்றவிடமெல்லாம் கிறிஸ்துவின் நற்செய்தியை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நான முழுக்கால் தமது விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிக்கையிட்ட வீரமக்களைச் சபைகளாக அமைத்து, மெய்யான ஏக தெய்வத்தையும், அவர் அபிஷேகித்தனுப்பிய குமாரக் கடவுளையும் பூஜிப்பதற்கென்று கோயில்களையும் கட்டினர். அவர்கள் கட்டிய பெரிய கோயில்களிலொன்று, அகன்ற செம்மணல் தேரியின் மத்தியில் நீர்வளம் பொருந்திய ஒரு கிராமத்திலிருக்கிறது. அக்கிராமத்திற்கு மெஞ்ஞானபுரம் என்று பெயர். அதைக் கிராமம் என்று ஒருவர் சொன்னால், மெஞ்ஞானபுரத்தார் சினங்கொள்வர். ஆனால் அங்குக் கிறிஸ்தவ சபை முதன் முதலாக ஏற்பட்டபொழுது அது ஓர் குக்கிராமமாகத்தானிருந்தது. இப்பொழுது அது ஒரு பட்டினமாக இருத்தல் கிறிஸ்து சமயம் அவ்வூராருக்குச் செய்த இகபர நன்மைகளின் மேன்மையை எடுத்துக் காட்டும் உண்மையாகின்றது. அப்பெரிய கோயிலில் உறவினர் பெற்றோருடைய சீற்றத்தையும் அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டத்தையும் தாங்கிக்கொண்டு, தாம் கிறிஸ்து பெருமானிடம் கொண்ட அன்பையும் பக்தியையும் அறிக்கையிட முன்வந்தவர்களின் தொகை பெரிது. அவர்களிற் சிலர் தென்னிந்தியத் திருச்சபைக்குத் தூண்களாக விளங்கியிருக்கின்றனர். கிறிஸ்து மதப்பிரசாரத்தைக் கண்டனஞ் செய்வோர் பலருளர். இந்து மதத்தினர் கண்டனஞ் செய்வதில் ஆச்சரியமில்லை. தம் மதத்தை விட்டுப் புறமதத்தைச் சிலர் தழுவுவதால் தம் மதத்திற்கு நஷ்டமும் அபகீர்த்தியும் விளையுமென்றெண்ணி அவர்கள் கண்டனஞ் செய்கின்றார்கள். ஆனால் கிறிஸ்து சமய வாதிகளென்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் சில மேனாட்டாரும் அவ்விதமே செய்கின்றார்கள். மிஷனெரிச் சேவையின் பிரயோஜனத்தைக் குறித்த சந்தேகங்களை நிவிர்த்திப்பதற்கு மெஞ்ஞானபுர ஆலயத்தின் ஞானஸ்நானப்பாணியிலிருந்து புறப்பட்ட அநேக உன்னத கிறிஸ்தவ ஜீவிய நதிகளே போதும். கிறிஸ்து மதம் சென்றவிடமெல்லாம் இத்தகைய நதிகள் சுரந்து வழிந்திருக்கின்றன; வழிந்துகொண்டுமிருக்கின்றன. இப்பொழுது நாம் மெஞ்ஞானபுரத்து ஊற்றுக் கண்ணைத்தான் உற்று நோக்க முனைந்துள்ளோம்.

தகப்பனார்

1839-ம் ஆண்டில் ஒரு நன்னாள். அன்று மெஞ்ஞானபுரம் ஆலயத்தில் கூடியிருந்த கிறிஸ்துவினடியார்க்கு மனமகிழ்ச்சியைக் கொடுத்த சம்பவம் நடக்கின்றது. வேலாயுதமென்ற ஒரு பாலியன் சபையின் முன்னின்று, கிறிஸ்து பெருமானைத் தனது குருவும் ஆத்தும இரட்சகருமாக ஏற்றுக்கொண்டேனென்று பகிரங்க அறிக்கை

செய்கிறான். சபையின் சார்பாகப் போதகப் பிதாவும் அன்புக்கும் கண்ணியத்திற்கும் உரியவருமாகிய தாமஸ் மிஷனெரியார் வேலாயுதத்தைத் திருச்சபையின் அங்கத்தினனாக ஏற்றுக்கொண்டு, திரியேக தெய்வ நாமத்தினால் அவனுக்கு ஞான தீக்ஷை யளித்து, தாமஸ் வேத நாயகம் என்ற புதிய பெயரை இடுகின்றார். இந்த வாலிபனுடைய தகப்பனார் ஒரு தானிய வியாபாரி. அவர் தானிய மூட்டைகளையும், கருப்புக்கட்டி மூட்டைகளையும் ஏற்றிக்கொண்டு ஊரூராகச் சென்று விற்று வரும்பொழுது, வழியருகே யிருக்கும் கோயில்களில் காணிக்கை செலுத்திக் கைகூப்பி, விக்ரகத்தை வணங்கிச் செல்லுவது வழக்கம். மகனாகிய வேலாயுதமோ, கிறிஸ்து சமயப் போதனையைச் சிறிது கேட்டு, அதைக்குறித்துப் பூரண ஆராய்ச்சி செய்ய விரும்பினன். மெஞ்ஞானபுரத்தில் அநேக வருஷங்களாகச் சுவிசேஷப் பிரசாரம் செய்துவந்த தாமஸ் பாதிரியாரிடம் அவன் ஓடினன். அவரிடம் உபதேசம் பெற்றனன்.

மிஷன் பாடசாலையில் கற்றுத் தேறியபின் வேதநாயகம் சுமார் இருபத்தைந்து வருஷங்களாகக் கிராமச் சபைகளில் உத்தமச் சேவை செய்துவந்தார். அவருடைய பக்தி விருத்தியையும், திறமையையும் கண்டு 1869-ம் வருஷம் முதலாம் மாதம் கடைசித்தேதியன்று, அவரை டீக்கனாக அபிஷேகம் செய்தார்கள். திருநெல்வேலியில் அப்பொழுது கிறிஸ்து மதம் துரிதமாகப் பரவியதால், அத்தினத்தில் வேதநாயகத்தோடு 21 பேர் டீக்கன்களாகவும், பதின்மர் குருக்களாகவும் அபிஷேகம் பெற்றனர். வேதநாயகம் திருநெல்வேலிச் சேகரத்தின் கிராமச்சபைகளில் இருபது வருஷங்களாகச் சிறந்த போதகப் பணியாற்றினர். இருபதாண்டுகளில் பெரும்பகுதி வோழாளன்விழயில் கழிந்தன. ஆங்கு அவர் ஒரு ஆலயத்தைக் கட்டினார். சபையார் அவருடைய ஆழ்ந்த பக்தியையும், மதுரமான பேச்சையும் மெச்சிக்கொண்டனர். அவர் தம் முதல் தாரத்தை இழந்து, இரண்டாந் தாரமாக எலன் அம்மாளை மணந்துகொண்டார். அம்மாதிற்கு முதற்பேறாக ஒரு பெண் பிறந்தது. பதின்மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னரே அவ்வம்மைக்கு இரண்டாம் பிள்ளையாக 1874-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 17-ந் தேதி ஒரு மகவு தோன்றினன். அவனுக்காக அன்னையும் பிதாவும் கடவுளை மன்றாடியிருந்தனர். அவனுக்குச் சாமுவேல் என்ற பெயரைச் சூட்டினர். ஏனெனில் அன்னாளும் அநேக வருடங்களாக நெஞ்சுடைந்து, கண்ணீர் பெருகப் பிள்ளை வரங்கேட்டு, சாமுவேல் என்ற நன்மகனைப் பெற்று, அவனை ஆலயச்சேவைக்கு அர்ப்பணம் பண்ணியதுபோல், வேதநாயகமும் அவர் பத்தினி எலனும் செய்ய விரும்பினார்கள். பக்தர் வயிற்றில் தவப்புதல்வனாகப் பிறந்த சாமுவேல் ஆசரியா, ஒரு சிறந்த பக்தனும்

சபைத் தலைவனுமாக விளங்கியது வியப்புக்குரியதன்றெனினும், நமது திருப்திக்கும் நன்றியறிதலுக்கும் உரியதாகின்றது.

தாயார்

அசரியா சிறுவனாக இருந்தபொழுதே தந்தை இறந்துபோனார். ஆதலால் மகனை வளர்க்கும் உத்தரவாதம் முழுவதும் எலன் அம்மாளுடையதாயிற்று. அவர்களோ பிள்ளையை வெகு ஜாக்கிரதையாகத் தெய்வ பக்தியிலும் நல்லொழுக்கத்திலும் பயிற்றுவித்து வந்தனர். அசரியாவின் வேத அறிவிற்குக் காரணம் அவர் Y. M. C. A. சங்கத்தில் வாலிபப் பருவத்திலேயே வேலைசெய்யத் தொடங்கியது தானென்று ஒருவர் ஒரு கூட்டத்தில் சொன்னபொழுது, அப்படியல்ல, எனக்கு வேத அறிவு புகட்டி வேத புத்தகத்தை வாஞ்சிக்கக் கற்றுக்கொடுத்தது என் தாய் என்று அசரியா கூறினார். அசரியா டோர்னக்கல் பள்ளிப் பிள்ளைகளுக்கு வேதப்பாடத் திட்டம் ஒன்றைத் தயாரித்து உபாத்திமார்களிடம் காட்டினபொழுது, அவர்கள் பதினொன்கு வயதிற்குட்பட்ட சிறுவர்க்கு அத்திட்டம் மிகப் பாரமானதென்றும், அத்தனை வேத வசனங்களை மனப்பாடஞ் செய்வது கடினமென்றும் வாதித்தார்கள். இதைக் கேட்டு, அவர் அதிக ஆச்சரியமடைந்து, நான் பத்து வயதிற்குள் அத்தனை வசனங்களையும் மனப்பாடஞ் செய்திருந்தேனே என்று எதிர்வாதம் ஆடினார். பிற்காலத்தில் அசரியா தமது அன்னையை நினைத்தபொழுதெல்லாம் அவர்கள் அவருக்குக் கொடுத்துவைத்த நிதியாகிய வேத அறிவிற்கு நன்றி உள்ளத்தில் பெருக, முகம் மலரும். அவர் கைம்மாறாகத் திருவள்ளுவர் பாராட்டிய பேருவப்பைத் தமது அன்புடைய அன்னைக்கு அளித்தாரென்பதும் நிச்சயம்.

> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும், தன் மகனைச்
> சான்றோனெனக்கேட்ட தாய்"........குறள்.

சென்ற தலைமுறையில் திருநெல்வேலி கிறிஸ்தவக் குடும்பங்களிலும், பாடசாலைகளிலும் சிறுவருக்கு வேத அறிவைக் கவலையோடு புகட்டி வந்ததே அச்சபையின் முன்னேற்றத்திற்கு ஒரு முக்கிய காரணம். இந்நற்பயிற்சி இப்பொழுது குன்றியிருப்பது விசனிக்கத்தக்கதே.

ஆரம்பக்கல்வி

வேழாளன்விளையிலிருந்த திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அசரியா ஆரம்பக்கல்வி பயின்று வந்தான். ஓலைச் சுவடிகளிலிருந்து படித்து, மணலில் விரலால் எழுதப் பழகினான். கணவனை யிழந்தபின், எலன் அம்மாள் தன் பிள்ளைகளோடு மெஞ்ஞானபுரத்திற்குச்

சென்று குடியேறினார்கள். 1885-ம் ஆண்டு ஜனவரி மாதம் அசரியா எனுஞ் சிறுவன் மெஞ்ஞானபுரப் போர்டிங் பாடசாலையில் சேர்ந்து, வெகு துரிதமாகத் தேர்ச்சியடைந்து வந்தான். போர்டிங் பாடசாலையிலுள்ள பிள்ளைகளே தங்கள் விடுதிக்குரிய வேலைகளைச் செய்வது வழக்கம். அறைகளையும் தோட்டத்தையும் பெருக்கிச் சுத்தப்படுத்துவதும், சமையல் செய்வதும், பங்களா பாடசாலை இவற்றின் பூச்செடிகளுக்கும் பழமரங்களுக்கும் நீர் எடுத்து ஊற்றுவதும் ஆகிய வேலைகளை அசரியா முகங்கோணாது செய்துவந்தான். ஒருநாள் பங்களாத் தோட்டத்திலிருந்து கொய்யாப்பழங்கள் சில களவு போயின. மிஷனெரியாரின் மனைவி பள்ளிப் பிள்ளைகளை அழைத்துத் தன்முன் நிற்கவைத்து விசாரிக்கத் தொடங்கினர். திருடுவது பாவமென்று அச்சிறுவருக்கு எடுத்துக்காட்ட விரும்பி, திருடர்களைக்குறித்து வேதம் என்ன சொல்லுகிறதென்று அவர்களைக் கேட்டார். சுட்டிப் பயல் ஒருவன் உடனே, அம்மா! இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரத்தில் இருப்பாய் என்று சொல்லுகிறதென்று துடுக்காய்ப் பதிலுரைத்தான். துரைசாணி சினந்து, பழங்களைத் திருடினவர்கள் மாத்திரமல்ல, அதைத் தின்றவர்களும் கைநீட்டவேண்டுமென்று தீர்ப்புச் சொன்னார்கள். பையன்கள் ஒவ்வொருவனுகக் கைநீட்ட, கொய்யாப் பழம் பறித்த கையில் பிரப்பம்பழம் சடசட வென்று விழுந்தது. அசரியாவும் கைநீட்டித் தன் பங்கைப் பெற்றுக்கொள்ளக் காத்திருந்தான். துரைசாணி அவனைப் பார்த்து, சாமுவேல் அசரியா! நான் உன்னை அடிக்கமாட்டேன். நீ செய்த குற்றத்தை உன் தாய்க்கு அறிவிப்பேன் என்றார்கள். அசரியாவிற்கு இடிவிழுந்தாற்போலிருந்தது. அம்மா, அம்மா நீங்களே அடித்து விடுங்கள். என் தாய் கொடுக்கும் அடி பலமாயிருக்கும் என்று கெஞ்சினன். இளவயதில் வறுமையின் நெருக்கத்தைச் சகித்து, அன்போடு கலந்த கண்டிப்பில் வளர்க்கப் பெற்ற அசரியா, உயர்ந்த அந்தஸ்தை அடைந்தபொழுதும் ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்திவந்தார். எளியோர்மீது அளவற்ற அனுதாபங்கொண்டிருந்தார். மெஞ்ஞானபுரத் தோட்டத்தில் அவர் வேலை செய்து அடைந்த அனுபவமும் சந்தோஷமும், டோர்னக்கல்லில் தம் பங்களாவுக்குப் பக்கத்தில் ஒரு அழகிய தோட்டத்தைத் தாமே அமைத்து, அதில் வேலைசெய்து தேக சுகத்தையும், மனவமைதியையும் அடைந்துகொள்ளப் பயன்பட்டன.

அப்பொழுது மெஞ்ஞானபுரம் பள்ளிச்சாலையின் தலைமை ஆசிரியராயிருந்தவர் அசரியாவின் அண்ணன் ஆம்ரோஸ் தாமஸ் என்பவர். அவர் ஓர் உத்தம கிறிஸ்தவர். நல்ல படிப்பாளி. பிள்ளைகளுக்குச் சத்திய வேதத்தை அவர் கற்றுக்கொடுத்ததுபோல, கிழக்குத் தேசங்களில் வேறெவரும் கற்றுக்கொடுத்ததில்லை. அவரிடம்

வேதபாடம் கேட்டவர்கள் அநேகர் பிற்காலத்தில் புகழ்பெற்ற கிறிஸ்தவர்களாயினர். அவர் தம் மாணவர்மீது மிகுந்த அன்பு காட்டினர். அவர் விடுமுறை நாட்களில் மில்டன் புலவருடைய காவியங்களைத் தமிழ்ப்படுத்துவர். அம்மொழிபெயர்ப்பு வெகு எளிதான நடையிலிருக்க வேண்டுமென்பது அவர் விருப்பம். ஆதலால் ஒரு பகுதியை மொழிபெயர்த்து முடிந்தபின் தம் வீட்டிற்கு வரும் கற்றறியாத கிராமவாசிக்கு அதைப் படித்துக் காண்பிப்பார். அவனுக்குப் புரியாத கடின பதங்களையெல்லாம் அகற்றிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகச் சாதாரணப் பேச்சில் வழங்கும் பதங்களை உபயோகிப்பார். மில்டன் புலவருடைய செய்யுள் நடை கடினமானது; கருத்துக்கள் ஆழமானவை. அவற்றைக் கல்லாத ஒருவன் விளங்கிக்கொள்ளத்தக்கவாறு தமிழில் மொழிபெயர்ப்பது கடினமெனினும், அப்படிச் செய்ய முயன்றது மெச்சிக்கொள்ளத்தக்க முயற்சியே. தன் மூத்த சகோதரரின் இம்முயற்சியைக் கவனித்துவந்த அசரியாவும் நூல்கள் எழுதியபொழுது வெகு எளிதான நடையையே தெரிந்துகொண்டார். அசரியாவின் மற்றொரு சகோதரர் ஒரு அச்சியந்திரச் சாலையை வைத்துப் பிழைத்து வந்தார். அவருடைய சாலையில் அச்சுகளைத் துடைத்து வரிசைக்கிரமமாக அவைகளுக்குரிய சிறிய அறைகளுக்குள் அடுக்கிவைத்துத் தன் கைச்செலவுக்கு சில அணாக்கள் சம்பாதிப்பது அசரியாவுக்கு மிகப்பிரியம். அநேக வருஷங்களுக்குப்பின் டோர்னக்கல்லில் மிஷன் அச்சுக்கூடம் ஏற்படுத்தியபொழுது தம் அண்ணனுடைய அச்சுக்கூடத்தில் கற்றுக்கொண்ட சிறிய விஷயங்கள் மிகப் பிரயோஜனமாயிருந்தன.

கலாசாலை

அசரியா மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறியபொழுது, வயது பதினைந்து. திருநெல்வேலி C. M. S. கலாசாலையில் அவர் எப். ஏ. படிக்கச் சென்றார். திருநெல்வேலி கிறிஸ்தவர்கள் பல நற்குணங்கள் பொருந்தினோர்; மிகவும் பக்தி வைராக்கிய முடையோர். ஆயினும், அவர்களுக்குள் ஜாதிபிரிவினை நீங்கவில்லை. திரள்திரளாக நாடார், வேளாளர், ஹரிஜனர் ஆகிய பல்வேறு ஜாதியினர் ஆங்குக் கிறிஸ்து மதத்தைத் தழுவியிருந்தனர். அவர்கள் இரண்டு மூன்று தலைமுறைகளாகக் கோயில்களில் ஒருமித்துத் தெய்வத்தை ஆராதித்து, ஒரே வேத உபதேசங்களைக் கற்றுக் கேட்டு வந்திருந்தும், குலப்பெருமை கிறிஸ்து சமயத்திற்குப் பொருந்தாத தீமையென்று உணரவில்லை. இப்பிரிவினைகளுக்குப் பலமூட்டியதும் ஒன்றிருந்தது. மிஷன் ஸ்தாபனங்களில் உத்தியோகத்திற்கும், அவை கொணரும் ஊதியத்திற்கும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டிருந்

தனர். இப்போட்டியில் இனம் இனத்தைத் தாங்க முன்வந்தது இயல்பே. சபைக்குள் நேர்ந்த குலப்போராட்டம் அநேக தீமைகளுக்கு ஆணிவேராக இருந்தது. நாடார் கிறிஸ்தவச் சங்கமென்றும், வேளாளர் கிறிஸ்தவச் சங்கமென்றும், சங்கங்கள் தோன்றி சபைகளில் பிளப்பை ஏற்படுத்தின. உத்தம கிறிஸ்தவர்கள் யாவரும் இவைகளைக் கண்டு வெட்கமும், துக்கமும் அடைந்தனர். தொகையிலும் தேர்ச்சியிலும் திருநெல்வேலிக் கிறிஸ்தவர்கள் இந்தியக் கிறிஸ்தவக் குழுவின் கால்கள் போலிருக்கின்றார்கள். ஆனால் குழுவைத் தாங்கி முன் செல்லச் செய்யவேண்டிய அக்கால்கள் ஜாதிபேதமென்னும் யானைக் கால் வியாதியால் பலம் குன்றியிருக்கின்றனவென்று சாது சுந்தர்சிங் திருநெல்வேலி கிறிஸ்தவர்களைச் சந்தித்தபொழுது முறையிட்டுத் துக்கித்தார். அசரியாவின் பால்ய மனத்தில் ஜாதிபேதத்தை ஒழிக்க வேண்டுமென்ற ஆர்வம் உதித்தது. நாடார் கிறிஸ்தவச் சங்கம், வேளாளர் கிறிஸ்தவச் சங்கங்களை நிராகரிக்க, கிறிஸ்தவ சகோதரச் சங்கம் என்று ஒரு பொதுச் சங்கத்தை அசரியா கலாசாலையின் மாணவர் விடுதியில் நிறுவினர்.

சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலை

1893-ம் வருடத் தொடக்கத்தில் அசரியாவின் பெயர் பிரசித்தி பெற்ற சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலையின் மாணவர் அட்டவணையில் பதிவு செய்யப்பெற்றது. கலாசாலையில் கால்வைத்தபொழுது, நந்தன் சிதம்பரத்தில் கால்வைத்தபொழுது என்ன மகிழ்ச்சியடைந்தனனோ, அந்த மகிழ்ச்சியை அசரியா அடைந்தார். இங்கு அவர் கழித்த இரண்டு ஆண்டுகளில், அவர் மனதையும் உள்ளத்தையும் விசாலமாக்கி, அவற்றை அறிவாலும் உன்னத நோக்கங்களாலும் நிரப்பிய சம்பவங்கள் பல நிகழ்ந்தன. வகுப்பிலும் மாணவர் விடுதியிலும் அவருக்குச் சில அரிய நண்பர் கிடைத்தனர். ஒப்பற்ற ஆசிரியரும் சாதுரியப் பிரசங்கியுமான மில்லர் பண்டிதர், தேர்ந்த தத்துவ சாஸ்திரியும் பரம சாதுவுமாகிய கூப்பர் பண்டிதர், ஆழ்ந்த அன்பும் நீடிய சாந்தமும் உறுதியான சித்தமும் படைத்த ஸ்கின்னர் பண்டிதர் ஆகிய பேராசிரியர் வாரி இறைத்த கலைச் செல்வங்களைப் பெற்றுக் கொள்ளும் சிலாக்கியம் அசரியாவிற்குக் கிடைத்தது. "அப்பெரியோரை நினைத்த மாத்திரத்திலேயே என் மனதில் பல இனிய ஞாபகங்கள் எழும்பி, ஊக்கத்தை அளிக்கின்றன. அவர்களை என்றும் சிரமேற்கொண்டு போற்றுகின்றேன்" என்று அசரியா பகர்ந்துள்ளார். தன் பெற்றோரால் கிறிஸ்தவ ஊழியத்திற்கென்று பிரதிஷ்டை செய்யப்பெற்ற அசரியா கிறிஸ்தவக் கல்விச்சாலைகளில் சிறந்த பக்தர்களாகிய ஆசிரியரிடம் கல்விப் பயிற்சியடைந்து, அந்தப் பணிவிடைக்

கென்று தம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டார். 1895-ம் வருடம் B.A. பரீக்ஷை எழுதுவதற்குச் சில தினங்களுக்கு முன், அசரியா வுக்கு இன்புளுயன்ஸா ஜுரம் கண்டது. ஆகையால் பரீக்ஷை எழுத வில்லை. பணக்கஷ்டத்தினிமித்தம் அதோடு அசரியா படிப்பை முடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பிணியும் வறுமையும் சேர்ந்து கைக்கெட்டிய B.A. பட்டத்தை வாய்க்கு எட்டாதபடிச் செய்து விட்டதைக் குறித்து அசரியா ஒருநாளும் விசனப்பட்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை. பட்டம் ஒன்றுதான் போயினதேயொழிய கற்ற கல்வி அழியவில்லை. மேலும் அசரியா கலாசாலைப் படிப்பை முடித்துக்கொண்டாரே தவிர, பல்வேறு நூல்களைப் படித்துத் தம் அறிவை அபிவிருத்தி செய்வதை ஒருநாளும் நிறுத்தவில்லை. இவருடைய கலைத்திறமையை இவரைக் கண்டு இவர் பேச்சைக் கேட்ட யாவரும் அறிந்தனர். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை இவருக்கு LL.D. பட்டம் அளித்தது. இதற்குள்ளாக அவர் திருச்சபைக்கும் நாட்டிற்கும் செய்த சேவை பெரிது. அவர் எழுதிய நூல்களும் பல.

சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலைக்குட்புகுந்து கலை, சீலம், கிறிஸ்துவின் போதனை, பக்தி ஆகிய நற்கந்தங்கள் நிறைந்த காற்றைச் சுவாசித்தோர் அநேகர் அதன் பிரேமையில் ஆழ்ந்து விட்டிருக்கின் றனர். ஆண்டுகள் எத்தனை கழிந்திடினும், மயக்கம் தெளிவதில்லை. ஆகவே 1937-ம் வருஷம் ஜனவரி மாத இறுதியில் கலாசாலையின் நூற்றாண்டு விழா வெகு விமரிசையாக நடந்தபொழுது, ஞாபகார்த்த ஆராதனையில் பிரசங்கிக்க பழைய மாணவராகிய அசரியா அத்தி யக்ஷரை அழைத்தார்கள். அவர் பிரசங்கத்தின் சில வாக்கியங்களை இங்கு எடுத்து எழுதுவது அவசியம். அவற்றுள் கலாசாலை அவருக்குச் செய்த நன்மையும், கலாசாலைக்கு அவர் செய்த கைம்மாறும் தோன்று கின்றன.

"நாற்பது வருஷங்களுக்குமுன் சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலை யின் புனித ஸ்தலத்திலிருந்து வெளிச்சென்றேன். அப்பொழுது நான் நடாத்திய நீண்ட கால மாணவ வாழ்க்கைக்கு முடிவு வந்தது. அவ்வின்ப வாழ்க்கையில் நான் அடைந்து அனுபவித்த தோழமை களும், நட்பும், சிக்ஷையும் இனி கிடைக்கப்போவதில்லை. அறியாத உலகில், நடவாத வழியில் செல்லவேண்டியவனாகின்றேன் என்று ஏங்கினேன். மில்லர் பண்டிதர் எமக்குக் கூறிய கடைசியான புத்திமதி என் ஞாபகத்திலிருந்தது. அவ்வுத்தமர் எங்களைக் கடவுளு டைய பாதுகாவலுக்கு ஒப்படைத்து விட்டதாகவும், கலாசாலை அநேக ஆண்டுகளாக அதன் மாணவரின் இலட்சியமாக வைக்க முயன்

றுள்ள நன்னெறி, நற்சிந்தை, நற்குணம் ஆகிய சீரிய நோக்கங்களை நாங்கள் உண்மையாய்க் கடைப்பிடித்து ஒழுகவேண்டுமென்றும் மிருந்த தாபந்தத்தோடு வற்புறுத்தினர்.

“இன்று நான் விரும்பி ஜெபிப்பது எதற்கென்றால்:—நகரத்தின் சந்தடிக்கும், அலைக்கழிப்புக்கும் தப்பி தாம்பரத்தின் அமைதியில் தம் ஆயுளின் சிறந்த காலத்தைக் கழிக்கும் அரிய சிலாக்கியம் பெறும் கிறிஸ்தவப் புறமத மாணவர் யாவரும், கடவுளைத் தெளிவாக மனக் கண்ணால் கண்டு, அவர் இலக்ஷணங்களை அறிந்து, கிறிஸ்து அளிக்கும் இளைப்பாறுதலையும், மனத்திருப்தியையும் பெற்றுக்கொள்ளவேண்டும்; கலங்கிக்கொண்டிருக்கும் நம் நாட்டிற்குக் கடவுள் சொல்ல விரும்பும் நற்செய்தியைப் பறைசாற்றும் தூதுவராக இங்கிருந்து வெளிச்செல்ல வேண்டுமென்பதே. கடந்த நூற்றாண்டில் தெய்வம் அருளிய கிருபைகளை நினைத்து நன்றி பாராட்டுக; கடந்துபோன வற்றை மறந்து, முன் அடைந்த வெற்றிகளைக் காட்டிலும் சிறந்த வெற்றிகள் அடையத் தீரத்துடன் முன்செல்லுக.”

அத்தியாயம் 2

ஒய். எம். ஸி. ஏ. காரியதரிசி

படிப்பை முடித்தபின் தம் பெற்றோருடைய ஆணையையும் தம் விருப்பத்தையும் நிறைவேற்றிக்கொள்ள எத்தொழிலைச் செய்வேன் என்று தமக்குள் உசாவி, அதைப்பற்றி ஜெபித்துக்கொண்டிருந்த இருபத்தொரு வயது வாலிபன் அசரியாவுக்கு ஆண்டவர் வழி காட்டினர். 1895-ம் வருஷம் மார்ச்சு மாதம் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் தலைவர்கள் அசரியாவை அழைத்து, தென்னிந்தியாவின் காரியதரிசியாக நியமித்தனர். மாணவர்களுக்குக் கிறிஸ்து சமயப் போதனையைப் புகட்டி, அவர்களைச் சமயப் பிரசாரகராக்குவதே அவருடைய பிரதான வேலை. இச்சமயத்திலேதான் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் மாணவர்க்குள் மதக்கிளர்ச்சி தோன்றிற்று. இலவசப் பணி (Student Volunteer Movement) செய்யும் மாணவர் இயக்கமென்ற பெயரைத் தரித்துக்கொண்டு, உலகமெங்கும் தம் வாழ்நாட்கள் முடிவடையுமுன், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசுரிக்க வேண்டுமென்ற பிரதிக்ஞை செய்துகொண்ட மாணவர் சேனையொன்று எழும்பிற்று. அக்கூட்டத்தைச் சேர்ந்த ஜார்ஜ் ஷெர்வுட் எடி என்ற வசீகரரூபனும், பக்தி அனல் வீசும் உள்ளத்தினனுமான வாலிபன் அமெரிக்காவிலிருந்து இந்தியாவிலும், இலங்கையிலும் வாலிபர் கிறிஸ்தவ சங்கத்தின் சார்பில் சுவிசேஷப்

பிரபல்ய வேலை செய்யவந்தார். அவர் கல்கத்தாவிற்கு வந்து சேர்ந்த பின் முதன் முதலாகச் சந்தித்த இந்தியன் அசரியாவே. மலைச்சரிவில் துள்ளி ஓடிவரும் இரு அருவிகள் சமநிலத்தில் ஒன்றையொன்று சந்தித்துத் துரிதமாய்க் கலந்துகொள்ளுவதுபோல், கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதற்கென்றே தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருந்த இவ்விரு வாலிபருடைய உள்ளங்களும் ஒன்றை யொன்று தழுவிக்கொண்டன. யூதச் சரித்திர ஆராய்ச்சியின் மூல மாகவும், மத்திய கீழ்நாடுகளின் புராதன நாகரிக ஆராய்ச்சியின் மூல மாகவும் கிடைத்த உண்மைகளைக்கொண்டு, மேனாட்டு வேதசாஸ்திரி மார் எழுதிய சத்திய வேத வியாக்யானங்களையும், உத்தேசித்து ஏற் படுத்திய நூதனக் கொள்கைகளையும் எடி அசரியாவுக்குக் கற்பித்தார் இந்தியாவின் கலைச்செல்வம், அதன் கஷ்டங்கள், அங்கலாய்ப்புகள், சுதந்திர நாட்டம் முதலியவற்றைக் குறித்து அறிந்துகொள்ள அசரியா எடிக்கு உதவி செய்தார். இச்சமயம் அசரியாவுக்கு வேறு பல ஆப்த நண்பர்களும் கிடைத்தனர். ஜான் மாட் பண்டிதரும் இந்தியாவிற்கு வந்திருந்து அசரியாவைக் கண்டு அவரோடு சுவிசேஷப் பிரசாரச் சேவை புரிந்தார். இந்தியக் கிறிஸ்தவ வாலிப நண்பரும் பலர் இருந்தனர். அசரியாவைப் போலவே இவர்களும் கிறிஸ்து சபை யின் வளர்ச்சியிலும் சுவிசேஷப் பிரபல்யத்திலும் குன்றாத ஆர்வங் கொண்டு சேவை புரிந்தனர். அன்னவர்களிற் சிலர் காலஞ்சென்ற சிறந்த மதவைராக்கியரும், தேச பக்தருமாகிய கே. டி. பால், எஸ். கே. தத்தா, பி. ஸி. சர்க்கார் ஆவர். டோக்கியோவில் 1907-ம் ஆண்டில் கூடின அகில லோக கிறிஸ்தவ மாணவர் சங்கங்களின் மகாநாட்டுக்கு அசரியா பிரதிநிதியாகச் சென்று, நானா தேச பால்ய கிறிஸ்தவத் தலைவர்களைச் சந்தித்து மகிழ்வுற்றார். அவர்களில் அநேகர் திறமை வாய்ந்தவர்கள். அசரியாவும் அவர்களைப்போல் திறமை வாய்ந்தவரென்றும், வெகு சீக்கிரம் சிறந்த தலைவர்களுள் ஒருவரா ஆவார் என்று யாவரும் உணர்ந்தனர். அப்படியே இரண்டு வருடங் கட்குப் பின்னர் அவர் அந்த மகா நாட்டிற்கு உப அக்கிராசனரா யினர்.

மூன்று சுவிசேஷகர்

இப்படி ஒய். எம். ஸி. ஏ. காரியதரிசியாக இருந்தபொழுது, தென் னிந்தியக் கிறிஸ்தவர்களுக்கு அசரியா தன்னைப்போன்ற இரு தோழ ருடன் மிக அரியதோர் சேவை புரிந்தனர். பாளையங்கோட்டையில் சிறந்த பக்தனும், தமிழிலும் ஆங்கிலத்திலும் வெகு சாதுரியமாகப் பேசக்கூடியவருமாகிய டி. உவாக்கர் என்ற மிஷனெரி இருந்தார். அவர் தென்னிந்தியாவிற் சகல சபைகளுக்கும் சென்று, பெரிய பெரிய

கூட்டங்களில் கிறிஸ்தவர்களுக்குப் பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் இனிவரும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் மனதைக் கவர்ந்து உள்ளத்தைத் தகர்க்கத் தக்கவிதமாக உபதேசித்து வந்தார். அவருடைய உபந்நியாசங்களைக் கேட்டு, பாவக்கேட்டைவிட்டு மனந்திரும்பி, கிறிஸ்துவின் சரணாகதியைத் தேடியடைந்தவர்கள் பலர். அவருடைய சகவாசத்தால் உற்சாகமடைந்த மூன்று வாலிபர் அதே விதமான அரிய திருப்பணியைச் செய்ய முன்வந்தனர். ஒருவர் எஸ். ஜி. மதுரம், B.A., L.T., பாளையங்கோட்டை மிஷன் பாடசாலையில் ஓர் ஆசிரியர். மற்றொருவர் எஸ். பரமானந்தம், அவர் தேகப் பயிற்சி கற்பிக்கும் ஆசிரியர். மூன்றாமவர் நம் அசரியா. இவர்கள் மூவரும் ஒருவர்பின் ஒருவராக ஒரே கூட்டத்தில் ஒன்றோடொன்று பொருத்தமான மூன்று உபந்நியாசங்களைச் செய்வார்கள். அவை மனந்திரும்பி தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதெப்படியென்ற கிறிஸ்தவ வழிபாட்டின் நடுநாயகமான பொருளைப்பற்றினவை. அவற்றைச் சத்திய வேதவசனங்களாலாய சொற்றொடர் ஆரங்களெனவே சொல்லவேண்டும். ஏனெனில் உபந்நியாசகர் வற்புறுத்த விரும்பிய ஒவ்வொரு உண்மைக்கும் மேற்கோளாகப் பல வேத வசனங்களை எடுத்துக்காட்டுவர். தவிர அவர்கள் சொல்வதெல்லாம் தம் சொந்த அனுபவத்திற் கண்டு கடைப்பிடித்த உண்மைகளாக இருந்தன. தம் முன் அமர்ந்திருக்கும் கிறிஸ்தவ மக்கள் இரட்சிப்பின் சந்தோஷத்தை அடைந்து ருசிக்கவேண்டுமென்று அவர்கள் எத்துணை பேராவல் கொண்டிருந்தார்களென்பது அவர்களது பார்வையிலும் தொனியிலும் அபிநயத்திலும் தெளிவாகத் தோன்றும். பரமானந்தத்தின் பேச்சு இடிமுழக்கம்போல் நெஞ்சைக் குலுக்கும். மதுரம் தம் பெயருக்ிசைய மதுர வாக்கனாகவே விளங்கினர். இயல்பிலேயே அவர் குரலில் சிறு நடுக்கமிருக்கும். அவர் கிறிஸ்துவின் அன்பை அறிந்த ஜனங்களை அழைக்கும்போது, அழுது கெஞ்சுவதுபோல இருக்கும். அசிரியாவோ சாந்தம் தவழும் வதனத்தோடு, நிதானமாகவும் தெளிவாகவும் ஆத்மீக ஜீவியத்தின் உண்மைகளை எடுத்துக்காட்டுவர். அவர் சொற்கள் பச்சைமரத்தில் அடித்த ஆணிபோல், கேட்போரின் உள்ளங்களில் பதியும். கூட்டம் முடிந்தவுடனே அவர்கள் கூட்டத்தில் கலந்து அளவளாவுதலை விலக்கி, நேரே தம் அறைக்குச்சென்று தாம் விதைத்த வேத வசனங்கள் நற்கனிகளை நிரம்பக்கொடுப்பதால், கேட்டோர்க்கு ஆத்மீக நன்மையையும், கிறிஸ்துவிற்கு மகிமையையும் விளைவிக்கவேண்டுமென்று ஜெபித்துக்கொண்டிருப்பார்கள். இம் மூன்று வாலிப சிநேகிதரும் ஊதியம் பெறாது தம் விடுமுறை நாட்களில் இவ்வரிய சேவை பல வருஷங்களாகச் செய்துவந்தனர். உன்னத ஞானம் ததும்பிய அவர்களது சொற்பொழிவுகளைக் கேட்டு

மெய்க்கிறிஸ்தவ வாழ்க்கையின் இரகசியத்தை நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள், முதியோர், வாலிபர் கண்டுகொண்டார்கள். அந்நாட்களில் தமக்கிருந்த ஆனந்தமும், சந்தோஷமும், திருப்தியும் பின் எந்நாளும் கிடைக்கவில்லையென்று அம்மூவரிலொருவர் சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்குப்பின் அறிக்கையிட்டார்.

விவாகம்

மேனாட்டு நாகரிகத்தின் புறக்கோலங்களை இந்தியக் கிறிஸ்தவர்கள் தம் நடையுடை பாவனைகளில் வெகு துரிதமாக அமைத்துக்கொண் டிருக்கின்றனர் என்பது நம் தேச மக்களின் குறைபாடு. எனினும் இந்த நாட்களிலும் விவாகங்களைப் பெரும்பாலும் பெற்றோரே ஒழுங்கு செய்கின்றனர். பெற்றோரின் அனுமதியின்றிக் கிறிஸ்தவப் பாலியர் காதல் மணஞ்செய்துகொள்வதற்குப் பல தடைகளிருக்கின்றன. வெளிப்படையாக ஜாதி வேற்றுமையைப் பாராட்டாத கிறிஸ்தவக் குடும்பங்களிலும், விவாக சம்பந்தமென்றால் குடும்பங்களின் பூர்வீகத்தைக் குறித்த அந்தரங்க ஆராய்ச்சிகள் நடைபெறுவது சகஜம். மேலும் ஆண் மக்களின் படிப்பிற்கென்று பணத்தைத் தம் சக்திக்கு மிஞ்சிச் செலவு செய்த பெற்றோர், தம் பணக் குறைவைப் பூர்த்தி செய்துகொள்ளப் பெண்மக்களைப் பெற்ற தௌர்ப்பாக்கியரின் பணப் பையில் ஒரு கண் வைத்துக்கொண்டுதான் தம் மக்களுக்குப் பெண் தேடுகின்றனர். ஸ்திரீதனம் என்று பேரம் பேசிப் பணம் பறிக்கும் துர்ப்பழக்கம் திருநெல்வேலிக் கிறிஸ்தவ சமுதாயத்தின் கேடுகளி லொன்று. ஜாதி வேற்றுமையை ஒழிக்கவேண்டுமெனக் கலாசாலை மாணவர் விடுதியில் கிறிஸ்தவ சகோதரர் சங்கத்தை நிறுவிய அசரியா, ஸ்திரீதனமென்னும் கொடுமையின் தலையிலும் ஒரு அடி அடிக்க விரும்பினார். தமக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவியைத் தாமே தேடிக் கொள்ளத் தீர்மானித்து, திருநெல்வேலியில் உள்ள பெண்களில் தெய்வ பக்தியிற் சிறந்த ஓர் பெண்ணைத் தேடினார்; தேடிக் கண்டு பிடித்தார். அவர் விருப்பிற்கேற்ற ஒரு நல்ல அணங்கு சாரா டக்கர் காலேஜில் படித்து எப்.ஏ. பரீக்ஷையில் தேறியிருந்தனள். அம்மாதின் பெயர் அன்பு மரியம்மாள் சாமுவேல். இவ்வம்மையாரும் திருச்சபைக்கும், கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் பெரிய சேவை செய்யவேண்டு மென்ற வாஞ்சை கொண்டிருந்தவர். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்று சிந்தனையின்றி யாவரும் கேட்டுக்கொண் டிருந்த காலத்தில், தம் விடாமுயற்சியால் தென்னிந்தியாவில் பெண் களுக்குக் கிடைக்கக்கூடியவரையில் உயர்தரக் கல்வியைக் கற்று முடித்தனர். கற்றுத் தேறியபின் அவர்கள் சுவிசேஷச் சேவையில் காட்டிய ஊக்கத்தையும், திறமையையுங் கண்டு அநேகர் அவர்களை

விரும்பிப் பாராட்டினர். அவர்களுக்குச் சீலச் செல்வமும், குணச் செல்வமும் நிறைய இருந்தன. எனினும் பணந்தான் கிடையாது. அசரியா படித்த அளவு படித்த ஒரு மாப்பிள்ளை இரண்டு மூன்றாயிரம் ரூபாய்க்குக் குறைந்த விலையில் கிடைப்பது கடினம். உறவினர் உதவியையோ, ஆலோசனையையோ அசரியா கேட்டிருந்தால் பெண்ணும் பெற்று, ஒரு சிறு புதையலும் பெற்றிருப்பார். இந்த இழிவான ஆதாயத்தை வெறுத்துத் தள்ளி, அன்பு எனும் அருந்ததியை 1898-ம் வருடம் ஜூன் மாதம் 29-ம் தேதி தம் வாழ்க்கைத் துணைவியாக மணந்து கொண்டார். பல வருடங்களுக்குப்பின் அசரியாவின் பிராண நண்பர் ஒருவரின் குமாரன் அசரியாவைப்போலவே பணத்தை ஒழித்துக் குணத்தைக் காதலித்து, பெற்றோர் அனுமதியைத் தேடாது நிச்சயித்துக்கொண்டபொழுது, சிறிது ஏமாற்றமடைந்த தாய்க்கு, அவர் தகப்பனார் தம் நண்பர் அசரியா பெண் தேடிய வரலாற்றைச் சொல்லி ஆறுதல் அளித்தார்.

நிச்சயார்த்தத்திற்கும், விவாகத்திற்கும் இடையே மூன்று மாத காலமாய் இக்காதலர் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துப் பழகச் சமயங்கிடைத்தது. அசரியா அடிக்கடி ஊர்களுக்குச் சென்றுகொண்டிருந்தபடியால், இவ்விருவரும் கடிதங்களின் மூலமாகவும் தம் எண்ணங்களையும் ஆசைகளையும் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்திக்கொண்டனர். அசரியா அன்பம்மாளுக்கு எழுதிய கடிதங்களொன்றில், அடியிற்கண்ட வாக்கியங்கள் இருந்தன:—“இன்று என் காலைத் தியான வேளையில் என் மனதில் புதைந்த வேத வசனத்தை உனக்குச் சொல்லட்டுமா? ‘அவர் மற்றவர்களை இரட்சித்தார், தம்மையே இரட்சித்துக்கொள்ள முடியவில்லை.’ ஆம். இது உண்மையே. ஒருவன் தன்னையும் பிறரையும் இரட்சிப்பது அசாத்தியமே. இன்பத்தையும், ஓய்வையும், வசதிகளையும், சுகபோகங்களையும், நாடித் தேடும்பொழுது, ஆத்துமாக்களை இரட்சிப்பது கூடியதல்ல. உலக நாட்டமும், ஆத்தும நாட்டமும் இணைந்திருக்க முடியா. ஒன்று மற்றொன்றிற்கு இடங்கொடுக்க ஒதுங்கிக்கொள்ளவேண்டும். என் இதயத்தில் குடிகொண்டிருக்கப் போவது எது? உன் இதயத்தில் எது?” இக்கேள்விக்கு அன்பம்மாள் கொடுக்கக்கூடிய, முன்னரே கொடுத்திருந்த, விடை ஒன்றே. இவ்விரு காதலரும் தம் முன்னங்களில் உலக நாட்டங்களுக்கல்ல; உன்னத ஆத்மீக நாட்டங்களுக்கே இடங்கொடுக்கத் தீர்மானித்திருந்தனர்.

இங்ஙனம் மனதும் இதயமும் ஒத்த தம்பதிகள் கட்டிய வீடு வீடாகவே விளங்கியது என்று சொல்லவும் வேண்டுமோ? தாய் தந்தை மக்களிடையே சுற்றிச் சுற்றி ஓடிய குடும்ப நேசமென்னும் வெள்ள

அவ்வீட்டிற்கு அழகைக் கொடுத்தது. ஜெபமும் வேத பாராயணமும் பக்திக் கீதங்களும் அவ்வீட்டின் இன்பத் தொனிகளாயிருந்தன. அசரியா தம் வேலையினிமித்தம் வீட்டைவிட்டுச் சுயநாட்டின் பற்பல இடங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் அடிக்கடி போய் வந்துகொண்டிருந்ததால், பிள்ளைகளைப் போஷித்துப் பராமரித்து கிறிஸ்து ஜீவியத்தின் நேரான வழியில் நடத்திச் செல்லும் உத்தரவாதம் தாயின்மேல் விழுந்தது. அதையும் ஏற்றுக்கொண்டு, சபைக்கும் விசேஷமாகச் சபையின் பெண்களுக்கும் அவர்கள் செய்த நன்மை பெரிது. டோர்னக்கல்லில் சுவிசேஷ வேலை செய்துவந்த உபாத்திமார் உபதேசிமாருடைய மனைவிகளுக்கு வேத அறிவு புகட்டி அவர்களையும் சுவிசேஷப் பிரபல்ய ஊழியத்தில் பயிற்றுவிக்கும் நோக்கமாய் மாதர் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி நடத்திவந்தார்கள். வேத பாடசாலையில் சில பாடங்கள் கற்றுக்கொடுத்தனர். தங் கணவர் சிறு சிறு பிரசாரப் பிரதிகளும் நூல்களும் எழுதுவதற்கு அதிக உதவிபுரிந்தனர். தாமும் தாய்மாருக்குப் பயன்படக்கூடிய சில சிறு புத்தகங்கள் எழுதினர்.

எல்லாவற்றிற்கும் மேலாக புதிதாய்க் கிறிஸ்து மதத்தை ஏற்றுக்கொண்ட கல்லாத பாமர மக்களுக்கு அளவற்ற அன்பும் ஆதரவும் அளித்தனர். அவர்கள் வறுமையையும், அசுத்த வழக்கபழக்கங்களையும், அறிவீனத்தையும் ஒழிக்கச் சலியாது உழைத்தனர். அந்த ஜனங்களின் ஆண் பெண் பிள்ளைகளுக்கென்று டோர்னக்கல்லில் ஏற்படுத்தப்பெற்ற பள்ளியின் மாணவர் விடுதியில் தங்கிய எளிய பிள்ளைகள் அனைவருக்கும் தாயானார்கள். அத்வானக் காட்டில், சிறு சிறு வீடுகளைக் கட்டிக்கொண்டு, தாங்களும், தங்கள் உதவி ஊழியரும் வசதி குறைந்த வாழ்க்கை நடத்திவந்தபொழுது, அசரியா அத்தியட்சரும் அவர் தம் தர்மபத்தினியும் ஆற்றிய அரும்பணியின் சிறப்பைக் கேட்டுக் கண்ணால் பார்க்க வந்த அதிதிகளுக்கு முகங்கோணாது உபசாரஞ்செய்தனர். அசரியாவை விவாகம் செய்த நாள் முதற்கொண்டு, அவர் தம் வேலையின் மத்தியில் சடுதியாகப் பரலோக இளைப்பாறுதலுக்கு அழைக்கப்பெற்ற நாள்மட்டும் நாற்பத்தேழு வருஷம் அவருடைய உயிரின் ஓர் பாகமும் மூலபலமுமாகத் திகழ்ந்து சுமங்கலியாக இவர் இல்லறம் நடாத்தினர்.

அத்தியாயம் 3

இந்திய மிஷனெரி சங்கம்

அசரியாவின் உள்ளத்தினடியில் ஒரு வாஞ்சை பதுங்கிக் கிடந்தது. மேல்நாட்டுக் கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தை உலகமெங்கும் அறிவிக்க எடுத்துள்ள பெருமுயற்சிகளைக் கண்டு, இந்தியக் கிறிஸ்தவர்களும் அவ்வித முயற்சிகளை எடுக்கவேண்டுமென்பதே அந்த வாஞ்சை. அத்தகைய முயற்சி தோன்றினலல்லாது, இந்தியத் திருச்சபையின் உயிர் பூரண உயிர் ஆகாது. இறைக்காத கிணறு சுரக்காதென்ற முதுமொழியின் உண்மை சபையின் வாழ்க்கைக்கும் பொருத்தமானதே. ஆதலால் கிறிஸ்துவின் அடியார் தாம் பெற்ற ஆத்தும நன்மைகளைத் தம் அயலார்க்குப் பகிர்ந்து கொடுக்காதவிடத்து, அந்நன்மைகளின் மகத்துவத்தை மறந்து, அவற்றையும் கைநெகிழவிடலாம். தவிர மேல்நாடுகளிலிருந்து ஏராளமான பணமும், நூற்றுக்கணக்கான மிஷனெரிமாரும் வந்து, இருநூற்றாண்டுகளாகச் சுவிசேஷப் பிரசாரம் செய்தும், இந்தியாவின் அநேக மாகாணங்களில் கிறிஸ்துவின் நாமத்தைக் கேளாதும், அவருடைய இரட்சிப்பின் வழியை அறியாதும் இருக்கும் மக்கள் இலக்ஷக்கணக்காக இருக்கின்றனர். இந்த எண்ணங்கள் அசரியாவின் மனதில் அடிக்கடி தோன்றி அதிருப்தியை உண்டாக்கின. 1902-ம் வருடம் இவர் எடியுடன் எழுப்புதல் கூட்டங்கள் நடத்த யாழ்ப்பாணத்திற்குச் சென்றனர். தம் அந்தரங்க வாஞ்சையைத் திருப்தி செய்தவோர் இயக்கத்தை அசரியா ஆங்குக் கண்டனர். யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கிறிஸ்தவர்கள் மிஷனெரி சங்கமொன்றை நிறுவி, அதன் மூலமாகச் சுவிசேஷத்தைக் கேட்டிராத ஜனங்களுக்கு அதை அறிவிக்க பிரசாரகரை அனுப்பி வைத்திருந்தார்கள். யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவர்களின் இச்சிறந்த முயற்சியைக் கண்டவுடன் அசரியாவின் உள்ளத்தில் அடங்கிக்கிடந்த வாஞ்சை கொதித்தெழும்பிற்று. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சபைப் பெருக்கமும், கோயில்களும், ஆலயங்களும், குருக்களும், கல்விச்சாலைகளும் அவர் மனக்கண்முன் தோன்றி அவரை வெட்கமடையச் செய்தன. இவையனைத்தையும் இலவசமாக அடைந்து அனுபவித்து வரும் கிறிஸ்தவர்கள் பிறருக்கு இரட்சிப்பின் நற்செய்தியை எடுத்துக்கூற ஒரு செப்புக்காசை கொடுக்கவில்லையே, ஒரு ஆளை அனுப்பவில்லையே என்று அவர் தனக்குள் பிரலாபித்தார். மன அமைதியை நாடிக் கடற்கரைக்குச் சென்றார். சமுத்திர ஜலத்தின்மேல் சந்திரனுடைய குளிர்ந்த சுடர்கள் படர்ந்திருந்தன. குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. தென்னை மரங்களிலிருந்து சலசல

வென்ற மெல்லிய ஓசை ஒலித்தது. அசரியாவின் மனதிலோ அமைதி நிலவவில்லை. ஆங்கு தன்னந்தனியே முழங்காலூன்றி, அசரியா ஜெபித்தார். மூடிய இமைகளினூடே, கண்ணீர் சொரிந்தது. அநேக நேரம் ஜெபித்தபின் அவர் உள்ளத்தில் ஓர் உறுதி பிறந்தது. திருநெல்வேலிக் கிறிஸ்தவர்கள் எம்பெருமான் தம் தொண்டருக்கு இட்டுச் சென்ற உத்தரவை மறந்திருத்தல் குற்றமென்றும், சுவிசேஷப் பிரசாரஞ் செய்வது ஒரு பெருங்கடமையும், சிலாக்கியமுமாயிருக்கிறதென்றும் தாமே அவர்களுக்கு இடித்துரைக்கத் தீர்மானித்தார். இது கடவுள் தமக்கு அன்றிரவு கொடுக்கும் கட்டளை என்று உணர்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் தம் வேலையை முடித்துக்கொண்டு, பாளையங்கோட்டைக்குத் திரும்பினவுடன், அசரியா தம் கருத்தை மனமொத்த நண்பர் சிலருக்கு அறிவித்தார். அவர்கள் இந்த மேன்மையான எண்ணத்தை ஆமோதித்தனர். யாவரும் இதைக் குறித்து இறைவனிடம் மன்றாடினர். தாமதமின்றி திருநெல்வேலி இந்திய-மிஷனெரிச் சங்கத்தை 1903-ம் வருடம் இரண்டாம் மாதம் ஏற்படுத்தினர். இந்தியர் பணத்தைக்கொண்டு, இந்தியர் மேற்பார்வையில், இந்தியப் பிரசாரகரால் சத்திய சுவிசேஷத்தை இதுவரை கேட்டிராத இந்திய மக்களுக்கு அறிவிப்பதே இச்சங்கத்தின் நோக்கமென்று கூறினர். வெகு சீக்கிரம் பணமும் ஊழியரும் சங்கத்திற்குக் கிடைத்தனர். அசரியாவே இச்சங்கத்தின் காரியதரிசி ஆயினர். ஓய். எம். சி. ஏ. வேலையைச் செய்துகொண்டே இப்புதிய பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

சங்கத்தின் சேவையை நடத்துவதற்கு, மற்ற மிஷன் சங்கங்கள் கால்வைக்காத ஒரு பிரதேசத்தைச் சங்கத் தலைவர்கள் தேடினர். தமிழ்நாட்டில் பல இடங்களைப் பார்த்துவிட்டுக் கடைசியாகத் தெலுங்கு நாட்டில் இடம் தேடி அசரியா சென்றார். நிஜாம் இராஜ்யத்தின் தென்கிழக்குக் கோடியில் கிறிஸ்து சமயம் பிரசுரிக்கப்படவில்லையென்று கேட்டு, அசரியா அங்குச் சென்றபொழுது, அறுபது மைல் நீளமுள்ள காட்டுப்பிரதேசத்தைக் கண்டார். அங்கு ஏழு கிறிஸ்தவர்கள் மாத்திரமே இருந்தனர். முதலாவது அந்தத் தாலூக்காவின் முக்கிய பட்டணத்தைச் சங்கச் சேவையின் மூலஸ்தானமாக ஏற்படுத்த நினைத்து, அங்குச் சென்றபொழுது அப்பட்டணத்தின் மகமதியர் கிறிஸ்து சமய மூலஸ்தலம் தம் மத்தியில் அமைக்கப் பெறுவதற்குச் சற்றும் இணங்கவில்லை. அந்த ஊர் ரெயில்வே ஸ்டேஷனில் திகைத்துக்கொண்டு நிற்கும்பொழுது, அடுத்த ஸ்டேஷனுக்கு அருகில் சாராயம் வடித்து இறக்குவதற்கென்று கட்டிய ஒரு

கட்டிடம் காலியாயிருக்கிறதென்று ஒருவர் அசரியாவுக்குச் சொன்ஞர். வேறு போக்கில்லாததால், அதையே தெரிந்துகொண்டு, 1903-ம் வருடம் ஏப்ரல் மாதம் முதல் இந்திய மிஷனெரி சாமுவேல் பாக்கியநாதனும், அவர் சோதரனும் அக்கட்டிடத்தின் இரு கோடியிலும் குடியிருந்துகொண்டு, மத்திய பாகத்தை ஆலயமாக உபயோகித்தார்கள்.

இந்தத் திட்டங்களையெல்லாம் சென்னை அத்தியட்சருக்கு அறிவித்து, அவருடைய அனுமதியையும் நல்வாக்கையும் பெறுவதற்கென்று அசரியா விரைந்து சென்ருர். வைட்ஹெட் அத்தியட்சர் இந்தியத் தேச பக்தரின் நேர்மையான நோக்கங்களை ஆதரிக்கத் தயாராயிருந்தவர்; கிறிஸ்துவின் இராஜ்யத்தைப் பரவச் செய்வதற்கென்று தாம் தெரிந்துகொண்ட நாட்டின் நன்மையை நாடுவது தம் கடமையெனக்கொண்டவர். ஆதலால் அசரியா கொண்டுவந்த செய்தி இந்தியக் கிறிஸ்தவர்களுக்குள் புத்துயிர் தோன்றியதன் அறிகுறியாக இருந்ததெனக் கருதிக் களிகூர்ந்தனர். திருநெல்வேலி மிஷனெரி சங்கத்தை மனப்பூர்வமாய் ஆசீர்வதித்து, அச்சங்கத்தின் ஊழியருக்குத் தம் அத்தியட்ச ஆதீனத்தில் சுதந்திரமும் அளித்தார்.

அசரியா வைட்ஹெட் அத்தியட்சரைச் சந்தித்ததின் நல்விளைவு சங்கத்திற்குக் கிடைத்த ஆதரவுமட்டுமல்ல. அசரியா அத்தியட்சரின் விசாலமான மனப்பான்மையையும் பக்தி சிரத்தையையும் கண்டு அவரிடம் மதிப்புகொண்டார். அத்தியட்சரும் இந்த இந்திய வாலிபன் கிறிஸ்து சபையின் தேர்ச்சிக்கடுத்த சிறந்த எண்ணங்களை எண்ணியிருந்ததையும், அவ்வெண்ணங்களைப் பூர்த்திசெய்ய வகுத்த திட்டங்களின் நயத்தையுங் கண்டு ஆச்சரியமும் மகிழ்வும் அடைந்தார். இப்பொழுது இவ்விருவர் மனதிலும் தோன்றிய அநுதாபமும், மரியாதையும் வெகு சீக்கிரமாக அரிய நட்பாக மலர்ந்து, கிறிஸ்து சமயத்திற்கு முன்னேற்றமளித்த அருஞ் செயல்களாகப் பழுத்தன. இதைச் சற்றுப்பொறுத்துக் கூறுவோம்.

திருநெல்வேலி இந்திய மிஷனெரிச் சங்கம் தென்னிந்தியத் திருச்சபையின் வளர்ச்சியின் அடையாளமாகத் தோன்றிய இரண்டு வருஷங்களுக்குப்பின், அகில இந்தியத் திருச்சபைக்குள் உருவாகிக் கொண்டிருந்த நவஜீவன் மண்ணைக் கிளறிக்கொண்டு எழும்பும் முளைபோல் எழுந்தது. இச்சமயம் வங்காளத்தில் எழும்பிய தேசியக் கிளர்ச்சி பாரத நாட்டின் எண் திக்கிலும் பரவிற்று. ஜனங்களுக்குள் என்றும் இல்லாத ஏக்கமும், தீவிர முயற்சிகளும் தோன்றின. இந்தியக் கிறிஸ்தவர்களுக்குள்ளும் தேசபக்தி அனல்கொண்டது. அவர்கள் துரைத்தனத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்யத்

துணியவில்லை. ஆனால் தம் தேசத்தின் மரியாதையைக் காப்பாற்றத் தக்கதும், வரம்பிற்குட்பட்டதுமான பெருஞ்செயல் ஒன்று செய்ய வேண்டுமென்று விரும்பினர். அந்நிய அரசாட்சியாகிய சுமையைச் சுமந்து மனமுடைந்து விடுதலையை உயிரினும் பெரிதாகக் கருதி வாஞ்சித்த தம் தேச மக்களுக்கு, இந்தியக் கிறிஸ்தவர்கள் செய்யக் கூடிய சிறந்த உதவி கிறிஸ்தரசனின் சத்திய இராஜ்யத்தின் மகிமையை எடுத்துக் காட்டுவததானென்று சில பாலியத் தலைவர்கள் எண்ணினர். கிறிஸ்து சமயம் நூறு நூற்றைம்பது வருஷம் இங்கு நிலையூன்றி யிருந்தும், சற்றறிந்த இந்திய மக்கள் அதை ஒரு அந்நிய சமயமாகவே கருதி வந்தனர். அது தம்மை அடக்கி ஆண்டுகொண்டிருக்கும் மேல் நாட்டு நாகரிகத்தின் அம்சமென்றும், தம் அடிமைத்தனத்தை நீடிக்கச் செய்யும் உபாயங்களில் ஒன்றெனவும் எண்ணினர். அரசாங்கத் தாரின் மதமாயிராவிட்டால், அல்லது அதற்கு மேனாட்டுப் பணவுதவி அற்றுப்போனால் அம்மதம் இந்நாட்டில் தழைக்குமோ? அதைத் தழுவிய இந்தியக் குடிகள் நிஜமாகவே அம்மதத்தில் பற்றுவைத்திருக் கிறார்களோ? அல்லவென்றால், அதன் மூலமாகக் கிடைக்கும் உலக நன்மைகளை நாடிப் போலி மத வைராக்கியம் காட்டுகின்றார்களோ? என்று பற்பல சந்தேகங்களையும் ஹிந்துத் தலைவர்கள் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். மத வைராக்கியமும் தேசபக்தியுமுடைய இந்தியக் கிறிஸ்தவர்களின் இருதயங்களில் இந்தக் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் தாமதமின்றித் தகுந்த சமாதானம் சொல்ல வேண்டுமென்ற ஆத்திரம் பொங்கிற்று.

ஷெர்வுட் எடி தமது நாட்டின் கலாசாலை மாணவர் சுவிசேஷப் பிரசாரச் சேவைக்குத் தமது படிப்பையும் காலத்தையும் அர்ப்பணம் செய்வதற்கு முன்வந்து கொண்டிருக்கையில், இந்தியக் கிறிஸ்தவ மாணவர் அப்படிச் செய்ய முன்வராததன் காரணம் யாதென்று ஆராய்ந்து பார்த்தபொழுது, ஒரு உண்மை அவருக்குப் புலப்பட்டது. அநேக வாலிபர் கிறிஸ்துவின் தொண்டராக மதப்பிரசாரம் செய்ய விரும்பினர். ஆனால் அவர்கள் எத்துறையில், எந்தச் சங்கத்தின் ஆதரவில் அப்பணியாற்றுவதென்று கண்டுகொள்ள முடியாதிருந்தனர். கிறிஸ்துவைச் சேவிப்பதென்றால், அப்பொழுது மேல்நாட்டிலிருந்து வந்த மிஷன் சங்கங்கள் ஒன்றின் சார்பில், அந்நிய நாட்டாரின் அதிகாரத்தின்கீழ் வேலைசெய்ய வேண்டியதாக இருந்தது. கிறிஸ்துவைச் சேவிக்க மனப்பூர்வமான விருப்பம் அவர்களிடமிருந்தது; ஆனால் மேல் நாட்டாரின் அதிகாரத்தின்கீழ் பணியாற்ற அவர்களுக்கு மனமில்லை. அப்படிப்பட்ட வாலிபருள் ஒருவர் பின்வருமாறு தன் கஷ்டத்தை எடுத்துக் காட்டினர். "பதினேழு வருஷங்களுக்கு முன்னே நான் சர்வகலாசாலையில் படித்துக்கொண்டிருந்த

பொழுது ஜான் ஆர். மாட் பண்டிதரின் பிரசங்கத்தைக் கேட்டேன். அப்பொழுது என்னைக் கிறிஸ்துவின் சேவைக்குத் தத்தம் பண்ண வேண்டுமென்ற பலத்த வாஞ்சை என்னுள்ளத்தில் எழுந்தது. ஆனால் அவ்வாஞ்சையைப் பூர்த்திசெய்து கொள்ளக்கூடாதவனாயிருந்தேன். கர்த்தரைச் சேவிப்பதென்றால், புறதேசத்தாராகிய மிஷனெரிகளைச் சேவிப்பதன்று என்று நான் சொல்லவேண்டியதாயிருந்தது. ஆனால் இப்பொழுதோ (நாஷனல் மிஷனெரிச் சங்கம் நிறுவப்பெற்றபின்) முன்னிருந்த தடை நீங்கிப்போயிற்று." இங்ஙனம் முதல் என்.எம்.என். சங்கத்தின் மாகாணக் காரியதரிசிகளிலொருவராகவும், பின் பிரதம காரியதரிசியாகவுமிருந்த கே. டி. பால் ஒரு பத்திரிகையில் 1913-ம் ஆண்டில் எழுதியிருந்தார்.

ஷெர்வுட் எடி யாழ்ப்பாண காலேஜ் கிறிஸ்தவ மாணவர் ஏற்படுத்தியிருந்த ஒரு சுவிசேஷப் பிரபல்ய சங்கத்தைக் கண்டு சந்தோஷித்து, அது யாழ்ப்பாணத்து இந்திய மிஷனெரி சங்கமாக ஓங்கி வளர ஊக்கமளித்தார். ஒரு முறை அவரும், அசரியாவும், புரமானந்தமும் கோயம்பத்தூரில் எழுப்புதல் கூட்டம் நடத்தச் சென்றபொழுது, இந்தியாவின் சகல கிறிஸ்தவர்களும் ஏகோபித்து ஒரு பெரிய மிஷனெரிச் சங்கத்தை ஏற்படுத்துவது நல்லதல்லவா என்று பேசினர். திருநெல்வேலி இந்திய மிஷனெரிச் சங்கத்தை நிறுவிச் சில மாதங்களாக அதன் தேர்ச்சிக்கென்று வெற்றிகரமான முயற்சிகள் செய்து வந்த அசரியாவே இப்புது இயக்கத்தை உண்டுபண்ண வேண்டுமென்று தீர்மானித்தார்கள். வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் இருந்த சில பிரமுகர்களை அசரியா கண்டு பேசினர். இந்த வேவு பார்க்கும் முயற்சிகளைக் குறித்துக் "கிறிஸ்டியன் பேட்ரியட்" என்ற தென்னிந்தியக் கிறிஸ்தவ வாரப் பத்திரிகையில் அடியிற்கண்ட செய்தி பிரசுரமாயிற்று. "1905-ம் வருடம் அக்டோபர் மாதம் 15-ம் தேதி ஞாயிறு திருநெல்வேலி இந்தியன் மிஷனெரிச் சங்கத்தின் காரியதரிசியாகிய திரு. வி. எஸ். அசரியா போர்மன் காலேஜ் மண்டபத்தில் ஒரு பெருங்கூட்டத்தில் சொற்பொழிவு செய்தார். புறமதஸ்தராகிய இந்தியருக்கு இந்தியக் கிறிஸ்தவர்களே சுவிசேஷத்தை அறிவிப்பது அத்யந்த அவசியம். உலக முழுவதிலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரவச்செய்யும் பொறுப்பு மேனாட்டுக்கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல; இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு முண்டு. இந்தப் பொறுப்பை நிறைவேற்ற நாஷனல் மிஷனெரிச் சங்கம் ஒன்று வெகு சீக்கிரம் நிறுவப்பெறுமென நான் எதிர்பார்க்கிறேன் என்று வெகு ஊக்கத்தோடு பேசினர்."

நாஷனல் மிஷனேரி சங்கம்

கிறிஸ்துவின் சுவிசேஷம் அந்நிய மதமென்ற தவறான அபிப்பிராயம் அதன் மேன்மையைக் காணவண்ணம் கற்ற ஹிந்துக்களின் கண்களை மறைத்திருக்கிறது. கிறிஸ்துபெருமான் இந்தியர் இதயங்களையுங் கவர்ந்துகொண்டிருக்கிறாரென்பதை இந்தியக் கிறிஸ்தவர்களே எடுத்துக்காட்டவேண்டும். அவர்கள் மற்றவரிடம் நன்மையை யாசித்து நிற்காது, மற்றவர்களுக்கு நன்மை செய்யத் தம் பணத்தையும், காலத்தையும், திறமையையும் நல்கக் காத்திருப்பதற்கு வெளிப்படையான கிரியை வேண்டும். ஆகையால் அகில இந்தியாவிற்கும் மிஷனெரிச் சங்கமொன்றை ஏற்படுத்தவேண்டும். இப்படி எண்ணிய கிறிஸ்தவர்கள் இந்தியாவின் நான்கு திசைகளிலுமிருந்து ஒன்று சேர்ந்து, 1905-ம் வருஷம் கிறிஸ்து பிறந்ததினமன்று, வட இந்தியாவிற்கு முதல் முதல் சுவிசேஷ நற்செய்தியைக் கூறவந்த வில்லியம் கேரியின் மூலஸ்தலமாகிய செராம்பூரில், கேரியின் புத்தகச் சாலையில், நாஷனல் மிஷனெரிச் சங்கத்தை நிறுவினார்கள். அங்குக் கூடியவர்களில் ஒருவர் அசரியா. அவர் தாம் யாழ்ப்பாணத்தில் கண்டதையும், திருநெல்வேலி ஐ. எம். எஸ். சங்கம் கடந்த இரண்டு வருஷங்களாகச் செய்துவரும் வேலையையும், அதனால் கிடைத்த அநுபவத்தையுங் கூறி, அங்குக் குழுமிய தொண்டருக்கு உற்சாக மூட்டினார். அவர் இச்சங்கத்தின் முதல் பிரதம காரியதரிசியாக நியமிக்கப்பெற்றார். உடனே பர்மாவுக்கும் மலேயாவுக்கும் சென்று, அநேக பட்டணங்களில் கிளைச்சங்கங்களை ஏற்படுத்தினர். 1906-ம் வருடம் மார்ச்சு மாதம் 12-ம் தேதி சென்னைக்கு வந்து ஒய். எம். சி. ஏ. பிரசங்க மண்டபத்தில் பெருங்கூட்டமாய்க் கூடியிருந்த தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு அச்சங்கம் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறதென்ற நற்செய்தியை ஆர்வத்தோடு பறைசாற்றினர். அவருடைய பால்ய நண்பருளொருவராகிய கே. டி. பால் அச்சங்கத்தின் காரியதரிசியானது அவருக்கு அளவற்ற திருப்தியைக் கொடுத்தது. அசரியா பாரதக் கிறிஸ்தவச் சேவா சங்கத்தின்மீது கொண்டிருந்த பற்று நாளடைவில் சற்றுக் குன்றிவிட்டது என்று சிலர் வருந்த நேரிட்டது. இச்சங்கம் நம் நாட்டில் வேரூன்றியிருக்கும் சகல கிறிஸ்து சமயப் பிரிவுகளோடும் ஒத்துழைக்கவும், அவற்றுள் ஒன்றோடும் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ளாதிருக்கவும் வேண்டுமென்று கொண்டிருக்கும் கோட்பாடு அசரியாவுக்கு அத்தனை உசிதமாகக் காணப்படவில்லை. இக்கோட்பாடு அச்சங்கத்தைப் பலஹீனப்படுத்துகின்றதென்பது அசரியாவின் பிற்கால அபிப்பிராயம். அவர் முற்கண்ட விசாலமான காட்சி பின்னர் குறுகியது அச்சங்கத்திற்கு ஓர் நஷ்டமே.

நாஷனல் மிஷனெரி சங்கம் வெகு ஜாக்கிரதையாகத் தான் எடுத்துக்கொண்ட நன்முயற்சியை ஆரம்பித்தல் அவசியமாயிற்று. அந்நாட்களில் இந்தியக் கிறிஸ்தவர்கள் செய்ய முன்வந்த ஒவ்வொரு விஷயத்தையும் மேனாட்டு மிஷனெரிமார் வெகு சிரத்தையோடு பரிசோதிக்க விரும்பினர். கிறிஸ்து சமயத்திற்கு விரோதமான ஹிந்து சமயக் கொள்கைகளையோ, அனுஷ்டானங்களையோ இந்தியக் கிறிஸ்தவர்கள் தேசபக்தியின் மயக்கத்தால் சபைக்குள் நுழைத்துவிடுவார்களென்று ஆங்கில அமெரிக்க மிஷனெரி பாதிரிகளுட் பலர் பயந்தனர். ஆகையால் என். எம். எஸ். தன் நிர்வாகக் கமிட்டியில் இந்தியர் அல்லாதவர்க்கு இடமில்லையென்று தீர்மானித்திருந்தபோதிலும், அக்கமிட்டி தவறுகள் செய்துவிடாது பார்த்துக்கொள்ள பரதேச மிஷனெரிமாரடங்கிய ஒரு ஆலோசனைக் கமிட்டியும் ஏற்படுத்துதல் அவசியமாயிற்று. (இந்த ஆலோசனைக் கமிட்டி பல வருஷங்களுக்குப் பின்னரே தள்ளப்பட்டது.) இது பல இந்தியக் கிறிஸ்தவர்களுக்குப் பிடிக்கவில்லை, என்றாலும் அப்படி மேல்நாட்டாரின் அதிகாரத்திற்குச் சிறிது பணிந்துபோகாவிடில் அவர்களுடைய பேச்சை மதித்துக் காரியங்களை நடத்திக்கொண்டிருந்த கிறிஸ்தவ சபைகளிடமிருந்து சங்கத்திற்கு ஆதரவைப் பெறுவது கடினம். அங்ஙனமே தம் விருப்பிற் கொவ்வாத, தம்மால் ஏற்படுத்தப்பெறாத, இந்தியக் கிறிஸ்தவ சபையைப் பிரித்துப் பலவீனப்படுத்தி வைத்த, மேல்நாட்டிலிருந்து இங்குக் கவலைத்தாழ்ச்சியால் புகுத்தி விடப்பெற்ற கிறிஸ்து சமய உட்பிரிவுகளுக்கும் என். எம். எஸ். தண்டனிடல்வேண்டியதாயிருந்தது. இது என். எம். எஸ். குற்றமல்ல. இங்ஙனம் இருவித இணக்கப் பான்மையைக் கையாண்டதினிமித்தம், இச்சங்கமொன்றே பிரிந்து நின்ற கிறிஸ்தவத் தொகுதிகளை இணைக்கக்கூடிய நிலைமையில் இருந்து வருகின்றது. தனித்தனித் தொகுதியினர் ஏற்படுத்தி ஆதரித்து வரும் மதுரை அமெரிக்கன் மிஷன் சபைகளின் கொங்காட்டு மிஷனும், மெதடிஸ்ட் மிஷன் சபைகளின் நிர்மல் மிஷனும், திருநெல்வேலி இங்கிலாந்து சபைகளின் டோர்னக்கல் மிஷனும் இணைத்துக்கட்டும் இயக்கங்கள் அல்ல. இன்று இம்மூன்று சங்கங்களும் தென் இந்தியச்சபை (C.S.I.) க்குள் ஒன்றுசேர்க்கப் பெற்றிருக்கின்றன.

தேசத்திலும் சபையிலும் புதிய புதிய கிளர்ச்சிகள் தோன்றிக் கொண்டிருந்த காலத்தில், அசரியா தம் சேவையை ஆரம்பித்தார். ஒய். எம். ஸி. ஏ. காரியதரிசியாக இருந்துகொண்டே திருநெல்வேலி இந்திய மிஷனெரிச் சங்கத்தின் சேவைக்களத்தைப் பண்படுத்தவும், அதற்கு வேண்டிய பணத்தை ஈட்டவும், அதன் முதல் மிஷனெரிமாரை அடிக்கடிச் சந்தித்து உற்சாகமூட்டவும் குன்றாத ஊக்கத்தோடு

உழைத்துவந்தார். ஒய். எம். ஸி. ஏ. யின் இந்திய நாஷனல் கவுன்ஸில், தம் காரியதரிசிகளில் பலருக்கு இந்திய சபையின் முன்னேற்றத்திற் கென்று முயற்சிக்கப் போதிய அவகாசம் கொடுத்துவந்ததை இந்தியக் கிறிஸ்தவர்களென்றும் மறவாதிருப்பது கடன்.

மறுபடியும் நாம் டோர்னகல்லுக்குச் சென்று அங்கு விட்டுவந்த முதல் மிஷனெரிமாரைச் சற்று கவனிப்போம். சாராயங்காய்ச்சி இறக்குங் கட்டிடத்தில் குடியிருந்துகொண்டு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கூற முயன்றது, அச்செய்தி எதிர்த்து மேற்கொள்ளவேண்டிய தீங்குகளுள் ஒன்று குடிவெறியென்பதற்கு ஒரு பொருட்பாடம் போலிருந்தது. அறுபதுமைல் நீளமுள்ள அந்தக் காட்டுப் பிரதேசத்தில் ஒரு சரியான வண்டிப்பாதையும் கிடையாது. அங்குக் குடியிருந்த பாமர மக்களுக்குக் கல்வி புகட்டவும் ஒரு பாடசாலையில்லை. ஆதலால் அவர்கள் அறிவீனத்திலும், அசுத்தத்திலும் மூழ்கியிருந்தார்கள். வறுமை ஓர் புறமும் எஜமானரின் கொடுமை ஓர் புறமும் அவர்களை நெருக்கின. தீண்டா ஜாதியெனப் புறக்கணிக்கப் பெற்றதனுல், முன்னேற்றமடைய வேண்டுமென்று அவர்கள் கனவிலும் நினைக்கவில்லை. அவர்களுக்குக் கிறிஸ்துவின் பிதாவாகிய ஏக தெய்வத்தை உண்மையோடும் சுத்த மனத்தோடும் வழிபடக் கற்பிப்பது எளிதான தொழிலல்ல. என்றாலும் இத்தொண்டர் தம் சேவையை ஆரம்பித்த மூன்றாம் வருடம் 23 பெரியோரும் 33 குழந்தைகளும் ஞானதீட்சை பெற்று கிறிஸ்து சமயத்தைச் சேர ஆயத்தமாயிருந்தார்கள். உவைட்ஹெட் அத்தியட்சர் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அப்பொழுது ஞானஸ்நானம் பெறுவதற்கென்று முந்நூற்றுக்கு அதிகமான ஜனங்கள் வேத உபதேசம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். டோர்னக்கல்லில் திருநெல்வேலிக் கிறிஸ்தவர் செய்துவரும் சுவிசேஷச் சேவையைக் கடவுள் ஆசீர்வதித்தார் என்பதற்கு இவைகள் ரூபகாரமாயின.

பெரிய தீர்மானம்

இவ்வெற்றிகளை எடுத்துக்காட்டி டோர்னக்கல் மிஷனுக்குப் பணமும், தொண்டரும் தேவையென்று அசரியா சென்னை நகரில் ஒரு கூட்டத்தில் வெகு உருக்கமாகக் கூறினுர். அக்கூட்டத்தின் முடிவில், ஒரு நண்பரோடு பேசிக்கொண்டிருக்கையில், மற்றவர்களை டோர்னகல்லுக்குப் போகக் கேட்கும் நானே ஏன் போகக் கூடாது என்ற கேள்வி உதித்தது. இது தெய்வ வாக்குப்போலிருந்தது. உடனே அசரியா டோர்னக்கல்லுக்குத் தாமும் ஒரு மிஷனெரியாகப் போகத் தீர்மானித்துவிட்டார். இதைக் கேள்வியுற்ற நண்பர்களிற் சிலர் அசரியா தம் அரிய தாலந்துகளை அந்தக் காட்டில் புதைத்துவிடப்போகிருரே என்று கவலைகொண்டனர். அத்தகைய்

கவலையும், தாம் இழந்துவிடப்போகும் வசதிகளும் அசரியாவின் எண்ணத்தில் இடம் பெறவில்லை. அவர் உடனே சென்று தமது தீர்மானத்தை உவைட்ஹெட் அத்தியட்சருக்கு அறிவித்தார்.

குருவும் சீடனும்

அசரியாவின் தீர்மானத்தை அத்தியட்சர் கேட்டவுடன் அது தெய்வ சங்கல்பமென்றே கருதினர். சில மாதங்களாக அத்தியட்சர் மனதில் ஒரு எண்ணம் அடிக்கடி வந்துகொண்டிருந்தது. திருநெல்வேலி நீங்கத் தமிழ்நாடு முழுவதும், மைசூர் நிஜாம் இராஜ்யங்களின் சில பாகங்களும் சென்னை அத்தியட்ச ஆதீனத்திற் சேர்ந்திருந்தன. இவ்வளவு விசாலமான ஆதீனத்தை ஒருவரே மேற்பார்ப்பது கடினம். அதனால் அத்தியட்சர் சபைகளுக்குச் செய்யவேண்டிய சேவையைத் திருப்திகரமாய்ச் செய்ய இயலாதிருந்தார். தமக்கொரு உதவி அத்தியட்சர் நியமிப்பது மிக்க அவசியமெனப் பிஷப் உவைட்ஹெட் நினைத்துக்கொண்டிருந்தார். அசரியா மிஷன் சேவைக்குச்செல்ல விரும்பியதைக் கேட்டவுடன், டோர்னக்கல் மிஷனுக்கு அதிர்ஷ்டமும், தம் எண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்கு வழியும் பிறந்ததாகத் தமக்குள் நினைத்துக்கொண்டு அசரியா சீக்கிரம் குரு அபிஷேகம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ஆலோசனை சொன்னார். அசரியாவுக்குப் போதிய வேத அறிவு இருந்தபடியால், அவர் வேத சாஸ்திரக் கல்லூரிக்குச் சென்று, இரண்டு மூன்று வருஷம் படிப்பது அவசியம் இல்லையென்று உவைட்ஹெட் நினைத்தார். அவரைத் தம்மோடு வைத்துக்கொண்டு, வேத சாஸ்திரம், திருச்சபைச் சரித்திரம், கொள்கை, ஆளுகை முறை இவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வழி காட்டுவது உசிதமென்று கருதி, அசரியாவைத் தம் அதிதியும், சீடனுமாக ஏற்றுக்கொண்டார். அசரியா உவைட்ஹெட் அத்தியட்சரோடு குடியிருக்கச் சென்றார். அத்தியட்சர் அவருக்கென்று தம் மாளிகையில் ஒரு பகுதியை ஆயத்தம்பண்ணியிருந்தார். அசரியாவைத் தாமே அந்த அறைக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டுவிட்டு அவருடைய குளிக்கும் அறையில் வேலைக்காரன் சோப்பும் துவாலையும் வைக்க மறந்துவிட்டானோ என்று பார்க்கச் சென்றார். இது அசரியாவுக்கு மிகுந்த ஆச்சரிய மூட்டிற்று. வெள்ளைக்காரர் இந்தியரைத் தமக்குச் சரிசமமாக நடத்துவது கிடையாது. கிறிஸ்தவப் பாதிரிமாரும் இந்த நிறவேற்றுமைக்குத் தப்பினோர் அல்லர். அத்தியட்சர் செய்த இச் சிறிய உபசரிப்பு, அவருக்கும் அசரியாவுக்கும் இடையே வளர்ந்த நேசப் பாந்தத்துவத்தின் வேர் ஆயிற்று. அத்தியட்சரைப்போல அவர் பத்தினியும் அசரியாவை உபசரித்தனர். அசரியா இங்கு ஒரு ஐரோப்பியக் குடும்பத்தின் அங்கத்தினனாகச் சிலகாலம் வசித்து

வந்ததும் அவர் அடைந்த பயிற்சியின் ஒரு விசேஷ அங்கமா யிருந்தது. ஜாதியை ஜாதியினின்றும் பிரித்துவைப்பது அந்தஸ்து, செல்வம், படிப்பு முதலிய பெரிய காரியங்கள் மட்டுமென்று, சிறு வழக்க பழக்கங்களும், உடை உணவு விஷயங்களிலிருக்கும் அற்ப சொற்ப வேற்றுமைகளுமாகின்றன. வெள்ளைக்காரருடைய தனிப்பட்ட வாழ்க் கையின் அம்சங்களைக் கண்டு அவற்றை விளங்கிக்கொள்ளவும், இந்தியருடைய வழக்க பழக்கங்களை அத்தியட்சருக்கும் அவர் மனைவிக் கும், அவரிடம் வந்த விருந்தினருக்கும் விளக்கிக் காட்டவும் அசரி யாவுக்கு வசதியேற்பட்டது. பின்னர் அவரைச் சந்திக்க வந்த ஐரோப்பிய அதிதிகளின் வசதியைக் கவனித்துக்கொள்ளவும் அசரியா கற்றுக்கொண்டார். இவற்றிலும் சிறந்த ஒரு நன்மையும் இந்த நாட்க ளின் அனுபவத்தால் பிறந்தது. இந்தியக் கிறிஸ்தவர்களுக்கும் மேல் நாட்டு மிஷனெரிகளுக்கும் ஒற்றுமையையும் சிநேகப்பான்மையை யும் உண்டுபண்ண அசரியா கற்றுக்கொண்டார்.

அத்தியட்சருடைய துணையில் புஸ்தகங்களைப் படிப்பதிலும், அவ ரோடு சத்திய வேதத்தையும், திருச்சபையையும் பற்றிய விஷயங் களைத் தர்க்கிப்பதிலும் அசரியா மிகக்கூர்ந்த ஊக்கமும், வாஞ்சை யும் கொண்டிருந்தார். இவற்றால் ஆங்கிலேயத் திருச்சபையின் நிலையையும், ஆராதனை, சபை ஒழுங்கு முதலியவற்றில் பாரம்பரியம் எவ்வளவு கலந்துள்ளதென்றும் முன் கற்றிராத அளவு இப்பொழுது அசரியா கற்றுக்கொண்டார். இவருக்கு ஆங்கிலத் திருச்சபையின் மீது முன்னில்லாத பற்றும் கௌரவமும் ஏற்பட்டது. அது சகல சபைகளுக்கும் பயன் விளைவிக்கத்தக்க அருமையான சில பாரம்பரிய அனுஷ்டானங்களைத் தனக்குள் பொதிந்து காத்துவைத்திருக்கிற தென்பது அசரியாவுக்கு இப்பொழுது உண்டான அபிப்பிராயம். இதுவரைக்கும் சபையின் ஆளுகைக்கும் அதன் சட்ட திட்டங்களுக் கும் அடங்கிப் பிழைப்பதின் அவசியத்தை உணராது, அளவற்ற சுதந்திரத்துடன் தம் வேத அறிவிற்கும் அனுபவத்திற்கும் ஒத்தவாறு கிறிஸ்து சபையில் அசரியா தொண்டாற்றி வந்தார். இப்பொழுது ஆங்கிலச் சபையின் குரு அபிஷேகத்தைப்பெற்று, அச்சபை விதித்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட விரும்பினார். உவைட்ஹெட் அத்தியட்சரும் அசரியாவின் அறிவையும், விவேகத்தையும், பக்தி சிரத்தையையும் அருகிலிருந்து கவனித்து, அவர் ஆங்கிலச் சபையின் குருக் குழுவிற்குச் சிறப்பும், முன்மாதிரியுமாக விளங்குவாரென்று உணர்ந்தார். ஆகவே 1909-ம் வருஷம் ஜூன் மாதம் பரிசுத்த பேதுரு அப்போஸ்தலரின் திருநாளன்று அசரியா டீக்கனாக அபிஷேகம் பெற்றார். அந்த நாள் குருவுக்கும் சீடனுக்கும் தத்தம் வாழ்க்கையில் ஒரு விசேஷித்த நாளாக இருந்தது. அந்த நாளில்

தான் உவைட்ஹெட் அத்தியட்ச அபிஷேகம் பெற்றார். அந்த நாளில்தான் அசரியா தன் காதலியுடன் இல்லறம் புகுந்தார். முந்தின இரவில் உவைட்ஹெட் அத்தியட்சர் தம் உள்ளத்தை அசரியாவுக் குத் திறந்து, அவரைத் தமக்கு உதவி அத்தியட்சராக நியமிக்கப் போவதை அறிவித்தார். டீக்கனாக அபிஷேகம் பெற்றபொழுது எவ்வளவு பெரிய பொறுப்பைத் தம்மைத் தடுத்தாண்ட இயேசுபெரு மான் தமக்குக் கொடுக்கப்போகின்றார் என்ற எண்ணம் அசரியாவுக் குப் பயத்தையும், விசயத்தையும் ஊட்டிற்று. அந்தப் பொறுப்பைத் தம் ஆண்டவரின் விருப்பிற்கு இசைய நிறைவேற்றத்தக்க பலத்தை யும் நல்வரங்களையும் கேட்டு அந்த ஆராதனையில் அவர் கெஞ்சினார். அந்த வருஷக்கடைசியில் அவர் போதகாபிஷேகம் பெற்றார்.

இந்த விசேஷ சம்பவம் நடந்து பத்து வருஷங்களுக்குப்பின் கிறிஸ்து சமய விண் விதானத்தில் விடிவெள்ளியே போன்ற ஒரு உத்தமத் தொண்டன் உதித்தார். அவர் உலகப் பிரசித்திபெற்ற சாது சுந்தர்சிங் என்னும் கிறிஸ்தவப் பரமார்த்திகர். அவர் உலகை யும், பிறப்புரிமையான சம்பத்தையும், கிறிஸ்துவை அறியும் அறி வின் மகத்துவத்தைக் கண்டு அற்பமெனக் கருதிக் குப்பையென வெறுத்துப் பலத்த எதிர்ப்புக்கும் அஞ்சாமல் கிறிஸ்து மதத்தைத் தழுவினார். அவருடைய பக்தி வைராக்கியத்தையும், தீர நெஞ்சை யும் கண்டு அவரை ஆங்கிலத் திருச்சபையின் ஒரு குருவாக இருக் கும்படி அவருக்கு வேத சாஸ்திரம் கற்றுக்கொடுத்த ஆசிரியர் அழைத்தனர். சுந்தர்சிங் அவ்வழைப்பைக் குறித்து நீண்ட ஆலோசனை செய்து ஏற்றுக்கொள்ள மறுத்தனர். ஏனெனில் கிறிஸ்து சமயப் பிரிவுகள் அனைத்திற்கும் ஆண்டவர் அருளும் செய்தியை யாதொரு தடையுமின்றிக் கூறும் சுதந்திரம் ஆங்கிலச் சபையின் அபிஷேகத் தால் மட்டுப்படும் என்று அவர் கூறினார். அங்ஙனமே அசரியா ஒய். எம். ஸி. ஏ. யின் காரியதரிசியாக இருந்தபொழுது கொண்டிருந்த சுதந்திரம் மட்டுப்படும் என்றும், அவர் சேவைத்திறனை மெச்சிய அவருடைய நண்பருட் சிலர் எண்ணினர். கிறிஸ்து சமயக் கிளைப் பிரிவுகள் அனைத்தும் அசரியாவைத் தமக்குச் சொந்தமானவராகப் பாவிப்பதற்கு அவர் ஆங்கிலச் சபையின் போதகாபிஷேகத்தைப் பெற்றதால் இடமில்லாமற் போயிற்று. சுந்தர்சிங் தம் சுயாதீனத் தைப் பாதுகாக்கத் தீர்மானித்தார். அவர் கிறிஸ்து சபைகள் யாவற் றிற்கும், இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் தீர்க்கதரிசனம் உரைத்த இருபதாம் நூற்றாண்டு தீர்க்கதரிசியாக விளங்கினார். அசரியா ஆங்கிலச் சபையோடு நெருங்கிய சம்பந்தத்திற்குள் பிரவேசித்து, எல்லைக்குட்பட்ட ஓரிடத்தில் உத்தம சேவை செய்துமுடித்தார். ஒருவர் திருச்சபையில் ஓர் தீர்க்கதரிசனாகவும், மற்றவர் ஓர் அத்தி

யட்சராகவும் இருக்கும் அழைப்பையும், சிலாக்கியத்தையும் பெற்றனர். என்றபோதிலும் திருச்சபையிலிருக்கும் பிளப்புகளோ இவ்விருவருடைய சேவைத்திறனுக்கு ஒரு இடைஞ்சல் ஏற்படுத்தின. இதை அசரியா உணராதிருக்கவில்லை. கிறிஸ்தவர் நாடுகளில் பற்பல பிரிவுகளைச் சேர்ந்த தம் உடன் விசுவாசிகளோடு பாடி, ஜெபித்து, வேத வசனத்தைக்கூறி அல்லது கேட்டு ஆத்மீக ஒற்றுமையை ருசித்தபின், அவ்வொற்றுமையை முத்தரித்து ஆசீர்வதிக்கத்தக்க கர்த்தருடைய திருவிருந்தை அவர் மற்றவர்களோடு சேர்ந்து அருந்தக்கூடாதபடி தமது சபையின் சட்டம் செய்திருப்பதை நினைத்துச் சபைப் பிரிவினையின் கசப்பையும் ருசித்தார். அவருடன் மனமொத்து ஏக முயற்சியில் ஈடுபட்டிருந்த பிரிய நண்பர்களாகிய கே. டி. பால், எஸ். பரமானந்தம், வி. சந்தியாகு முதலானோர்க்கும் தமக்கும் இடையே ஒரு சபைச்சட்டம் தடுப்புச் சுவர்போல் நின்றது.

இந்த நிர்ப்பந்தத்தை இங்குக் கூறுவதன் கருத்து அசரியா செய்த தீர்மானத்தைக் குறித்துக் குறை சொல்லுவதற்கல்ல. இந்தியக் கிறிஸ்தவச் சமுதாயத்தில் சபைப் பிரிவினையால் நேரும் தீங்குகளில் ஒன்றைச் சுட்டிக் காட்டுவதேயாகும். இதைப் பூரணமாய் உணர்ந்த அசரியா தென்னிந்தியச் சபைகளின் பிரிவினையை ஒழிக்க எடுத்த அரும்பிரயத்தனத்தைத் தகுந்த இடத்தில் கூறுவோம்.

அசரியாவின் வேலைக்களத்தின் விஸ்தீரணம் குறைந்தபோதிலும் அதனுள் அவர் செய்த வேலையோ மிகச் சிறந்ததே. அவர் டீக்கனுக அபிஷேகம் பெற்ற அடுத்த மாதமே டோர்னக்கல் சென்றார். ஜனுவரி மாதம் தம் மனைவியையும் பிள்ளைகளையும் அங்கு அழைத்துக்கொண்டார். சாராயக் கிடங்கிற்கு அடுத்த பக்கத்தில் இருப்புப் பாதையைக் கடந்து கொஞ்சம் நிலம் வாங்கி, அங்கே தமக்கும் தம் குடும்பத்திற்கும் இரண்டே அறைகளுள்ள ஒரு சிறு வீட்டைக் கட்டிக்கொண்டு அதில் குடியேறினர். பல வருஷங்களுக்குப்பின், அவர் அத்தியட்சரானபின் அத்தியட்சருக்கென்று கட்டிய பெரிய பங்களாவில் வசித்து வந்தபொழுது, அவருடைய அதிதியாகச்சென்ற ஒரு மிஷனெரி அவர்கள் துவக்கத்தில் குடியிருந்த சிறிய வீட்டைப்பார்த்து இதில் எப்படிக் காலம் தள்ளினீர்கள் என்று வினவ, நாங்கள் டோர்னக்கல்லில் கழித்த நாட்களுள் இங்கு வசித்த நாட்கள் மிக இன்பமான நாட்களாயிருந்தனவென்று அசரியா பதில் அளித்தார். ஐ. எம். எஸ். நிறுவப்பெற்று ஏழு வருடங்கள்தான் ஆயின. முதல் விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்று நான்கு வருடங்களாயின. அசரியா டோர்னக்கல்லுக்குச் சென்று சில மாதங்கள் ஆயின. அதற்குள்ளாக அசரியாவிற்கு மேல்நாடு செல்ல அழைப்பு வந்தது.

எடின்பரோ—1910

ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் மிஷனெரிச் சங்கங்கள் முளைத்துத் தழைத்து மற்றக் கண்டங்களின் நாலுபாகங்களிலும் கிளை களைப் விடுத்து ஓங்கி நின்றன. ஆங்காங்குக் கிறிஸ்தவச் சபைகளும் பிறந்தன. இவை வளர்ந்து வந்தன. ஆலமர விழுதுகள்போல் அவற் றுள் சில வேரூன்றிக் கிளைச் சங்கங்களையும் ஸ்தாபித்தன. கல்வியி லும், திறமையிலும், பக்தி வைராக்கியத்திலும் இந்தச் சபைகள் முதிர்ந்திருந்தன. இப்படியாக மேல்நாட்டு மிஷனெரி இயக்கம் இரு நூற்றாண்டுகளுக்குள், வெற்றிகரமான சேவையைச் செய்து வந்திருப் பினும், அவ்வியக்கத்தில் சில குறைகளும் தோன்றின. முதலாவது மிஷனெரிச் சங்கங்கள் ஒன்றோடொன்று கலந்து மொத்த விசாலமான வேலைத்திட்டங்கள் செய்துகொள்ள முன்வரவில்லை. ஒரே அரணைத் தாக்கச்சென்ற சைனியங்கள் ஒன்றோடொன்று கலந்து ஆலோசிக் காது, தனித்தனியே தம்தம் மனதிற்குத் தோன்றியபடி யுத்தஞ்செய்யச் சென்றதுபோல், மிஷன் சங்கங்கள் தம்தம் இஷ்டப்படியே கிறிஸ்து வின் இராஜ்யத்தை உலகெங்கும் நிலைநாட்ட முயன்றுகொண்டிருந் தன. உலகெங்கும் சுற்றுப் பிரயாணஞ்செய்த ஜான் ஆர். மாட் போன்ற கிறிஸ்தவத் தலைவர்கள், மிஷன் சேவையில் சங்கங்கள் கலந்து ஒரு பொதுத்திட்டம் வகுத்துக்கொள்ளாததனால் விளைந்த கெடுதிகளையும், மற்றும் இயல்பாகத் தோன்றிய இடைஞ்சல்களையும் கண்டனர். சுவிசேஷப் பிரசாரச் சேவையில் ஈடுபட்டிருக்கும் சகல புராட்டஸ்டண்ட் மிஷனெரிச் சங்கங்களையும் ஒன்றுகூட்டவும், அவ் வொற்றுமையின் மூலமாக அவை பெறக்கூடிய பலத்தையும், சித்தி யையும் அவைகளுக்கு எடுத்துக்காட்டவும் ஒரு மகாநாடு ஏற்படுத்து வது அவசியமென்று அவர்கள் உணர்ந்தனர். ஒவ்வொரு நாட்டிலும் சுவிசேஷத்தை அறிவிக்கப்பெறாத பல இடங்கள் ஒரு பக்கம் இருக்க, மறுபக்கம் ஒரே பட்டணத்தில் அல்லது ஜில்லாவில் இரண்டு மூன்று நான்கு வெவ்வேறு மிஷனெரிச் சங்கங்கள் வேலைசெய்து, சபைகளைச் சேர்க்கவும் ஆலயங்களையும், பாடசாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும் கட்டவும் முனைந்து நின்றன. இதனால் அவசியமான இடங்களுக்குப் போகவேண்டிய பணமும், ஆட்களும் ஒரு இடத்தில் குவிந்துகொண் டன. தவிர கிறிஸ்து சமயம் என்றால் ஒன்றா அல்லது பலவா என் றும், ஏக நோக்கத்தோடு தம் மத்தியில் வந்திருக்கிறோம் என்று சொல் லும் இச்சங்கங்கள் ஏன் ஒன்றோடொன்று போட்டிப் போட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் பற்பல கேள்விகள் புறமதஸ்தரின் மன தில் எழும்பி மயக்கத்தை உண்டாக்கின. இக்காரணங்கள் பற்றி மிஷன் சங்கங்கள் செய்த சேவை தரக்கூடிய அளவு கனியைத் தர வில்லை.

சகல மிஷனெரிச் சேவைக் களங்களிலும் களைபோல் மற்றொரு தீங்கும் முளைத்துப் பயிரை நெருக்க ஆரம்பித்துவிட்டது. முதன் முதல் சுவிசேஷ நற்செய்தியைப் புறநாடுகளுக்கு எடுத்துவந்த மிஷனெரிமார் அநேக வசதிக் குறைவுகளினூடே எவ்விதப் பக்கத்துணையுமில்லாமல், தாம் கொண்டிருந்த வைராக்கியத்தினாலேயே மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்தார்கள். அவர்களுடைய உபதேசத்தைக் கேட்டு இந்தியாவில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த ஏழை மக்கள் கிராமம் கிராமமாகக் கிறிஸ்து மதத்தைத் தழுவினார்கள். அவர்களுக்குக் கிறிஸ்து சமயப் போதனை புகட்டுவதோடு நிற்காமல், மிஷனெரிமார் அவர்களுடைய பிள்ளைகளுக்கு உணவும், உடையும், கல்வியும் இலவசமாகக் கொடுத்து உதவினார்கள். படித்து முடித்த பின் அவர்களை உபாத்திமாரும் உபதேசிகருமாகப் பயிற்றுவித்து, மிஷன் ஸ்தாபனங்களிலேயே வேலையில் அமர்த்தி ஆதரவு அளித்தார்கள். அநாதைப் பிள்ளைகளை எடுத்து வளர்த்து, அவர்களுக்கு விவாகம் முதற்கொண்டு மிஷனெரிமாரே செய்துவைத்தார்கள். ஆகையால் கிறிஸ்து மதத்தைத் தழுவின பெரியோருக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் மிஷனெரிமார் ஞானோபதேசம் புகட்டிய குருக்களாகமட்டுமல்ல பெற்றோராகவும் விளங்கினர். உயர் குலத்திலிருந்து கற்றறிந்த சிலர் கிறிஸ்து மதத்தைத் தழுவியபொழுது அவர்களை உத்தரவாதமான மிஷன் வேலைகளில் அமர்த்தி சரிசமானமாக மதித்து நடத்திவந்தார்கள். இரண்டாம் மூன்றும் தலைமுறைக்குள் மிஷனெரிமாருக்கும் அவர்களால் கிறிஸ்து மதத்திற்கு வந்த இந்தியக் கிறிஸ்தவர்களுக்கும் ஊடே முன்னிருந்து நேசபந்தம் முறிந்துவிட்டது. இந்தியக் கிறிஸ்தவர்கள் படிப்பிலும், திறமையிலும் தேர்ந்துவிட்டார்கள். பின் வந்த மிஷனெரிமார்களுக்கு வேண்டிய வசதிகளும், சபையில் முதன்மையான இடமும் கிடைத்துவிட்டது. முன் மிஷனெரிமார் தாமே செய்துவந்த சுவிசேஷப் பிரசாரச் சேவையை சிப்பந்திகளாகிய சுதேச உபதேசிகர்களிடம் ஒப்படைத்துவிட்டு, மிஷனெரிமார் மேற்பார்க்கும் கண்காணிகளாகிவிட்டனர். கல்விச் சாலைகளிலும், வைத்திய சாலைகளிலும் அறிவும் அனுபவமும் முதிர்ந்த சுதேச உபாத்திமார் வைத்தியர் இருந்தபோதிலும், நேற்று வந்த வாலிப மிஷனெரி அப்படிப்பட்டவர்களுக்கும் மேலதிகாரியாக வீற்றிருந்தார். சிலவேளைகளில் சுதேசக் கிறிஸ்தவர்களிடையே சிறிது தேச பக்தி தோன்றினால், அது தமக்கும் கிறிஸ்தவ அரசாங்கமாகிய ஆங்கில அரசாங்கத்திற்கும் விரோதமான நன்றிகேடென்று மிஷனெரிமார் எண்ணி, அவ்வெண்ணத்தை மனதைப் புண்படுத்தத்தக்க விதமாய் வெளியிட்டார்கள். ஆகையால் சுதேசக் கிறிஸ்தவர்கள் தமக்கும் தமது திறமைகளுக்கும் மிஷனெரி ஸ்தாபனங்களில் நியாய

மாய்க் கிடைக்கவேண்டிய சிலாக்கியம் கிடைக்கவில்லையென்று வருத்தமும், உள்ளூரக் கோபமும் கொண்டார்கள். இதற்கெல்லாம் அடிப்படையாக நிற்பது மேல்நாட்டாரின் நிறச் செருக்கென்றும் எண்ண இடமுண்டாகிவிட்டது. சாதாரணமாக மேல்நாட்டு வெள்ளை மக்கள் கீழ்நாட்டு மக்கள் குணத்திலும் திறமையிலும் தமக்குச் சமமானவர்களல்ல வென்ற பெருமை கொண்டிருப்பது உலகறிந்த உண்மை. அந்தப் பெருமை கிறிஸ்தவச் சபையிலும் நுழைந்து கொண்டது சுதேசக் கிறிஸ்தவர்களுக்கு ஆச்சரியத்தையும், வெறுப்பையுங் கொடுத்தது. அதிகாரமும், செல்வாக்கும் அந்நிய நாட்டாரின் தனி உரிமையாகவே இருந்துவிட்டால், சுதேசக் கிறிஸ்தவச் சபைகள் வளர்ந்து காலூன்றி நிற்பது அசம்பாவிதமென்றும் சுதேசக் கிறிஸ்தவர்கள் உணர்ந்தார்கள். இவ்வித மனஸ்தாபங்கள் அடிமை நாடாகிய இந்தியாவில் மட்டும் அல்ல, சுதந்திர நாடுகளாகிய சீனுவிலும் ஜப்பானிலுங்கூட ஏற்பட்டிருந்தன.

ஆகையால் சுவிசேஷப் பிரசாரச் சேவையில் அந்நிய நாட்டாராகிய மிஷனெரிகளும், சுதேசக் கிறிஸ்தவர்களும் ஒத்துழைப்பது எப்படி என்ற கேள்வியையும் அகிலலோக மிஷனெரி மகாநாடு அவசியம் கவனிக்கவேண்டுமென்று அதைக் கூட்ட முயற்சித்த தலைவர்கள் தீர்மானித்தார்கள். அத்தலைவர்களுள் முக்கியமானவர் மாட் பண்டிதர். அவர் அசரியாவின் குணத்தையும் திறமையையும் நன்கறிந்திருந்தபடியால் அவரே இந்தக் கேள்வியை அம்மகாநாட்டில் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று அவரைக் கேட்டார். அசரியா அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று நினைத்தார். அவருடைய உண்மையான அபிப்பிராயத்தை மகாநாட்டில் வெளியிட்டால் தம்முடைய மேல்நாட்டு நண்பர்களுக்கு மன வேதனை உண்டாகும். உண்மையைச் சொல்லாது நயவசனிப்பால் யாவரையும் பிரியப்படுத்த முயலுவது மாய்மாலமாகும். இவ்விரண்டும் சங்கடமான நிலையே. ஆனால் கேட்போர் செவிகளில் நாராசம்போலிருப்பினும் அவ்விஷயத்தில் உள்ளதை உள்ளபடி நெஞ்சில் தைக்கத்தக்க விதமாகச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதென்றும், அசரியா குறைகூறும் கசப்பான தொழிலை மேற்கொள்ள அவசியமானாலும், அதை அன்போடு செய்யத்தக்க வல்லமை யுடையவரென்றும் மாட் பண்டிதர் சாதித்துவிட்டார். அசரியா ஆட்சேபிப்பதற்கு இடமில்லாமற்போயிற்று. 1910-ம் வருஷம் எடின்பரோ பட்டணத்தில் கூடியமுதல் அகிலலோக மிஷனெரி மகாநாட்டில், அசரியா எழுந்து நின்று, மனதிற்குக் கஷ்டமான சில உண்மைகளைப் பகிரங்கமாக எடுத்துரைத்தார். “பரலோகத்தில் பொன் ஆசனங்களிலிருக்கும் உரிமையைப் பெற்றுக்கொள்ள இந்தியராகிய எங்களை அழைக்கும்

மேல்நாட்டு மிஷனெரிமார் நாங்கள் கிறிஸ்து மதத்தைத் தழுவிய பின், அவர்கள் வீட்டுத் தாழ்வாரத்திலிருக்கும் பிரம்பு நாற்காலிகளிலும் உட்கார எங்களைக் கேட்கிறதில்லை. வெள்ளைக்கார மிஷனெரிகள் தம் உடன் கிறிஸ்தவர்களாகிய இந்தியருக்குக் காட்டும் மரியாதை இவ்வளவுதான். ஆதலால், மிஷனெரிகளுக்கும் இந்தியக் கிறிஸ்தவர்களுக்கும் ஊடே ஓர் பெரும் பிளவு இருக்கிறது. ஒரு பக்கம் பெருமையும் மறுபக்கம் கோபமும் புகுந்துகொண்டதால் சகோதரத்துவத்திற்குப் பங்கமும், கிறிஸ்துவின் இராஜ்யம் பரவுவதற்கு இடைஞ்சலும் ஏற்பட்டிருக்கின்றன. நான் என் தேசத்தாருக்கு உபசாரச் சந்திப்பு, கைகுலுக்குதல், ஆசனம் அளித்தல், விருந்திடல் முதலிய சலுகைகளைக் கேட்கவில்லை. இருதிறத்தார்க்கும் ஒருவரைப் பற்றி ஒருவரிடம் நிசமான மதிப்பும், அன்பும் இருக்குமானல், இவைகளும் இவைகளுக்கு மேலானவைகளும் தானகவே கிடைக்கும். புறதேச மிஷனெரியொருவர் தாம் எவர்கள் மத்தியில் டணியாற்ற வந்திருக்கிருரோ அவர்களுடைய ஆண்டவனும் எஜமானனுமாயல்ல, சகோதரனும் சிநேகிதனுமாயிருப்பது தம்முடைய கடமையென்று உணர்ந்துகொண்டால், சிநேக பாந்தத்தின் புறக்கிரியைகள் இயல்பாகத் தோன்றும். இந்தியத் திருச்சபை எழுந்து நின்று மிஷனெரிமார் சுயநலம் பாராட்டாது செய்திருக்கும் வீரச்செயல்களை நினைத்து யுகாயுகங்களாக அவர்களுக்கு நன்றிகூறும். ஏழைகளைப் போஷிக்க நீங்கள் உங்கள் பொருளைக் கொடுத்திருக்கின்றீர்கள். நீங்கள் உங்கள் உடலை அக்கினிக்கு இரையாகக்கொடுக்கவும் துணிந்தீர்கள். உங்கள் களங்கமற்ற அன்பையும் கொடுங்களென்று நாங்கள் கேட்கிறோம். எங்களுக்குச் சிநேகிதரைக் கொடுங்கள்" என்று அசரியா தம் சொற்பொழிவை முடித்தார். இதைக் கேட்ட யாவரும் பிரமித்தனர். அநேகர் அசரியா எடுத்துக்காட்டிய தீமையை ஒழிப்பது எங்ஙனமென்று தீவிரமாக ஆலோசிக்க முற்பட்டனர். இந்திய மிஷனெரி வட்டாரங்களில் அசரியாவின் பேச்சு அதிர்ச்சியை உண்டாக்கிற்று. மிஷனெரி சங்கங்களின் உதவியால் முன்னுக்கு வந்த ஒருவன் இப்படி நன்றிகெட்டதனமாய்ப் பேசலாமா என்று பலர் சீறினர். சிலர் தம் குற்றத்தை யுணர்ந்து தம்மைச் சீர்ப்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தனர்.

அத்தியாயம் 4

முதல் இந்திய அத்தியட்சர்

சென்னை அத்தியட்ச ஆதீனத்திற்கு ஒரு உதவி அத்தியட்சர் மிக அவசியமென்று எண்ணிய மாத்திரத்திலே, அப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தகுந்த ஒரு ஆளும் தோன்றினபொழுது, பிஷப் உவைட்ஹெட் காலதாமதமின்றித் தம் கருத்தை நிறைவேற்ற முயன்றார். 1905-ம் ஆண்டில் கூடிய அத்தியட்ச சபையில், தம் கருத்தை வெளியிட்டார். அக்கருத்து உசிதமானதே என்று அத்தியட்சர் அநேகர் ஆமோதித்தனர். அடுத்த அத்தியட்சர் சபைகூட இரண்டு வருஷங்கள் செல்லவேண்டும். இதற்கிடையே அசரியா டோர்னக்கல் மிஷன் வேலையைத் தெய்வக் கட்டளையாக ஏற்றுக்கொண்டு, குருப்பட்டாபிஷேகம் பெற்றிருந்தார். அவர் கிறிஸ்து சமயச் சேவையில் சிறந்த ஊக்கம் கொண்டிருந்ததை யாவரும் கண்கூடாகக் கண்டனர். அவர் இந்தியத் திருச்சபைக்கு மாத்திரமல்ல, அகில லோகச் சபைக்கும் மதிப்பிற்குரிய தலைவர்களுள் ஒருவர் ஆவர் என்பதின் அறிகுறி அவர் செயலிலும் பேச்சிலும் தோன்றியிருந்தது. என்றபோதிலும் இரண்டு வருஷங்களுக்குமுன் சென்னை ஆதீனத்திற்கு ஒரு உதவி அத்தியட்சர் அவசியமென்று நினைத்த அத்தியட்ச சபை அசரியாவிற்கு அந்தப் பதவியை அளிக்கவேண்டுமென்று உவைட்ஹெட் சொன்னபொழுது பிரமிப்படைந்தது. அத்தியட்சர்கள் உவைட்ஹெட் கொண்டுவரும் பிரேரபனை உசிதமானதல்ல என்றனர். இந்தியாவிலிருக்கும் ஆங்கிலக் கிறிஸ்தவர்கள் இது என்ன அக்கிரமம், ஒரு கருப்பனை எங்கள் அத்தியட்சராக நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்கிறது என்று சொல்லித் துடித்தார்கள். அரசாங்கத்தார் இதைப் பூரணமாக நிராகரித்தனர். சில வெள்ளைக்காரப் பாதிரிமார் இந்திய அத்தியட்சரின் கீழ் சேவை செய்யமாட்டோம் என்றனர். இந்தியக் கிறிஸ்தவர்களிற் சிலர் பொறாமையடைந்தனர். ஆயினும் துர் அபிப்பிராயம் அற்ற யாவரும், விசேஷமாக வாலிபக் கிறிஸ்தவச் சபையோரும் குருமாரும் உவைட்ஹெட் கொண்டுவந்த பிரேரபனையை உவந்து ஏற்றுக் கொண்டனர். மேல்நாட்டிலுள்ள தாய்ச் சபைக்கும் தமக்கும் இனியதோர் சம்பந்தம் இதனால் ஏற்படப்போகிறதென்று அவர்கள் அகமகிழ்ந்தனர். இந்தியாவின் பிரதம அத்தியட்சராகிய கோபல்ஸ்டன், உவைட்ஹெட்டின் கருத்தை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டதோடுகூட, அதில் ஒரு நல்ல திருத்தமும் குறிப்பிட்டார். "அசரியாவை உதவி அத்தியட்சராக அல்ல, பூரண சுதந்திரமுள்ள அத்தியட்சராகவே நியமிக்கவேண்டும். அல்லவென்றால் முதன்முதல் அபிஷேகம் பெறும்

இந்திய அத்தியட்சர் ஒரு தாழ்ந்த அந்தஸ்துடையவராகவும், இந்தியருக்கு மாத்திரமே குருவாகவும் இருப்பார். இது நல்லதல்ல" என்று பிரதம அத்தியட்சர் வாதித்தார்.

இவ்விவாதங்களைக் கேட்டபொழுது அசரியாவின் மனதைத் துக்கம் ஒரு பக்கமும், திருப்தி ஒரு பக்கமும் அலைக்கழித்தன. பதவி மோகம் கொண்டிராத அவர் கடவுளுடைய திருச்சித்தம் எதுவோ அது நடக்கட்டும் என்று சொல்லிக்கொண்டு, தமது தற்போதைய கருமத்தைக் கண்ணுங்கருத்துமாய்ச் செய்துவந்தார். அவருடைய வேலையையும் பொறுமையையும் கண்டவர்கள் பலர் தாம் கொண்டிருந்த துரபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டனர். அசரியா எடின்பரோ நகரில் கூடிய மகாநாட்டில் பேசிய வார்த்தைகளைக் கேட்ட பலர், முதல் இந்திய அத்தியட்சராக வரப்போகிறவர் ஏமாந்த மனுஷரல்ல, திடநெஞ்சரும் முற்போக்கான சிந்தையுள்ளவரும் என்று அறிந்து திருப்தியடைந்தனர். இப்படியாக அவருக்கு நேர்ந்த எதிர்ப்பு சூரியனைக் கண்ட பனிபோல் கறைந்து மறைந்தது. அடுத்த அத்தியட்ச சபை கூடினபொழுது, சென்னை ஆதீனத்தில் டோர்னக்கல், சிங்கரோணி, கம்மாமெட் என்னும் சேகரங்களைப் பிரித்து டோர்னக்கல் ஆதீனமொன்றை ஏற்படுத்தி அசரியாவை அதற்கு அத்தியட்சராகவும், சென்னை அத்தியட்சருக்கு உதவி அத்தியட்சராகவும் நியமிக்கத் தீர்மானம் நிறைவேறிற்று. பத்து வருஷங்களுக்குப்பின் தெலுங்கு நாட்டின் சகல சேகரங்களும் டோர்னக்கல் ஆதீனத்தைச் சேர்ந்தன.

அபிஷேகம்

கல்கத்தாவிலுள்ள அத்தியட்ச ஆலயத்தில் 1912-ம் வருஷம் டிசெம்பர்மீ 29-ம் தேதியன்று ஒரு பெரும் சபை கூடிற்று. வயது முதிர்ந்த பிரதம அத்தியட்சர் கோபல்ஸ்டன் ஆராதனையை நடத்தினர். அவருக்குத் துணையாகப் பத்து அத்தியட்சர்கள் நின்றனர். இது மகா விசேஷ ஆராதனை. ஏனென்றால் கிறிஸ்து சமயம் இந்தியாவில் நாட்டப்பெற்று இருநூறு வருடங்களுக்குப்பின் சுதேசக் கிறிஸ்தவர் ஒருவர் முதன்முதலாக அத்தியட்சராகப் போகின்றார். இது இந்தியத் திருச்சபையின் சரித்திரத்தில் மா உன்னதமான ஓர் நாள். ஆதலால் அங்கு இந்தியாவின் நாலு வகுப்பினரும் குழுமியிருந்தனர். தமிழர், தெலுங்கர், சிங்களவர், பர்மியர், வங்காளிகள், பஞ்சாபிகள் யாவரும் தாம் கிறிஸ்து சமயத்தால் இணைக்கப்பெற்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும், தமிழ்நாட்டுச் சகோதரனுக்குக் கிடைத்த கௌரவம் தங்கள் யாவருக்கும் உரியதென்றும் காட்ட ஆலயத்தில் கூடினர். அசரியாவின் பிரிய நண்பராகிய ஜான் ஆர். மாட் பண்டிதரும், ஷேர்

வுட் எடியும் அங்கிருந்தனர். இந்தியச் சர்க்காரின் பிரதிநிதியாக வங்காள கவர்னர் ஆங்கிருந்தார்.

பிரதம அத்தியட்சர் கோபல்ஸ்டன் தம் பிரசங்க வசனமாகப் பவுல் அப்போஸ்தலன் எபேசு சபைக்காகச் செய்த பரிந்து மன்றாடலைத் தெரிந்துகொண்டார் (எபே. 1: 17-19). அசரியா அத்தியட்சர் கிறிஸ்துவின் மனப்பான்மையை அடைந்து, அவருடைய அன்பால் தூண்டப்பெற்று, கடவுள் மனுக்குலத்தினரிடம் பாராட்டும் அளவற்ற அன்பையும், அவர்களைக் குறித்துக்கொண்டுள்ள திருவுளச் சித்தத்தையும் வெளிப்படுத்தும் உத்தமப் போதகனுக விளங்கவேண்டுமென்று நல்வாக்கு கூறினர். குழுமிய சபையைப் பார்த்து, "சுதேசக் கிறிஸ்தவர் ஒருவர் இன்று அத்தியட்சராக அபிஷேகம் பெறுவதை நினைத்துக் களிதுழும்புங்கள். இன்னும் அநேகர் உங்கள் அத்தியட்சர்களாக வேண்டுமென்று கேளுங்கள். ஆனால் அது உங்கள் சுயமரியாதைக்கு அத்தியந்த அவசியமென்று கருதிச் சில குருக்கள் இந்தியராயிருப்பதனாலேயே, அத்தியட்ச பதவியை வகிக்கவேண்டுமென்ற எண்ணத்தை அகற்றுங்கள். கிறிஸ்து சபையில் நிறச்செருக்கு வேரோடு அற்றுப் போகவும், இந்தியர் ஐரோப்பியர் என்ற வேற்றுமையின்றிக் கல்வியிலும், திறமையிலும், பக்தியிலும் தேர்ந்த கிறிஸ்துவினடியார், தம்தம் தகுதிக்கேற்ற பணியை யாவருக்கும் செய்ய உரிமை பெற்றுக்கொள்ளவும் ஒரு நற்காலம் உதிக்க விரும்புங்கள்" என்று கூறினர். இது தான் அவர் கடைசியாக நடத்திய ஆராதனை. வயோதிப ஆங்கில அத்தியட்சரின் ஆசீர்வாதத்தையும் அதிகாரத்தையும் பெற வாலிப இந்தியன் முழந்தாளிட்டிருந்த காட்சி பார்த்தோர் மனதில் சந்தோஷத்தையும் பக்திவிநயத்தையும் எழுப்பிற்று. ஆங்கிலத் திருச்சபை தன் மிஷன் சங்கங்களின் மூலமாக இந்தியாவிற்கு. அநேக நன்மைகள் வழங்கியிருக்கின்றது. வேதநாயகம் சாமுவேல் அசரியாவை அத்தியட்சராக்கி, அவருக்குச் சம உரிமை கொடுத்தது அது செய்த தைரியச் செயல்களனைத்திலும் மிகச் சிறந்த செயலென்று, ஒரு ஸ்காட்டிஷ் வேத சாஸ்திரி கூறினர்.

வரவேற்பு

ஆங்கிலேயக் கிறிஸ்தவர் தமது சபை ஸ்தாபனத்தில் ஒரு இந்தியருக்குச் சம உரிமை கொடுத்த விசேஷத்தைக் கிறிஸ்தவர்கள்மட்டுமல்ல, ஹிந்துக்களும் கொண்டாடினர்கள். அபிஷேகம் பெற்றபின், அவர் டோர்னக்கல்லை விட்டுத் தம் சொந்தத் தமிழ் நாட்டைச் சந்திக்க வந்தபொழுது, ஒவ்வொரு பட்டணத்திலும் கிறிஸ்தவர்கள் யாவரும் அவருக்கு நல்வரவு கூறி பெரிய மரியாதை செய்தார்கள். உதாரணமாக, அவர் பாளையங்கோட்டைக்குச் சென்றபொழுது, அவர் எதிர்

சென்ற வண்டித்தொடரின் என்ஜினை அலங்கரித்தார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அவரை மாலையிட்டு வாழ்த்தினார்கள். திருநெல்வேலிப் பாலத்தின்மேல் வண்டி ஓடும்பொழுது உண்டான இடிமுழக்கம்போன்ற சத்தம் இருப்புப்பாதையின் இருபக்கங்களிலும், அவர் வருகைக்குக் காத்துநின்ற ஜனங்களின் ஆரவாரத்தில் மறைந்து போய்விட்டது. தோரணங்களும், அதிர்வெடிகளும், பாணங்களும் அவர் ஊர்வலத்தைச் சிறப்பித்தன. அங்கிருந்து தன் சொந்த ஊராகிய மெஞ்ஞானபுரம் சென்றபொழுது, அவருடைய வண்டியை மாடுகள் இழுப்பதற்குப்பதிலாக, அவ்வூர் வாலிபர் மணல்தேரியின் வழியாகப் பல மைல் தூரம் இழுத்துச் சென்றனர். சுற்று வட்டாரங்களிலிருந்து அவரைக் காண ஜனங்கள் திரள்திரளாக மெஞ்ஞானபுரம் வந்தனர். இங்கு ஒருநாளில் அவருக்கு மூந்நூறு மாலைகள் சூட்டினார்கள். ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரில்தான் மரியாதை கிடைப்பதில்லை என்று நமது ஆண்டவர் சொன்ன வாக்கு அசரியாவின் விஷயத்தில் பலிக்கவில்லை. ஒருவேளை நமது ஆண்டவர் கருத்திலிருந்த தீர்க்கதரிசிகள் அத்தியட்சரல்லர் போலும்! அல்லவென்றால் ஜனங்கள் நாளடைவில் தீர்க்கதரிசிகளைக் கல்லெறிந்து கொல்லுவதற்குப் பதிலாகக் கண்ணியப்படுத்தக் கற்றுக்கொண்டார்களோ என்னவோ! அசரியாவைக் கனம்பண்ண விரும்பினர். இச்சமயம் விருதுநகரில் கூடிய நாடார் மகா நாட்டிற்கு அசரியாவை அழைத்துக் கௌரவப்படுத்துமாறு அவரை அக்கிராசனம் வகிக்க மகாநாட்டின் தலைவர்கள் கேட்டனர். அசரியா அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டார். அவரை அழைத்தவர்கள் அவர் பாட்டனார் தமது குலத்தைச் சேர்ந்தவரென்று எண்ணினரோ; அல்லவென்றால் அசரியாவுக்குக் கிடைத்த கௌரவம் தம் குலத்திற்கும் பெருமை அளித்ததென்றெண்ணினரோ; அல்லது பொதுவாக இந்தியரொருவருக்கு ஆங்கிலேயர் சுதந்திரம் அளித்தது நாட்டிற்கும் பெருமையென்று எண்ணினரோ சொல்லமுடியாது. ஒருவேளை இம்மூன்று கருத்துக்களும் அவர்கள் மனத்தில் கலந்து நின்றிருக்கலாம். இச்சம்பவம் ஒரு பிரச்னையை எழுப்புகிறது. தென்னிந்தியாவில் சில குலத்தினர் தம் குலத்தின் நன்மையையும் உரிமையையும் காப்பதற்கென்று பிரத்தியேகமான சங்கங்கள் ஏற்படுத்தித் தீர்மானங்களை நிறைவேற்றி, அதிகாரிகளுக்கு அனுப்பும்தொழிலை மேற்கொண்டிருக்கின்றனர். இம்முறை முழுவதும் உசிதமான முறையென்று சொல்லவோ திடமில்லை. இச்சங்கங்கள் நாடு ஒன்றுபடுவதற்கு அனுகூலமாகவல்ல, பிரதிகூலமாகவே இருக்கின்றன. இப்படிப்பட்ட சங்கங்களில் கிறிஸ்தவர்கள் கலந்துகொள்வது கிறிஸ்து சமயத்தின வளர்ச்சிக்கு இடைஞ்சல் உண்டுபண்ணலாம். அவ்வித இடைஞ்சல் உண்டுபண்ணுவிடினும் கிறிஸ்தவர்களுக்குள் இன்னும்

ஒட்டிக்கொண்டிருக்கும் ஜாதிப் பிரிவினையை அது பலப்படுத்துவதாகும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பெறக்கூடிய சில அனுகூலங்களுக்கென்று குல வேற்றுமை கிறிஸ்துவின் அன்பின் பிரமாணத்திற்கு முற்றிலும் எதிர்மாறான வழக்கம் என்பதை இந்து சகோதரர்க்குச் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் எடுத்துக் காட்டும் கடமையைக் கிறிஸ்தவர்கள் செய்யத் தவறுதல் குற்றமேயாகும். அக்கடமையை மறந்தால் கிறிஸ்தவர்கள் தம் சகோதர இந்தியருக்குச் செய்யவேண்டிய நன்மையைச் செய்யக்கூடாதிருப்பார்கள்.

அத்தியாயம் 5

டோர்னக்கல் அத்தியட்ச ஆதீனம்

திருநெல்வேலி இந்திய மிஷனெரிச் சங்கம் நிறுவப்பெற்று நிஜாம் இராஜ்யத்தின் தென்கிழக்குப் பாகத்தில் வேலை ஆரம்பமானதையும், சங்கத்தின் முதற் காரியதரிசியாயிருந்து பணத்தையும் தொண்டரையும் சேர்த்து உதவிக்கொண்டிருந்த அசரியா தாமே அங்குச் சென்று பணியாற்றத் தீர்மானித்ததையும், அதன்பின் குரு பட்டாபிஷேகம் பெற்று, அங்குச்சென்று தாமும் தம் மனைவி மக்களும்ஈரறைக் குடிலில் வசித்துக்கொண்டு வேலைசெய்யத் தொடங்கியதையும் முன்னரே கவனித்தோம். அதன்பின் கடவுள் தம் தொண்டனை உயர்த்தி, அவர்மேல் பல பொறுப்புக்களைக் குவிக்கச் சித்தங்கொண்டாரென்பதைக் கண்டோம். சொற்பத்தில் உண்மைத் தன்மையைக் காட்டும் உத்தம ஊழியனை அதிகத்தின்மேல் அதிகாரியாக வைப்பது இறைவனுடைய வழி. கிறிஸ்து சமுதாயத்திலும் சபையிலும் அசரியா கலந்துகொள்ளாத முயற்சியோ திட்டமோ ஒன்றும் கிடையாது. என்றபோதிலும், அசரியாவின் உயிரும் உழைப்பும் டோர்னக்கல்லில் தான் குவிந்து நின்றன. அவருடைய வாழ்க்கைத் திறனைப் பார்க்க வேண்டுமென்றால் டோர்னக்கல்லைப் பார்க்கவேண்டும். அவருடைய ஆன்ம வளர்ச்சிக்கு ஒரு அளவுகோல் வேண்டுமென்றால் அதுவும் டோர்னக்கல்லேயாகும். ஆதலால் அதன் வளர்ச்சியைச் சற்று விரிவாக எடுத்துக்கூறவேண்டும்.

சில கஷ்டங்கள்

மிஷனெரி சரிதங்களில் வியப்பையும் திகிலையும் ஊட்டக்கூடிய சிற்சில அசாதாரணமான சம்பவங்களை நுழைத்தாலொழிய அவை கேட்போர் படிப்போரின் கவனத்தை இழுக்காது என்று சிலர் எண்ணுகிறார்கள். முதல்முதல் நூற்றைம்பது இருநூறு வருடங்கட்குமுன்

அநேக நாடுகளில் கல்வியறிவு பரவவில்லை. போக்குவரவு சாதனங்கள் அறவே கிடையாது. ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாரோடு சிநேகப்பான்மையாய்க் கலந்தது கிடையாது. உலகின் பல பாகங்கள் அடர்ந்த காடுகளாகவும், நாகரிகமற்ற மிலேச்சரின் குடியிருப்புமாயிருந்தன. அவர்களிற் சிலர் மனிதரைக் கொன்று தின்னும் மிருகாண்டிகளாகவும் இருந்தனர். அந்நாட்களில் சுவிசேஷத்தைப் பறைசாற்றத் துணிந்த பக்தர், தம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் துஷ்ட மிருகங்கள் நிறைந்த காடுகளையும், மலைகளையும், நதிகளையும் கடந்துசென்று முன்பின் அறியாத ஜனங்களுக்கு, அவர்கள் பாஷையையும் கற்றுக்கொள்ளுமுன், சுவிசேஷப் பிரசாரம் செய்ய வேண்டியதாயிருந்தது. அப்பொழுதும்கூட இந்தியாவுக்கு வந்த மிஷனெரிகளுக்குப் பெருத்த ஆபத்துக்கள் இருந்ததில்லை. என்றபோதிலும் அவர்களுக்கும் ஆப்பிரிக்காவின் காடுகளுக்குச் சென்ற டேவிட் லிவிங்ஸ்டனுக்கிருந்த தைரியமும், தளரா முயற்சியும், அசைக்கப்படாத விசுவாசமும் அவசியமாகவே இருந்தன. இவ்விலக்ஷணங்கள் இல்லாதவர்கள் ஒரு காலத்திலும் ஒரு நாட்டிலும் சுவிசேஷப் பிரசாரம் செய்ய முடியாது. உயிருக்குத் தீங்கை விளைவிக்கும் வெளிப்படையான ஆபத்துக்கள் இல்லாவிட்டாலும், மனச்சமாதானத்தையும் விசுவாசத்தையும்கூட மாய்த்துவிடத்தக்க சங்கடங்களும் எதிர்ப்புகளும் ஏற்படும். அசரியாவிற்கு இந்த விதமான கஷ்டங்கள் போதிய அளவு இருந்தன. ஆனால் அவர் சரித்திரத்திலும் உடலுக்குக் கஷ்டத்தைக் கொடுத்த சிற்சில காரியங்கள் இருந்தன. அவர் சரிதையிலும் திருடரும் புலிகளும் கொஞ்சம் தலைகாட்டுகின்றன. டோர்னக்கல் காட்டுப் பிரதேசமென்றும் அங்கு நல்ல ரஸ்தாக்கள் கிடையாதென்றும் பார்த்தோம். கோடை காலத்தில் அங்கு சகிக்கவொண்ணாத வெயில் எரிக்கும். ஆகையால் அசரியா தம் பிரயாணங்களை இரவிலேதான் செய்யவேண்டும். கரடுமுரடான வண்டிப்பாதை காடுகளினூடே சென்றபடியால் சிறுத்தைக்கும் புலிக்கும் இரையாகாதபடி வெகு ஜாக்கிரதையாகப் பிரயாணம் செய்யவேண்டும். தனி வண்டியை ஓட்டிக்கொண்டு காட்டினூடே செல்ல முடியாது. ஆகையால் நாலைந்து போக்கு வண்டிகள் புறப்படும்பொழுதுதான் அவர் அவ்வண்டிகளோடு தமது வண்டியை ஓட்டிச்செல்ல வேண்டும். அவர் சந்திக்கச் செல்லும் சபைகளிலிருந்து சில வாலிபர் எதிர்கொண்டு வந்து தீவர்த்திகளைப் பிடித்துக் கொண்டு அத்தியட்சரின் வண்டியைச்சுற்றி நடந்துபோவார்கள் தீவர்த்தி வெளிச்சம், வண்டி ஓசை, மனிதர் பேச்சு இவற்றின் மத்தியில் தூங்குவது அசாத்தியம். அடிக்கடி அத்தியட்சர் வசதியாயிருக்கிறாரா என்று பார்க்க ஒவ்வொருவன் தன் தீப் பந்தத்தை அவர் முகத்

திற்கு நேராக நீட்டுவான். விவாகங்கள் சாதாரணமாக நிலத்தில் வேலே இல்லாத வேனிற் காலத்தில்தான் நடைபெறும். அக்காலத் திற்ருன் அசரியா அதிகப் பிரயாணம் செய்யவேண்டியதாயிருக்கும்.

திருடரையும் நள்ளிரவில் அசரியா சந்தித்திருக்கிருர். ஆனல் இவர் அவர்களுக்கு யாதொரு தொந்தரையும் கொடுக்கவில்லே. அவர் களும் இவரை அடித்துத் துன்புறுத்த முயலவில்லே. ஓர் இரவு வேலேயை முடித்துக்கொண்டு, சாமான்களேப் பத்திரமாகப் பெட்டி களில் அடுக்கிக் கூடாரத்திற்குள் வைத்துவிட்டு, அத்தியட்சர் கூடா ரத்திற்கு வெளியே படுத்துக்கொண்டார். அதிகாலேயில் வண்டியில் சாமான்களேயும் கூடாரத்தையும் பெயர்த்து எடுத்துக்கொண்டு, அவ ரும் அவர் உதவியாட்களும் புறப்படவேண்டும். நள்ளிரவில் சாமான் களே எவரோ எடுப்பதை அரைத் தூக்கத்தில் அசரியா கவனித்தார். தமது வேலேயாட்கள்தான் வண்டிகளில் சாமான்களே ஏற்றுகிருர்க ளென்று நினைத்துக்கொண்டு தூங்கிவிட்டார். கொஞ்சம் நேரம் பொறுத்துச் சாமான்களேத் தாம் விழித்திருந்தும் கள்வர் கையில் பறி கொடுத்ததைக் கண்டுகொண்டார். ஒரு இருபதுபேர் தடியும் கையு மாகத் திருடரைத் தேடிச்சென்றனர். காலே ஐந்து மணிக்குத் தம்மைச் சூழ ஓர் கூக்குரல் எழுவதைக் கேட்டு அசரியா விழித்தார். என்ன சங்கதி என்று கேட்டபொழுது, ஒரு மைல் தூரம் சென்ற பின் திருடர் பெட்டிகளே உடைக்கும் சத்தம் கேட்டது என்று சொன்ஞர்கள். நீங்கள் என்ன செய்தீர்களென்று அசரியா கேட் டார். எங்களேத் திருடர் பார்த்துவிடப் போகிருர்களோ என்று பயந்து விளக்கை அணைத்துவிட்டு உங்களிடம் சொல்ல ஓடி வந்தோம் என்ருர்கள். அசரியாவுக்கு அவர்களுடைய புத்திக்கூர்மையைக் கண்டு சிரிப்பதா கோபப்படுவதா என்று தோன்றவில்லே.

இப்படிப்பட்ட புத்திசாலிகளுக்குத்தான் இவர் கிறிஸ்து சமயப் போதனைகளே உபதேசித்து அவர்களே உயர்த்தவேண்டும். இத் தகைய பாமர ஜனங்களின் கண்களேத் திறந்துவிடப் போதிய ஆசிரிய ரும் குருமாரும் அவரிடம் இல்லே. திடப்படுத்தலுக்கு ஆயத்த மாகயிருக்கும் சபையோரின் சமயப் போதனையின் அளவைப் பரிசோதிக்கும்படி அவர் கேள்விகள் கேட்பார். அவர்கள் கற்றுக் கொடுத்ததை நெட்டுருப் போட்டுச் சொல்லுவார்களே ஒழிய அதற்கு வெளியே எதையும் சொல்லமாட்டார்கள். அவர்களேப் பரிசோதிக்குமுன், அவர்களோடு பட்சமாக சில வார்த்தைகள் பேச விரும்பி, “உன் பேர் என்ன? உன் கிராமம் எது? நீ எவ்வளவு தூரம் நடந்து வந்தாய்?” என்ற இக்கேள்விகளிலொன்றை அவர் கேட் டால், ஒருவன் தவருமல் அவனுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டதையே

சொல்லுவான். "என் ஞானத்தந்தையும் தாயும் ஞானஸ்நானத்தின் பொழுது" என்று விடை பகர ஆரம்பிப்பான். ஒரு பெண் பிள்ளையைப் பார்த்து "உன் பிள்ளையின் உள்ளான ஜீவிய வளர்ச்சிக்கு எது அவசியமென்று" அத்தியட்சர் கேட்டபொழுது, சட்டென்று "விளக்கெண்ணெய்" என்று பதிலுரைத்தாள்.

தோகுதி இயக்கம்

அநேக நூற்றாண்டுகளாகத் தம் சுதந்திரத்தை இழந்து வடக்கிலிருந்து வந்த ஆரியரால் தீண்டாத ஜாதிகளென்று ஒதுக்கப்பட்டிருந்த ஜனங்களின் நிலை மிகத் தாழ்ந்த நிலை. அவர்கள் கிறிஸ்து மதப்போதனையை விளங்கிக்கொள்ளக்கூடாத மந்த புத்தியுள்ளவர்களென்றும், அவர்கள் மிஷனெரிமார் கொடுக்கும் சோற்றிற்கும் துணிக்கும் ஆசைப்பட்டு திரள் திரளாகக் கிறிஸ்து மதத்தைத் தழுவுகிறார்களென்றும் சொல்லி, அவர்களைக் கிறிஸ்தவர்களாக்குகின்றது நியாயமல்ல; சகல மதத்தினரும் ஒரே கடவுளை வழிபடவும், ஏறக்குறைய உலகத்தின் ஜாதியினர் அனைவரும் நீதியும் நேர்மையுமானதென ஏற்றுக்கொள்ளும் ஒரு பொதுவான சன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்தொழுகவும் வேண்டுமென்றும் சிலர் போதிக்கின்றனர். மதத்திற்கு மதம் அத்துணை பெரிய வித்தியாசம் கிடையாது. ஒருவன் தன் சொந்தத் தேசத்தின் மதத்தையே அனுசரிக்கக் கடமைப்பட்டுள்ளான். மதம்விட்டு மதம் புகுவதால் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் ஏற்படும் துன்பங்கள் பெரியன. அவற்றை ஒருவன் தம் குலத்தினருக்கும் தேசத்திற்கும் விளைவிப்பது நியாயமல்லவென்று காந்தியடிகள் அடிக்கடி கூறியிருக்கின்றார். இந்த நியாயங்களைப் பெரிது பாராட்டாது ஒருவன் தான் பிறந்த மதத்தை விட்டுப் புறமதத்தை அனுசரிப்பதென்றால், அவன் இரு மதங்களையும் கற்று அவற்றின் உயர்வு தாழ்வைச் சீர்தூக்கிப் பார்த்து, மனப்பூர்வமாக அந்நிய மதம் சிறந்ததென்று நிச்சயித்துக்கொண்டபின், அவன் மதத்ைதவிட்டு மதம் புகுவது ஆத்மீகமான மாறுதலென்று ஒப்புக்கொள்ளலாம். கல்வியறிவற்ற பாமர மக்கள் கும்பல் கும்பலாகத் தம் மதத்தைவிட்டுக் கிறிஸ்து மதத்தை ஏற்றுக்கொள்வது ஆத்மீக மனமாறுதலாயிருக்கவே முடியாது என்று காந்தியடிகள் பிடிவாதமாகச் சொல்லியிருக்கின்றார். கிறிஸ்தவ மிஷனெரிமார் ஒருவரையும் தம் மதத்திற்குள் இழுத்துக்கொள்ள முயலக்கூடாது. அவர்கள் கல்வி புகட்டுவதும், பிணியாளிகளைக் குணமாக்குவதுமான பரோபகாரச் சேவைமட்டுமே செய்ய வேண்டுமென்றும் அவர் கிறிஸ்தவ மிஷனெரிமாருக்கு ஆலோசனை கூறினர். நீங்கள் கிறிஸ்துவை மகிமைப்படுத்த விரும்பினால், உத்தமக் கிறிஸ்தவ ஜீவியம் செய்யுங்கள். அது போதும் என்றார்.

அசரியா அத்தியட்சரிடம் வேதோபதேசம் கேட்க வந்த ஏழை ஜனங்களுக்குப் போதிப்பது எவ்வளவு கடினமாயிருந்ததென்று பார்க்கும்போது, ஒருவேளை காந்தி அடிகளின் வாதத்தில் கொஞ்சம் உண்மை இருக்கலாம் என எண்ண இடமுண்டாகும். பெருங் கூட்டமாக ஆண், பெண், சிறியோர், பெரியோர் ஒருங்கே வந்து கிறிஸ்து சமுதாயத்தில் புகுவதால் அச்சமுதாயத்தின் கல்வி நிலையும் செல்வ நிலையும் குறைந்து, தேசத்தில் செல்வாக்கற்ற ஒரு தொகுதியாக போய்விடுமென்று சில இந்திய கிறிஸ்தவர்களும் பயப்படுகின்றனர். அறிவாலும் அனுபவத்தாலும் உண்டாகும் உள்ளான மன மாறுதல் இல்லாதவிடத்து ஞானஸ்நானம் கொடுப்பது கிறிஸ்துவின் போதனைக்கு ஒவ்வாததென்றும், ஒரு தொகுதியாக ஜனங்கள் தம் ஆதி மதத்தைவிட்டு பிறிதொரு மதத்தை தழுவுங்கால், உள்ளான மன மாறுதல் ஒவ்வொருவரும் அடைந்திருக்கிறார்கள் என்று எண்ணிக் கொள்வது நியாயமல்லவென்றும் பல கிறிஸ்தவர்கள் நினைக்கின்றார்கள்.

இவ்வித முறைபாடுகள் அசரியாவிற்கு தெரியாத விஷயங்களல்ல. எனினும் திருநெல்வேலி, மதுரை இன்னும் அநேக ஜில்லாக்களில் சில நூற்றாண்டுகளுக்கு முன்தோன்றி, இரண்டாம் மூன்றாம் தலைமுறைக்குள் ஆத்மீகக் கனிகளை அபரிமிதமாகக் கொடுத்த இயக்கம்தான் அப்பொழுது தெலுங்கு நாட்டின் சில பாகங்களில் தோன்றியிருக்கின்றதென அசரியா உணர்ந்தார். அந்த இயக்கம் அவர் ஏற்படுத்தியதல்ல. இயக்கம் ஆரம்பித்துவிட்டது. அவர் அதற்குள் புகுந்து அது கனிதரும் இயக்கமாக விளங்கும்படி வேத வசனமாகிய நீரைப் பாய்ச்சி, கிறிஸ்துவின் அன்பாகிய உரத்தை இடுவது தான் தமது கடமை என்று தீர்மானித்தார். ஒன்று அசரியாவுக்கு தெளிவாகத் தெரிந்தது: டோர்னக்கல்லில் கிறிஸ்து சமய உபதேசம் கேட்க வந்தவர்கள் உடை, உணவு முதலிய உலக நன்மைகளைத் தேடி வரவில்லை. ஏனென்றால் டோர்னக்கல்லுக்கு சென்ற முதல் மிஷனெரி நாலைந்து வருஷங்களுக்குப்பின் திருநெல்வேலிக்கு இளைப்பாற போயிருந்தபோது தாம் செய்யும் வேலையைப்பற்றி பின் வருமாறு கூறினார்:—

"டோர்னக்கல்லில் நிலைபெற்றுவரும் திருச்சபை பலமான திருச்சபையாயிருக்குமென்று நான் நம்புகிறேன். ஏனெனில் அங்கு கிறிஸ்து மதத்தை தழுவும் ஜனங்களுக்கு உலகப் பிரகாரமான ஒரு நன்மையும் வழங்க எங்களுக்கு சக்தி இல்லை. அவர்களுக்கு இலவசமாகவேனும் கடனாகவேனும் கொடுக்க எங்களிடம் பணமில்லை. அரசாங்கத்தாரின் இனத்தைச் சேர்ந்த ஆங்கிலேய மிஷனெரிகளைப்

போல் வேறு உதவியும் நாங்கள் செய்வதற்கில்லை. அவர்கள் தமக்கிருக்கும் செல்வாக்கைக்கொண்டு தம் சபையோருக்கு நல்ல உத்தியோகங்களைத் தேடிக்கொடுக்கின்றார்கள். சபையோருக்கு சத்துருக்கள் அநியாயமாக தீங்கு செய்யும்பொழுது அதிகாரிகளிடம் விஷயத்தைத் தெரிவித்து நியாயம் கிடைக்கச் செய்கின்றார்கள். ஆனால் நாங்கள் செய்யக்கூடிய உதவி ஒன்றே ஒன்றுதான். அவர்களுக்காக அவர்களோடு ஜெபிக்கிறோம். நாங்களல்ல கிறிஸ்து ஒருவரே அவர்கள் தஞ்சமும் தாரகமும் என்று எடுத்துக்காட்டி, அவர்கள் அவர் ஒருவரையே நம்பிப்பிழைக்க வேண்டுமென்று கற்பிக்கிறோம்."

இரண்டாவதாக, தீண்டா ஜாதியார் முழு முட்டாள்களல்ல. அவர்களுக்கும் ஒரு நாகரிகமிருந்தது; இன்றும் இருக்கிறது. அவர்களும் தங்கள் மதத்தைப்பற்றி வைராக்கியம் கொண்டுள்ளவர்களே. மற்ற ஹிந்துக்களைப்போல் அவர்களும் தாங்கள் வழிபடும் தெய்வங்கள் சக்திவாய்ந்தவை என்றும், அவை தம்மை அண்டினோரைக் காத்து தம்மை மறப்போரை தண்டிக்கின்றன என்றும் மனப்பூர்மவாய் நம்புகின்றார்கள். அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஆதாரமாக தம் கோவில்களிலும் பூஜைகளிலும் மந்திரங்களிலும் மகத்துவம் தோன்றியிருக்கிறதென்று பழங்கதைகளையும் புதிய சம்பவங்களையும் சான்றாகக் கூறுகின்றனர். அவர்கள் சோற்றிற்கும் துணிக்கும் ஆசைப்பட்டு தம் மதத்தைவிட்டு கிறிஸ்து மதத்தை ஏற்றுக்கொள்வது உண்மையென்றால், மிஷனெரிமார் நினைத்த நோத்தில் தம் கையிலிருக்கும் பணத்தின் அளவு அவர்களைக் கிறிஸ்து சமயத்திற்குள் கொண்டு வந்திருக்கலாம். அப்படி நடந்ததில்லை, நடக்கப்போவதுமில்லை. தீண்டா ஜாதியாருடைய மதவைராக்கியமும் பிடிவாதமும் எவ்வளவு பலமாக இருக்கக்கூடுமென்று அவர்களுக்குச் சுவிசேஷத்தை அநேக வருஷங்களாய்ப் பிரசங்கித்தும் ஒரு பலனையும் காணாது வருந்திய அநேக மிஷனெரிமார் சாட்சி பகருவார்கள்.

மூன்றாவதாக, கிறிஸ்து சமயத்தைத் தழுவ விரும்புவோருக்கு ஹிந்து மதத்திற்கும் கிறிஸ்து மதத்திற்குமுள்ள தாரதம்மியங்களை கசடறக் கற்றுக்கொடுத்து, இவற்றுள் எது உத்தமமான மதமென்று தீர்க்க ஆராய்ந்து ஒரு முடிவுக்குவா அவர்களுக்கு உதவிசெய்வது மிஷனெரி சங்கங்களின் பொறுப்பல்ல. அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள எவராலும் கூடாது. கிறிஸ்து சமயத்தின் புறம்பான சில பண்புகளைக் கண்டுதான் ஜனங்கள் அதைத் தழுவ விரும்புகிறார்கள். அவர்கள் தம் ஆதிமதத்தில் திருப்தி அடைந்திருந்தால் பிரிதொரு மதத்தைக் குறித்து நினைக்கவும் மாட்டார்கள். இவ்விஷயம் அவர்களைப் பொறுத்தது. கிறிஸ்து சமயக்கோட்பாடுகளையும் உபதேசங்

களையும் அவர்களுக்கு உபதேசித்து அவை அவர்கள் அறிவிற்கும் உள்ளத்திற்கும் உவந்தனவாகக் காணப்படுகின்றதா என்று விசாரித்தறிவது ஒன்றே மிஷனெரி சங்கங்களின் பொறுப்பு. இது ஒன்றைத்தான் அவைகள் செய்யக்கூடும். ஏனென்றால் மிஷனெரி சங்கங்கள் தேர்ந்தனுப்பும் ஊழியர் கிறிஸ்து மதத்தைத்தான் அறிவாலும் அனுபவத்தாலும் நன்கு உணர்ந்தவர்களாயிருக்கவேண்டும். பிரசாரச் சேவைக்கு புறமத அறிவு பிரயோஜனமுள்ளதாக இருப்பினும், அத்தியந்த அவசியமானதல்ல.

கடைசியாக, கிறிஸ்துவின் சுவிசேஷம் ஏன் அறிவிலிகளாகிய ஒடுக்கப்பட்ட மக்களை கவர்ந்து இருக்கின்றது என்பதற்கு ஒரு தகுதியான காரணமிருக்கிறது. குலப்பிரிவினைகள் கலப்பற்ற ஹிந்துமத கோட்பாடுகளுள் ஒன்றல்லவென்று காந்திஜி கூறினர். அவருக்கு முன் பிரம்ம, ஆரிய சமாஜங்களைச் சேர்ந்த சீர்திருத்தக்காரரும் அப்படியே கூறினர். என்றாலும் தீண்டா ஜாதியாருக்கு ஹிந்துக்கள் செய்துவந்த அநியாயம் இம்மியளவும் குறையவில்லை. அவர்களுக்குக் கல்வி புகட்டி அவர்களை முன்னேற்ற ஹிந்துக்கள் யாதொரு முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. கிறிஸ்தவ பாதிரிமாரோ அவர்கள் சேரிகளுக்குச் சென்று, அவர்களுடைய இருண்ட குடிசைகளுக்குள் நுழைந்து பிணியாளிகளைக் கூசாமல் தொட்டு சுகப்படுத்துவதை பல நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்ட தீண்டா ஜாதியார் கண்டார்கள். தவிர தங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார் பள்ளிக்கூடங்களில் சேர்த்து அவர்களைக் குளிப்பாட்டி அவர்களுக்கு சுத்தமான உடையும் உணவும் கல்வியறிவும் புகட்டினார்கள். உதாசீன வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்த பிள்ளைகள் சுத்தமான வார்த்தைகள் பேசவும் இனிய பக்திக் கீதங்களைப் பாடவும் கற்றுக்கொண்டதைக் கண்டு இந்த ஏழை ஜனங்கள் மகிழ்வுற்றனர். கிறிஸ்தவர்கள் தம்மை மிருகங்களைப் பார்க்கிலும் கேவலமான பிராணிகளென்றல்ல, மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களென்று கருதி மதித்தனர். தமக்கு தம் சொந்த ஜனங்கள் அளித்திருந்த இழிவான நிலையின் நிமித்தம் சுயமரியாதை அணுவளவும் இல்லாதிருந்த இப்பாமர மக்கள் கிறிஸ்தவர்கள் தம்மிடம் காட்டிய அனுதாபத்தையும் மறியாதையையும் கண்டு பிரமிப்படைந்தனர். கிறிஸ்து மதத்தை ஒரு நல்ல மதமென்று எண்ணி அதைத் தழுவ விரும்பினர். அன்பின் நற்கிரியைகளைக் கண்டு வியப்பதும், தமக்கு மரியாதையையும் சகோதரத்துவ சலுகையையும், தம் மக்களுக்கு கல்வி அறிவின் வெளிச்சத்தையும் நாடுவது கேவல லௌகீக நாட்டமோ? இதுவே இவ்வேழை மக்கள் கிறிஸ்து மதத்தைப்பற்றி அடையும் முதல் அறிவு, கிறிஸ்து மதத்தைப் பார்க்கும் தூரக்காட்சி. மாங்கனியின் வாசனையை முகர்ந்தபின் அல்லவோ

அதன் இனிமையை ருசித்துக் களிக்கின்றோம். இது குற்றமாகுமோ? கடந்த சில வருடங்களாக காந்தியடிகள் தீண்டா ஜாதியாருக்கு ஹரிஜனங்கள் என்ற ஓர் கௌரவப் பெயரைச் சூட்டி அவர்கள் ஹிந்துமத ஆலயங்களுக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை பெற்றுக்கொள்ளவும், கல்வி கற்றுக்கொள்ளவும் ஹரிஜன சேவக சங்கங்கள் மூலமாய் பல வசதிகள் ஏற்படுத்தி வந்தார். உயர்குல ஹிந்துக்கள் ஹரிஜனங்களைத் தம் சகோதரர்களாகப் பாவித்து அவர்கள் முன்னேற்றத்தை கண்ணும் கருத்துமாய் தேடவேண்டுமென்று ஓயாது இடித்துரைத்துக்கொண்டிருந்தார். இம்முயற்சிகளின் பயனாக தீண்டா ஜாதியார் இதுகாறும் ஹிந்து சமயத்தின்பால் கொண்டிருந்த வெறுப்பும் முறைபாடும் அகன்றுவிடலாம். இதன் பின்னர் கிறிஸ்து மதம் ஹரிஜனங்களின் மனதை முன்போல கவர்ந்துகொள்ளுமோ என்று ஐயுற நிமித்தமுண்டு. வருங்காலமே இக்கேள்விக்கு சமாதானம் அளிக்கவல்லது. என்றபோதிலும் கிறிஸ்து பக்தர்கள், ஹரிஜனங்களை மட்டுமல்ல, துர்அபிப்பிராய மற்ற யாவரையும் கிறிஸ்து பெருமான் தமது போதனையினாலும் வாழ்க்கையின் சிறப்பாலும் கவர்ந்துகொள்ளுவார் என்ற உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளனர்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இந்தியாவில் தீண்டா ஜாதியார் மாத்திரமல்ல, நாடார், வன்னியர் முதலிய சற்று உயர்ந்த குலத்தினரும் குடும்பம் குடும்பமாக ஹிந்து மதத்திலிருந்து கிறிஸ்து மதத்திற்குள் வந்துகொண்டிருக்கின்றார்கள். இந்தத் தொகுதி இயக்கத்திற்குப் போதிய காரணங்கள் கண்டு கூறுவது எளிதல்ல. அதைக் கண்டனம் பண்ணுவோர் சொல்லும் காரணங்களில் அநேகம் உண்மையான காரணங்களல்ல. அவற்றுள் சில உண்மையாயிருப்பினும், அவை போதிய காரணங்களல்ல. தொகுதி இயக்கத்தை நேர்முகமாய்க் காணாதவரும், அல்லது அவற்றுள் ஒன்றை ஆதியோடந்தமாய்க் கவனியாதவரும் அவற்றைப்பற்றி அபிப்பிராயங்களை ஊகித்துக்கொண்டு அவ்வபிப்பிராயங்கள் சத்தியமென்று சாதிப்பது தர்க்க சாஸ்திரத்திற்கு ஒவ்வாத ஒரு வாதம். தொகுதி இயக்கத்தின் இரகசியத்தைக் கண்டுகொள்ள விரும்புவோர், அது எப்படித் துவங்கி எப்படி பரவுகின்றதென்று பார்க்கவேண்டும். ஆதலால் தெலுங்கு நாட்டில் தோன்றிய தொகுதி இயக்கம் ஒன்றை இங்கு எடுத்துக் கூறுவோம்.

மாதிக பேரைய்யா

நெல்லூரில் அமெரிக்கன் பாப்டிஸ்ட் மிஷன் **1835**-ம் வருஷம் சுவிசேஷ பிரசாரம் ஆரம்பித்தது. இருபத்தெட்டு வருஷங்களுக்குப் பின் முப்பதே பேர்தான் கிறிஸ்தவர்களாகி இருந்தார்கள். அந்த

வேலையை நிறுத்திவிடவேண்டுமென்று மூன்று முறை மிஷன் அதிகாரிகள் நினைத்தார்கள். ஓங்கோலில் அதே மிஷன் 1866-ம் ஆண்டில் வேலை ஆரம்பித்தது. பேரைய்யா ஒரு மாதிக தோல் வியாபாரி. அவன் எல்லூரில் இருந்த ஸி. எம். எஸ். மிஷனெரியைச் சந்தித்து கிறிஸ்துமத உபதேசம் கேட்டான். "இந்த மதம் சத்திய மதம்; என் மனதிற்குத் திருப்தியாயிருக்கின்றது" என்று சொல்லி ஞானஸ்நானம் பெற விரும்பினன். அவன் ஓங்கோலுக்குச் சமீபத்தி லிருந்த தல்லக்கொண்டபாடு என்ற கிராமத்தைச் சேர்ந்தவன் என்று அறிந்து, ஸி. எம். எஸ். மிஷனெரியார் அவனை ஓங்கோலில் இருந்த பாப்டிஸ்ட் மிஷனெரியிடம் அனுப்பினர். அங்கு அவன் கிறிஸ்து மதத்தைத் தழுவி மதப்பிரசாரம் வெகு மும்முரமாகச் செய்தான். அவனது நன் முயற்சியால் முதலாவது அவன் குடும்பத்தார் ஞானஸ்நானம் பெற்றனர். வெகு சீக்கிரம் ஓங்கோலில் ஒரு தொகுதி இயக்கம் தோன்றிற்று. 1878-ம் வருஷம் ஜூலை மாதம் 2-ம், 3-ம், 4-ம் தேதிகளில் பிள்ளைகள் தவிர 3,563 ஆண்களும் பெண்களும் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்து சபையைச் சேர்ந்தார்கள். அந்த வருஷக் கடைசியில் அச்சபையின் தொகை 9,606 ஆயிற்று.

மாள வெங்கையா: தெலுங்கு நாட்டில் தோன்றிய தொகுதி இயக்கங்களுள் மற்றொன்றையும் கவனிப்போம். விஜயவாடாவில் டார்லிங் என்னும் ஸி. எம். எஸ். மிஷனெரி ஒருவர் ஏழு ஆண்டுக ளாக தெருக்களிலும் சந்தைகளிலும் நின்று சுவிசேஷ நற்செய்தியை பறைசாற்றி வந்தார். ஒருவரும் அவர் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள வில்லை. ஒருநாள் கிருஷ்ணா நதிக்கரையில் கூடிய ஒரு பெரிய திரு விழா கும்பலில் டார்லிங் பாதிரியார் பிரசங்கம் பண்ணினர். எவரும் அவர் பிரசங்கத்தைக் கவனித்ததாக தோன்றவில்லை. அவர் அதிக விசனத்தோடு வீடு திரும்பி, கதவை அடைத்துத் தாளிட்டுக்கொண்டு, தன் தோல்வியை நினைத்து நினைத்து பெருமூச்சுகளுடன் ஜெபித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் தாழ்வாரத்தில் சந்தடி கேட்டது. வேலைக்காரன் வந்த ஜனங்களைப் போகச்சொல்லிக் கொண்டிருந்தான். பாதிரியார் வெளியே வந்தார். வாசற்படியில் தீண்டா ஜாதியாரான சில மனிதர் நின்றுகொண்டிருந்தனர். அவர் களுள் ஒருவன் வெங்கையா. தொழிலில் அவன் திருடன். அவன் தன் கதையைச் சொன்னன். அவன் ஒரு சிறு திருடர் கூட்டத்தின் தலைவன். ஒருநாள் அன்னவன் மகன் நோய்வாய்ப்பட்டனன். அவ னுக்குக் குணமளிக்க வேண்டுமென்று வெங்கையா கிராம தேவதை களை வேண்டிக்கொண்டு அவைகளுக்கு பலி செலுத்தினன். என்று லும் பிள்ளை நோய்க்கு இரையாகிவிட்டான். வெங்கையா துயரக் கடலில் ஆழ்ந்தனன். அப்பொழுது தன் கூட்டத்தைச் சேர்ந்த

மற்ருெரு திருடன் தான் கேட்டு அறிந்த சில கிறிஸ்து சமய உண்மைகளை வெங்கையாவுக்கு எடுத்துச்சொல்லி அவனைத் தேற்ற முயன்ருன். வெங்கையா சிந்திக்க துவங்கினுன். "கடவுளே, நீயாரென்று எனக்குக் காட்டவேண்டும். நீ எங்கிருக்கின்ருய், நான் உன்னைக் காண நீ எனக்கு உதவி புரியவேண்டும்" என்று இடைவிடாது ஜெபித்து வந்தான். அன்று திருவிழாவிற்கு விஜயவாடா வந்து சேர்ந்தான். ஆற்றில் அநேகர் புண்ணிய ஸ்நானம் செய்துகொண்டிருந்தனர். இவனே கறையில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு பிராமண புரோகிதன் அவனை அணுகி "நீயும் உன் பாவத்தை நீக்கிக்கொள்ள நீராடாது ஏன் சும்மா நிற்கின்ருய்" என்று கேட்டான். "இதில் எனக்கு துளிகூட நம்பிக்கையில்லை" என்று வெங்கையா பதிலுறைத்தான். "நீ கிறிஸ்தவனு" என்று புரோகிதன் கேட்க, "அல்ல நான் கடவுளை அறிய விரும்புகிறேன்" என்று சொன்ஞன். "டார்லிங் பாதிரியார் கடவுளைப்பற்றிய மெய்யறிவு புகட்டுவார்; அவரிடம் போ" என்று புரோகிதன் சொன்ஞன். வெங்கையா தன் தோழர் சிலருடன் இப்போது டார்லிங் பாதிரியாரைத் தேடி வந்ததின் காரணம் இதுவே. டார்லிங் பாதிரியாருக்கு இது மிகுந்த வியப்பை ஊட்டிற்று. அவர் பெருமூச்செரிந்து செய்த மன்ருட்டிற்கு கடவுள் உடனே ஏற்ற உத்தாரம் அளித்தார். டார்லிங் பாதிரியார் கிறிஸ்துவின் ஜீவிய சரிதையையும் போதனையையும் சுருக்கமாக வெங்கையாவுக்கு எடுத்துறைத்தார். "இவர்தான் என் தெய்வம், என் மீட்பர். நான் நெடுநாளாகத் தேடியவர் இவரே. இப்பொழுது இவரை கண்டுகொண்டேன். இனி இவர் ஒருவரையே சேவிப்பேன்" என்று வெங்கையா குதூகலித்தான். அவனும் அவன் வீட்டாரும் உறவினரும் சில நண்பரும் இரண்டு மூன்று மாதங்கள் வேத உபதேசம் கேட்டு கற்றனர். பின் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவின் சீடராயினர்.

கள்ளன் வெங்கையா சிறந்த கிறிஸ்துமத பிரசாரகன் ஆயினுன். வயோதிகன் ஆனபொழுது அவன் கண் இழந்தான். அப்பொழுதும் அவன் தன் குடிசையின் வாயிலில் உட்கார்ந்துகொண்டு வருவோர் போவோருக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத்துக்கூறினன். வெங்கையா கிறிஸ்து சமயத்தை தழுவியது 1849-ம் வருடம். அவன் செய்கை கிருஷ்ணு ஜில்லாவில் ஒரு தொகுதி இயக்கத்தை எழுப்பிவிட்டது. அவ்வியக்கத்தின் பலனுக 1901-ம் ஆண்டில் கிருஷ்ணு ஜில்லாவில் இருந்த கிறிஸ்தவர்களின் தொகை 29,186 ஆயிற்று. 1928-ம் ஆண்டில் அங்கு ஆங்கில சபையைச் சேர்ந்திருந்தவர்கள் மாத்திரம் 1,22,500. இப்படிப்பட்ட இயக்கங்கள் எதிர்பாராத சமயத்தில் இந்தியாவின் சகல மாகாணங்களிலும் தோன்றியிருக்கின்றன. அவை

தோன்றும்பொழுது திருச்சபையின் நன்மைகளை நாடிவரும் பாமர மக்களுக்கு வேத உபதேசம் போதிக்கவும் கல்வி புகட்டவும் பணமும் ஆட்களும் எங்கு கிடைக்கும் என்ற கவலையே மிஷனெரிமாரின் பெரிய கவலை. வந்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர்கள் பெயர்களை மாற்றி புதுப்பெயர்கள் இட்டுவிடுவது வெகு எளிது. அவர்களுக்கு கிறிஸ்தவப் போதனையும் பயிற்சியும் கொடுப்பதோ மிகக் கடினம். ஆதலால் வேண்டிய உபாத்திமாரும் உபதேசிகரும் கிடைத்தாலொழிய தொகுதி இயக்கத்தின் வழியாக கிறிஸ்து மதத்தைச் சேர விரும்புகிறவர்களை சபையில் சேர்த்துக்கொள்ளுவதில்லை என்று மிஷனெரி சங்கங்கள் தீர்மானித்திருக்கின்றன.

தர்க்கத்தால் அல்ல செய்கையால் மாத்திரமே இப்பிரச்சினைக்கு தகுந்த விளக்கம் கிடைக்குமென்பது அசரியா அத்தியட்சரின் அபிப்பிராயம். கிறிஸ்து சமயப்போதனையும் அனுஷ்டானங்களும் மனித வாழ்க்கைக்குத் தூய்மையையும் அன்பையும் அளிக்கின்றனவா அல்லவா என்பதுதான் முக்கிய கேள்வி. அக்கேள்விக்கு ஏற்கனவே தகுந்த விடை மிஷனெரி இயக்கத்தின் சரித்திரம் கொடுத்திருக்கின்றது. திருநெல்வேலி சபையும் தொகுதி இயக்கத்தால் உண்டான சபையே. இரண்டு மூன்று தலைமுறைக்குள் கிறிஸ்து சமயம் மக்களுக்குச் செய்யும் நன்மை எவ்வளவு பெரிதென்று அச்சபை ரூபகாரப் படுத்தியிருக்கின்றது. திருநெல்வேலி கிறிஸ்தவர்கள் தாம் பெற்ற நன்மைகளைத்தான் இப்பொழுது தங்கள் ஐ. எம். எஸ். சங்கத்தின் மூலமாக டோர்னக்கல் சேகரத்திலுள்ள ஏழை மக்களுக்கு பகிர்ந்து கொடுக்க முன்வந்துள்ளார். பரிசுத்த ஆவியானவர் திருச்சபையின் ஆரம்பக்காலம் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும் கற்றோரையும் கல்லாதோரையும் கிறிஸ்துவாகிய அருள் ஒளிக்குள் கொண்டுவர வல்லவராயிருக்கின்றார். இவ்வெண்ணங்களை அசரியா தம் மனத்துள் எண்ணி, மிகுந்த நம்பிக்கையுடன் தாழ்த்தப்பட்ட மக்களின் இருள்படர்ந்த மனதில் சுவிசேஷ நற்சுடரைவீசக் கண்ணும் கருத்துமாய் முயன்றுவந்தார்.

நற்கனி

பயன் என்ன? சர்க்கார் ஜனத்தொகை அறிக்கையிலிருந்து (Census Report) ஒரு சாட்சி கொண்டுவருவோம். "மிஷனெரிமார் அநேக வருஷங்களாக கிறிஸ்து சமயத்தை உபதேசித்து வந்ததின் முதற் பலன் யாதெனில் உடல், உடை, சூழ்நிலையைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளுவது ஆத்தும முன்னேற்றத்திற்கு அனுகூலமானதென்று ஜனங்கள் கற்றுக்கொண்டிருக்கின்றதே. இந்தியக் கிறிஸ்தவர்கள் தம்மைப்போன்ற மற்ற ஜனங்களைவிட எப்படி மேம்பட்டிருக்கின்றார்

கள் என்று பார்க்குமிடத்து, முதலாவது அவர்கள் உடையிலும் வழக்க பழக்கங்களிலும் சுத்தம் காணப்படுகிறது. அடுத்தாற்போல மனதிற்கடுத்த தேற்சியும் தோன்றுகிறது. கிறிஸ்து மதத்தை தழுவிய வர்களின் பிள்ளைகள் தேற்சியடைந்து வருகின்றனர். அவர்கள் செல் வாக்கில் உயர்ந்து வருகின்றனர். ஆகையால் ஹிந்துக்களாகவே இருந்து விட்ட ஜனங்கள் கிறிஸ்துமதத்தைத் தழுவிய தம் கூட்டத்தார் உலகப் பிரகாரம் நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறார்களென்றுமட்டுமல்ல, நற் குணசாலிகளாகவுமிருக்கின்றார்களென்று ஒத்துக்கொள்ளவேண்டிய தாயிருக்கிறது." இப்படி ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் எழுதுகிறார்.

ஊரார் குணத்தை கிராம முனிசிப்பு நன்றாய் அறிவார். அவரைப் போல் மற்றவர்கள் அறிந்துகொள்ளமுடியாது. அவர் கொடுக்கும் சாட்சி என்ன? "முன்பு நல்ல மனிதன் ஒருவன் பொழுதுவிழுந்த பின் இந்த மாதிகச் சேரிக்குப் பக்கத்தில் போக விரும்பமாட்டான். ஏனென்றால் குடித்து வெறித்தவர்கள் போடும் சண்டையையும் பேசும் உதாசீனங்களையும் எவராலும் கேட்கமுடியாது. தோலுக்காக மாடுகளை விஷமிட்டுக்கொல்லுதல் இவர்கள் தொழில். கிறிஸ்தவர்க ளான பின் இவர்களுக்குள் ஓர் புதிய மாறுதல் தோன்றியிருக்கிறது. மாடுகளை விஷமூட்டிக்கொல்லுதல் அறவே ஒழிந்துபோயிற்று. இவர்கள் கிராமங்களில் சண்டைசச்சரவின் கூச்சலுக்குப் பதிலாக ஆலயத்திலிருந்து ஒலிக்கும் ஞான கீர்த்தனைகளின் இன்னிசை சாயங் கால காற்றில் அலைகளாக எழும்புகின்றது." இங்ஙனம் ஒரு கிராம முனிசீப்பு தாம் அறிந்த ஒரு கிறிஸ்தவ கிராமத்தைப்பற்றிக் கூறினார். மற்றொருவர் கிறிஸ்தவர்களைச் சுட்டிக்காட்டி "தலைமுறை தலைமுறை யாக இக்குலத்தோர் திருடியே வயிறு வளர்த்து வந்தார்கள், எங்கள் கிராமங்களில் எப்பொருளும் பத்திரமாயிராது. ஆனால் இப்பொழுது நாங்கள் வீட்டுக்கதவுகளைத் திறந்துவைத்துவிட்டு நிம்மதியாய்த் தூங்கு கின்றோம். கிறிஸ்து மதம் வெகு நல்ல மதம்" என்றார்.

அசரியா ஒரு சம்பவத்தை அடிக்கடி எடுத்துக்காட்டுவார். அது அவர் நடத்திய திடப்படுத்தல் ஆராதனைகளுள் ஒன்றில் நேர்ந்த சம்ப வம். அவ்வாராதனையில் ஐம்பதுபேர் திடப்படுத்தல் அடைய ஆயத்த மாயிருந்தனர். அவர்கள் அனைவரும் தரையில் உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்குப்பின்னால் சில உயர்குல ஹிந்துக்கள் இந்த ஆராதனையை ஒரு வேடிக்கையாகப் பார்த்து நின்றுகொண்டிருந்தார்கள். அப்படி வேடிக்கை பார்ப்பது நல்லதல்லவென்று சொல்லி அசரியா அவர் களைப் போய்விட தயவாய்க் கேட்டார். அவர்கள் போய்விட்டனர். அவர்கள் வெகுதூரம் போய்விடாமல் பின்பக்கமாக நின்று ஆராதனை முழுவதையும் கவனித்துக்கொண்டிருந்தார்கள். ஆராதனை முடிந்த

பின் இதை அசரியா அறிந்தார். அவர்களுள் ஒருவர் அத்தியட்சரைப் பார்த்து "இவர்கள் அனைவரும் எங்கள் பண்ணையாட்கள்; குலத்தில் தாழ்ந்தவர்கள். எங்களைப் போன்ற முகலட்சணம் இவர்களுக்குக் கிடையாது. ஆனால், அங்கே நின்றுகொண்டு இவர்களை நான் பார்த்தபொழுது இவர்கள் முகத்தில் ஒரு களை தவழ்ந்தது. உள்ளம் களங்கமற்றிருந்ததால் முகத்தில் ஒரு மலர்ச்சி தோன்றிற்று. எங்களுக்கில்லாத ஒன்று இவர்களிடமிருக்கிறது. கிறிஸ்து சமயம் தாழ்த்தப்பட்ட இம்மக்களுக்கு நன்மை செய்யக்கூடுமென்றால் எங்களுக்கும் அது நன்மை செய்யும். ஆகையால் தாங்கள், தயவுசெய்து எங்களுக்கும் கிறிஸ்து சமய உபதேசம் புகட்டவேண்டும்" என்றார். சில உயர்குல மக்கள் தீண்டா ஜாதியாராயிருந்த கிறிஸ்தவர்களின் நேர்மையான வாழ்க்கையைக் கண்டு "இவர்களைப் பார்க்கும்பொழுது நாங்கள் வெட்கமடைய வேண்டியிருக்கிறது" என்றார்கள்.

ஆறு உயர்குல மனிதர் அத்தியட்சரிடம் வந்து ஞானஸ்நானம் பெற விரும்புவதாக அறிவித்தனர். "ஓர் கிராமத்தின் கிறிஸ்தவர்களை நாங்கள் வெகு நாளாக கவனித்து வருகிறோம். அவர்கள் கிறிஸ்து சமயத்தை ஏற்றுக்கொண்டதிலிருந்து துரிதமான முன்னேற்றம் அடைந்து வருகின்றார்கள். நாங்களும் கிறிஸ்து சமயத்தை ஏற்றுக் கொள்ளாவிடில் அவர்கள் எங்களைப் பார்க்கிலும் உயர்ந்துவிடுவார்கள்" என்றனர். அன்றுதான் இவர்கள் மெச்சிப் பேசின சபையின் போதகர் அச்சபையின் ஓர் அங்கத்தினன் இழைத்த பெருங் குற்றத்தை அத்தியட்சருக்கு அறிவித்திருந்தார். அது அத்தியட்சருக்கு ஞாபகம் வந்தது. அவர் அவர்களைப் பார்த்து அச்சபையோர் யாவரும் உத்தமர் அல்ல என்றார். "நீங்கள் சொல்லுவது உண்மைதான். ஒவ்வோர் குலத்திற்கும் அவமானத்தைக் கொண்டுவரும் கோடரிக் காம்புகள் போன்ற சிலர் இருக்கின்றனர். ஆனால் இவர்கள் பத்து வருடங்களுக்குமுன் இருந்த நிலையையும் இப்பொழுது இருக்கும் நிலையையும் ஒத்துப்பார்க்கும்பொழுது கிறிஸ்து மார்க்கம் இவர்களை எவ்வளவு சீர்ப்படுத்தியிருக்கிறது என்று காண்கிறோம்" என்று கூறினார்கள்.

தொகுதி இயக்கங்கள் தோன்றிய கிராமங்களின் மத்தியில் ஒரு முஜாபரி பங்களா இருக்கிறது. கிராமங்களைச் சந்திக்கச் செல்லும் பொழுது அசரியா அதில் தங்குவது வழக்கம். அதற்கு அருகில் ஒரு சிற்றூறு. அதில் அநேக ஜனங்கள் ஞானஸ்நான முழுக்குப் பெற்றிருந்தனர். ஆனால் அந்த ஆற்றங்கரையில் இருந்த கிராமத்திலிருந்து ஒருவரும் ஞானஸ்நானம் பெற வரவில்லை. அக்கிராமவாசிகள் ஞானஸ்நானம் பெற விரும்பி பன்முறை தம் பெயர்களை தாக்கல் செய்

திருந்தனர். அவர்களுடைய எஜமான் அவர்களை பயமுறுத்திக் கொண்டிருந்ததால், அவர்கள் பின்வாங்கிப் போயினர். ஒருநாள் சாயங்காலம் அசரியாவும் அவர் மனைவியும் அந்த கிராமத்தின் வழியாக பங்களாவுக்குத் திரும்புகையில், அங்கு சில பெண்களிடம் இருவரும் பேசினர். முடிவில் அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளத் தடையாயிருப்பது என்னவென்ற கேள்வி எழும்பிற்று. அன்று இரவு அந்த ஊர் மனிதர் பங்களாவிற்கு வந்து நாங்கள் ஞானஸ்நானம் பெற விரும்புகிறோமென்று அத்தியட்சரிடம் சொன்னார்கள். "இப்படி நீங்கள் முன் எத்தனையோ தரம் சொல்லி இதுவரைக்கும் சும்மாயிருந்து விட்டீர்கள். இன்று உங்களை இங்கு வரத்தூண்டியது யாது?" என்று அசரியா கேட்டார். "கனம் அம்மாள் அவர்கள் பேச்சு எங்களை வெட்கப்படுத்திற்று. நாங்கள் பெரிய கோழைகளென்று உணர்ந்தோம்" என்றார்கள். அசரியா உடனே அந்த ஊர் பாதிரியாருக்கு ஆள் விட்டனுப்பினர். அவர் வந்து இவர்கள் பேச்சை நம்புவதற்கிடமில்லை என்றார். அத்தியட்சர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் இன்னும் கொஞ்சம் சாவதானமாக யோசித்துப் பார்த்து உங்கள் தீர்மானித்தைச் சொல்லுங்கள்" என்றார். ஆனால் அவர்கள் பிடிவாதமாக, "நாங்கள் இனி வாக்கு தவரமாட்டோம். நீங்கள் தயவுசெய்து எங்களுக்கு சீக்கிரம் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும்" என்றார்கள். "உங்கள் உறுதி வாக்குக்கு ஒரு அச்சாரம் வேண்டுமே" என்றார் அத்தியட்சர். வெகுநேரம் பேசி யோசித்து முடிவில் அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் குடுமியை உடனே வெட்டிக்கொடுத்துவிட தீர்மானித்தனர்; அவ்வளவுதான். பங்களா காவற்காரன் கைவிளக்கை கொண்டுவந்தான். அம்மாள் ஒரு கத்திரிக்கோலைக் கொண்டுவந்தார்கள். அத்தியட்சர் குடுமிகளையெல்லாம் ஒவ்வொன்றாக கத்தரித்து குவியலாக வைத்தார். தம் அகத்திலிருந்த ஹிந்துமதப் பழக்கத்தை களைந்ததின் அடையாளமாக இவர்கள் தம் சிகைகளை வெட்டி எறிந்தனர். அவர்களுடைய எஜமான் பல இன்னல்கள் இழைத்தான். அவர்கள் அதைரியப்படவில்லை. அவர்களுடைய உறுதியையும் நன்நடக்கையையும் கண்டு எஜமான் வியப்புற்றான். அத்தியட்சருக்கு ஒரு நல்ல நிலத்தை இலவசமாகக் கொடுத்து கூடிய சீக்கிரம் அதில் ஒரு கோவிலும் பாடசாலையும் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தினன். "என் ஜனங்களைப்போல் உத்தம கிறிஸ்தவர்கள் இன்னும் அநேகர் உண்டாவது மிகவும் நல்லது" என்று அவன் தன் அபிமானத்தையும் சந்தோஷத்தையும் தெரிவித்தான்.

கிறிஸ்துவின் சுவிசேஷம் ஒடுக்கப்பட்ட ஏழை மக்களின் விலங்குகளை உடைத்து, மனிதப் பிரவியின் மேன்மையையும்

உரிமைகளையும் அவர்களுக்குக் கொடுப்பதின் விளைவாக, உடை குடிநிலை இவற்றில் சுத்தமும் பேச்சிலும் செய்கையிலும் தேர்ச்சியும் தோன்றியிருக்கிறது. தவிர அம்மக்களின் மனத்தில் புதைந்து கிடந்த கானச்சுவையையும் வெளிப்படுத்தியிருக்கிறது. அவர்கள் இனிமையாக பாடவும் சாமர்த்தியமாக சிறு சிறு நாடகங்களை உண்டு பண்ணி நடிக்கவும் முன் வந்துள்ளார்கள். அவர்களுள் சிலர் கவித்திறன் வாய்ந்தவர்களுமாய் விளங்கினர். பக்தி ரசம் ததும்பும் கீர்த்தனைகள் பல இயற்றினர். சத்திய வேதத்திலிருக்கும் பல கதைகளையும் கிறிஸ்துபெருமானின் திவ்விய சரிதையையும் எளிதான காவியரூபத்தில் எழுதினர். இக்கீர்த்தனைகளும் பாட்டுகளும் ஆலயங்களிலும் வீடுகளிலும், அறுப்புக் காலத்தில் களங்களிலும், தெலுங்கு நாடெங்கும் பாடக்கேட்கலாம். பண்டிகை நாட்களில் பாட்டுகளையும் கதைகளையும் நாடகங்களையும் கேட்டுக் கண்டுகளிக்க கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் திரள்திரளாக கூடுவார்கள். இப்படி கிறிஸ்து சமயம் நமது கிராம வாழ்க்கையில் மனதிற்கு சந்தோஷத்தையும் நல்லெண்ணங்களையும் புகட்டக்கூடிய சில நாட்டு வழக்கங்களை புனிதப்படுத்தி கையாண்டு வருகிறது. அசரியா இந்தக் கலைக் கிளர்ச்சியை வளர்க்க மிகுந்த சிரத்தை எடுத்தார். டோர்னக்கல் அத்தியட்ச ஆலய ஆராதனையில் கர்நாடக இராகங்களுக்கு அமைக்கப்பெற்ற தெலுங்கு கீர்த்தனைகளையே அதிகமாக ஜனங்கள் பாடுகின்றார்கள். புதிது புதிதாக வேதச் சரித்திர நாடகங்கள் அமைப்பதற்கு அத்தியட்சர் அவர்களே பொருளையும் பாத்திரங்களையும் வகுத்துக் கொடுப்பார். நாடக மேடையில் புதிய நாடகம் ஒன்றை பாலியர் நடிக்கப் பழகும்பொழுது அசரியா கூடவே இருந்து நடிகர்களுக்கு பயிற்சி கொடுப்பார். கிறிஸ்துவின் மரணத்தைச் சிந்தை செய்ய உதவும் நெஞ்சை உருக்கத்தக்க தேவாரங்கள் அசரியாவுக்கு மிகப் பிரியம். பெரிய வெள்ளிக்கிழமை மத்தியான ஆராதனைக்கு ஆரம்பமாக தேவாரங்களைப் பாட ஒழுங்கு செய்வார். எம்பெருமானின் சரீர வேதனையையும் ஆத்துமத் துயரையும் விவரித்துக் கூறும் அகவல்களே இந்திய கிறிஸ்தவர்கள் இயற்றிய கவிகளுள் பெரும் பகுதியாயிருக்கின்றன. அவருடைய உயிர்த்தெழுதலின் வெற்றியைக் குறித்த பாடல்கள் அவ்வளவு அதிகம் கிடையாது. மகிழ்ச்சியாய் குதூகலிப்பதைப் பார்க்கிலும் துயரத்தை எண்ணி கனிந்துருகுவதே இந்தியர் உள்ளத்திற்கு இயல்பாயிருக்கலாம். உலக சம்பத்துக்களில் வெகு சொற்பமும் வறுமை பிணி முதலிய இன்னல் மிக அதிகமும் பெற்றுள்ள மக்களுக்கு எம்பெருமானின் பாடுகளைச் சிந்திப்பதே ஆறுதலளிக்கக் கூடியதாய் இருக்கிறதென்பது உண்மை. நம் தேச மக்கள் தெய்வ சமூகத்தில் பாடி ஆடுவதைப்பார்க்கிலும்,

நெஞ்சுருகிக் கண்ணீர் சொரிந்து உடல் சிலிர்க்க அவரைப் பணிந்து போற்றுவதே பக்தி முறையென்று கொண்டுள்ளார். அங்ஙனமே இந்தியக் கிறிஸ்தவர்களும் எண்ணுகின்றனர்.

தரித்திரரும் கல்லாதவருமான ஏழை மக்கள் அடங்கிய டோர்னக்கல் சபையை பலப்படுத்தி நிலைநாட்ட அசரியா எடுத்த முயற்சிகள் பல. அவற்றுள் விசேஷமானவை மூன்று.

முதலாவது, தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும் என்று இயேசுபெருமான் கூறிய திருமொழியை டோர்னக்கல் சபையோர் அடிக்கடி எடுத்துக்கூறக் கேட்டனர். முன்கூறிய வண்ணம் ஐ. எம். எஸ். மிஷனெரிமார் தாமே தரித்திரர். அவர்கள் தம் சபையோருக்குச் செய்யக்கூடிய பண உதவி ஒன்றுமில்லை. அவர்களுக்கு ஒத்தாசை அளிக்கக்தக்க உலக செல்வாக்கும் ஒன்றுமில்லை. அவனவன் தன் சுயமுயற்சியினாலேயே தன் வறுமைச் சுமையை சிறிது இலகுவாக்கிக்கொள்ள வேண்டுமென்று மிஷனெரிமார் போதித்தனர். மதுபானத்தை ஒழித்ததால் இந்த ஜனங்கள் தமக்குக் கிடைக்கும் சொற்ப ஊதியத்தை தமக்கும் தம் குடும்பத்திற்கும் பயன்படுத்திக்கொள்ளக் கற்றுக்கொண்டார்கள். தாம் செய்யும் வேலையை சுறுசுறுப்பாகவும் உண்மையாகவும் செய்வதால் தம் எஜமானரின் தயவை சம்பாதித்துக்கொண்டார்கள். பயிர்வேலையால் கிடைக்கும் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும்படி காய்கறித் தோட்டம் போடவும் கோழி வளர்க்கவும் கற்றுக்கொண்டனர். கிறிஸ்து சமயத்தை ஏற்றுக்கொண்ட ஒருவன் சுய முயற்சியால் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றவேண்டுமே ஒழிய மற்றவர்களுடைய நன்கொடைகளை எதிர்நோக்கிப் பிழைக்கும் புல்லுருவியாக இருக்கக்கூடாதென்று இவர்கள் கற்பிக்கப்பட்டனர். மனோவாக்குக் காயம் இவைகளின் சுசியும் சீலமும் பெறவேண்டுமென்ற ஏக நோக்கமே இவர்கள் கிறிஸ்து மதத்தைத் தழுவியதின் முழு நோக்கமாய் இருக்கவேண்டுமென்று ஆதிமுதற்கொண்டு போதிக்கப்பெற்றனர்.

இரண்டாவதாக, கிறிஸ்து சமயத்தைத் தழுவியபின் ஜனங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் பரிபக்குவம் அடைவதற்கு அவர்கள் மதோபதேசம் ஒழுங்காக கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆதலால் ஞானஸ்நானம் பெருவதற்குமுன் ஜனங்களுக்கு ஒரு வருடம் முழுவதும் சமய உபதேசம் போதிப்பதும் அவர்களுடைய வழக்க பழக்கங்களை சீர்திருத்துவதும் அத்தியந்த அவசியம் என்பது அசரியாவின் கொள்கை. ஞானஸ்நானம் பெற்றபின் அவர்கள் ஒழுங்காக

ஆராதனைக்கு வருவது போதாது, சத்திய வேதத்தை ஒழுங்காக கேட்டுக் கற்றுக்கொள்ளவேண்டும். குழந்தைகள் மட்டுமல்ல பெரியோரும் வாசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவ ஆணும் பெண்ணும் தன்னுடைய வேத புத்தகத்தை ஒழிந்த வேளையில் தானே வாசித்து சிந்தை செய்யவேண்டும். இந்த முறைகளை தமது உதவி ஊழியர் யாவரும் கருத்தாய் கையாளவேண்டுமென்பது அசரியாவின் விருப்பம். அவ்விருப்பத்தை நிறைவேற்ற அவர் ஓயாது முயற்சித்தார். பெரியோரும் வெகு சுலபமாக வாசிக்கக் கற்றுக்கொள்ளும் நூதனமுறை ஒன்றை லாபாக் பண்டிதர் காட்டிய பொழுது அசரியாவிற்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. அம் முறையை தமது சபைகளுக்கு வேதோபதேசம் புகட்டுவதற்கு உகந்த முறையெனக் கண்டு கையாண்டு வந்தார்.

சபையோருக்குக் கற்றுக்கொடுக்கும் பொறுப்பை ஏற்றிருந்த குருமாரும் தமது வேத அறிவை புதிப்பித்து விசாலமாக்கிக்கொள்ளுவது மிக அவசியமென்று அசரியா உணர்ந்தார். வருடந்தோறும் அவர் தம் சேகரங்களின் குருமார் யாவருக்கும் இரண்டு வாரம் வேதபாட வகுப்பு நடத்துவார். ஒவ்வொரு வருடமும் திருமறையின் ஒரு புஸ்தகத்தைத் தெரிந்துகொண்டு, அதன் ஆக்கியோன், அது எழுதப் பட்ட காலம், சந்தர்ப்பம், நோக்கம், அதன் விசேஷ போதனை ஆகிய விஷயங்களைக் குறித்து அத்தியட்சர் அவர்களே வெகு உற்சாகத்தோடு பாடம் சொல்லுவார்.

மூன்றாவதாக, கிறிஸ்து சமயத்தைத் தழுவிய ஒவ்வொருவரும் சுவிசேஷ பிரசாரம் செய்வது தமக்கு இயேசுபெருமான் விதித்த ஓர் பிரதான கடமையென்று அசரியா வற்புறுத்தினர். ஆதலால் டோர்னக்கல் கிறிஸ்தவர்கள், தெசலோனிக்கேயிலிருந்த பக்தரைப் போல், கர்த்தருடைய வார்த்தையை பறைசாற்றுவோர் ஆனார்கள். தமது சொந்த ஊரிலும் தம் சொந்த ஜனத்திற்கும் சுவிசேஷத்தைக் கூறுவதோடு திருப்தியடையாது, இவர்கள் மத்திய மாகாணத்தில் கோண்டவானா என்ற இடத்தில் செய்யப்படும் ஒரு புதிய மிஷனெரிச் சேவையிலும் பங்கெடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். திருநெல்வேலிச் சபையின் இளங்குருத்தாய்த் தோன்றிய டோர்னக்கல் சபை முதிர்ந்து கிளைத்தண்டு ஒன்று பிறப்பித்திருக்கிறது. திருநெல்வேலி, திருவிதாங்கூர், நாகப்பூர் ஆகிய பழைய அத்தியட்ச ஆதீனங்களோடு சேர்ந்து, கோண்டுகளாகிய புராதன குடிகளுக்கு சுவிசேஷத்தைக் கூறும் உத்திரவாதத்தை டோர்னக்கல் ஆதீனம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கோண்டவானா என்ற இடத்தில் ஸி. எம். எஸ். வேலை ஆரம்பித்து ஒரு சபையை சேர்த்திருந்தது. கிறிஸ்து சமயத்தைத் தழுவிய

கோண்டுகள் அனல்குன்றி மறுதலித்து விட்டனர். அங்கு தோன்றிய சபையும் மறைந்தது. மிஷனெரி சங்கம் தோல்வியடைந்து அவ் விடத்தைவிட்டு வெளிப் போந்தது. இதை அறிந்த அசரியா சென்னை அத்தியட்சரோடும் திருநெல்வேலி அத்தியட்சரோடும் கலந்து பேசி, அங்கு மறுபடியும் சுவிசேஷ வேலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தார். ஒருமுறை சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு பின் மருள விழுந்த ஜனங்கள் மறுபடியும் அதை செவி கொடுத்து கேட்பார்களோ என்ற சந்தேகமிருந்தது. என்றாலும் வைராக்கியம் நிறைந்த சபைகள் இடையூறுகளைக் கண்டு ஒருக்காலும் தளரா. ஆகையால் அசரியா எடுத்துக்கொண்ட முயற்சிக்கு சபைகள் போதிய ஆதரவு அளித்தன. அங்குச் சென்று பணியாற்றத்தக்க தொண்டரை அசரியா தாமே தேர்ந்தெடுத்தார். அவர்களுள் ஒருவர் அவருடைய செல்வப் புதல்வி மெர்சி அம்மாள்.

திருச்சபை இப்படி வளர்ந்தோங்கும் முறையைப்பற்றி அத்தியட்சர் அவர்கள் தாம்பரத்தில் கூடிய அகிலலோக மிஷனெரி மகா நாட்டில் பின்வருமாறு சிலாகித்துப்பேசினர்: "அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகத்தில் கிறிஸ்து சற்றுப்பின் நிற்கவும், சீடர், சகோதரர், திருச் சபை என்ற பல பெயர்கொண்ட ஒரு சங்கம் முன்சென்று போவதாக வும் தோன்றுகிறது. கிறிஸ்து செய்த சேவையை அவர் நிறுத்தின இடத்திலிருந்து சபை தன் பொறுப்பாக ஏற்றுக்கொண்டு தொடர்ந்து செய்து வருகிறது. ஆகையால் கிறிஸ்து சபையின் ஒவ்வோர் அங்கத்தினனும் அச்செய்கையில் ஈடுபடவேண்டும். அல்லவென்றால் அவன் ஞானஸ்நானம் பெற்றது வீண். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஓர் சுவிசேஷ பிரசாரகன் என்ற கருத்தைக் கடைபிடித்துத் தான் இந்தியராகிய நாங்கள் எங்கள் நாட்டில் கிறிஸ்துவின் ராஜ்யத்தை நிலைநாட்ட முயன்று வருகின்றோம். கிராமச் சபையோரில் சில ரைத் தெரிந்தெடுத்து, புறமதத்தைச்சேர்ந்த மற்ற கிராம வாசிகள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு அவர்கள் என்ன மறுமொழி பகர வேண்டும் என்று கற்றுக்கொடுக்கிறோம். அக்கேள்விகளுள் ஒன்று 'நீ கடவுளைப் பார்த்ததுண்டோ?' அதற்கு மறுமொழி, 'ஐயா, நான் இரண்டு ஆண்டுகளுக்குமுன் எப்படிப்பட்ட மனிதனயிருந்தே னென்று நீங்கள் அறிவீர்கள். அப்பொழுது நான் ஒரு மதுபானப் பிரியன். இப்பொழுது நான் எப்படி இருக்கிறேன் என்று நீங்கள் அறிவீர்கள். நான் கிறிஸ்துவைக் காணுதிருப்பின் இந்த மாறுதல் எனக்குள் ஏற்பட்டிருக்குமோ? நீங்களே சொல்லுங்கள்!' இதற்கு மிஞ்சின மறுமொழி கிடையாது. மனிதரை மாற்றிப் பிறக்கச்செய் யும் வல்லமை கிறிஸ்துவில் இருப்பதற்கு இதனிலும் சிறந்த சாட்சி கிடையாது.

"ஆதித்திருச்சபையில் சாதாரண சபையோரே சுவிசேஷத்தைப் பரவச் செய்தனர். அடிமை அடிமைக்கும், யுத்தவீரன் யுத்தவீரனுக்கும், தொழிலாளி தொழிலாளிக்கும் கிறிஸ்துவின் மாண்பையும் அவர் போதித்த ஞான உபதேசத்தையும் எடுத்துரைத்தான். கிறிஸ்துவினிடம் தான் பெற்ற நன்மையை ஒருவன் மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்பொழுது தன் சொந்த ஆத்ம வளர்ச்சி துரிதமடைகிறது.

"நான் சபைகளைச் சந்திக்கச் செல்லும்பொழுது ஞானஸ்நானம் பெற்றவர்களை அழைத்து, அவனவன் தன் தலைமேல் கை வைத்துக்கொண்டு பின்வரும் ஆணையை நான் சொல்ல என் பின்னால் சொல்லிக்கொண்டு வரக்கேட்பது வழக்கம். 'நான் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவன். நான் சுவிசேஷத்தைப் பிரசுரிக்காவிடில் எனக்கு ஐயோ.' பக்தி வைராக்கியம்கொண்ட சிலர் மற்றவர்களைப் பார்த்து 'கிறிஸ்து உன்னை இரட்சித்திருக்கின்றாரா?" என்று கேட்கின்றார்கள். அப்படி கேட்பதற்குப் பதிலாக, 'நீ மற்றவர்களை இரட்சிக்க முயலுகின்றாயா?' என்று கேட்பது நல்லது.

"சுவிசேஷ பிரச்சாரம் செய்வதற்கென்று பயிற்சிபெற்ற உபதேசிகர் குருமாரின் முயற்சியைப்பார்க்கிலும், கல்லாத சாதாரணக் கிறிஸ்தவன் ஒருவன் தன் அனுபவத்தை தன் இனத்தவருக்கும் சிநேகிதருக்கும் சொல்லியதே டோர்னக்கல் சபையின் பெருக்கத்திற்கு முக்கிய காரணம். இதனால் இருபத்தைந்து வருடங்களுக்குள், இங்கு ஆங்கிலத் திருச்சபையைச் சேர்ந்தவர்களின் தொகை 90 ஆயிரத்திலிருந்து 250 ஆயிரமாக பெருகிற்று. கிறிஸ்து சமயம் இப்படி துரிதமாக நாட்டில் பரவுவதால் இங்குள்ள நூற்றுக்கணக்கான ஜாதிகளிடையே மற்றொரு புதிய ஜாதி தோன்றி பிழப்புகளை அகலமாக்கிவிடவில்லையோ என்ற கேள்வி தேசபக்தர் மனதில் தோன்றலாம். இப்புதிய தொகுதியோ சகல ஜாதிகளையும் ஒரே சீராய் நேசித்து, சகலருக்கும் ஓர் சிறந்த ஆத்மீக நன்மையை ஈவதற்கு கடவுள் ஏற்படுத்திய திருக்கூட்டமாக அமைந்துவருகிறது."

அத்தியாயம் 6

உயர்குலத்தோர் வருகின்றனர்

யோவான்ஸ்நானகனுடைய சீடர் இயேசுகிறிஸ்துவினிடம் வந்து அவர் மேசியா என்பதற்கு ஓர் அடையாளம் காட்டவேண்டுமென்று கேட்டபொழுது, எம்பெருமான் தாம் அறிவிக்க வந்த நற்செய்தியாகிய சுவிசேஷம் முதல்முதலாக தரித்திருக்கு உரைக்கப்பட்டு

வருவதே தாம் மேசியா என்பதற்கு ஓர் அடையாளமென்று விடை பகர்ந்தார். அன்று தொடங்கி கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தரித்திரரே முதல்முதலாக ஏற்றுக்கொண்டு வந்திருக்கின்றனர். முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளிலும் ரோம ராஜ்யத்தின் குடிகளுள் தரித்திரரும் கல்லாதவர்களும் அடிமைகளுமே கிறிஸ்துபெருமான் போதித்த ஆத்மீக விடுதலையின் மேன்மையை உணர்ந்து, அதை தம் இதயகமலங்களில் ஏற்றுக்கொண்டனர். இதைக்குறித்து புறஜாதிகளின் அப்போஸ்தலனான பரிசுத்த பவுல் மேன்மைபாராட்டினர். கர்த்தர் உலகத்தில் பலவீனரையும் அறிவீனரையும் தமது ஆத்மசக்தியால் உயர்த்தி, தம்மை பலவான்களும் ஞானிகளுமென்று எண்ணி கர்வங்கொண்டவர்களை வெட்கப்படுத்தினார் என்று அவர் சொன்னார். கிறிஸ்துபெருமானும் கடவுள் தமது சிறந்த சத்தியங்களைக் கற்றோருக்கும் ஞானிகளுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தியதை எண்ணித் தம் பிதாவைப் போற்றினர். எளியோர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, அது காட்டிய உன்னத நெறியிற் சென்று, கிறிஸ்துவையும் தம்முள் ஒருவரையொருவரும் நேசித்த நேசத்தின் ஆழத்தைக் கண்டு, கல்விச்செருக்கு நிறைந்த ரோமப் பண்டிதர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். அப்படியே டோர்னக்கல்வி லும் செல்வச்செருக்கும் குலச்செருக்கும் நிறைந்த உள்ளத்தினராகிய உயர்குலத்தோர், மாலமாதிக ஜாதிகளைச்சேர்ந்த அறிவிலிகளைத் தான் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் ஏமாற்றிவிடுகிறார்கள் என்று பரிகசித்தனர். என்றபோதிலும் அந்த ஏழை மக்களுக்கு கிறிஸ்து சமயம் செய்த நன்மைகளைக் கண்டு சில உயர்குலத்தோர் சமய ஆராய்ச்சி செய்யவும், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவும் முன்வந்தனர் என்று ஏற்கனவே பார்த்தோம். அப்படிச் சிறு துளிகளாகத்தோன்றி பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்த தொகுதி இயக்கத்தை இங்கு விரிவாகக் கூறுவோம்.

இந்த இயக்கத்தைக் கவனிக்கும்பொழுது ஜனங்கள் செய்யும் பெரிய தீர்மானங்களைத் தனித்தனி ஆளாகச் செய்வதைவிடத் தொகுதி தொகுதியாகச் செய்வதே இந்திய சமுதாயப் பாங்கின் பண்பு என்பது தெளிவாகின்றது. நமது நாட்டில் ஒருவன் தன் மனதிற்கு நன்மையானதாகத் தோன்றுவதைத் தனிமையாகச் செய்ய அவசரப்படுகிறதில்லை. ஒருவன் தன் குழுவின்மீது கொண்டுள்ள பற்று தன்னுடைய தீர்மானத்தைத் தனியே நிறைவேற்ற அவனுக்கு இடம் கொடுக்கிறதில்லை. வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும், நான்குபேர் போகிற வழியேதான் அவன் போக விரும்புகின்றானே யொழிய தனிவழியே போகத்துணியான். நவநாகரிகமும் தற்காலக் கல்வியுமாகிய சம்மட்டிகளே இப்பற்றை உடைத்துத் தகர்க்கக்கூடியனவா

யிருக்கின்றன. கிறிஸ்து சமயப் பிரசாரம் இந்தியாவில் ஆரம்பமான காலத்தில் உயர்குல மக்களிற் சிலர் கிறிஸ்து சமயத்தைத் தழுவினர். அவர்களுட் பெரும்பாலோர், கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய பட்டணங்களில் மிஷனெரிக் கலாசாலைகளில் படித்தவர்கள். உயர்தர மேல்நாட்டுக் கல்வி கற்றவர்கள் மாத்திரமே தனித்தனியே மதம் விட்டு மதம் புகவும், தம் மதத்தில் பெரிய சீர்திருத்தங்களைச் செய்யவும் துணிவுகொண்டனர்.

முன்கூறியதுபோல், இழிகுல மக்கள் கிறிஸ்துமதப் போதனையாலும் சிட்சையாலும் சீர்பெற்று இலங்குவதைக் கண்ட உயர்குலத்தோர் மனதில் அம்மதத்தைக்குறித்து நல்லெண்ணம் பிறந்தது. அடுத்தாற்போல் அம்மதத்தின் விசேஷ போதனை யாதென்று அறிய விருப்பம் தோன்றிற்று. கிறிஸ்தவ உபாத்தியாயர் தீண்டா ஜாதியாரைச் சேர்ந்தவர்; தீண்டா ஜாதியாரின் மத்தியில் வசிப்பவர். என்றாலும் அவரிடம் கிறிஸ்துமதத்தைக் குறித்துக் கேட்டறிய உயர்குலத்தோர் பின்வாங்கவில்லை. கிறிஸ்தவ உபாத்திமாரின் மனைவிகள் சற்று படித்தவர்கள். அவர்கள் தமக்கில்லாத சில உரிமைகள் பெற்றிருந்ததைக் கண்டு உயர்குல மாதர் வியந்தனர். அவர்களோடு அளவளாவி நட்புக்கொள்ள விரும்பி, அவர்களைத் தம் வீடுகளுக்குத் தடையின்றி அழைத்தனர். கிறிஸ்தவப் பெண்களிடமிருந்து சத்திய வேதக் கதைகளையும், விசேஷமாகக் கிறிஸ்துவின் உபதேசங்களையும், அவர் செய்த அற்புதங்களையும், அவருடைய மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் கேட்டு அறிந்துகொண்டனர். கிறிஸ்துவின் சரிதையைக் கேட்டு, களங்கமற்ற மனத்தால் சிந்தைசெய்யும் ஒருவரின் உள்ளம், விசேஷமாக பெண்மக்களின் மென்மையான உள்ளம், உருகாதிருக்குமோ? கிறிஸ்துவின் அன்பு முதலாவது உயர்குலப் பெண்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டது.

குருக்களென்றால் கை எடுப்பது இந்திய மக்களின் பிறவிக்குணம். அசரியா அத்தியட்சரின் வசீகர வதனமும் அவர் கண்களில் பிரகாசித்த அன்பின் சுடரும் அறிவின் சுடரும் அவரை அருகிலிருந்து கவனித்து வந்த மேன்மக்களை வசியப்படுத்தின. அவர்கள் அவரை மிகவும் பாராட்டினார்கள். அடிக்கடி தம் வீடுகளுக்கு அழைத்து மரியாதை செய்தனர். சில சமயங்களில் அவரை உட்கார வைத்து உங்கள் மதத்தைப்பற்றி எங்களுக்குச் சிறிது அறிவு புகட்டுங்கள் என்று கேட்டனர். இப்படி மத அபிமானமாகிய கோட்டையின் வாசல் திருப்பிடித்த கீல்களில் கிரீச்சிட்டு சிறிது அசையத் துவங்கிற்று. பின்னர் திடும்பிரவேசமாய் முழுவதும் திறந்துவிட்டது.

இடையர், குயவர், தட்டாராகிய உயர்குலத்தோர் கும்பல் கும்பலாகக் கிறிஸ்து சபைக்குள் பிரவேசித்தனர்.

1924-ம் வருடம் ஓரிடத்தில் 325 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். அவர்களுள் உயர்குல மக்கள் 25 பேர் மாத்திரமே. மூன்று வருடங்களுக்குப்பின் அதே இடத்தில் 117 பேர் கிறிஸ்து சமயத்தைத் தழுவினர். அவர்களுள் 100 பேர் உயர்குலத்தோர். அடுத்த நாள் சிலர் திடப்படுத்தல் பெற்றனர். அப்பொழுது ஒருவர் "இந்நாளை நாங்கள் ஆவலோடு எதிர்நோக்கி நின்றோம். எங்கள் குலத்தைச் சேர்ந்த 600 பேர் பத்தொன்பது கிராமங்களில் இருக்கின்றார்கள். அவர்கள் எங்களைக் கவனித்து வருகின்றார்கள். அவர்களும் கிறிஸ்துவைத் தம் இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புகின்றார்கள்" என்று அத்தியட்சரிடம் சொன்னார். இப்படியாக உயர்குலத் தொகுதி இயக்கமும் டோர்னக்கல் அத்தியட்ச ஆதீனத்தில் தோன்றிப் பரவிவந்தது.

உயர்குலத்தோர் கிறிஸ்து சபையில் சேர்ந்தபோது சபைத்தலைவர்கள் அவர்களை வெகு யூகத்தோடு பூரண அன்பின் ஒற்றுமைக்குள் வழி நடத்தல் அவசியமாயிருந்தது. தலைமுறை தலைமுறையாகத் தமது அடிமைகளாயிருந்தவர்களை இப்பொழுது சகோதரராகப் பாராட்டி, அவர்களுக்கு இதுவரையில் அளிக்காத சுதந்திரத்தை அளிப்பது கிறிஸ்துபெருமான் விதித்த அன்பின் பிரமாணத்தின் மத்திய பண்பாயிருக்கிறதென்பதை உயர்குலத்திலிருந்து வந்த கிறிஸ்தவர்களுக்குத் தலைவர்கள் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். ஆகையால் எஜமானரும் பண்ணையாட்களும் அருகில் வீற்றிருந்து ஒரே பாத்திரத்திலிருந்து பரிசுத்த திருவிருந்தை அருந்தினர். என்றாலும் நாட்கள் செல்லச்செல்ல மேற்குலத்திலிருந்து வந்த கிறிஸ்தவர்களின் பக்தி அனல் குன்றி, அவர்களுடைய பழைய எண்ணங்கள் மறுபடியும் தலைகாட்டலாம். பண்ணையாட்கள் தாம் புதிதாக அடைந்த சுதந்திரத்தை அனுபவிப்பதில் தம் எஜமானருக்குக் காட்டவேண்டிய மரியாதையைக் காட்டத் தவறலாம். அதனால் இரு திறத்தாருக்குள் மனஸ்தாபம் ஏற்படலாம். உயர்குலத்தோர் தமக்கு வேதோபதேசம் புகட்ட நியமிக்கப்பெறும் உபதேசிகர் குருமார் தம் குலத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கவேண்டுமென்று கேட்கலாம். ஹிந்து சமுதாய ஆசாரங்களில் களையவேண்டியவை எவை, அனுசரிக்கவேண்டியவை எவை; கிறிஸ்துசமயப் போதனைக்கு ஒவ்வாதவை எவை, இந்திய சமுதாய வாழ்க்கைக்கு நன்மை பயக்கத் தக்கவை எவை என்று தீர்க்க ஆராய்ந்து புதிய கிறிஸ்தவர்களுக்கு ஆலோசனை சொல்லுவது சபைத்தலைவர்களின் கடமைகளுள்

கடினமான தொன்றுய் இருந்தது. இக்கேள்விகளுக்கு ஆதித்திருச் சபையின் உத்தம போதகனும் ஞானமுள்ள தலைவனுமான பவுல் அப்போஸ்தலன் எழுதி வைத்துப்போயுள்ள தமது விசாலமான அனுபவத்தில் எற்ற மறுமொழிகள் புதைந்துகிடக்கின்றன. ஒனேசிமு வாகிய அடிமைக்கும் பிலமோனுகிய எஜமானனுக்கும் இடையே சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டன. அடிமை கிறிஸ்துவின் தொண்டனுயினபின், கிறிஸ்துவின் அன்பு அடிமையைப் பிரிய சகோதரனுக்கி விட்டதென்று பவுல் கூறினர். கிறிஸ்தவனுன வேலைக்காரன் தன் கடமையை மனுஷருக்கென்றல்ல, ஆண்டவருக்கென்று நன் மனத்தோடு செய்யவேண்டுமென்று அவர் கற்பித்தார். எஜமானர் பயமுறுத்துவதை ஒழித்துவிட்டுத் தமக்கும் பரலோகத்தில் ஓர் எஜமானன் இருக்கின்ருர் என்றும், அவர் ஊழியனுக்கும் எஜமான னுக்கும் அவனவன் செய்யும் நன்மைக்குத்தக்க பலனை அளிப்பா ரென்றும் உணர்ந்து வேலைக்காரரைப் பட்சமாய் நடத்தவேண்டு மென்று அவர் கட்டளையிட்டார். புறமத சடங்காசாரங்களில் நல்லவை தீயவை எவை என்று கண்டுகொள்ளவும், அவற்றை அனுசரிப்பதில் பிரதானமாகக் கவனிக்கவேண்டியது என்ன என்றும் பவுல் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்ருர். அப்போதனை கள் அசரியாவிற்கு அதிக உதவியாயிருந்தன.

முதல் தொகுதி இயக்கத்தின் வழியாகக் கிறிஸ்து மதத்தைத் தழுவிய ஏழை மக்களுக்கு அவர்கள் குடில்களினூடே சிறிய ஆலயங் களை அசரியா கட்டியிருந்தார். இரண்டாம் தொகுதி இயக்கத்திற்குப் பின் இருதிறத்தாரும் கூடித் தெய்வத்தை ஆராதிக்க சற்றுப் பெரிய ஆலயங்களை வசதியான இடங்களில் கட்டினர். கிராம ஆலயங்கள் வான லோகத்திலிருக்கும் மேலானவைகளை ஜனங்கள் நாடும்படி அவர்களுடைய மனக்கண்களை உயர்த்தத்தக்க அழகிய கைகாட்டிக ளாக இருக்கவேண்டுமென்பது அசரியாவின் வாஞ்சை. புதிய கிறிஸ்தவர்களை அவர் அதிக ஞானமாக நடத்திவந்ததால் குல வேற்றுமை டோர்னக்கல் சபைக்குள் பிரவேசித்து அதைச் சின்னு பின்னமாக்கவில்லை.

உயர்குல மக்கள் திருச்சபைக்குள் பிரவேசித்ததால் பல நன்மை களும் உண்டாயின. அவர்கள் தமது சமுதாயப் பாங்கிலிருந்து மூன்று சிறந்த பண்புகளைத் திருச்சபைக்கு அளித்தனர். அவை யாவன: குருமாரிடம் கொண்டிருந்த பக்தி வினயம், பண்டிகைகளை யும் திருநாட்களையும் களிப்பாகவும் விமரிசையாகவும் கொண்டாடு தல், ஆலயத்திற்குப் போகும்போதெல்லாம் வெறுங் கையாய்ப் போகாமல் காணிக்கை எடுத்துக்கொண்டுபோதல். இந்த நல்ல

வழக்கங்களை அவர்கள் கிறிஸ்துவின் மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்தனர். மேலும் இவர்கள் தீண்டா ஜாதியாரைப்போல் சுய மரியாதை அற்றவர்களல்லர். தம்மை மனிதப் பிறவிகள் என்று கருதித் தம்மைத்தாமே நன்கு மதிக்கத் தீண்டா ஜாதியாருக்குக் கற்பித்தல் அவசியமாயிருந்தது. இவர்களோ இயல்பிலேயே சுயமரியாதையும் கௌரவமும் உடையவர்கள். ஆதலால் டோர்னக்கல் சபையை இவர்கள் கௌரவமும் சுயாதீன சிந்தையும் நிறைந்த ஒரு சிறந்த சபையாக்கிவிட்டார்கள்.

தெய்வ ஆராதனை

இப்படித் திருச்சபை பெருக்கத்திலும் பக்தியிலும் கொடையிலும் நன்னெறியிலும் மேலோங்கி வளர்ந்தது. அவ்வளர்ச்சியின் புறம்பான தோற்றமும், அதைக் குன்றவிடாது போஷிக்கும் முறையும் டோர்னக்கல் சபைகளில் நடந்துவரும் பரிசுத்த தேவ ஆராதனையே ஆகும். இவ்வாராதனையை நடத்துவதற்கு அசரியா தகுந்த ஆயத்தமில்லாமல் போகமாட்டார். அது பயபக்தியை ஊட்டத் தக்க உசிதமான ஆராதனையாக இருப்பதற்கென்று சிறிய பெரிய காரியங்கள் யாவற்றையும் மிகக் கவலையாய் ஒழுங்கு செய்வார். பாடும் பாட்டுகள், வாசிக்கும் வேத வசனங்கள், செலுத்தும் காணிக்கை, செய்யும் உபந்நியாசம் ஆகிய ஒவ்வொரு பகுதியையும் அவர் கருத்தாய்த் திட்டம் செய்வார். கிராமத்திலிருக்கும் ஆலயம் மண்சுவரும் ஓலைக் கூரையுமாயிருப்பினும், அங்கும் அசரியா முழு அத்தியட்ச உடையைத் தரித்துக்கொண்டு எங்கோ ஒரு மூலையிலிருந்து ஆலயத்திற்குள் கெம்பீரமாய்ப் பிரவேசிப்பார். ஏனென்று கேட்டால், மிகக் கேவலமான சூழ்நிலையில் வசித்துவரும் ஏழை மக்களுக்குத் தெய்வ சமூகத்தில் அழகும் அலங்காரமும் துலங்குகின்றன என்ற எண்ணம் பிறக்கவேண்டுமென்றே இப்படிச் செய்கிறேன் என்பார்.

ஒருநாள் திருவிருந்து ஆராதனை நடத்த ஒரு கிராமச் சபைக்கு அத்தியட்சர் சென்றார். அங்கு போய்ச் சேர்ந்தபின் அவர் அனுப்பிய நற்கருணைப் பாத்திரங்களும் பொருட்களும் கவலைத் தாழ்ச்சியாக மற்றொரு கிராமத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விடப்பட்டதை அறிந்தார். ஆராதனை துவங்கும் சமயம் வந்துவிட்டது. அவர் ஆசனத்தில் அமர்ந்து கூடியிருந்த சபையைக் கீர்த்தனைகளையும் தேவாரங்களையும் பாடச் சொன்னார். சபையோர் வெகுநேரம் பாடினார்கள்; பாத்திரங்கள் இன்னும் வந்துசேரவில்லை. பின் அத்தியட்சர் பிரசங்கத்தை ஆரம்பித்தார். முக்கால் மணிநேரம் பேசிவிட்டார். இன்னும் பாத்திரங்கள் வரவில்லை. ஜனங்கள் மறுபடியும் பிரசங்கம்

பண்ணவேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டார்கள். அவராவது ஜனங்களாவது சலித்துப்போகவில்லை. அசரியா பிரசங்கித்தால் கற்றோரும் செவிகொடுத்து கேட்க விரும்புவார்கள். கல்லாத ஏழை மக்களுக்கோ அவர் திருவசனத்தைக் கதைகளோடும் உதாரணங்களோடும் எடுத்துப்புகட்டும்போது கேட்கக் கேட்க காதிற்கு மதுரமும் உள்ளத்திற்கு மகிழ்ச்சியும் பிறக்கும். வேத புத்தகத்தை வாசித்து அதன் புதை பொருட்களை தாமே அறிந்துகொள்ளத் திராணியற்ற ஜனங்களுக்கு அவர் பிரசங்க வேளையில்தான் வேத அறிவு புகட்டுவார். அவர் பிரசங்கம் பிரசங்கமாயல்ல வேத ஆராய்ச்சிப் பாடமாய் இருக்கும்.

பண்டிகை நாட்கள் வந்துவிட்டாலோ குருவானவருக்கும் ஜனங்களுக்கும் உண்டாகும் உற்சாகத்தை அளவிடமுடியாது. கிறிஸ்துவின் பிறந்தநாள் பண்டிகை தினத்தில் அத்தியட்ச ஆலயத்தில் இடங்கொள்ளாமல் போகுமட்டும் ஜனங்கள் வந்துகூடுவார்கள். பஜனைக் கோஷ்டிகள் பல ஆனந்தமாகப் பாடும். ஆராதனையை அத்தியட்சர் மிக விமரிசையாகவும் பக்தி வினயத்தோடும் நடத்துவார். அன்று சாயங்காலம் சிறுவர் அத்தியட்சர் பங்களாவிற்கு விரைந்துசெல்வார்கள். யாவரும் அத்தியட்சர் கொடுக்கும் சிற்றுண்டிகளையும், கரும்பலகை, சீப்பு, சோப்பு முதலிய பரிசுகளையும் பெற்றுக்கொண்டு குதூகலத்துடன் வீடு திரும்புவார்கள். பண்டிகைகளுள் மிகச் சிறப்பான பண்டிகை அறுப்பின் பண்டிகை. ஒவ்வொரு கிராமத்திலும் இதைச் சபையோர் சந்தோஷமாகக் கொண்டாடுவார்கள். அதன் பின் டோர்னக்கல் அத்தியட்ச ஆலயத்தில் ஒரு பொதுக்கொண்டாட்டம் நடைபெறும். அதற்கு ஜனங்கள் சுற்றுக் கிராமங்களிலிருந்து தம் காணிக்கைகளை எடுத்துக்கொண்டுவந்து கூடுவார்கள். எருசலேம் தேவாலயத்திற்கு கூடாரப்பண்டிகையைக் கொண்டாட யூதமக்கள் குடும்பம் குடும்பமாகவும், ஊர் ஊராகவம் சேர்ந்து, மலைகளையும் அருவிகளையும் கடந்து பாடிக்கொண்டு சென்றதுபோல், டோர்னக்கல்லுக்குப்போகும் பாட்டைகள் ரஸ்தாக்கள் வழியே நடந்துசெல்லும் சிறு கூட்டங்களை அதிகாலையில் பார்க்கலாம். சுத்த உடையணிந்து தானியம், காய்கனிகள் நிறைந்த கூடைகளைத் தலையில் சுமந்துவரும் பெண்களின் முகங்களில் மகிழ்ச்சி தாண்டவமாடும். ஆண்மக்கள் ஒரு ஆட்டையோ அல்லது கன்றுக்குட்டியையோ நடத்திக்கொண்டு வருவார்கள். இவைகள் ஏழை மக்கள் தம் வறுமையிலிருந்து ஆண்டவருக்கு மனப்பூர்வமாய் அளிக்கும் காணிக்கைகள். அத்தியட்ச ஆலயத்தின் இனிய மணியோசை காற்றில் பரவத்துவங்கின உடனே கூடிய ஜனங்களுக்குள் ஒரு பரபரப்புத் தோன்றும். குருமார் பின் தொடர, தோத்திரக் கீதம் முழங்க, அத்தியட்சர் ஆலயத்தைச் சுற்றி

வருவார். ஜனங்கள் தம் காணிக்கைகளை ஏந்திக்கொண்டு பின் செல்லுவார்கள். யாவரும் ஆலயத்திற்குள் பிரவேசித்து உட்கார்ந்த பின், அத்தியட்சர் ஆராதனையைத் துவங்குவார். பாட்டும் பிரார்த்தனையும் வேத வசனிப்பும் பிரசங்கமும் ஆராதனையின் முக்கியப் பகுதிகளாக இருப்பதுபோல், காணிக்கை படைத்தலும் முக்கிய பகுதியாயிருக்கவேண்டுமென்பது அசரியாவின் கொள்கை. பாட்டைப் பாடிக்கொண்டிருக்கும்பொழுது ஒருவர் பையை நீட்ட அதற்குள் ஏனோதானோ என்று காலணாவைப் போட்டுவிடுவது காணிக்கை செலுத்தல் ஆகாது. ஆண்டவருக்குப் படைக்கும் காணிக்கையை நன்றி அறியும் உள்ளத்தோடு மாவினயமாகச் செலுத்தவேண்டுமென்று அத்தியட்சர் வாதிப்பார். ஆகையால் அறுப்பின் பண்டிகை ஆராதனையில் ஜனங்கள் அமைதியாக நிற்க, காணிக்கைகள் கொண்டு வந்தவர்கள் அவற்றை எடுத்துக்கொண்டு வரிசையாக பரிசுத்த மேடைக்கு செல்வார்கள். அத்தியட்சர் தாமே ஜனங்கள் படைக்கும் காய், கனி, கோழி, வாத்து, ஆடு, கன்று இவைகளை வாங்கி, இவைகளையும் இவைகளைக்கொண்டு வந்தவர்களையும் ஆசீர்வதித்து கர்த்தருடைய நாமத்தில் ஏற்றுக்கொள்வார். ஜனங்கள் படைக்கும் காணிக்கைகளுள் ஒப்புயர்வற்ற காணிக்கை தமது முயற்சியால் கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து ஞானஸ்நானம் பெறத்தயாராயிருக்கும் மக்களேயாவர். ஆகையால் காணிக்கைகளை ஏற்றுக்கொண்ட பின் ஞானஸ்நான மூழுக்கால் நவமாய்க் கிறிஸ்து சமயத்தைத் தழுவ விரும்புவர்களைக் கிறிஸ்துவின் மந்தையிற் சேர்த்துக்கொள்வார்.

ஆராதனை முடிந்தபின் பந்தய ஓட்டங்களும், பாட்டுப் போட்டிகளும் நடைபெறும். டோர்னக்கல் கிறிஸ்தவக் குடியிருப்பின் மத்தியிலுள்ள பெரிய வெளியில், மரநிழலில், சிறு சிறு கூட்டங்களாக ஜனங்கள் இருந்து ஒருவரை ஒருவர் சந்தித்து அளவளாவவும் பழைய சிநேகங்களைப் புதுப்பித்துக்கொள்ளவும் மத்தியான வேளையில் சமயம் கிடைக்கும். மறுபடியும் பந்தயங்களும், பாட்டுக் கச்சேரிகளும், கும்மி கோலாட்டங்களும் நடக்க, அங்கு பிறக்கும் ஆரவாரம் கேட்போரைப் பரவசப்படுத்தும். இரவில் திறந்த வெளியில் வேதச் சரித்திரங்களுள் ஒன்று நாடக ரூபமாக ஜனங்களுக்கு எடுத்துக் கூறப்படும். அந்த நாள் முழுவதும் மனத்திற்குச் சந்தோஷத்தையும் ஆத்துமாவிற்கு உன்னத எண்ணங்களையும் புகட்டக்கூடிய நற்கருமங்களில் ஜனங்கள் ஈடுபட்டிருப்பார்கள்.

இப்படியாக 25 ஆண்டுகள் கடந்தன. 1935-ம் வருடம் ஜனவரி மாதம் 8-ம் தேதியன்று டோர்னக்கல் அத்தியட்ச ஆதீனத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடத் தீர்மானித்தார்கள். சென்னை

அத்தியட்ச ஆதீனத்தின் ஒரு பாகத்தைப் பிரித்து, தனித்த ஓர் ஆதீனமாக்கி, கம்மாமெட் என்ற கிராமத்தில் அசரியாவை அத்தியட்சாராக நியமித்து அன்று சரியாய் இருபத்தைந்து ஆண்டுகள் முடிவாயின. அந்தக் கால் நூற்றாண்டிற்குள் அவ்வாதீனம் உலகப் பிரசித்திபெற்ற ஆதீனமாக ஓங்கி வளர்ந்துவிட்டது. அதற்குட்பட்ட ஜனங்களின் தொகை மும்மடங்கு பெருகி இருந்தது. இரண்டுலட்சத்து இருபதாயிரம் அங்கத்தினர் அடங்கிய அத்திருச்சபை சுவிசேஷப் பிரசார சேவையில் மிகுந்த ஆர்வம் காட்டும் சபையாக விளங்கிற்று. அதன் ஆராதனை முறையிலும் சட்டதிட்டங்களிலும் இந்திய சமுதாயப் பாங்கின் நல்ல அம்சங்கள் தோன்றின. அச்சபையை மேற்பார்க்க 150 குருமாரும் ஒரு உதவி அத்தியட்சரும் இருந்தனர். அவர் செய்த வேலை வளர்ந்ததுபோல், அசரியாவும் அறிவிலும் அனுபவத்திலும் வளர்ந்துவந்தார். பல சந்தேகங்களுக்கிடையே வாலிபனாக அத்தியட்சர் குழுவிற் புகுந்த இவர் இப்பொழுது யாவருடைய மதிப்பையும் பெற்ற செல்வாக்குள்ள தலைவர்களுள் ஒருவராக விளங்கினார்.

வெள்ளி விழாவின் முந்தினநாள் அந்திவேளையில் டோர்னக்கல் மகோற்சவத்திற்குச் செல்லவந்த ஜனங்கள் பெஜவாடா ஸ்டேஷனில் நெருங்கி நின்றார்கள். அவர்கள் அனைவரும் புகைவண்டித் தொடருக்குள் இடம் தேடிக்கொள்ளும்படி வண்டி முக்கால்மணி நேரம் தாமதித்தது. அத்தியட்ச ஆலயம் கட்டிமுடியவில்லை. என்றாலும் சமயத்திற்கு உதவும் தற்காலிக பரிசுத்த மேடையொன்று அமையப்பெற்றிருந்தது. ஜனங்கள் பெரிய ஆலயத்தில் ஊசி நுழைய இடமில்லாதபடி நெருங்கி நின்றார்கள். குருமார் வெள்ளை அங்கிதரித்து, வரிசையாக மேற்கு வாசல் வழியாய் ஆலயத்திற்குள் பிரவேசித்தனர். முதலாவதாக அத்தியட்சர் திருவிருந்து பரிமாறினார். அடுத்தாற்போல் சிறந்த தோத்திர ஆராதனை நடைபெற்றது. இங்கு சுவிசேஷ ஊழியத்தை ஆரம்பித்தபோது இது அத்துவானக் காடாயிருந்ததைப் பார்த்திருந்த யாவரும் கர்த்தர் செய்த மகத்தான கிருபைக்காக அவருக்கு மனமார்ந்த நன்றிசெலுத்தினர். மத்தியான உணவு யாவருக்கும் ஒரு பொது விருந்தாக இருந்தது. வெள்ளி விழாவிற்கு வந்த யாவருக்கும் அந்தநாள் ஒரு வெற்றிகரமான நாளாக இருந்ததென்றால், அந்த வெற்றிக்குக் காரணனாக கடவுள் தெரிந்து உபயோகித்த அவருடைய தொண்டன் அசரியாவின் உள்ளத்தில் என்ன பலத்த உணர்ச்சிகள் உதித்திருக்கவேண்டும்! அன்று சாயங்கால ஆராதனைக்கு முன்பாகத் தமது உடையைத் தரித்துக்கொண்டு குருமார் வரிசையில் சேரக் காத்துநின்ற சமயம், பக்கத்திலிருந்தவரைப் பார்த்து திடீரென்று அசரியா ஒரு கேள்வி கேட்டார்.

"நான் என் வாழ்நாளெல்லாம் மெதுவாகச் செல்லுவேன் என்று எசேக்கியா சொன்ன வார்த்தைகளுக்குப் புதிய திருப்புதலின் ஓரக் குறிப்பில் மற்றொரு மொழிபெயர்ப்பு சொல்லியிருக்கிறதே, அது உங்களுக்குத் தெரியுமா?" என்று அசரியா கேட்டார். அவர் பதிலுக்குக் காத்திராமல் அசரியா மேலும் பேசினர். "நான் என் வாழ்நாளெல்லாம் பக்தி வினயமாக வரிசையிற் செல்லுவதுபோல் செல்லுவேன் என்பதுதான் அந்த ஓரக்குறிப்பு. இன்றைக்கெல்லாம் அந்த எண்ணம்தான் என் மனதில் ஓடிக்கொண்டேயிருக்கிறது. மெதுவாக மனத்தாழ்மையோடு நன்றி செலுத்தச் செல்லுவோரின் வரிசையில் நடப்பதுபோல் நடப்பது என் கடமையாயிருக்கிறது. ஏனென்றால் நான் இந்த நன்னாளைக்காண ஆண்டவர் எனக்குக் கிருபை அளித்தாரே!" என்றார். எதிர்பாராத வெற்றி; சோர்வற்ற முயற்சியின் பலன்; முயற்சித்த விசுவாசியின் உள்ளத்தில் பொங்கி வழியும் நன்றி—இவையன்றோ இந்த அத்தியாயத்திற்கு ஏற்ற முடிவு!

அத்தியாயம் 7

ஆந்திர தேசத்தில் கிறிஸ்து சமய வளர்ச்சி

அசரியா அத்தியட்சர் செய்த சேவையின் அளவைக் கணிப்பதற்கு, அவர் அத்தியட்ச ஆதீனத்தை ஏற்றுக்கொள்ளுமுன் ஆந்திரத்தில் கிறிஸ்து சமயம் எவ்வளவு தூரம் வேரூன்றி தழைத்திருந்தது என்று பார்த்தல் அவசியம். வட இந்தியாவிற்குச் சுவிசேஷப் பிரசாரம் செய்ய வந்த முதல் புராட்டஸ்டண்ட் மிஷனெரியாகிய வில்லியம் கேரிக்கு ஆங்கில கம்பெனி அதிகாரிகள் கல்கத்தாவில் இடங்கொடுக்க மறுத்தனர். அவர் டேனிஷ் ஆதீனத்திலிருந்த செராம்பூரில் குடியிருக்க இடம் பெற்றுச் சுவிசேஷப் பிரசார வேலையை அங்கு ஆரம்பித்தார். மிஷனெரிச் சேவை தமது வர்த்தகத் தொழிலுக்கு இடைஞ்சல் உண்டாக்குமென்று கம்பெனி அதிகாரிகள் கருதினர். மேலும் அந்நாட்களில் ஆங்கில நாட்டின் கிறிஸ்தவச் சபைகள் புறநாடுகளுக்குக் கிறிஸ்துவின் சத்திய உபதேசத்தைப் புகட்டுவது தம் கடமையெனக் கருதவில்லை. என்றாலும் இந்தியத் திருச்சபையின் சரித்திரத்தை ஆராயும்பொழுது, இந்நாட்டின் பல பாகங்களிலும் கிறிஸ்து சமயப் பிரசாரத்தை ஆரம்பித்தவர்கள் ஆங்கில கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களென்று காண்கிறோம். அவர்கள் பாதிரிமார் அல்ல; ஜில்லா அதிகாரிகள். அவர்கள் தீண்டாத ஜாதியாரின் மிகப் பரிதபிக்கத்தக்க நிலையைக் கண்டு மனதுருகிக் கிறிஸ்துவின் நற்செய்தி ஒன்றே ஒடுக்கப்பட்டோ

ரின் பந்தங்களை அறுத்து, அவர்களுக்குப் பொருள், கல்வி முதலிய வாழ்க்கைச் சாதனங்களை அளிக்கவல்லதென்று கருதினர். அவர்களுடைய அறிவீனமும் மூடபக்தியும் அவர்கள் முன்னேறிச் செல்லவொட்டாத தடைகளாயிருந்தனவென்றும், அவர்கள் ஏகமெய்க் கடவுளையும் கிறிஸ்துவையும் அறிந்து வழிபடுவது அவசியமென்றும் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுட் சிலர் உணர்ந்தனர்.

மாடு தின்னும் மிலேச்சரென்று மற்ற ஹிந்துக்களால் ஒதுக்கப்பட்ட ஐரோப்பியரின் வீடுகளில் தீண்டா ஜாதியார் மாத்திரமே வேலை செய்ய முன்வந்தனர். ஐரோப்பிய அதிகாரிகள் தம் வேலைக்காரரில் புதைந்து கிடந்த திறமையையும் சில நற்குணங்களையும் கண்டு கொண்டனர். அவர்களுக்கு மற்ற ஹிந்துக்கள் செய்துவந்த அநியாயம் எத்துணை பெரிது என்றும் உணர்ந்தனர். ஐரோப்பியராகிய மேன்மக்கள் தமக்குத் தம் சொந்த நாட்டார் கொடுக்க மறுத்த உரிமைகளைக் கொடுத்ததை வேலைக்காரர் நினைத்து வியப்படைந்தார்கள். இப்படி இருபட்சத்திலும் பிறந்த நல்லெண்ணம் கிறிஸ்துவின் உபதேசமாகிய ஜீவ வித்தை விதைக்கத்தக்க பண்பட்ட நிலமாயிற்று. ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும், விசேஷமாக அவர்கள் மனையாட்டிகளும் முதல் முதலாகத் தம் வீட்டு வேலைக்காரராகிய ஏழை மக்களுக்குக் கிறிஸ்து மதத்தைப் புகட்டினர். சிலர் சிறு கல்விச் சாலைகளை ஏற்படுத்தினர். சிலர் இங்கிலாந்தின் திருச்சபைகளுக்குத் தீண்டாத ஜாதியாரின் பரிதாப நிலைமையை எழுதித் தெரிவித்தனர். இங்ஙனம் கம்பெனி அதிகாரிகள் துவக்கத்தில் காட்டிய எதிர்ப்பு நீங்கி, மிஷனெரிச் சேவைக்கு ஆங்கில அதிகாரிகளின் அனுதாபமும் ஒத்துழைப்பும் கிடைத்தது.

ஆந்திரத் திருச்சபைக்கு முதல் முதலாக அடிகோலியவர் உவில்லியம் ஹௌவெல் என்ற ஆங்கிலோ-இந்தியர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் அவர் கடப்பாவில் சர்க்கார் உத்தியோகம் வகித்து நின்றார். அவருடைய நற்குணத்தைக் கண்டு யாவரும் அவரை நன்கு மதித்தனர். அவர் ஓர் சிறந்த கிறிஸ்து பக்தர்; ஆதலால் தமது ஜில்லாவில் கிறிஸ்து சமயம் நிலைபெறவேண்டுமென்று பெரிதும் விரும்பினர். ஒழிந்த நேரத்தில் தாமே மதப்பிரசாரம் செய்தனர். இது போதாதென்று தம் உத்தியோகத்தை உதறிவிட்டு சுவிசேஷ வேலையில் தம் முழுநேரத்தையும் செலவிடக் கருதினர். லண்டன் மிஷனெரி சங்கம் ஒன்றுதான் அப்பொழுது அங்கு வேலை ஆரம்பித்திருந்தது. அச்சங்கத்திற்குத் தம் கருத்தைத் தெரிவித்தபொழுது, சங்கம் அவரைக் கடப்பாவில் மிஷனெரியாக 1822-ம்

வருடம் நியமித்தது. அவர் ஆங்கிலச் சபையைச் சேர்ந்தவரெனி னும் லண்டன் மிஷன் சங்கத்தின் ஊழியராயினர்.

சிறிது சிறிதாகக் கடப்பாவில் ஒரு சபை நிலைபெற்று வளர்ந்து வந்தது. 1832-ம் ஆண்டில் சபைக்கு ஒரு பெரும் ஆபத்து நேர்ந் தது. கடப்பாவில் இருந்த பட்டானியர் தாம் ஆங்கில அரசாங்கத் தாரிடம் கொண்டிருந்த பகையைத் தீர்த்துக்கொள்ள, இந்த ஏழைக் கிறிஸ்தவர்கள்மேல் பாய்ந்தனர். ஏழை மக்கள் ஹௌவெலிடம் அடைக்கலம் புகுந்தார்கள். அவர் ஸி. யி. மெக்டெனல்ட் என்ற சப்-கலெக்டருக்கு அபயமிட்டார். மெக்டெனல்ட் சில போர்வீர ருடன் விரைந்து சென்றார். கோபாவேசம் கொண்ட பட்டானியர் அவரையும் அவருடைய வீரரையும் நையப்புடைத்துக் கொன்று விட்டார்கள். பின் தாம் செய்த கொடுஞ்செயலை உணர்ந்து பயந்து அவர்கள் ஓடிவிட்டார்கள். ஏழை மக்கள் பிழைத்தனர். அவர் களைக் காப்பதற்கென்று மெக்டெனல்டும் அவருடைய வீரரும் உயிர் நீத்தனர். அவர்களே தெலுங்குச் சபையின் முதல் பிராணத்தியாகி கள். 1842-ம் ஆண்டில் ஹௌவெல் ஆங்கிலத் திருச்சபையில் குருபட்டாபிஷேகம் பெற விரும்பித் தமது ஆதிச் சபைக்கே திரும் பினர். அப்பொழுது நூறுபேரடங்கிய கடப்பைச் சபை இரண்டாகப் பிரிந்தது. சிலர் லண்டன் மிஷனுக்கு உண்மையாக இருந்து அதன் சபை ஒழுங்கை அனுசரித்து வந்தனர். மற்றவர்கள் ஹௌவெலு டன் சேர்ந்து ஆங்கிலச் சபைக்குட் புகுந்தனர். இது விசனிக்கத் தக்க விஷயமே. ஆயினும் இதனால் ஹௌவெல் இரு சபைகளின் மிஷனெரி வேலையையும் ஆரம்பித்து வைத்தவரானார்.

ஹௌவெல் பாதிரியார் கடப்பையிலிருந்த சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளுக்கு வேத உபதேசம் புகட்டுவது வழக்கம். மாள குலத்தைச் சேர்ந்த ஆகுட்டு தஞ்சேறு என்ற ஒருவன் காவலில் இருந்தான். அவனும் வேத உபதேசம் கேட்டு வந்தான். அவன் சிறையினின்று வெளிச்சென்றபொழுது பாதிரியாரிடம் போய்த் தன் கிராமத்தாருக்கும் கிறிஸ்து சமய உபதேசம் புகட்டவேண்டு மென்று கேட்டான். இதைக்கேட்டு ஆல்பிரெட் வுட், பேசில் வுட் என்ற இரு சகோதரர் அவ்வூருக்குச் சென்று சுவிசேஷப் பிரசாரம் செய்ய முன் வந்தனர். இருமலைகளுக்கூடே இருந்த சில கிராமங் களில் இச்சகோதரரின் முயற்சியால் கிறிஸ்து சமயம் ஊன்றப் பெற்றது. அங்கு வசித்த மாள ஜனங்கள் அநேகர் கிறிஸ்தவர் களானார்கள். சில வருடங்களுக்குப்பின் மலைக்கு அப்புறத்திலிருந்த கிராமவாசிகளும் கிறிஸ்து சமயத்தைத் தழுவினர்.

ஹௌவெல் ஆரம்பித்த வேலையின் பயனாக 1870-ம் ஆண்டில் 1,700 பேர் ஞானஸ்நானம் பெற்றிருந்தனர்; 1,000 பேர் ஞானஸ்நானம் பெற உபதேசம் கற்றுக்கொண்டிருந்தனர். கிறிஸ்து சமயம் தாழ்த்தப்பட்டோருக்கு சுதந்திரம் அளித்து உயர்த்துவதைக் கண்ட மேற்குலத்தோர் எரிச்சல் அடைந்தனர். தமது அந்தஸ்தும் அதிகாரமும் ஏழை மக்களின் முன்னேற்றத்தால் சிதைவுறும் என்று பயந்தனர். அவர்களைத் தலை எடுக்கவிடாது நசுக்க முயன்றனர். அவர்கள்மீது அபாண்டமான குற்றங்களைச் சுமத்தி போலீசின் அட்டூழியத்திற்கு இறையாக்கினர். அவர்களுடைய ஓலைக் குடிசைகளைச் சுட்டெரித்தனர். 1876-77-ம் ஆண்டுகளில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ஆடு மாடுகளும் ஜனங்களும் பட்டினிக்கும் கொள்ளை நோய்க்கும் இரையாகினர். "இதற்கெல்லாம் காரணம் சில மதியீனர் தம் தேவதைகளை மறந்து அந்நிய மதத்தைத் தழுவினதே" என்று சொல்லி ஹிந்துக்கள் கிறிஸ்தவர்கள்மீது பழிசாற்றினார்கள். கிறிஸ்தவ ஜனத்தொகை குறைந்தது. சிலர் துன்பங்கண்டயர்ந்து மறுதலித்தனர். பாடசாலைகளும் கோவில்களும் பழுதுபார்க்காமல் கெட்டுப்போயின. என்றபோதிலும் சில வருடங்களுக்குப்பின் இச்சபை பத்தாயிரம்பேர் அடங்கிய பெரிய சபையாக ஓங்கிவளர்ந்தது. கட்டிடங்கள் பழுது பார்க்கப்பட்டன. புது கட்டிடங்கள் எழும்பின. கலைத்தொழிலும், வைத்தியத் தொழிலும், வேதோபதேசமும், தேவ ஆராதனையும் இங்கு முட்டின்றி நடைபெற்றுவந்தன.

மற்றொரு சர்க்கார் உத்தியோகஸ்தரும் ஆந்திர தேசத்தின் வேறொரு பாகத்தில் கிறிஸ்து சமயத்தை நிலைநாட்ட முயன்றார். ஜே. கோல்டிங்ஹாம் என்பவர் 1836-ம் ஆண்டில் கிருஷ்ணா ஜில்லாவின் கலெக்டராக மசூலிப்பட்டினம் சென்றார். அதே வருடம் சென்னை அத்தியட்சர் கோரி என்பவர் ஆந்திரநாடு சென்று அங்கு கிறிஸ்து மதப்பிரசாரம் நடைபெறாததைக் கண்டு வருந்தினர். கலெக்டரும் அத்தியட்சரும் கலந்து பேசினர். அடுத்த வருடம் நவம்பர் மாதம் கலெக்டர் மசூலிப்பட்டினத்தில் இருந்த ஐரோப்பிய வியாபாரிகளாகிய நண்பர்களை அழைத்து, தெலுங்கு நாட்டில் கிறிஸ்து சபை ஒன்றை நாட்டுவதற்கு அவர்கள் என்ன உதவி செய்யக்கூடுமென்று விசாரித்தார். கூடிய நண்பர்கள் பண உதவி அளித்தனர். இங்கிலாந்தில் இருந்த மிஷனெரி சங்கங்களுக்குத் தூது விடுத்தனர். சி. எம். எஸ். சங்கம் அங்கு வேலை ஆரம்பிக்க முன் வந்தது. அச்சங்கம் அனுப்பிய முதல் மிஷனெரி, ராபட் நோபள் என்போர், 1841-ம் ஆண்டில் மசூலிப்பட்டினம் வந்து சேர்ந்தார். அப்பொழுது கோல்டிங்ஹாம் குண்ட்டூருக்கு மாற்றப்பட்டிருந்தார். கலெக்டரும் மிஷனெரியும்கூடி ஆலோசித்து, மசூலிப்பட்டினத்திலும்

குண்டூரிலும் ஏக காலத்தில் சுவிசேஷ பிரசார வேலையைத் துவக்க ஒழுங்கு செய்தனர். நாட்கள் செல்லச்செல்ல வேலை வளர்ந்து வந்தது. ஆகையால் குண்டூரில் ஆரம்பமான வேலையை அமெரிக்கன் லுத்தரன் மிஷன் சங்கத்தினிடம் ஒப்படைத்துவிட்டு, வி. எம். எஸ். மிஷனெரிமார் மசூலிப்பட்டினத்தில் வேலை செய்து வந்தனர். 1843-ம் ஆண்டில் உயர்குலப் பாலியருக்குக் கல்வி புகட்ட ஒரு பாடசாலையைக் கட்டினர். அது பின்பு நோபல் காலேஜாக நல்வளர்ந்தது. அப்பள்ளியில் கல்வி கற்றுவந்த பாலியர் "நாங்கள் பாதிரிமார் புகட்டும் கல்வியைக் கற்றுக்கொள்வோமேயொழிய, அவர்கள் போதிக்கும் கிறிஸ்து மதத்தை ஏற்றுக்கொள்ளமாட்டோ"மென்று சொல்லி வீம்பு பேசினர். என்றபோதிலும் ஒன்பது வருடங்களுக்குப்பின் அப்பாலியரில் இருவர் கிறிஸ்து மதத்தைத் தழுவ விரும்பினர். கலகம் உண்டாகும் என்று பயந்து, அவ்விருவருக்கும் நள்ளிரவில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. தீண்டா ஜாதியாருக்குள் இன்னும் கனி தோன்றவில்லை. முன்கூறிய கள்வர்த்தலைவனாகிய மானா வெங்கையா கிறிஸ்து சமயத்தைத் தழுவிய பின்னரே ஏழை மக்களுக்குள் தொகுதி இயக்கம் தோன்றிற்று. வெங்கையாவின் முயற்சியால் எழுநூறுபேர் கிறிஸ்து சபையைச் சேர்ந்தார்கள். மசூலிப்பட்டினத்திலும் சுற்றுக்கிராமங்களிலும் கிறிஸ்து சபைகள் பெருக்க முற்றிருந்தன. பெரும்பான்மையோர் மான், மாதிக குலங்களைச் சேர்ந்த ஏழை மக்கள். சிலர் உயர் குலத்தோர். இப்படி வளர்ந்தோங்கிய மசூலிப்பட்டினச் சபைக்கும் ஓர் விபத்து நேர்ந்தது. 1864-ம் ஆண்டின் ஓர் இரவில் வங்காளக் குடாக்கடலில் பயங்கரமான புயலும் கொந்தளிப்பும் உண்டாயிற்று. மசூலிப்பட்டினத்தையும் சூழ்ந்த கிராமங்களையும் கடல்நீர் வாரிக் கொண்டுபோய் விட்டது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் மாண்டனர். அநேக வீடுகள் நாசமாயின. மசூலிப்பட்டினத்தின் துறைமுகமும் சேதமடைந்தது. இந்த மாவிபத்திற்குப்பின் பட்டினம் முன்போல் செல்வ நிலையை எய்தவில்லை. திருச்சபைக்கும் இதனால் பெரிய நஷ்டம் விளைந்தது.

அமெரிக்கன் பாப்ற்றிஸ்ற் மிஷன் 1835-ம் ஆண்டில் நெல்லூரிலும் 1836-ம் ஆண்டில் ஓங்கோலிலும் சுவிசேஷ வேலை ஆரம்பித்தது. மெத்தடிஸ்டு மிஷன் நிஜாம் ராஜ்யத்தில் வேலை ஆரம்பித்தது. இப் பல சங்கங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை கடவுள் பெரிதும் ஆசீர்வதித்திருந்தார். இந்தப் பெரிய கிறிஸ்தவ இயக்கத்தை துரிதப்படுத்தும் சிலாக்கியம் அசரியாவிற்குக் கிடைத்தது. தம் முன் சென்றிருந்த உத்தம தெய்வத் தொண்டருக்கும் கிறிஸ்துவிற்கும் நன்றி கூறியவராய் அசரியா தம் சேவையை இங்கு செய்யத்துவங்கி

ஞர். ஆந்திரத் திருச்சபை பக்தியிலும், சுவிசேஷ பிரபல்ய ஆர்வத்திலும் முன்னேறிச் செல்லவேண்டுமென்பது அவர் வாஞ்சை. தவிர இந்திய மக்கள் சபையில் முக்கிய இடம் பெற்று, சபையின் சகல பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர் விரும்பினர்.

முதல் முதலாக ஆங்கிலச் சபையின் இரண்டு மிஷனெரிச் சங்கங்களால் உண்டாக்கப்பட்ட சபைகளுக்குள் ஒற்றுமை ஏற்படுத்துவது அவசியமாயிற்று. நாங்கள் எஸ். பி. ஜி. கிறிஸ்தவர்கள் என்றும், நாங்கள் ஸி. எம். எஸ். கிறிஸ்தவர்களென்றும் பேசும் தீய வழக்கத்தை அசரியா ஒழிக்க முயன்றார். இப்பிரிவினை திருநெல்வேலிச் சபைக்குள் என்ன குழப்பங்களை உண்டுபண்ணிற்று என்று அசரியாவிற்கு நன்கு தெரியும். ஆதலால் இது அவர் செய்ய முற்பட்ட முதல் சீர்திருத்தமாயிற்று. இரண்டாவதாக, இந்தியக் கிறிஸ்தவர்கள் திருச்சபையினிடம் பூரண பற்றுடையவர்களாவதற்கு, அது அந்நியரின் அதிகாரத்திற்குட்பட்டதென்ற எண்ணம் மறைந்து, அதன் முன்னேற்றத்தைக் குறித்து ஆலோசிக்கவும் திட்டங்கள் வகுக்கவும் தமக்கும் உரிமை உண்டென்ற எண்ணம் பிறக்கவேண்டும். இவ்வுண்மையை அசரியா 1910-ம் வருஷம் எடின்பரோவில் கூடிய மகாநாட்டில் வெகு ஆத்திரத்தோடு எடுத்துக் கூறியதை முன் குறித்தோம். அதன்பின் உவைட்ஹெட் அத்தியட்சரும் அசரியாவும் தமது ஆதீன நிர்வாக முறையில் இதற்கென்று செய்யவேண்டிய சில சீர்திருத்தங்களைத் தீர்க்க ஆலோசித்து வகுத்திருந்தனர். உவைட்ஹெட் இந்தியருக்குச் சுதந்திரம் அளிப்பதில் மனபூர்வமான நோக்கம் கொண்டிருந்தார். எங்கும் நிறைந்துள்ள பரிசுத்த ஆவியானவர் சபையைக் கண்காணிப்பதில் இந்திய கிறிஸ்தவர்களுக்கும் அறிவையும் நோக்கத்தையும் கொடுப்பாரென்று அசரியா விசுவாசித்தார். இந்தியக் கிறிஸ்தவர்களின் நற்குணங்கள் மாத்திரமல்ல பலவீனங்களும் என்னென்னவென்று அவர் அறிந்திருந்தார். ஆதலால் இரு அத்தியட்சரும் வகுத்த சீர்திருத்த திட்டத்தில் அவசியமான சில வரம்புகளும் இருந்தன. ஏனென்றால் புதிதாக உத்திரவாதம் வகித்த தொண்டருக்குள்ள பற்பல பிரிவினைகளையும் போட்டிகளையும் பிசாசாகிய ஆணவம் கிளப்பிவிடுமென்று அவர்கள் அறிவார்கள்.

அசரியா தமது அத்தியட்ச ஆதீனத்திலிருந்த ஜில்லா மிஷனெரி பதவியை ஒழித்துவிட்டு, இந்திய குருமாருக்குத் தத்தம் சபையில் பூரண சுதந்திரம் அளித்தார். இதனால் வெள்ளைக்கார மிஷனெரி சம்பளம் கொடுக்கும் அதிகாரி என்ற அபவாதம் நீங்கிற்று. கிராமப் பாடசாலைகளை மேற்பார்ப்பதும், சபையின் ஆத்தும வளர்ச்சியைத் தூண்டுவதும், சுவிசேஷப் பிரசாரம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்

கொள்ள சபைக்குக் கற்றுக்கொடுப்பதுமாகிய முக்கிய கருமங்கள் இந்திய குருமார் செய்யவேண்டிய கருமங்களாயின. டோர்னகல்லில் இந்திய மிஷனெரி சங்கம் சுவிசேஷ ஊழியம் செய்துவந்த வட்டாரத்தில் இருந்த சபைகளில் மற்ற சபைகளில் இருந்ததுபோல இரண்டு மூன்று தலைமுறைகளாகக் கிறிஸ்து சமயப் போதனையைக் கற்றுத் தேறிய அங்கத்தினர் ஒருவருமில்லை. என்றாலும் இங்கும் உத்திர வாதத்தை இந்தியர்மேல் சுமத்த அத்தியட்சர் தயங்கவில்லை. பூரண சுதந்திரம் பெற்ற தனித்தனிச் சபைகள், அவற்றுள் சில சேர்ந்து ஒரு டினெரி, சகல டினெரிகளும் சேர்ந்து ஒரு நிர்வாக சபை—இவையே சபைக் கண்காணிப்புத் திட்டத்தின் மூன்று அங்கங்கள். சபையில் முதல் இடம் குருவானவருக்கு. டினெரி அக்கிராசனருட்பலர் அனுபவம் வாய்ந்த இந்திய குருமார். ஆதலால் இவை சேர்ந்து அமைந்த நிர்வாக சபையில் இந்திய குருமாரே முதன்மையான இடம் பெற்றிருந்தனர்.

இப்பெரிய சீர்திருத்தத்தைச் செய்ய அசரியா மிஷன் சங்கத் தலைவர்களின் அனுமதி வேண்டினர். அதைக்குறித்து வி.எம்.எஸ். காரியதரிசியாகிய உவில்சன் காஷ் பண்டிதர் பின்வருமாறு கூறினர்: "அத்தியட்ச ஆதீனத்தின் பற்பல வேலைகளையும் இணைத்து பலப் படுத்துமாறு சில சீர்திருத்தங்களைச் செய்ய அத்தியட்சராகிய தமக்கு மிஷன் சங்கங்கள் போதிய அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று அசரியா கேட்டார். இந்த விசால நெஞ்சனின் வேண்டுகோளுக்குச் சங்கங்கள் தயாளமாக இணங்கின. ஆதலால் அவர் தம் ஆதீனத்தின் சபைகள் ஒற்றுமையிலும் சுதந்தரத்திலும் வளர்ந்தோங்கத்தக்க உகந்த ஏற்பாடுகளைச் செய்தார்." சங்கங்கள் மாத்திரமல்ல அவை அனுப்பிய ஆங்கில மிஷனெரிமார்களும் அசரியா அமைத்த புதிய சட்டதிட்டங் களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு அடங்கி நடக்க முன்வந்தனர். தாம் இதுவரையிலும் அனுபவித்துவந்த அதிகாரமும் வரம்பற்ற சுதந்திரமும் போயினவே என்று அவர்கள் துக்கிக்கவில்லை. அத்தியட்சருக்குச் செலுத்தவேண்டிய மரியாதையையும் அடக்கத்தையும் அவர்கள் மனங்கோணாது செலுத்தி அவரோடு ஒத்துழைத்தார்கள். அவரிடம் மிகுந்த நட்புங்கொண்டொழுகினர்.

1920-ம் ஆண்டில் தமது ஆதீனத்தின் குருமாருக்குச் சொன்ன புத்திமதி வசனிப்பில், அசரியா கடந்த பத்து வருடங்களில் தொகையிலும் கொடையிலும் சன்மார்க்கத்திலும் சபை எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறதென்று காட்டியபின், அவ்வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தவைகளுள் ஒன்றைக் குறிப்பிட்டார். "இத்தேர்ச்சிக்கு மூல காரணர் கடவுளே, என்றாலும் அதில் மனிதருக்குக் கிடைத்த பங்குக

ளுள் ஒன்று நமது இந்திய குருமாருக்குரியதாகும். இன்று இருபத்தைந்து மிஷனெரி அக்கிராசனர் இருக்கின்றனர். அவர்கள் சேகரங்களுட் சிலவற்றில் 10,000 சபையாரும், 100 அல்லது 150 ஆரம்பப் பாடசாலைகளும் இருக்கின்றன. இத்தனை பெரிய பொறுப்பை இந்திய குருமார் ஏற்றுக்கொண்டு, ஊக்கமாகத் தம் வேலைகளைச் செய்துவந்ததே சபைகளின் வளர்ச்சிக்கு ஓர் முக்கிய காரணம். அவர்கள் யாவரும் ஒரு கண்ட சீராய் திறமைவாய்ந்தவர்களும் உத்தம குருக்களுமாய் விளங்கினுர்களென்று நான் சொல்லவில்லை. என்ற போதிலும் மிஷனெரித் தலைவர்கள் நம்பத்தக்கோரும், ஏற்றுக்கொண்ட பொறுப்பைச் சாமர்த்தியமாகக் கொண்டு செலுத்தக்கூடியோருமாக விளங்கியிருக்கின்றனர். அவர்களோடு பழகித் திருச்சபைச் சேவையில் பங்குபெற்றுக்கொள்ளுவது எனக்கு அளவற்ற சந்தோஷத்தைத் தந்திருக்கிறது என்று நான் தைரியமாகக் கூறுவேன். இதுவரையில் ஆங்கில மிஷனெரிமார் மாத்திரமே ஏற்றிருந்த பொறுப்பை இந்தியருக்கு அளித்தமையால் யாதொரு குறைவும் ஏற்படவில்லை. அப்படி செய்தது சரி என்று கடந்த பத்து வருட அனுபவம் காட்டுகிறது. இதைக் கண்டு இந்தியக் கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல மிஷனெரிமாரும் திருப்தியடைந்திருக்கின்றனர்.”

டோர்னக்கல் அத்தியட்ச ஆதீனத்தின் வளர்ச்சி எத்துணைத் துரிதமான வளர்ச்சியாயிருந்ததென்பது 1944-ம் ஆண்டின் இறுதியில் எடுத்த எண்ணிக்கையில் விளங்குகின்றது. அப்பொழுது 2,30,000 கிறிஸ்தவ விசுவாசிகள் 2,152 சபைகளாகக் கூடியிருந்தனர். அவர்களுக்கு ஞானோபதேசம் புகட்டி நல்வழிகாட்ட 167 குருமாரும், 1,874 இதர ஊழியரும் நியமிக்கப்பெற்றிருந்தனர். போர்டிங் பாடசாலைகளில் படித்த பிள்ளைகள் தவிர, மற்ற பாடசாலைகளில் 34,170 சிறுவர் சிறுமியரும், 49,552 பெரியோரும் கல்வி கற்றுக்கொண்டிருந்தார்கள். இளமையில் கல்வி கற்றுக்கொள்ளாத ஜனங்களுள் கொஞ்சம் குறைய அரை லட்சம் பேருக்கு டோர்னக்கல் அத்தியட்ச ஆதீனத்தில் கல்வி கற்றுக்கொடுக்க வசதிகள் ஏற்படுத்தியிருந்தது மிகவும் பாராட்டத்தக்க நற்செயலேயாம். இங்ஙனம் சகல கிறிஸ்தவ சபைகளும் செய்ய முயன்றுல் நமது நாட்டின் அறிவீனம் வெகு சீக்கிரம் ஒழிந்துவிடும். நாட்டு மக்கள் தமக்குத் தற்பொழுது கிடைத்திருக்கும் அரசாங்க உரிமைகளை விவேகத்தோடு கையாண்டு தேசத்திற்கு நன்மை செய்யக்கூடியவர்களாவார்கள். பெரும்பாலும் தரித்திரராகிய இச்சபையோர் அவ்வருடம் செய்த தர்ம கைங்கர்யம் ரூ. 1,80,000. அது தலைக்கு அரை ரூபாய் விகிதமாகின்றது. கொடையிலும் டோர்னக்கல் சபை மற்ற சபைகளுக்கோர் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது. அத்தியட்ச ஆதீன வளர்ச்சிக்கு மற்

ஞெரு அறிகுறி 1903-ம் ஆண்டில் காடாய்க் கிடந்த இந்திய மிஷ னெரி சங்க ஸ்தாபனம் முற்றும் உருமாறியிருந்ததேயாகும். அன்று டோர்னக்கல் ஒரு சிறு ரயில்வே ஸ்டேஷன். அதைச் சூழ தேக்கு மரங்களும் மற்ற மரங்களும் அடர்ந்த அகன்றக் காடு. இரவில் ஒருவரும் வெளிச் செல்ல முடியாது. அங்கு வீடுகள் சில, காட்டு மிருகங்கள் பல இருந்தன. இன்று காடு இருந்த இடத்தில் நவதானி யம் விளையும் நிலங்கள் தோன்றுகின்றன. சாராயம் காய்ச்சும் பழைய கிடங்கு இருந்த இடத்தைச் சூழ பல அழகிய கட்டிடங்கள் காணப் படுகின்றன. இந்திய மிஷனெரி சங்கம் 1905-ம் ஆண்டில் இங்கு ஒரு சிறிய உபாத்திமைப் பயிற்சிசாலையை நிறுவிற்று. இன்று அது அத்தியட்ச ஆதீனத்தின் பல மிஷனெரி சங்கங்களுக்கும் பயன்படும் பெரிய பயிற்சிசாலையாக வளர்ந்திருக்கிறது. அதில் ஏறக்குறைய 200 வாலிபர் உபாத்திமைத் தொழிலுக்குப் பயிற்சியடைந்துவருகின் றூர்கள். மசூலிப்பட்டினத்தில் இருந்த வேத பாடசாலை 1919-ம் வருடம் டோர்னக்கல்லுக்கு மாற்றப்பட்டது. அசரியா இங்கிலாந்தில் ஓரிடத்தில் தம்முடைய வேலையைக்குறித்து பேசியதைக் கேட்ட ஒரு சீமாட்டி அந்த வேத பாடசாலைக்கென்று ஒரு மெத்தைக் கட்டிடம் கட்ட பணம் கொடுத்தார்கள். பழைய சாராயக் கிடங்கு புதுப்பிக்கப் பெற்று, இப்பொழுது மாணவிகள் வசிக்கும் விடுதியாகியிருக்கிறது. இருப்புப்பாதைக்கு அப்பால் புதிய மிஷன் நிலங்களில் மாணவர் விடுதியும் ஆரம்பப் பாடசாலைகளும் இருக்கின்றன. 1923-ம் ஆண்டில் கடைத்தெருவில் வாடகை வீட்டில் ஒரு சிறு வைத்திய சாலை நிறுவப்பெற்றது. அதற்குப் பரிசுத்த லூக்கா டிஸ்பென்சரி என்று பெயர். ஐந்து வருஷங்களுக்குப் பின்னர் உவைட்ஹெட் அத்தியட்சர், அவர் மனைவி, அவர்கள் நண்பரிற் சிலர் வழங்கிய பணத் தைக்கொண்டு மிஷன் நிலத்தில் பிஷப் உவைட்ஹெட் ஆஸ்பத்திரி கட்டப்பட்டது. ஒரு வருடம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வந்து சென்றவர்களின் தொகை 34,650. ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெற்றவர்கள் 244 பேர். இங்கு ஒரு நல்ல அச்சுக்கூடமும் இருக் கிறது. இதைத் தவிர அத்தியட்சர், உதவி அத்தியட்சர், குருமார், ஆசிரியர் யாவருக்கும் வசதியான வீடுகள் ஒழுங்காக அமைந்திருக் கின்றன. இவைகளுக்கெல்லாம் மகுடம்போல் விளங்குவது அத்தி யட்ச ஆலயம். இதற்கு அஸ்திபாரம் பிஷப் உவைட்ஹெட் 1913-ம் ஆண்டில் வைத்துக்கொடுத்தார். அது 1939-ம் ஆண்டில் கட்டி முடிந்தது. அதன் அமைப்பைக்குறித்து அசரியா தீர்க்க ஆலோசித்து ஒரு நூதன விதமான கிறிஸ்தவ ஆலயத்தை உருவாக்கியிருக் கின்றூர். இது மேல்நாட்டு ஆலயங்கள் போன்றதன்று. தமிழ்நாட்டுக் கோவில்களில் இருப்பதுபோல் ஆலயத்தைச் சூழ பூங்காவும்,

பூங்காவைக் காக்க உயர்ந்த சுவர்களுமிருக்கின்றன. பூங்காவின் நடுவில் ஆலயம் எழும்புகின்றது. அதன் முகட்டைத் தாங்கும் கற்றூண்களும் திராவிட சிற்ப சாஸ்திரத்தைத் தழுவி அமைந்துள்ளன. விண்ணளாவ உயர்ந்துள்ள இரு கோபுரங்கள் வெண் தாமரை மொக்குகளைப்போன்ற இரு பெரும் குமிழ்களில் முடிகின்றன. குமிழ்கள் இரண்டு சிலுவைகளை உயர்த்திப் பிடித்திருக்கின்றன. ஆலயத்திற்கு புறம்பே எழும் சந்தடி உட்செல்லாவண்ணம் காக்கும் மதில்களையும் பூங்காவையும் கடந்து மேற்கு வாசலுக்கு நடத்தும் நீண்ட தாழ்வாரத்தில் நின்று பார்க்கும்பொழுது பெரிய மண்டபம் தென்படுகின்றது. அம்மண்டபத்திற்கப்பால் பரிசுத்த ஸ்தலமும் அதன் பணிமுட்டுகளாகிய மேஜை, விளக்கு, சிலுவை முதலியவையும் தோன்றுகின்றன. ஆலயம் புறத்தோற்றத்தில் தென் இந்திய ஹிந்து கோவில்போல் காணப்படுகின்றது. என்றாலும் எங்கும் சிலுவை அடையாளம் கல்வெட்டிலும் தனியாகவும் தோன்றுவதால் இங்கு அர்ச்சிக்கப்படும் கடவுள் யார் என்பதைக்குறித்து சந்தேகிக்க இடமில்லை. ஹிந்து சமயத் தேர்ச்சியில் நன்மையும் உசிதமுமான யாவற்றையும் இந்தியத் திருச்சபை பொறுக்கியெடுத்து, அவற்றைக் கிறிஸ்துபெருமானின் மகிமைக்கென்று பயன்படுத்தவேண்டுமென்ற கருத்தை அசரியா கல்லில் பதிக்க விரும்பி, இந்த அமைப்பில் டோர்னக்கல் அத்தியட்ச ஆலயத்தைக் கட்டிவைத்தார்; 1939-ம் ஆண்டில் எப்பிபனி பண்டிகையன்று உலகின் எண்டிசையிலுமிருந்து அகில லோக கிறிஸ்தவ மகாநாட்டிற்கு தாம்பரம் வந்திருந்த பக்தர்களிற் சிலரை அழைத்துச் சென்று அவ்வாலயத்தைக் கிறிஸ்துவின் சேவைக்கும் ஆராதனைக்கும் உகந்த திருக்கோவிலாக பிரதிஷ்டை செய்தார்.

அத்தியாயம் 8

அசரியாவின் தேச பக்தி

இந்தியக் கிறிஸ்தவர்கள் தேசபக்தர்களோ அல்லவோ என்று அநேக ஹிந்து பிரமுகர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். இன்றும் சிலர் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அக்கேள்விக்குப் பல நியாயமான காரணங்கள் இருக்கின்றன. இந்திய நாஷனல் காங்கிரஸ் நிறுவப்பெற்ற நாள்முதல் இதுவரை சுமார் 60 வருடங்களாகக் காங்கிரஸின் தேசீய முயற்சிகளில் பங்கெடுத்த இந்தியக் கிறிஸ்தவர்களின் தொகை வெகு சொற்பமே. வங்காளக் கிறிஸ்தவத் தலைவர்களுள் ஒருவராகிய காளிச்சரன் பானர்ஜி ஒருவரே காங்கிரஸ் மகாநாட்டில் பேசி, அதன் தேசீய முயற்சிகளில் ஊக்கம் கொண்டிருந்

தார். கடந்த சில வருடங்களாக சில இந்தியக் கிறிஸ்தவ வாலிபர் காங்கிரஸ் கையாண்டுவரும் பொதுஜன முன்னேற்ற முறைகளில் விசேஷ ஆர்வங்கொண்டு அறிய சேவை செய்துவருகின்றனர். இவர்கள் தவிர மற்ற இந்தியக் கிறிஸ்தவர்கள், இந்தியாவை ஆங்கில ஆட்சியினின்று விடுவிக்க காங்கிரஸ் எடுத்துக்கொண்ட பற்பல முயற்சிகளைப் புறம்பே இருந்து, சிலர் அநுதாபத்தோடும், பலர் சந்தேகத்தோடும் பார்த்துக்கொண்டு வாளாவிருந்தார்கள். இதற்குக் காரணங்கள் பல உள.

முதலாவதாக ஆங்கிலேயக் கிறிஸ்தவர்கள் தம் மக்களில் தியாக சிந்தையுள்ள பல மிஷனெரிகளையும் தம் பணத்தையும் தாராளமாகக் கொடுத்து இந்தியத் திருச்சபையை உண்டாக்கி வளர்த்துவருகின்றார் கள். அவர்களிடமிருந்து பெற்ற பல இகபர நன்மைகளை மறப்பது குற்றமென்று இந்தியக் கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

இரண்டாவதாக ஆங்கிலேயரோடு அதிகமாக நெருங்கிப் பழகி, அவர்களுடைய பல நற்குணங்களைக் கண்டுகொள்ளும் சிலாக்கியம் இந்தியக் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்திருந்தது. ஆதலால் மற்ற இந்தியரைப்போல் ஆங்கில அரசாட்சியைக் கண்டனம்பண்ண அவர் கள் துரிதப்படவில்லை. மூன்றாவதாக இந்திய தேசீயக்கிளர்ச்சி ஹிந்து மதப் புனர்உத்தாரணத்தோடு கலந்தே நின்றது. ஹிந்துக்களின் தேசபக்தியானது தம் புராதன நாகரிகத்தையும், மத அனுஷ்டானங் களையும் மேன்மைப்படுத்தி அவற்றிற்குப் புத்துயிர் அளிக்கவேண்டு மென்ற வாஞ்சையை அவர்களுக்கு ஊட்டிற்று. இது நியாயமான வாஞ்சையே. எனினும் அவ்வாஞ்சையை அவர்கள் நிறைவேற்ற முற்பட்டபொழுது இரு இழுக்குகள் தோன்றின. தம் நாகரிகத்திலும் மத அனுஷ்டானங்களிலும் தீமையானவற்றையும், காலம் கடந்த வற்றையும் ஒதுக்கி நன்மையானவைகளைமட்டுமே ஆதரித்து அனுஷ் டிக்கவேண்டுமென்ற எண்ணம் ஹிந்துக்களுக்குத் தோன்றவில்லை. மேல்நாட்டுக் கல்வி இந்தியாவில் பரவிய துவக்கத்தில் சில கற்றோர் மத சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்ய முயன்றனர். ஆங்கில அரசாட்சியை எதிர்க்கும் எதிர்ப்பு பலங்கொண்டபோது ஹிந்துத் தலைவர்கள் அவசியமான சீர்திருத்தங்களையும் செய்யப் பின்வாங்கி னார்கள். அதோடுகூட கிறிஸ்துசமயப் பிரசாரமும் கிறிஸ்து சபை யின் பெருக்கமும் ஹிந்து மதத்திற்கும் ஹிந்து நாகரிகத்திற்கும் அனர்த் தம் விளைவிக்குமென்றும் எண்ணினார்கள். இந்தியக் கிறிஸ்தவர்களைச் சோற்றுக் கிறிஸ்தவர்களென்றும், அறிவிலிகளாகிய தீண்டா ஜாதியி

லிருந்து தோன்றிய தேசத் துரோகிகள் என்றும் சிலர் தூஷித்துப் பரிகசித்தார்கள். முதல் சீர்திருத்தக்காரராகிய ராஜா ராம்-மோகன் ராய், கேசவ்-சந்திர சென் போன்ற பிரம சமாஜத் தலைவர்கள் கிறிஸ்துவின் பாற் கொண்டிருந்த நன்மதிப்பு ஒழிந்துபோயிற்று. இரண்டாவது சீர்திருத்தக்காரராகிய ஆரிய சமாஜத் தலைவர்கள் கிறிஸ்துவைப் பற்றிக் குறைகூறினார்கள். மேல்நாட்டு நாஸ்திகர் சத்திய வேதத்தைக் குறித்து பிரசுரித்திருந்த அபவாதக் கோட்பாடுகளைக் கடன் வாங்கி, தம் எதிர் பிரசாரத்திற்கு ஊன்றுகோலாக்கிக்கொண்டனர். சிறந்த கிறிஸ்தவ பக்தர்களின் நட்பைப் பெற்றவரும், சத்திய வேதத்தை நன்கு கற்றறிந்தவருமாகிய எம். கே. காந்தியும் கிறிஸ்து சமயத்தில் அனுதாபமற்றவராகவே விளங்கினார். அவர் தென் ஆப்ரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வந்த சில மாதங்களுக்குப்பின், சென்னை மிஷனெரி வருஷாந்திரக் கூட்டத்தில் பேச அழைக்கப் பட்டார். அப்பொழுது அவர் மிஷனெரிகளுக்குச் சமர்ப்பித்த வாதம் இது: மதத்திற்கு மதம் பெரிய வேற்றுமைகள் இல்லை. எம்மதமும் அம்மதத்தை உண்மையாய் அனுசரிப்பவர்களைக் கடைத்தேற்றும் பண்பு உடையதே. ஆதலால் மதம் விட்டு மதம் புகுவது அனாவசியம். தவிர ஒருவன் எம்மதத்தில் பிறந்தானோ அம்மதத்திலேயே வாழ் நாளைக் கழிப்பது அவனுடைய கடமையாகின்றது. இதை மத விஷயத்தில் சுதேசி என்னலாம் என்று கூறினர். அன்று முதல் இறுதிவரை அவர் தம் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டதாகத் தெரியவில்லை. இப்படி ஹிந்துத் தலைவர்கள் சாதித்துக்கொண் டிருக்கையில், தேசீயக் கிளர்ச்சியில் சேர்ந்து தேச சேவை செய்ய விரும்பும் இந்தியக் கிறிஸ்தவர்கள் இந்த விபரீதக் கொள்கையை ஆமோதிக்கின்றவர்களாவார்களே என்ற பயம் கிறிஸ்தவர்களைப் பிடித் திருந்தது ஆச்சரியமல்ல. இப் பயத்தையும் மேற்கொண்டு காங்கிரஸ் நடவடிக்கைகளில் கலந்துகொண்ட சில இந்தியக் கிறிஸ்தவர்கள் ஹிந்துத் தலைவர்களின் மனப்பான்மைக்கிணங்கி தமக்கு இருக்கும், அல்லது இருக்கவேண்டிய, கிறிஸ்து பக்தியைச் சட்டைப்பைக்குள் மறைத்துக்கொள்ள நேரிடுகிறது. கத்திப் பிரயோகம், குண்டு வீச்சு, வன்கொலை, பொருள் நஷ்டம் முதலிய துராக்கிரம முறைகளும் தேசீய இயக்கத்தில் அப்போதைக்கப்போது தலைவிரித்தாடியதால் அவ்வியக்கத்தை மனப்பூர்வமாய் ஆதரிப்பது இந்தியக் கிறிஸ்தவர் களுக்கு கடினமாயிருந்தது.

என்றாலும் அவர்கள் தேசபக்தியற்றவர்களல்ல. ஹிந்துக்களைப் போலவே அவர்களும் அந்நிய ஆட்சி முடிவடைந்து, தேசம் சுதந்திரம் பெறவேண்டுமென்று விரும்பினார்கள். மேற்கூறிய காரணங்களால் அவர்களில் அநேகர் காங்கிரஸில் பூரண அங்கத்தினராய்ச் சேர்ந்து

கொள்ள முடியாதிருந்தும், தம்மால் இயன்ற நேர்மையான சேவையைத் தேசத்திற்குச் செய்துவந்தார்கள். அவர்கள் தம் தேசத்திற்குச் செய்யக்கூடிய மூதற்றமான சேவை கிறிஸ்துபெருமான் மாந்தருக்கு அளிக்கக் காத்திருக்கும் ஆத்மீக மீட்பை எடுத்துக் கூறுவதேயாகும் என்ற துணிவு கொண்டவர்கள். தம் நாடு சுதந்திரம் பெற்றுக்கொள்ளுவது பெரிதல்ல; பெற்ற சுதந்திரத்தை அடிப்படையாகக்கொண்டு தேச மக்கள் யாவருக்கும் நீதியையும் நன்மையையும் வழங்கத்தக்க சத்திய ஆட்சியைத் தேசத்தில் நிலைநாட்டுவதே பெரிது. அப்படிச் செய்ய வேண்டுமாகில் பொதுமக்களின் உள்ளம் மாற்றிப் பிறத்தல் அவசியம். ஆதலால் தேசபக்தியின் ஆவேசம்கொண்ட தம் உடன் யூதரைப் பார்த்து, "மனந்திரும்புங்கள், தெய்வ ராஜ்யம் நிலைபெறும் நாள் நெருங்கிவிட்டது" என்று கிறிஸ்து பெருமான் கூறிய எச்சரிப்பையே இந்திய கிறிஸ்தவ தேசபக்தர் தமது உடன் இந்தியருக்குக் கூறவேண்டுமென்று கருதினர். அரசப்பிரதிநிதியாகிய கர்சன் பிரபு வங்காளத்தை இரண்டாய்ப் பிரித்ததினிமித்தம் தேசமெங்கும் மும்முரக் கிளர்ச்சி தோன்றியது. அப்பொழுது இந்தியக் கிறிஸ்தவத் தலைவர்கள் தமது இதயங்களிலும் பொங்கிய தேசபக்தியை பலன் செய்யும் வாய்க்கால்களின் வழியாய்ச் செலுத்த விரும்பி நாஷனெல் மிஷனெரி சங்கத்தை நிறுவினார்கள். அவர்களுக்குச் சமயங்கிடைத்தபோதெல்லாம் தேசத்தில் ஒற்றுமையும், தேசமக்கள் யாவருக்குள்ளும் சகோதரத்துவமும் நிலைபெற முயற்சித்தனர். இந்தியாவிற்குச் சுதந்திரம் அளிக்க வழிவகைகளைத் தேடி அரசாங்கத்தாரும் தேசத் தலைவர்களும் டெல்லியிலும் லண்டனிலும் ஆலோசித்துவந்தார்கள். அப்பொழுது இந்தியக் கிறிஸ்தவர்கள் தமது சொந்தக் குழுவின் நன்மையை மாத்திரம் நாடாது, தேசத்தின் பொது நன்மையை நாடி, தம் குழுவினருக்குப் பிரத்தியேகமான பாதுகாப்பு அவசியமில்லையென்று கூறினர். புதிய அரசியல் திட்டத்தில் இந்திய மக்களைத் தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் பிரத்தியேகமான ஓட்டுரிமையை ஏற்படுத்துவது உசிதமல்லவென்றும் வாதித்தனர்.

அசரியா தெரிந்துகொண்ட வேலை மிகப் பொறுப்பான வேலை. அது சிரேஷ்டமான தேசச் சேவையுமாகும். அதற்குச் செலவிட வேண்டிய காலத்தையும் முயற்சியையும் குறைத்து, தேசீய இயக்கத்தில் பங்கெடுத்துக்கொள்வது அவருக்குக் கூடாதிருந்தது. என்றாலும் அவர் தம் தேசத்தையும் தேசத்தின் ஒடுக்கப்பட்ட ஏழை மக்களையும் மிகவும் ஆழ்ந்த அன்போடு நேசித்தாரென்பதற்கு அவர் செய்த திருச்சபை சேவையே போதிய சான்று. அதோடுகூட தேசத்தின் அமைதியின்மையையும் சுதந்திர நாட்டத்தையும் குறித்து தம் அபிப்பிராயத்தைக் கூற நேர்ந்த சமயங்களில் அவர் முன்பின் பாராமல் தம் உள்ளக்

கருத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். 1932-ம் ஆண்டில் இந்திய ஆட்சியின் புதிய திட்டத்தில் குலவாரியாக நாட்டு உரிமைகளைப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்ற ஒழுங்கு செய்து, கிறிஸ்தவத் தொகுதியும் பிரத்தியேகமாகத் தம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்ற பேச்சு நடந்தது. இது மிகக் கெடுதியான ஒழுங்கென்று அசரியா கருதினர். அக்கருத்தைத் தினசரி பத்திரிகைகளில் வெளியிட்டார். அவர் எழுதியது யாதெனில்: "குலவாரி ஓட்டு உரிமைத் திட்டம் கிறிஸ்துபெருமானின் அடியாரைத் தேச மக்களினின்று பிரித்துவிடுகிறது. அவர்கள் தேடும் நன்மைகள் மற்றவர்களுக்கில்லாத தனிப்பட்ட நன்மைகள் என்ற தவருன எண்ணத்தை உண்டு பண்ணுகிறது. கிறிஸ்து சமயம் உலகின்கண் தோன்றிய இயக்கங்களுள் மிகச் சக்தி நிறைந்தது. அது குலம், நிறம், வகுப்பு என்னும் தடுப்புச் சுவர்களை இடித்துத் தள்ளி, சகல மக்களையும் தன் கரங்களால் அணைத்துக்கொள்ள முயலுகின்றது. பயங்களையும் சமுசயங்களையும் ஒழித்துவிடுவதே அதன் தன்மை. அப்படிச் செய்யாமல் குரோத சிந்தையில் பிறந்த பிளவுகள் ஒன்றிற்குள் அது அடைபட்டுக்கொண்டால், அதன் உயிர் குன்றிவிடும். கிறிஸ்தவர்களையும் தொகுதித் திட்டம் என்ற ஒழுங்கிற்கு உட்படுத்த முயலுவது கிறிஸ்து சமயத்திற்கு நேர் விரோதமான முயற்சி.

"இந்தத்திட்டம் கிறிஸ்தவ சமுதாயத்தை ஒன்றுபடுத்தாது, அதற்குள் இருக்கும் பிளவுகளை அதிகரிக்கும். சட்டசபைத் தேர்தல் இந்த ஒழுங்கின்படி நடைபெறுமாயின் சபைக்குள் கலகங்கள் ஏற்படும். தவிர கிறிஸ்தவர்களை மற்ற கிராமவாசிகளினின்றும் பிரித்துவிடும், ஏற்கனவே இப்பிரிவு சர்க்கார் செய்திருக்கும் ஒரு ஏற்பாட்டினல் உண்டாயிருக்கிறது. தாழ்த்தப்பட்ட ஜாதியாரை முன்னேற்றுவதற்கென்று சர்க்கார் அவர்களுடைய பிள்ளைகளின் படிப்பிற்கு அரைச் சம்பளம் விதித்து இலவச நிதியும் வழங்கிவருகின்றனர். ஆனல் இந்த உதவி கிறிஸ்து சமயத்தைத் தழுவிய தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கிடையாதென்று சட்டம் விதித்ததால், ஒரே கிராமவாசிகளும், தரித்திரரும், கல்வித் தேர்ச்சியற்றவர்களுமாகிய ஒரே குழுவினர் இருபிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அவ்வாறே மற்ற குலத்திலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் தம் உடன் சகோதரராகிய ஹிந்துக்களோடு சேர்ந்து தம் பிரதிநிதிகளைத்தெரிந்துகொள்ளாது, தனிப்பட தம் ஓட்டுரிமையைப் பிரயோகிக்க வேண்டியதாயிருக்கும். இது ஜனத்தைவிட்டு ஜனத்தைப் பிரித்து, கிறிஸ்தவர்களைத் தேசமக்களுக்கு எதிர்கட்சியில் நிறுத்தும் துராக்கிரம வழியாயிருக்கிறது. மற்ற தொகுதிகளைச் சேர்ந்தோர் தத்தம் குழுவின் பேரைச் சொல்லிக்கொண்டு தத்தமக்கே சர்க்கார் உத்தியோகங்களையும் சலுகைகளையும் ஈட்டிக்

கொள்ளக் கருதி இந்த ஒழுங்கை ஏற்றுக்கொள்ள விரும்பினும், இந்தியக் கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு இது வேண்டவே வேண்டாம்.''

அப்பொழுது தர்க்கிக்கப்பெற்ற அரசியல் சீர்திருத்தங்கள் நன்மை பயக்கத்தக்கனவென்பது அசரியாவின் அபிப்பிராயம். மாகாண நிர்வாகம் முழுவதையும் ஜனங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் கையில் சமர்ப்பிப்பது சுதந்திரம் பெறுவதற்கு ஏற்ற முதற்படியாகு மென்று அசரியா கருதினர். 1934-ம் ஆண்டில் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர் ஒருவர் இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வருமாகில் இந்தியக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து சமயத்தின் விரோதிகளாகிய ஹிந்துக்களின் கையில் சிக்கிக்கொண்டு கஷ்டப்படுவார்களென்று தமது பயத்தைப் பத்திரிகைகளில் எழுதித் தெரிவித்தார். இது ஆடு நனைகிறதென்று ஓநாய் கவலைப்பட்டது போலிருந்தது. ஆதலால் அசரியா இந்த அனுவசியமான அனுதாபத்தைப் புறக்கணித்தார். அவர் விடுத்த எதிர்ப்பு யாதெனில்: ''இந்தக் காரணத்தினிமித்தம் அரசியல் சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவரக் கூடாதென்று சொல்ல முன்வரும் இந்தியக் கிறிஸ்தவர்கள் பலர் உளரென நான் நினைக்கவில்லை. கிறிஸ்து சமயப்பிரசாரம் செய்யும் இந்தியக் குடிகளுக்கேனும் புறதேச மிஷனெரிகளுக்கேனும் விசேஷ பாதுகாப்பு நிபந்தனைகள் புதிய அரசியல் திட்டத்தில் இடம்பெற வேண்டுமென்று கேட்க விரும்பும் இந்தியக் கிறிஸ்தவர் ஒருவர் இருப்பாரென்றும் நான் நம்பவில்லை. ஹிந்து, மகமதிய சிற்றரசர் ஆண்டுவரும் திருவாங்கூர், ஐதராபாத் சமஸ்தானங்களில் கிறிஸ்தவர்களுக்குத் தம் மதத்தை அனுசரிக்கவும், மதப்பிரசாரம் செய்யவும் யாதொரு தடையும் இதுகாறும் ஏற்படவில்லை. அப்படித் தடைகள் ஏற்படினும் இந்தியக் கிறிஸ்தவர்கள் அஞ்சமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் தம் மதத்தில் உண்மை இருக்கிறதென்று ஐயந்திரிபற உணர்ந்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் கிறிஸ்து பெருமானிடம் கொண்டிருக்கும் பக்தி வைராக்கியத்தால் எதிர்ப்பையும் உபத்திரவத்தையும் திரணமாகக் கருதி, அவற்றைத் தாங்கிக்கொள்வார்கள். உபத்திரவமும் பிராணத் தியாகமும் திருச்சபைக்கு நன்மை அளிக்குமே தவிர தீங்கிழைக்காதென்பது அவர்களுடைய உறுதியான நம்பிக்கை.'' இங்ஙனம் அத்தியட்சர் வீரமுரசு அறைந்து வக்கணைக்காரரின் வாயை அடைத்தார்; இந்தியக் கிறிஸ்தவர்களுக்குத் தைரியமூட்டினர். கிறிஸ்தவர்களுக்கும் மற்ற இந்திய மக்களுக்கும் இடையில் அவநம்பிக்கையையும் விரோதத்தையும் உண்டுபண்ண எடுத்த சூழ்ச்சி, பிறருக்கென்று தம்மைத்தாமே பூரண தியாகம் செய்த ஏசுபெருமானின் மனப்பான்மைக்கு நேர் விரோதமான செயல் என்பதையும் அசரியா எடுத்துக்காட்டினர்.

தேசத்தில் சன்மார்க்கம் தழைத்தோங்கவும், அரசாங்கம் வரம்பு கடந்த செயல்களைச் செய்யும்பொழுது அதன் குற்றத்தை எடுத்துக் காட்டவும் திருச்சபை விழிப்புள்ள காவலாளனாக இருக்கவேண்டும். தேசத்தில் தோன்றும் ஜனசமுதாயச் சீர்திருத்த முயற்சிகளுக்குப் போதிய ஆதரவு அளிப்பதும் திருச்சபையின் கடமை. இவ்வுண்மைகளை அசரியா நன்குணர்ந்திருந்தார். நாஷனல் கிறிஸ்தவ ஆலோசனை சங்கத்தின் தலைவராக இருந்த நீண்டகாலத்தில் திருச்சபை இக்கடமைகளைச் செய்ய அவர் அதைத் தூண்டினார். மத்திய அரசாங்கத்தார் தமது வருவாயை அதிகரிப்பதற்கென்று லாட்டரி சீட்டுகள் விற்கத் திட்டம் போட்டனர். அத்திட்டத்தை ஆமோதித்து இங்கிலாந்து தேசப் பத்திரிகைகளுள் ஒன்று பின்வருமாறு எழுதியிருந்தது: "லாட்டரி சீட்டின் மூலமாக நாட்டின் வருவாயை அதிகரிப்பது பிரிட்டிஷ் பொதுமக்களுக்கு மிக அறுவருப்பான விஷயம். என்றாலும் இந்தியருக்கு அது நேர்மையற்ற முறையாகத் தோன்றவில்லை." இத்துடுக்கான வார்த்தைகளைப் படித்த அசரியாவிற்குக் கோபம் பொங்கிற்று. நாஷனல் கிறிஸ்தவ ஆலோசனை சங்கத்தின் வாயிலாக இந்திய அரசாங்கத்தார் செய்தது குற்றமென்று அவர் அறிவித்தார்.

அரசாங்கத்தார் பொதுஜன முன்னேற்றத்திற்கடுத்த நல்ல ஏற்பாடுகளைச் செய்தபொழுது அசரியா அவற்றை மனப்பூர்வமாக அங்கீகரித்தார். நாட்டுப்புரங்களில் நடக்கும் சண்டை, களவு, கொலை முதலிய தீச்செயல்களுக்கு மூலகாரணம் குடிவெறி என்பது அவர்தம் அனுபவத்தில் கண்ட உண்மை. ஆதலால் மாகாணச் சட்டசபைகளில் மதுபானம் தயாரிப்பதையும் விற்பதையும் ஒழிக்கத் தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டபொழுது அசரியா மிகவும் மகிழ்ச்சியுற்றார். "கடந்த இருபது வருடங்களாக நாங்கள் கிறிஸ்து சமுதாயத்தில் மதுபானத்தை அறவே ஒழித்துவிட ஓயாத போர்புரிந்து வருகிறோம். அந்தத் தர்ம யுத்தத்தில் வெற்றியும் அடைந்திருக்கிறோம்" என்று அவர் அறிவித்து அரசாங்கத்திற்கு உற்சாகமளித்தார். ஜனங்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக்கொடுப்பதிலும் அவர் தளரா ஊக்கம் காட்டினார். 1938-ம் ஆண்டில் எழுதப் படிக்கக் கற்றிருந்தவர்களின் விகிதம் 100 க்கு 27 ஆக இருந்ததைக்கண்டு அவர் சந்தோஷமடைநதார். அவ்விகிதம் இன்னும் அதிகமாக வேண்டுமென்றும் முயன்றார். கிறிஸ்தவத் தொகுதியில் மாத்திரமல்ல இந்திய மக்கள் அனைவருக்குள்ளும் இந்த முன்னேற்றம் தழைத்தோங்கவேண்டுமென்றும், அதற்கென்று அரசாங்கத்தார் செய்யும் சகல பிரயத்தனங்களிலும் அவர்களுக்குக் கை கொடுக்கவேண்டுமென்றும் இந்தியத் திருச்சபையை ஏவினார்.

இந்தியாவில் புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த 1938-ம் வருடத் துவக்கத்தில் தமது அத்தியட்ச ஆதீனத்தில் திருப்பணியாற்றிய குருமாருக்கு அசரியா விடுத்த கட்டளைக் கடிதத்தில் அடியிற் கண்ட புத்திமதி அடங்கியிருந்தது. "உலக முழுவதும் இந்தியத் தலைவர்களை உற்று நோக்குகின்றது. இந்திய மக்களாகிய நாம் பெற்றிருக்கும் அரசியல் உரிமையை யாவருக்கும் நன்மை பயக்கும் கருவியாக கையாளுவோமோ அல்லவோ என்ற கேள்விக்கு விடை நமது தலைவர்களுடைய குண விசேஷத்திலும் பொதுஜன ஒத்துழைப்பிலும் புதைந்து கிடக்கின்றது. நம் தலைவர்கள் யதார்த்தவாதிகளும் சுயநலம் கருதாதவர்களுமாயும் இருக்கவேண்டும். நாம் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் சத்தியத்தைக் கடைப்பிடித்தொழுகி தேசத்தொண்டில் ஈடுபடவேண்டும். தேசமக்கள் அத்தகைய தலைவர்கள், பிரதிநிதிகளோடு பிணக்கமின்றி ஒத்துழைக்கவேண்டும். அப்பொழுது நம் நாடு பூரண சுதந்திரம் என்னும் உப்பரிகைக்குச் செல்லும் படிகளில் பல படிகள் ஏறிவிடும். தம் குடும்பத்தையோ, அல்லவென்றால் தம் குழுவையோ சேர்ந்தவர்களைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்த்து, திறமையும் யதார்த்தமும் பொதுஜன வாழ்வைக் கோரும் மனப்பான்மையும் உள்ளவர்களையே தம் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று அறிவுறுத்துவது உங்கள் கடமையாகின்றது. கிறிஸ்தவர்கள் இப்படி தேசசேவை செய்யத்தக்க நன்மக்களைச் சட்ட சபைக்கு அனுப்புவார்களாயின் அவர்கள் தம் தேசத்திற்குச் சிறந்த நன்மை செய்வோராவர்."

"தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்று கிறிஸ்து சமயம் போதிக்கின்றது. இராயனுக்குச் செலுத்தவேண்டியதை இராயனுக்கும் கடவுளுக்குச் செலுத்தவேண்டியதைக் கடவுளுக்கும் செலுத்துவதே கடமை என்று கிறிஸ்து பெருமான் உபதேசித்திருக்கின்றார். ஆதலால் கிறிஸ்தவர்கள் தேச அதிகாரிகளுக்கு அடங்கிப் பிழைத்து, தமது நேர்மையான நடக்கையின் மூலமாகக் கிறிஸ்துவின் உபதேசத்தை நிலைநாட்டவேண்டும். என்றாலும் அவர்கள் கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிவதையே தமது முதற்கடமையாகக் கொள்ளல் அத்தியந்த அவசியம். அவருடைய பிரமாணங்களுக்கு விரோதமான எந்தச் சட்டத்தையும் எதிர்த்துச் சாத்வீகப் போர் புரிவதும் கிறிஸ்தவர்களின் கடமையாகின்றது. இக்கருத்துக்களை 1937-ம் ஆண்டில் ஆக்ஸ்போர்டில் கூடிய கிறிஸ்தவ மகாநாட்டில் அசரியா தெளிவாக எடுத்துக்காட்டி, ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார். அதன்பின் இந்திய காங்கிரஸ் தலைவர்களுக்கு ஓர் எச்சரிப்பையும் கூறினார். "காங்கிரஸ் பிரமுகர்களிற் சிலர் தேசீயமும் ஹிந்து மதமும் ஒன்றே என்னும் தவறான எண்ணம்கொண்டு இருக்கின்றனர்.

இக்கருத்தைக் காங்கிரஸ் சபை அங்கீகரிக்குமாயின் அது ஹிந்துக்கள் அல்லாதவர்களின் ஆதரிப்பை இழந்துவிடும். கிறிஸ்தவர்களாகிய எங்களுக்குக் கிறிஸ்துவின் பிரமாணங்கள் முதன்மையானவை. அவற்றைக் கைக்கொண்டொழுகுவதே எங்கள் பிரதான கடமை. அதற்கு அடுத்தபடியாகத்தான் நாங்கள் தேசச் சட்டங்களை ஏற்றுக் கொள்ளக்கூடும். நாங்கள் முதலாவது கிறிஸ்து பக்தர்கள், இரண்டாவது தேசபக்தர்கள்; முதலாவது கிறிஸ்தவர்கள், பின்பு இந்தியர். ஆதலால் நாங்கள் கிறிஸ்துவின்பால் கொண்டுள்ள பக்திக்கு அரசாங்க விதி ஒன்றால் பங்கம் ஏற்படுமாகில் அவ்விதியை எதிர்ப்பது எங்கள் கடமையாகும்.”

என்றபோதிலும் அரசாங்கத்தை எதிர்ப்பதென்பது ஆழ்ந்த ஆலோசனையின்றிச் செய்யத்தக்கக் கருமமல்ல. மற்ற முறைகளெல்லாம் பலிதப்படாதவிடத்தே நேர்நேரான எதிர்ப்பு அவசியமாகும். ஒரு சட்டத்திற்குக் கீழ்ப்படிவது இறைவன் திருவுளத்திற்கு ஒவ்வாத செயலாகுமென்று ஐயமற ஆராய்ந்து தெரிந்துகொண்ட பின்னரே அரசாங்கத்தை எதிர்ப்பது முறையாகும். 1942-ம் ஆண்டில் காங்கிரஸ் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்க்கத் தீர்மானித்த பொழுது அசரியா தம் அபிப்பிராயத்தைத் தெளிவாகக் கூறினர். கிறிஸ்தவர்கள் அப்பொழுது எழும்பிய கலகத்தில் சேர்ந்துகொள்ளக் கூடாதென்றும், பொருட்சேதமும், உயிர்ச்சேதமும் உண்டுபண்ணும் இயக்கத்தில் கிறிஸ்தவர்களுக்கு இடமே இல்லையென்றும் அசரியா சாதித்தார். இந்திய மக்களின் சுதந்திர நாட்டம் சிறந்ததே. ஆங்கில அரசாங்கத்தின் சில கிரியைகள் அநியாயமானவையே. என்றாலும் தேசீய முயற்சிக்கு அபகீர்த்தியைக் கொண்டுவரும் தீய கருமங்களைக் குறித்து அனுதாபம் பாராட்டுதலும், அவற்றோடு கலந்துகொள்ளுதலும் கிறிஸ்து சமயத்திற்குக் கேடிழைப்பதாகவே முடியுமென்று அசரியா வற்புறுத்தினர். இது தேசபக்திகொண்ட பல கிறிஸ்தவ வாலிபருடைய மனதில் சிக்கலான கேள்வியை எழுப்பிவிட்டது. கிறிஸ்துவின் அன்பு நெறியிற் செல்லுவதா, அல்லது தேசீயப் போரில் கலந்துகொள்ளுவதா என்ற கலக்கம் பல ஆர்வம் நிறைந்த உள்ளங்களில் குடிகொண்டிருந்ததை அசரியா நன்கு அறிவார். இந்தக் கலக்கம் இந்திய அரசியல் முறையின் ஒரு சிக்கலான விளைவு என்றும் அவர் உணர்ந்தார்.

அப்படி என்றால் அரசாங்கம் என்ன அநியாயத்தைச் செய்தாலும் பார்த்துக்கொண்டு கைகட்டி நிற்றல் கிறிஸ்தவ தர்மமோ? மனச் சாட்சியை அடக்கியாளும் அதிகாரம் அரசாங்கத்திற்கு உண்டோ? திருச்சபை இவ்வித நிபந்தனையைச் சுமத்துமாகில் சபையைவிட்டு

விலகிக்கொண்டு தேசீயப் போரில் கலந்துகொள்ளுவது எமது கடமையாகாதோ? இப்படி பலர் பல கேள்விகளைக் கேட்டனர். அதற்கு அசரியா பிரதியுத்தரமாக, "காங்கிரஸ் முயற்சிகள் யாவற்றையும் ஆதரிப்பதற்கு திருச்சபை தடை செய்கிறதை அறிந்து திருச்சபையின் கட்டுக்குள் இருக்க சில வாலிபர் மறுப்பாராகில் நான் துயரடைவேன். என்றாலும் அவர்களை திருப்தி செய்வதற்கென்று திருச்சபை அன்பின் வழியைவிட்டு இடம் வலம் இம்மியளவும் பெயரமுடியாது. நாம் அனைவரும் கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிவதில் தகர்க்கக்கூடாத உறுதிகொண்டிருப்போமேயாகில், பிரிட்டிஷ் அரசாங்கமும் இந்திய தேச பக்தரும் நமது உறுதியை மெச்சிக்கொள்வார்கள் என்பது என் நம்பிக்கை. இந்தியக் கிறிஸ்தவச் சங்கங்கள் அனைத்தும் இவ்வுறுதி கொண்டிருக்க வேண்டுமென்பது என் விருப்பம். எத்திறத்தாரையும் பிரியப்படுத்த முயலாது, சத்தியத்தை அன்போடு எடுத்துக்காட்டுவோமாகில், நாம் இருதிறத்தாரின் மதிப்பைப் பெறுவோம். அவர்களுக்குள் எழும்பியிருக்கும் விவாதங்களில் நடுநிலை கண்டு ஒருமைப்பாட்டிற்கு அடிகோலுவோராவோம். இச்சேவையைச் செய்வது நமது குழுவின் பிரதான பொறுப்பு" என்று சொன்னார்.

அத்தியாயம் 9

திருச்சபை ஒன்றிப்பு

"எங்களுக்கு இந்தியத் திருச்சபையைக் கொடுங்கள்—எங்களுக்கு நிசமாகவே சொந்தமான ஒரு சபையைக் கொடுங்கள். அப்பொழுது நாங்கள் அதற்கென்று பிழைப்போம்; அதற்கென்று மரிக்கவும் துணிவோம்." இப்படி டில்லி மா நகரிலிருக்கும் கிறிஸ்தவக் கல்லூரியின் பிரதமராகிய எஸ். கே. ருத்திரா ஒரு பொதுக்கூட்டத்தில் முறையிட்டார். வங்காளக் கிறிஸ்தவர் ஒருவர் அசரியாவைப் பார்த்து "ஆங்கிலத் திருச்சபையின் ஆராதனை எனக்கு அதிக வணக்கத்தை யூட்டும் முறையாகக் காணப்படுகின்றது. என்றாலும் நான் அந்தச் சபையின் அங்கத்தினனாக விரும்பவில்லை. உங்கள் சபைக்கு இந்தியாவின் சபை என்று நாமம் சூட்டுங்கள். அப்பொழுது நான் மிக வாஞ்சையோடு அதில் சேர்ந்துகொள்ளுவேன்" என்று சொன்னார். இவ் விவாதங்களும், அவற்றிற்கு அடிப்படையாய் நின்ற தேசீய உணர்ச்சியும் அசரியாவிற்கு உசிதமானவையாகவே தோன்றின. ஏனெனில் ஹிந்து மத அனுஷ்டானங்கள் இந்திய மக்கள் யாவருக்கும் சில அரிய கருத்துகளை ஊட்டியிருக்கின்றன என்பது அத்தியட்சர் துணிவு. பகிரங்க ஆராதனையில் விளங்கும் பக்தி வினயமும், தெய்

வத்திற்கென்று தமது உடலையும் ஆவியையும் அர்ப்பணம் பண்ண விரும்பும் உற்சாகமும், துறவறத்தின் சிறப்பைப்பற்றிய நல்லெண்ண மும், பார்த்தவிடமெல்லாம் பரமே என்று எண்ணி அதனோடு இரண்டறக் கலந்துகொள்வதே ஆத்துமா அடையக்கூடிய நற்கதி என்ற தாற்பரியமும் ஹிந்துமத அனுசாரத்தின் விசேஷ லட்சணங்க ளென்று அசரியா அறிவார். "இந்தியக் கிறிஸ்தவர்கள் இவற்றை மறந்துவிடாமல் கைப்பற்றி, கிறிஸ்து சமய அனுஷ்டானங்களுக்குப் புதிய தேர்ச்சியைக் கொடுக்கமுயலுவது நமக்குக் கிடைத்த ஓர் பெரும் சிலாக்கியம்" என்று அவர் கூறினார். ஆதலால் இந்தியா, பர்மா, இலங்கையிலிருந்த ஆங்கிலத் திருச்சபையின் கிளைச் சங்கங்கள் ஒரு தனிப்பட்ட பெயரையும் பொறுப்பையும் பெற்றபொழுது, இந்தியத் திருச்சபை ஒன்று பிறப்பதற்கு இது முன் அடையாளமென அசரியா கருதி மகிழ்வடைந்தார்.

அடுத்தாற்போல சபைகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து நிற்பது இந்தியாவில் கிறிஸ்துவின் சத்திய ஆட்சியை நிலைநாட்டுவதற்குப் பெரிய தடையா யிருக்கிறதென்றும் உணர்ந்து அவர் கவலையுற்றார். சகலவிதத்திலும் இந்தியமயமாக விளங்கும் ஏக திருச்சபையே கிறிஸ்துவின் உத்தம சாட்சியாக இந்நாட்டின்முன் நிற்க வல்ல தாகும். ஆதலால் இந்தியாவில் இருக்கும் பற்பல சபைகள் ஒன்று படுவது அவருக்கு அத்தியந்த அவசியமாகக் காணப்பட்டது.

அசரியாவின் நீண்டகால நண்பராகிய ஷெர்வுட் எடி தமது சுற்றுப்பிரயாணங்கள் ஒன்றில் தென் இந்தியாவிற்கு வந்தபொழுது, சபைகள் ஒன்றுபட ஓர் முயற்சி செய்யவேண்டுமென்று கிறிஸ்தவப் பிரமுகர்கள் பலரிடம் கலந்து பேசினார். அதன் பயனாக 1919-ம் வருடம் மே மாதம் சீகன்பாக், ப்ளூட்சோ என்ற டேனிஷ் மிஷனெரி பக்தரின் ஞாபகச் சின்னங்கள் மல்கிய தரங்கம்பாடியில் தென் இந்திய குருமாரின் ஆலோசனைக்கூட்டம் ஒன்று கூடிற்று. அக்கூட்டத்தில் ஆங்கிலத் திருச்சபையைச் சேர்ந்த பிஷப் அசரியாவும் தென் இந்திய ஐக்கிய சபையைச் சேர்ந்த வே. சந்தியாகும், இன்னும் பல குரு மாரும் கையொப்பம் இட்டு தென் இந்தியாவிலிருந்த சகல புராட்டஸ் டன்டு சபைகளுக்கும் ஓர் நிருபம் விடுத்தனர். சபைகள் ஒன்று படுவது இறைவன் திருவுளத்திற்கும் கிறிஸ்துபெருமானின் வேண்டு தலுக்கும் ஏற்றதாயிருக்குமென்று அவர்கள் கருதி, தென் இந்தியாவி லிருக்கும் சபைகளை ஒன்றுபட அழைத்தனர். மகா யுத்தத்திற்குப்பின் உலகம் இருந்த நிலையையும், இந்தியாவின் நெருக்கடியான விஷயங் களையும் கவனிக்கும்பொழுது, கிறிஸ்தவர்கள் தம் பிரிவினைகளைக் குறித்து வெட்கமும் துக்கமுமடையவேண்டும். அவர்கள் கிறிஸ்து

வின் பக்கமாகத் தம் கண்களை உயர்த்தி, அவரிடமிருந்து சபையின் ஒன்றிப்புக்கேற்ற அறிவையும் அருளையும் பெற்றுக்கொள்ளவேண்டும். இந்திய மக்கள் உலகின் ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பாகமாகின்றார்கள். இத்தனை பெரிய ஜனத்திரளுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டிய பாரமான பொறுப்பைப் பெற்றிருக்கும் இந்தியச் சபைகள் தமக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவுகளால் பலன்குன்றி நிற்கின்றன. இப்பிளவுகள் இந்தியக் கிறிஸ்தவர்களால் ஏற்பட்டவையல்ல; புறம்பேயிருந்து கொணரப் பெற்றவை. இவற்றை நாங்கள் வைத்துக்கொண்டிருக்கப் போவதில்லை. திருமறையில் காணப்படும் மூவகை ஆளுகை முறைகளுக்கும் ஒன்றுபடும் சபையில் இடம் இருத்தல்வேண்டும்; அவையாவன சபை, குருமார், அத்தியட்சராகிய முத்திறத்தாருக்கும் உரிய தனித்தனி அதிகாரமும் பொறுப்புமே. இக்கருத்துகள் மேற்கூறிய நிருபத்தில் அடங்கியிருந்தன.

அதே வருடம் செப்டம்பர் மாதம் தென் இந்திய ஐக்கிய சபை ஆங்கில சபையோடும், மார்த்தோமா சிரியன் சபையோடும் ஒன்றுபட தயாராயிருப்பதாகத் தெரிவித்தது. 1920-ம் வருடம் பெப்ருவரி மாதம் ஆங்கிலச் சபையின் அத்தியட்ச சங்கமும் ஒன்றுபட விரும்பி, தென் இந்திய ஐக்கிய சபையோடு வழிவகைகளைக் கலந்து ஆலோசிக்க ஒரு கமிட்டியையும் நியமித்தது. மார்த்தோமா சிரியன் சபை பல நூற்றாண்டுகளுக்குமுன் ஒன்றாயிருந்த சிரியன் சபையை விட்டு பிரிந்து வந்தது. அதனால் இன்றுவரை சிரியன் சபைகளின் பிரிவினையானது கிறிஸ்து சமயத்தின் நன்மையை விரும்பும் யாவருக்கும் கவலையை ஊட்டிக்கொண்டிருக்கிறது. மார்த்தோமா கட்சியும் ஜேக்கோபைட் கட்சியும் முன்போல ஒரே சிரியன் சபையாக இருக்கவேண்டுமென்று இரண்டு பிரிவுகளிலுமுள்ள பல பக்தர்கள் முயன்று வருகின்றார்கள். அம்முயற்சி கைகூடும் வரைக்கும் மார்த்தோமா சிரியன் சபை மற்றொரு ஒற்றுமை இயக்கத்தில் கலந்துகொள்வது உசிதமல்ல. ஆகையால் அச்சபை தாங்கம்பாடி இயக்கத்தில் பங்கு பெற இயலாதிருந்தது. ஐந்து வருடங்களுக்குப்பின் மற்றொரு பெரிய சபை அம்முயற்சியில் சேர்ந்துகொண்டது. அது உவெஸ்லியன் மெத்தடிஸ்ட் சபை.

முதல் இரண்டு சபைகளின் பிரதிநிதிகள் அடங்கிய கமிட்டி 1920-ம் வருடம் மார்ச்சு மாதம் ஹட்சன் மெமோரியல் ஆலயத்தில் பெங்களூரில் கூடிற்று. அன்று தொடங்கிய நற்கருமம் 27 வருடங்களுக்குப்பின் சென்னை திரு. ஜார்ஜ் அத்தியட்ச ஆலயத்தில் 1947-ம் ஆண்டு செப்டம்பர் 27-ம் தேதி நடந்த ஒற்றுமை ஆராதனையில் பூர்த்தியடைந்தது. அன்று ஆங்கிலச் சபையைச் சேர்ந்த அத்தியட்ச ஆதீனங்

களுள் நான்கும், மெத்தடிஸ்ட் சபையைச் சேர்ந்த மாகாண சங்கங்களுள் மூன்றும், தென் இந்திய ஐக்கியச் சபையைச் சேர்ந்த கௌன்சில்கள் ஏழும் மறைந்தன; பின்பு புத்துயிரும் புது மேனியும் பெற்று தென் இந்திய திருச்சபையாகத் திகழ்ந்தன. மேதினியின் எண் திக்குகளிலுமிருக்கும் கிறிஸ்தவ சபைகள் இப்புதியசபையின் பிறப்பை எதிர்நோக்கி நின்று, அச்சுப சம்பவம் நிகழ்ந்த நாளில் களி துளும்பி இறைவனை மனமாற வாழ்த்தின. தென் இந்தியச் சபை ஒன்றிப்பு திருச்சபை சரித்திரத்திலேயே ஒரு மாபெரும் சம்பவமாக விளங்கும் என்பதற்கு ஐயமில்லை. ஏனெனில் இதனால் இணைக்கப்பெற்ற சபைகள் புராட்டஸ்டன்டு சபையின் உட்பிரிவுகளுள் இரண்டு எதிர்க் கோடியில் நின்ற, பெரிய வேற்றுமையுடைய, சபைகளாகின்றன. அவ்வேற்றுமையை அகற்றி இருபிரிவினரும் ஒப்புக்கொள்ளத்தக்க விசுவாசம், ஆராதனை ஒழுங்கு, சபை நிர்வாக முறைகளாகிய நூதன தத்துவங்களைத் திருச்சபையின் ஈராயிர வருஷ சரித்திரத்திலிருந்து துருவி எடுப்பது மிகக் கடினமாய் இருந்தது. அதனால்தான் கூட்டுக் கமிட்டி (Joint Committee) வருஷம் தவறாது 27 வருஷங்கள் வரைக்கும் சமரசப் பேச்சு நடத்தவேண்டியதாயிற்று. ஒன்றுபட முன்வந்த சபைகளும் 27 வருடங்களாய் நிதானித்துக்கொண்டிருக்க நேர்ந்தது.

இதற்கிடையில் அநேக சிக்கலான கேள்விகள் கமிட்டியில் எழும்பின. பழைய புதிய ஏற்பாடுகள் அடங்கிய விவிலிய ஆகமத்தையும், அப்போஸ்தலர், நைசீன் என்னும் இரு விசுவாச அறிக்கைகளையும், ஞானதீட்சை திருவிருந்து ஆகிய இரு சாக்கிரமெந்துகளையும் ஏற்றுக்கொண்டு, பிதா சுதன் புனித ஆத்தும ரூபமாய் விளங்கும் திரியேக பராபரனை வழிபடுவதே ஒன்றுபடும் திருச்சபையின் அஸ்திபாரமாயிருக்க வேண்டுமென்று மூன்று சபைகளும் ஒத்துக்கொண்டன. எனினும் தமக்குள் இருந்த அபிப்பிராய பேதங்களும், ஆசார ஒழுங்குகளும் கடினமான பல விவாதங்களைக் கிளப்பின. மூன்று சபைகளின் குருக்கள் பெற்றிருந்த அபிஷேகமும் அதிகாரமும் ஒரே மதிப்புடையனவா? அக்குருக்கள் செய்யும் கைங்கர்யங்களின் மூலமாய்த் தெய்வ கிருபை வரங்களை ஜனங்கள் நிசமாகவே பெற்றுக்கொள்ளுகின்றார்களா? கடவுள் தம் அருளையும் ஆசீர்வாதத்தையும் அளிப்பது அப்போஸ்தல பரம்பரையில் வந்த குருக்கள், அத்தியட்சர் மூலமாக மாத்திரமோ? என்ற கேள்விகள் ஒரு பக்கம்; பிரிந்து நிற்கும் சபைகள் அனுசரித்து வரும் ஆராதனை முறைகள் யாவற்றிற்கும் புதிய சபையில் என்ன இடம் கிடைக்கும் என்ற கேள்வி மற்றொரு பக்கம் கூட்டுக் கமிட்டியின் கவனத்தைக் கவர்ந்து நின்றன. அநேக சமயங்களில் இக்கேள்விகளுள் ஒன்றை நாளெல்லாம்

தர்க்கித்தும் சமரச முடிவிற்கு வரக்கூடாது தவித்து, அங்கலாய்ப்புடன் கமிட்டிமார் தம் படுக்கைக்குச் சென்றனர்.

தென் இந்தியாவில் இத்தனை பாடுகளென்றால், ஒன்றுபட முன்வந்த சபைகளின் தாய்ச்சபைகளுக்கும் மிகுந்த கலக்கமும் சந்தேகமும் உண்டாயின. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கூட்டுக் கமிட்டியின் தர்க்கங்களையும் தீர்மானங்களையும் தொடர்ந்து கவனித்து வந்த சபைகளுள் இரு மாறுபாடான அபிப்பிராயங்கள் தோன்றின. அச்சபைகள் தம் முற்பிதாக்கள் உயிரைக் கொடுத்துச் சம்பாதித்த விடுதலையை இந்திய சபை இழந்துவிடப் போகிறதோ? விசாலமான எண்ணங்களைக் கைவிட்டு குறுகிய எண்ணங்களை அங்கீகரிக்கப் போகின்றதோ? பரிசுத்த ஆத்துமனின் நடத்துதலைக் கண்ணுற்று முன்னேறிச் செல்வதற்குப் பதிலாக, பாரம்பரிய அனுஷ்டானங்களால் நெருக்கப்பட்டு நலிந்து போகுமோ? இதனால் தமக்கும் தென் இந்திய சபைகளுக்கும் இருக்கும் சிநேக பாந்தம் அற்றுப்போகுமோ என்றெண்ணிக் கவலையுற்றன. இதே சமயத்தில் ஆங்கிலத் திருச்சபையில் பிற்போக்கான எண்ணங்கள் தோன்றின. தென் இந்திய ஒற்றுமைத் திட்டம் அமுலுக்கு வருமாகில், ஆங்கிலச் சபையில் பிளவு ஏற்படும் என்ற பயத்தைப் பிறப்பித்தன.

இச்சிக்கல்களை அறுக்கத்தக்க சில அடிப்படையான உண்மைகளை அசரியா அத்தியட்சர் எடுத்துக் கூறினார். முதலாவது கிறிஸ்துவின் பாற் கொண்டுள்ள பக்தி சிரத்தையை இந்தியக் கிறிஸ்தவர்கள் தம் மனதிற்கும் தேசீய அனுபவத்திற்கும் ஒத்தவாறு வெளிப்படுத்தும் ஆராதனை முறைகளையும் சபைத் திட்டங்களையும் நிறுவிக்கொள்ளும் சுதந்திரமுடையவர்கள். இரண்டாவது அந்தச் சுதந்திரத்தைக் கையாளும்பொழுது சத்திய வேத வரம்புகளுக்கு விரோதமான கொள்கைகளையும் சடங்காசாரங்களையும் இந்தியர் தம் சபைக்குள் புகுத்திவிடுவார்களோ என்று மேல்நாட்டுச் சபைகள் அச்சமுறல் அவசியமில்லை. இந்தியத் திருச்சபையைப் பாதுகாக்கும் பொறுப்பு மேல்நாட்டுச் சபைகளுடையதல்ல. இங்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கொண்டுவந்து, பக்தர் குழாங்களைக் கூட்டிச் சேர்த்து இந்நாளளவும் நடத்திவரும் பரிசுத்த ஆத்மனுக்கே அந்தப் பொறுப்பு உரியதாகின்றது. சபையின் தலைவராகிய கிறிஸ்துபிரான் இங்கும் இருக்கின்றார். பரிசுத்த ஆத்துமன் இந்தியராகிய எங்களுக்கும் வழி காட்டுவார் என்று அசரியா இடித்துரைத்தார். 1927-ம் ஆண்டில் லாசேன் பட்டணத்திலும், 1937-ம் ஆண்டில் எடின்பரோ நகரிலும் கூடிய சர்வலோக கிறிஸ்தவ மகா நாட்டிலும், 1930-ம் ஆண்டில்

லாம்பெத்தில் கூடிய அத்தியட்சர் கழகத்திலும் அசரியா இதே பிரசாரம் பண்ணினார்.

அவர் தம் அனுபவத்திலிருந்து ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறினர். ஹரிஜனர் என்னும் தீண்டா ஜாதியாரின் தலைவராகிய அம்பேத்கர் பண்டிதர் தம் ஜனங்களுக்கு ஹிந்துக்கள் செய்துவரும் அநியாயங்களுக்கு ஹிந்து மதத்தில் யாதொரு பரிகாரமும் இல்லையென்றும், அவர்கள் அம்மதத்தை நிராகரித்துத் தள்ளிவிடவேண்டு மென்றும் 1935-ம் ஆண்டில் அறை கூவினர். அப்பொழுது அசரியா அவரைச் சந்தித்து "மத அனுஷ்டானங்களில் ஊறிச் சுரந்துள்ள மனத்தினராகிய இந்திய மக்கள் தெய்வ வணக்கமற்ற வாழ்க்கை நடத்தத் துணிவரோ? அவர்களுக்கு ஹிந்துமதம் உதவாதென்றால், அவர்கள் அனுசரிக்கத்தக்க மதம் வேறொன்றுண்டோ?" என்று கேட்டார். "கிறிஸ்து சபை தீண்டா ஜாதியாருக்குச் செய்திருக்கும் ஒப்பற்ற நன்மைகளை நான் நன்குணர்வேன். இன்று பாரத நாடெங்கும் குடியிருக்கும் ஹரிஜனங்கள் ஒரே சமுதாயமாய் இருக்கின்றார்கள். அவர்களுடைய பலம் இந்த ஒற்றுமையில்தான் இருக்கிறது. நாங்கள் கிறிஸ்து சபையில் புகுந்தால் இதைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடுமோ? நாங்கள் ஒரே தொகுதியாக தழுவிக்கொள்ளுவதற்கு உங்களிடம் ஒரே சபை இருக்கின்றதோ?" என்று அம்பேத்கர் பண்டிதர் அசரியாவைக் கேட்டார். அதை கேட்டபொழுது அசரியாவிற்கு அளவற்ற வெட்கமும் சஞ்சலமும் உண்டாயின. இந்தியா அடைந்து அனுபவிக்க வேண்டிய ஏக சபைக்குப் பதிலாக, மேல்நாட்டார் பற்பல சபைகளை இங்கு புகுத்திவிட்டது என்னே பரிதாபம் என்றெண்ணி அவர் உள்ளம் குமுறிற்று.

ஆதி முதற்கொண்டு தற்காலம் வரையிலும் தோன்றிய கிறிஸ்தவ வகுப்புகள் அனைத்தும் இந்நாட்டில் மல்கிக் கிடக்கின்றன. புராதன சிரியன் சபையும் ஆங்கிலச் சபையும் லுத்தரன் சபையும் மெதடிஸ்ட், பாப்டிஸ்ட் முதலிய ஐரோப்பா அமெரிக்காவில் முளைத்த பல கிளைச் சபைகளும் இந்நாட்டில் தம்போன்ற சபைகளை நாட்டியிருக்கின்றன. இந்தியக் கிறிஸ்தவர் ஒருவரை உமது மதம் யாதென வினவுங்கால், அவர் நான் கனேடியன் பாப்டிஸ்ட், அல்லது ஸ்வீடிஷ் லுத்தரன் என்று பதிலுரைக்கின்றார். இது என்ன வேடிக்கையாயிருக்கிறது. ஆயிரக்கணக்கான இந்திய கிறிஸ்தவர்களுக்கு இப்பேதங்கள் சபை கோட்பாட்டில் ஊன்றி நிற்கும் பேதங்கள் அல்லவேயல்ல. இவர்கள் தத்தம் தொகுதிகளின் விசேஷ உபதேசங்களையும், அவற்றின் நியாயங்களையும் அறிவார்களோ என்பதும் சந்தேகமே. பின் அவர்கள் பிரிந்து நிற்பதின் காரணம் தான் யாதென உசாவுமிடத்து, அப்பிரி

வினைகள் அகஸ்மாத்தான பிரிவினைகளெனவே தோன்றும். ஒருவர் பிறந்த ஊரில் கனேடியன் பாப்டிஸ்ட் மிஷனும், மற்றவர் பிறந்த ஊரில் ஸ்வீடிஷ் லுத்தரன் மிஷனும் மிஷன் ஸ்தாபனங்களை நிறுவியதே அவ்விருவருடைய சமயாசார பேதத்தின் மூல காரணமாகின்றது. ஆதலால் இப்பிரிவினைகளை நினைத்துப் பார்க்கும் பல இந்தியக் கிறிஸ்தவர்கள் தம் அனுபவத்தோடு ஒட்டாததும், தாம் தேடி அடையாததுமான புறநாட்டு விபரீதங்களை கால் விலங்குகளாக மிஷனெரிமார் பூட்டிவிட்டார்களே என்று சொல்லி வெதும்புகின்றார்கள். மேலும் தம்மைச் சூழ்ந்து நிற்கும் திரள் கூட்டமான ஹிந்துக்கள் தம்மைப் பார்த்து கேட்பது உங்கள் சபையை ஆளுகிறது அத்தியட்சரா, குருக்கள் கூட்டமா, சபையின் பொதுக்கூட்டமா என்ற கேள்வியல்ல. உங்களையும் உங்கள் சபையையும் ஆளுவது கிறிஸ்துவா என்று தான் கேட்பதுபோலிருக்கிறது. அந்தக் கேள்விக்கு ஏற்ற மறுமொழி பகர பிரிந்து பலன் குன்றியிருக்கும் சபைகளால் இயலுமோ?

இவ்வெண்ணங்களை மனதில் வைத்து, அசரியா மேல்நாட்டுச் சபைகளின்முன் எழுந்து நின்று பின்வருமாறு பேசினர்: "எங்களுக்கு ஒரே திருச்சபை வேண்டும். அது இந்தியத் திருச்சபையாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் எங்கள் பிதிராஜ்ஜிதமான இந்திய பக்தி சிரத்தை தன் நிசரூபத்தைத் தரித்து எம் சபையின்கண் மிளிரும். அப்பொழுதுதான் தெய்வத்தின்பால் நாங்கள் கொண்டுள்ள வாஞ்சை திருப்தியடையும். அப்பேர்கொத்த பொதுவான அப்போஸ்தல திருச்சபை ஒன்றே, மதம் மதமாகவும் வருணம் வருணமாகவும் சிதைவடைந்து கிடக்கும் எமது நாட்டில் ஒற்றுமையின் விருப்பத்தை எடுத்துக்காட்டி, மக்களின் உள்ளங்களைக் கிறிஸ்துவினிடம் கவர்ந்துகொள்ளும். சபைகளின் ஒன்றிப்பைக் குறித்து ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கிறிஸ்தவர்கள் வெரும் பேச்சோடு நின்றுவிடலாம். அதனால் கிறிஸ்து சமயத்திற்கு ஆங்கு பெரும் பாதகம் நேரிடாதுமிருக்கலாம். ஆனால் மிஷனெரி சங்கங்கள் சபைகளைச் சேர்த்திருக்கும் கிழக்குத் தேசங்களிலோ, சபையின் ஒற்றுமை உயிர் நாடியாய் இருக்கின்றது. கிறிஸ்தவ தேசங்களிலுள்ள சபைகளின் பிரிவு அவற்றைப் பலஹீனப்படுத்துவது மாத்திரமேயாகும். ஆனால் புறமதங்கள் சூழ்ந்துள்ள நாடுகளில் கிறிஸ்து சமுதாயம் பற்பல பிரிவுகளாகச் சிதைந்துகிடப்பது பெருத்த அவமானமும் பாவமுமாகின்றது. இப்பிரிவினைகளைச் சிந்தனையின்றி இந்நாட்டில் புகுத்துவிட்ட மேல்நாட்டுத் தாய்ச் சபைகளைப் பார்த்து வெகு பணிவோடும் ஊக்கத்தோடும் நான் ஓலமிடுகின்றேன். பிள்ளைச் சபைகளுள் ஒன்றின் புதல்வனாகிய நான் தாய்ச் சபைகளைச் சேர்ந்த கிறிஸ்துவுக்குள் என் தந்தையராகிய உங்களுக்குச் சொல்ல விரும்புவது யாது? நீங்கள்

எங்களுக்குச் செய்த பேருபகாரத்திற்கு நாங்கள் உள்ளளவும் நன்றி கூற கடன்பட்டிருக்கின்றோம்; ஈசனுக்கும் நாங்கள் நன்றி செலுத்து கின்றோம். நீங்கள் ஆத்மார்த்தமாகப் பெற்றெடுத்த பிள்ளைகள் ஆயிரக்கணக்காக எழுந்து நின்று உங்களை வாழ்த்துகின்றார்கள். ஆனால் உங்களுக்குள் தோன்றிய சபைப் பிளவுகளையும் அவற்றால் விளையும் தீங்குகளையும் எங்களிடம் புகுத்துவிட்டது என்ன பெரிய பாதகமென்று நீங்கள் எப்பொழுதாவது நினைத்துப் பார்த்தீர்களோ வென்று நாங்கள் ஐயுறுகின்றோம். பிரிந்து நின்று சாவோமோ, அல்லது ஒன்றுபட்டு பிழைப்போமோ என்பதே நாங்கள் ஓயாது கேட்கும் கேள்வி. இப்படி மேல் எழுச்சியாய் பேசுகிறோமென்று எண்ணாதிருங்கள். எங்களைப் பிரித்துவைத்தவர்கள் நீங்களே; எங்களை இணைத்து வைக்க முயலுங்கள். அப்படிச் செய்தால் மாத்தி ரமே நீங்களும் நாங்களும் ஏகோபித்து தம் சீடர் அனைவரும் ஒன்றாய் இருக்கவேண்டுமென எமதாண்டவர் செய்த பிரார்த்தனைக்கு ஏற்ற மறுமொழி கூறக்கூடியவர்களாவோம்.”

இப்படி எல்லாம் பேசிக்கொண்டும் விவாதித்துக்கொண்டும் அசரியா 1930-ம் வருடம் கூடிய அத்தியட்ச மகாநாட்டிற்குச் சென்றார். தென் இந்திய சபை ஒன்றிப்புத் திட்டத்தால் ஆங்கிலச் சபையில் பிளவு ஏற்படுமென்ற திகில் பல அத்தியட்சர் மனதில் புகுந்துகொண்டது. ஒற்றுமைப்பட விரும்பும் தென் இந்திய அத்தி யட்ச ஆதீனங்கள் நான்கையும் ஏனைய அத்தியட்ச ஆதீனங்களி னின்று பிரித்து விடுவதால் ஆங்கிலச் சபையில் பிரிவினை ஏற்படு வதைத் தடுக்கலாம் என்று கருதி, அப்படிச்செய்ய மகாநாடு தீர் மானித்தது. அசரியாவிற்கு இது திருப்தியைக் கொடுத்தது. ஏனென் றால் தென் இந்திய ஒன்றிப்புத் திட்டம் நிறைவேறுவதற்கு முட்டுக் கட்டையாய் விளங்கிய ஒரு பெரிய சங்கடம் இதனால் நீங்கிற்று. என்றாலும் ஆங்கிலச் சபையின் சகவாசத்தினின்று பிரிவது அவருக்கு விசனமாயிருந்தது. ஆதலால் அவர் மகாநாட்டில் கூடியிருந்த சகோ தர அத்தியட்சர்களைப் பார்த்து: “நீங்கள் எங்களுக்குப் பிரிவு உபசாரம் கூறவேண்டாம்; கடவுள் உங்களோடு சென்று உங்களை வழிநடத்த வேண்டும் என்று ஆசிடை கூறுங்கள். ஏனென்றால் நாங்கள் உங்கள் சகவாசத்தினின்று விலகிக்கொள்வது நிலையான பிரிவல்ல. இது நமக்குட் தோன்றிய யாதாமோர் பிணக்கத்தின் விளைவுமல்ல. நாங்கள் இப்பொழுது உங்களை விட்டுப் பிரிந்துபோயினும் மற்றொரு நாள், ஒரு வேளை நாம் எதிர்பார்ப்பதற்கு முன்னமே, விசாலமான ஒரு ஒன்றிப் பின் மூலமாக இணைக்கப்படுவோம்” என்றார். அத்தியட்ச மகாநாடு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின் யாவரும் எழுந்து நின்று

"ஒன்றாக ஆண்டிருக்கிற" என்று துவங்கும் தோத்திர கீதத்தை உள்ளக்கனிவுடன் பாடினர்.

இதன் பின்னும் அசரியா கூட்டுக்கமிட்டியில் முன்போலவே தமது அபிப்பிராயங்களைத் தெளிவாக எடுத்துக்கூறினர். சேர்ந்த சிக்கலான பிரச்னைகளில் அவருடைய அறிவும் புத்திக்கூர்மையும் சபைகள் ஒன்றுபட வேண்டுமென்ற ஆவலும் ஏற்ற சமரச ஒழுங்குகளைச் செய்வதற்கு உதவின. ஒற்றுமைத் திட்டத்தின் சில பகுதிகளில் மிகச்சிறந்த நூதன உண்மைகள் மணிகள் போல் ஜொலிக்கின்றன. குரு பரம்பரைகளுள் எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்ற வாதம் மும்முரமாகக் கிளம்பியபோது அம்மணிகளில் ஒன்று கூட்டுக்கமிட்டியின் கண்முன் தோன்றிற்று. ஒன்றுபட முன் வந்த மூன்று சபைகளும் ஒற்றுமைக்கு அடிப்படையாக ஓர் புதிய விசுவாசத்தை அறிக்கையிட்டன. தம் சபைகளின் குரு பாரம்பரை அனைத்தின் மீதும் சபாநாயகராகிய கடவுள் தமது கிருபையைப் பாரபட்சமின்றி பொழிந்து அவற்றின் சேவையை அங்கீகரித்து ஆசீர்வதித்திருக்கின்றார். ஆதலால் அவை யாவும் உண்மையாகவே சத்திய வேத வசனத்தையும் பரிசுத்த சாக்கிரமந்துகளையும் பக்தருக்குப் பயன்படுமாறு எடுத்துப் புகட்டத்தக்க ஏற்ற குரு பரம்பரைகளாக யிருக்கின்றன என்று கூட்டுக்கமிட்டி கூறிற்று. மற்றொருமுறை குருக்களை அத்தியட்சர்கள் அபிஷேகிக்கும் சடங்கைக்குறித்து ஆலோசிக்கும் பொழுது ஒரு பிணக்கம் ஏற்பட்டது. கிருபை வார்த்தையும் அதிகாரத்தையும் அபிஷேகம் பெறும் குருவுக்கோ அத்தியட்சருக்கோ ஈவது கரம் சிரமேல் வைத்து ஜெபிக்கும் அத்தியட்சர்களோ என்ற கேள்வி எழும்பிற்று. நீண்ட விவாதத்தின் பின்னர் கூட்டுக்கமிட்டி ஒரு முடிவிற்கு வந்தது. அபிஷேகிக்க அத்தியட்சர் அவசியம் என்று திட்டம் வகுத்து உடனே, ஒவ்வொரு அபிஷேக சடங்கிலும் சபை தேர்ந்தெடுத்த ஊழியரை அபிஷேகிப்பவர் கடவுளே என்று கூறிற்று. நிறைவேற்றவிருக்கும் ஒன்றிப்பின் மூலமாக, பிரிந்திருந்த சபைகளுக்குள் ஒரு நவ இயக்கம் தோன்றுமென்றும், அது சபையோர் அனைவரையும் ஆத்மார்த்தமான ஒருமைப்பாட்டிற்குள் நடத்திச் சென்று புதிய சபையின் எந்த ஆலயத்திலும் திருவிருந்தை மனங் கோணமல் அருந்த அவர்களுக்குக் கற்பிக்கும் என்றும் கமிட்டி தன் விசுவாசத்தை எழுதிவைத்தது. சபையின் குருக்களும் அத்தியட்சரும் இச்சிறந்த ஒற்றுமையை உண்டுபண்ண முயலவேண்டும். அதற்குத் தடையாயிருக்கும் யாவற்றையும் பொறுமையோடும் விவேகத்தோடும் அகற்றவேண்டும். இந்த ஆத்மீக ஒற்றுமையின் மூலமாகப் புதிய சபை பிரிந்து இருக்கும் மற்ற சபைகளையும் ஒன்றுபடுத்த

விரும்பவேண்டும் என்ற சிறந்த இலக்ஷியங்களை ஒற்றுமைத் திட்டம் வரைந்து இருக்கிறது. சபைகளின் பிரதிநிதிகளும் சபையோருள் மிகுதியானவர்களும் இச்சிறந்த நோக்கங்களைக் கடைப்பிடிக்க முன் வந்தபோதிலும், சிற்சிலர் தமது பழைய அனுஷ்டானங்களை மாற்றிக் கொள்ளக்கூடாதிருக்கலாம். ஒற்றுமையைத் துரிதமாக நிலைநாட்ட விரும்பி அன்னவர்களைப் பலவந்தப்படுத்துதல் ஒழுங்கல்லவென்றும் ஒற்றுமைத் திட்டத்தில் கண்டிருக்கிறது.

இத்துணை நேர்மையான முறைகளை வகுத்த பின்னும் ஒன்றுபட வந்த சபைகளின் பயங்களும் சந்தேகங்களும் அடியோடு நீங்கவில்லை. திரும்பத் திரும்ப வகுத்தத் திட்டங்களை மாற்றி எழுதவும், அவைகளுள் சந்தேகத்திற்கிடமானவைகளை அகற்றவும் வேண்டுமென்று சபைகள் தர்க்கித்துக்கொண்டு இருந்தன. ஆங்கில சபையின் முறைபாடுகளை லாம்பெத் 1930-ம் ஆண்டில் ஒருவாறு நீக்கிவிட்டிருந்தும் ஒன்றிப்பு சீக்கிரம் ஏற்படுமென்று எண்ணவோ இடமில்லாதிருந்தது. இதைக் கண்டு அசரியா மிகுந்த சஞ்சலமுற்றூர். 1935-ம் ஆண்டில் பின்வருமாறு தமது ஆத்திரத்தை எழுதி வெளியிட்டார். "கடுதாசியில் எழுதியிருக்கும் நமது ஒற்றுமைத் திட்டத்தை யாதொரு பழுதுமில்லாத பூரண திட்டமாக்கவேண்டுமென்ற வீண் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நாம் காலதாமதம் பண்ணிக்கொண்டிருக்கிறேம் என்று நான் நினைக்கவேண்டியதாயிருக்கிறது. திட்டத்தைச் சீர்திருத்திக்கொண்டே இருப்போமாகில் சபைகள் ஒன்றிப்பது எப்பொழுதோ! திட்டம் எழுதுவதில் நாம் பல வருடங்களாய் முனைந்து நின்றதால் இந்த எழுத்து வேலையே பிரதானமென்று நினைத்துக்கொண்டோம். ஆகையால் சபைகள் ஒன்றுபட்டு விடுங்கால் இந்த வேலை நின்றுபோகுமேயென்றும் நாம் பயப்படுகிறேம். இந்த எழுத்துவேலை நின்றுபோனுல் விளையும் நஷ்டம் என்ன என்று நான் கேட்கிறேன். நாம் விரும்பியது எது? நாம் மன்றாடியதும், பதினைந்து வருடங்களாய் உழைத்துவந்ததும் எதற்காக? குறையற்ற ஒற்றுமைத் திட்டத்திற்காகவா, ஒற்றுமைக்காகவா? சமரச வேத சாஸ்திர நூலைத் திருத்திக்கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு நாம் காலதாமதமின்றி ஒன்றுபடுவது அவசியமல்லவோ?"

சபை ஒற்றுமை விஷயத்தைக் குறித்து பொறுமையை இழந்தவர் அசரியா ஒருவர் மாத்திரமல்ல. கூட்டுக் கமிட்டியும் பதறிக்கொண்டிருந்தது. சபைகள் இன்னும் ஒரு முடிவிற்கு வராததைக்குறித்து கவலையுற்றது. 1941-ம் ஆண்டு அக்டோபர் மாதம் கமிட்டி சபைகளுக்கு ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்தது. ஒற்றுமைத் திட்டத்தைச் சீர்திருத்திக்கொண்டிருக்கும் காலங்கடந்து விட்டது. ஆகையால் சபை

கள் திட்டம் இப்போது அமைந்துள்ளவாரே அதை ஏற்றுக்கொண்டு அதன் முதலாம் இரண்டாம் பிரிவுகளில் வகுத்துள்ள அடிப்படையான பிரமாணங்களின்படி ஒன்றுபடத் தயாராக இருக்கின்றனவா அல்லவா என்று 1944-ம் ஆண்டின் வசந்த காலத்திற்கு முன் முடிவு செய்யவேண்டுமென்று கமிட்டி சபைகளைக் கேட்டுக்கொண்டது. ஆயினும் அவ்வருடம் கூடிய தென் இந்திய ஐக்கிய சபையின் ஜெனரல் அசெம்பிளியில் அதைச் சேர்ந்த எட்டு கவுன்சில்களும் ஏக மனதாய் ஒற்றுமைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாதனவாய் இருந்தன. அசெம்பிளி முடிவிற்கு வரவில்லை. ஆங்கிலச் சபையின் பல பாகங்களில் சந்தேகங்கள் கிளம்பிக்கொண்டேயிருந்தன. இங்கிலாந்தில் ஏற்பட்ட தீவிர எதிர்ப்பைச் சாந்திபண்ண பிரதம அத்தியட்சர் ஒரு விளக்க நிருபம் விடுத்தார். அது எதிர்ப்பைத் தணிக்கவில்லை. அதில் அவர் கூறிய விளக்க வாக்கியங்கள் தென் இந்திய ஐக்கியச் சபையின் சந்தேகங்களைப் பலப்படுத்தி விட்டன. அதன்பின் கல்கத்தாவில் கூடிய அத்தியட்ச சபையும் தர்க்கத்திற்கிடமான சில அபிப்பிராயங்களைப் பிரசுரித்தது. இவ்விரு பிரசுரங்களும் மனச்சாட்சிக்கு விரோதமான ஆராதனை ஒழுங்கையேனும் குரு நியமனத்தையேனும் புதிய சபை எந்தத் தொகுதியின் மேலும் பலவந்தமாக சுமத்தமாட்டாதென்ற உறுதிவாக்கைக் குறித்த விளக்கங்களாயிருந்தன. இந்த உறுதி வாக்கைப்பற்றி ஒன்றுபட முன்வந்த சபைகள் இரண்டு எதிர்மாறான விளக்கங்களைக் கூறி வந்தன. ஆகையால் 1945-ம் வருடத்தில் ஒற்றுமை நிறைவேறுமோ என்ற சந்தேகம் பலத்தது. அடுத்த வருடம் தென் இந்திய ஐக்கிய சபையின் ஜெனரல் அசெம்பிளி தாம்பரத்தில் கூடியபொழுது வந்திருந்த பிரதிநிதிகள் என்ன நடக்கப்போகிறதென்று கவலைகொண்டனர். அப்பொழுது ஆங்கிலச் சபையின் தென் இந்திய அத்தியட்ச ஆதீனங்களைச் சேர்ந்த அத்தியட்சர்கள், இங்கிலாந்திலும் இந்தியாவின் மற்ற பாகங்களிலும் அபிப்பிராயங்கள் எப்படியிருந்தாலும் தம்மைப் பொருத்தமட்டில் ஒற்றுமைப்பட்டபின் யாதொரு பேதமும் இன்றி ஐக்கிய சபையின் சகல ஆதீனங்களிலும் திருவிருந்தை அருந்தத் தயாராய் இருப்போமென்று எழுதி அறிவித்தார்கள். உறுதிவாக்கின் விளக்கமொன்று கூட்டுக் கமிட்டி ஏற்கனவே வரைந்து இருந்தது. அந்த விளக்கத்தை யாவரும் ஏற்றுக்கொண்டால் தென் இந்திய ஐக்கிய சபையின் கடைசித் தடையும் அகன்றுவிடுமென்று அச்சபையின் பிரமுகர்கள் நினைத்தனர். அதற்கும் தென் இந்திய அத்தியட்சர்கள் சம்மதித்தனர். அதோடுகூட இந்தியாவிற்கு வெகு சீக்கிரம் சுதந்திரம் அளித்துவிட்டு ஆங்கில அரசாங்கம் இங்கிருந்து கிளம்பிவிடத் தீர்மானித்துவிட்டது. திருவிதாங்கூரின் ஹிந்து திவான் கிறிஸ்து சமயத்திற்குப்

பிரதிகூலமான சில சட்டங்களை வகுத்துவிட்டார். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் சபைகள் ஒன்றுபடுவது மிக அவசரமான விஷயமாக விளங்கிற்று. ஆகையால் 1946-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் கூடிய தென் இந்திய ஐக்கிய சபையின் ஜெனரல் அசெம்பிளி உறுதி வாக்கைக் குறித்துக் கூட்டுக் கமிட்டி விடுத்துள்ள விளக்கத்தை ஆங்கிலத் திருச்சபை ஏற்றுக்கொள்ளு மாகில் அச்சபையோடும் மெதடிஸ்ட் சபையோடும் பூரண ஒன்றிப்பு அடையவேண்டுமென்ற பிரரேபணையை அங்கீகரித்தது. இரண்டு வருடங்களுக்கு முன் இருந்த கலக்கம் இப்பொழுது காணப்பட வில்லை. சிறிது குறைய ஏகமனதாய் இந்தத் தீர்மானத்தை அசெம்பிளி ஏற்றுக்கொண்டது. அடுத்த வருடத் துவக்கத்தில் சென்னையில் கூடிய ஆங்கிலச் சபையின் இந்திய மகாநாடு தென் இந்திய ஐக்கிய சபையின் நிபந்தனையை ஏற்றுக்கொண்டது. கூட்டுக் கமிட்டியின் நீண்டகால கடின முயற்சி முடிவடைந்தது. திருச்சபையின் நாயகர் தாமே இப்பெரிய கிருபையைச் சபைக்குச் செய்தாரென்று பக்தர் குழாங்கள் அகமகிழ்ந்தன.

கடைசியாகக் கூட்டுக் கமிட்டி 1947-ம் வருடம் ஜூன் மாதம் பெங்களூர் வேத சாஸ்திரக் கலாசாலையில் கூடியபொழுது குதூகல மும் நன்றியறிதலும் அங்கத்தினர் உள்ளத்தில் பெருக்கெடுத்து பாய்ந்து கொண்டு இருந்தன. வெகு சீக்கிரமாகவே புதிய சபையை நிறுவி வைக்கவேண்டுமென்று தீர்மானித்து, அச்சபையின் ஆரம்ப ஆராதனை ஒழுங்கையும் புதிய அத்தியட்சரை அபிஷேகிக்கும் முறையையும் திட்டவட்டமாய்க் கமிட்டி வகுத்தது. தென் இந்தியச் சபையின் அத்தியட்சர் அணியவேண்டிய உடை, தரிக்கவேண்டிய சின்னம், கையிற் தாங்கவேண்டிய கோல் ஆகிய சிறிய விஷயங்களும் திருமணத் திற்கு ஆயத்தம்பண்ணும் வீட்டார் செலுத்தும் கருத்தோடும் களிப்போடும் தீர்மானிக்கப்பெற்றன. புதிய சபையின் அத்தியட்ச ஆதீனங்களும் அவற்றின் நிர்வாக சங்கங்களும் ஏற்படுமுன் செய்ய வேண்டிய விஷயங்களைச் செய்துவைக்க ஒரு சிறு கூட்டத்தை நிய மித்தபின், கூட்டுக் கமிட்டி தோத்திர ஆராதனையில் கடவுளுக்கு நன்றி செலுத்திவிட்டு கலைந்துகொண்டது.

அசரியா அத்தியட்சருக்கு ஆண்டவர் ஆயுள் நாட்களோடு இரண் டரை வருடங்களைக் கூட்டிக் கொடுத்திருப்பின், 1947-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 27-ம் தேதி சென்னை திரு. ஜார்ஜ் அத்தியட்ச ஆலயத்தில் நடந்த பெரிய ஆரம்ப ஆராதனையில் தலைமை வகித்து அதைச் சிறப்பித்திருப்பார்; அவர் தம் வாழ்நாளெல்லாம் கண்ட கனவுகளிலொன்று கண்முன் நனவாக உருவெடுத்ததைப் பார்த்து

அளவற்ற ஆனந்தம் அடைந்திருப்பார். அன்று கூடிய மூவாயிரம் பக்தருள் அசரியாவை நினைக்காதவர் ஒருவருமில்லை. சபை ஒன்றிப்புக்காக ஊக்கம் குன்றாது உழைத்து மறைந்துபோன வீர புருஷரின் நாம அட்டவணையில் அசரியாவின் பெயரும் இருக்கிறது.

அத்தியாயம் 10

அசரியா இந்தியத் திருச்சபைத் தலைவர்

தென்னிந்தியாவில் பிரிந்து நின்ற சபைகளை இணைத்து ஒன்றுபடுத்த அசரியா எடுத்துக்கொண்ட அரும்பிரயத்தனம், கிறிஸ்துவின் சாம்ராஜ்யம் நமது தாய்நாட்டில் நிலையூன்றி வியாபிப்பதற்கு அத்தியந்த அவசியமான முயற்சியென்று நாம் கண்டோம். இது ஒன்றே அவருக்கு மங்காத புகழைக் கொடுக்கும் முயற்சியாக விளங்குகின்றது. இது ஒன்றே அவரை இந்தியத் திருச்சபையின் பிரமுகர்களுள் சிறந்தவராக்குகின்றது. ஆயினும் அவர் இந்தியத் திருச்சபைக்குச் செய்த நன்மை இது ஒன்றுமாத்திரமல்ல. கிறிஸ்து சமயம் ஒன்றே; அதற்கு அடிப்படையாயுள்ள உபதேசமும் ஒன்றே; அதன் மத்திய நோக்கமும், அது வழிபடும் கடவுளும் ஒன்றே. என்றாலும் பலஸ்தீனு தேசத்தில் யூதமத சமுதாயப் பாரம்பரியங்களின் சூழ்நிலையில் பிறந்த இந்நவமதம் கிழக்கிலும் மேற்கிலும் பரவிய பொழுது, ஆங்குத் தோன்றியிருந்த தேசீய பாரம்பரியங்களால் ஒரு சிறிது தழுவப்பெற்று வளர்ந்தது. கிறிஸ்துபெருமானின் மூல உபதேசங்களை விளங்க வைக்க முயன்ற அப்போஸ்தலரும் சபைப் பிதாக்களும் யூதமதக் கொள்கைகளையும், கிரேக்க ரோம தத்துவ சாஸ்திரத்தையும் ஒட்டியே கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் உட்கருத்தை விளங்க வைத்தல் அவசியமெனக் கண்டனர். சுவிசேஷகரும், அப்போஸ்தலரும் யூத தீர்க்கதரிசனருடைய வசனங்கள் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டும் முன்னறிவிப்புகளெனக் கூறினர். கிறிஸ்து சகாப்தத்தின் முதலாம் நூற்றாண்டில் மத்தியதரைக் கடலைச் சூழ்ந்த நாடுகளின் தத்துவ சாஸ்திரிகள் எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடிய "வார்த்தை" என்ற பதத்தை திரு அவதாரத்தின் மர்மத்தை விளங்கவைக்கக்கூடிய பெயராக யோவான் சுவிசேஷகர் நமது ஆண்டவருக்குச் சூட்டினர். மூன்றும் நான்காம் நூற்றாண்டுகளில் சபைப் பிதாக்கள் கிறிஸ்து சமய விசுவாசத்தின் சுருக்க அறிக்கையொன்றை வகுத்தபொழுதும், ரோம சாஸ்திரிகளின் குற்றஞ்சாட்டுதலை எதிர்த்து வாதித்தபொழுதும், கிரேக்க, ரோம தத்துவ ஞானத்தை ஒட்டியே கிறிஸ்து சமயப் போதனைகளை விளங்கவைக்க

முயன்றனர். அதோடுகூட, கிறிஸ்து சமயச் சடங்காசாரங்களும், ஆராதனை முறைகளும் படிப்படியாக வளர்ந்துகொண்டுவந்தன. அவை ஒவ்வொரு தேசத்தின் நாகரிகமாகிய சூழ்நிலையில் வளர்ந்து வந்தமையால், நாட்டிற்கு நாடு சிற்சில வேற்றுமைகளும் அவற்றில் தோன்றின. ஆதலால் கிறிஸ்து சமயமும் அதன் விசேஷ உபதேசமும் மாறாதிருப்பினும், அவற்றின் புறக்கோலமாகிய வேத சாஸ்திரத்திலும், சடங்காசாரங்களிலும் மாறுதல்கள் தோன்றின. இம்மாறுதல்கள் கிறிஸ்து சமயத்தை ஊனப்படுத்தாது, பற்பல மலர்கள் தத்தம் நிறத்தாலும் நறுமணத்தாலும் ஒரு பூங்காவை அலங்கரிப்பதுபோல் அலங்கரித்திருக்கின்றன. தெய்வ பக்திக்கு உறைவிடமாக விளங்கியதும் மிகப் பூர்வீகமான நாகரிகமுடையதுமான பாரத நாட்டிலும் கிறிஸ்து சமயம் ஒரு புதுமேனி பெற்றுத் துலங்கவேண்டுமென்று கிறிஸ்து பக்தருட் பலர் விரும்பினர். இந்தியாவின் பிரதம அத்தியட்சராகப் பல வருடங்களை இந்நாட்டில் கழித்த வெஸ்ற்கட் அத்தியட்சருள்ளத்தில் ஒரு வாஞ்சை குடிகொண்டிருந்தது. யோவான் அப்போஸ்தலரின் பாரமார்த்திக அனுபவத்திற்கும், அவ்வனுபவத்தில் பிறந்த அவருடைய உபதேசத்திற்கும் ஏற்ற வியாக்கியானம் இந்தியக் கிறிஸ்து பக்தர்கள் மாத்திரமே சொல்லக்கூடும் என்று அவர் எண்ணினர். அந்த வியாக்கியானம் என்று எழுதப்படுமோ என்று அவர் எதிர் நோக்கியிருந்தார்.

இக்காரணங்கள்பற்றி, இந்தியத் திருச்சபை பூரண சுதந்திரம் பெற்று கிறிஸ்து சமயப் போதகத்தின் ஊற்றாகவிருக்கும் புதிய ஏற்பாட்டை, ஹிந்து சமயத்தின் சில சிறந்த உபதேசங்களின் வாயிலாக விளக்கிக்கொள்ள முன்வரவேண்டும். தவிர மேல்நாட்டு வேத வியாக்கியானமும் வேத சாஸ்திரமும் இந்திய மக்களுக்குச் சிறிது கருகலாகவே இருந்துவருகின்றன. இவை கிறிஸ்துமதத்தின் இயல்பான அழகைச் சற்றே மறைத்துவிடுகின்றன. இக்கருத்தை இந்தியக் கிறிஸ்தவத் தபோதனராகிய சாது சுந்தர்சிங் ஒரு கதையின்மூலமாகத் தெரிவித்தார். தாகவிடாய்கொண்டு மயங்கி விழுந்துவிட்ட ஒரு வழிப்போக்கனுக்கு, குளிர்ந்த நீரைக்கொடுத்து மூர்ச்சையை நீக்க விரும்பிய ஒருவர், பீங்கான்கோப்பையில் நீரைக்கொணர்ந்து அவனுக்குக் கொடுத்தார். அவனோ அதைப் பருக மறுத்தான். நான் செத்தாலும் சாவேனே யல்லாது அத்தண்ணீரைப் பருகமாட்டேனென்று சொல்பவன்போல், அவன் தலையை அசைத்துக் கண்களை மூடிக்கொண்டான். உதவிசெய்ய வந்தவருக்கு அவனது பிடிவாதம் விளங்கவில்லை. திடீரென்று அவருக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. அவர் வீட்டிற்கு விரைந்து சென்று அதே தண்ணீரை ஒரு வெண்கல

லோட்டாவில் ஊற்றிக்கொண்டு வந்தார். அவன் அதை ஆவலோடு வாங்கிப் பருகி மூர்ச்சை தெளிந்தான். அதைப்போல, நாம் உபதேசிக்கும் கிறிஸ்து சமயம் ஆத்துமவிடாய்கொண்ட இந்திய மக்களுக்கு அவசியமாயிருப்பினும், அவர்களுள் அநேகர் அதை ஏற்றுக்கொள்ள மனமற்றவர்களாயிருக்கிறார்கள். அதேனென்றால், நாம் கொடுக்கும் ஜீவ தண்ணீரை அந்நிய பாத்திரத்தில் ஊற்றிக்கொடுக்கின்றோம். கிறிஸ்துவின் ஆத்தும போதம் இந்தியர் விளங்கிக்கொள்ளத் தக்க பாஷையிலும், அவர்கள் உணர்ச்சியை எழுப்பத்தக்க அர்ச்சனை ஆசாரங்களிலும் எடுத்துக்காட்டப்படுதல் அவசியம். அப்படி நாம் இதுகாறும் செய்யாதிருத்தல் அவர்கள் கிறிஸ்து சமயத்தைத் தழுவுவதற்கு ஒரு பெரும் இடையூறாயிருக்கிறதென்று சாது சுந்தர்சிங் அடிக்கடி கூறினர். அவர் ஹிந்து மதத்தின் சில குற்றமற்ற சம்பிரதாயங்களையும் ஆராதனை முறைகளையும் கிறிஸ்துவின் மகிமைக்கென்று புதுப்பித்துப் பயன்படுத்திக்கொள்ள வழி காட்டியவரும் ஆகின்றார். துறவறம் புகுந்து, காஷாயமணிந்து, யோக தியான முறைகளை அநுசரித்து, பூரண ஆத்தும சாந்தி பெற்றவராக விளங்கிய இத்தபோதனரைக் கண்ட இந்திய மக்களுட் பலர் கிறிஸ்துமதம் ஒரு அந்நிய நாட்டு அநாசாரமென்ற தூர் அபிப்பிராயத்தை ஒழித்தனர். அவரைக் கண்ட கிறிஸ்தவர்கள், கிறிஸ்துபெருமானும் அவரைப் போலவேதான் சாந்த சொரூபியாகத் தோன்றியிருப்பாரென்று எண்ணினர்.

அசரியா அத்தியட்சர் மேற்கூறிய கருத்துக்களை மனப்பூர்வமாக ஆமோதித்தார். கிறிஸ்து சமயம் மேல்நாட்டுப் பிரிவினைகளை ஒழித்து ஒன்றுபடுவது எத்தனை அவசியமோ, அது இந்திய சமுதாயப்பாங்கில் விளங்கும் நலங்களைப் பயன்படுத்துவதும் அத்தனை அவசியமென்று அசரியா கருதி, ஆராதனை முறையில் சிற்சில சீர்திருத்தங்களைச் செய்தார். பிரசங்கங்களைக் கேட்டு மனந்திரும்பியவர்களைப் பார்க்கிலும் பாட்டுகளின் மூலமாக நெஞ்சுருகப்பெற்று கர்த்தருடைய ராஜ்யத்தில் பிரவேசித்தவர்களநேகர் என்று மேல்நாட்டு சுவிசேஷ ஊழியர் அனுபவார்த்தமாகக் கண்டிருக்கின்றார்கள். திருவாசகத்திற்கு உருகாத உள்ளம் மற்றொரு வாசகத்திற்கும் உருகாதென்பது தமிழ்நாட்டு முதுமொழிகளுள் ஒன்று. இக்கூற்றுகளுக்கிசைய, அசரியா தேவ ஆராதனையில் கீர்த்தனைகளுக்கு முதன்மையான இடத்தைக் கொடுத்தார். ஆராதனை ஆரம்பிக்குமுன் சபையோர் ஏகோபித்து ஆண்டவரை மனதாரப் போற்றிப் பாட ஏவுவர். சபையின் பூரண அங்கத்தினருக்குப் புகட்டப்படும் ஆயத்த அறிவுத் தொகுதியில், விசுவாசப்பிரமாணம் கர்த்தருடைய ஜெபம் முதலியவை

யுடன் சில நல்ல சீர்த்திருத்தங்களையும் சேர்த்திருந்தார். திருமணம் முதலிய சுபசம்பவங்களில் ஹிந்து வழக்கங்களில் நன்மையான வற்றைப் புகுத்தார். சபைக் கண்காணிப்பு முறையிலும் கிராமப் பஞ்சாயத்திற்கும் கிராமத்தலைவனுக்கும் ஜனங்கள் தொன்றுதொட்டுக் கொடுத்து வந்த கௌரவத்தையும் காட்டிய பணிவையும் அவர்கள் கிறிஸ்தவர்களான பின்பும் கொடுக்கவேண்டுமென்று கற்பித்தார். டோர்னக்கல் அத்தியட்ச ஆலயத்தின் அமைப்பிலும் இக்கருத்தை அசரியா அனுசரித்தாரென்று ஏற்கனவே கூறியுள்ளோம்.

இரண்டாவதாக இந்தியக் கிறிஸ்தவ நூற்களஞ்சியத்திற்கும் அவர் சில அரிய நூல்களை எழுதிக்கொடுத்தார். டோர்னக்கல் ஆதீனத்தைச் சேர்ந்த கற்றோரும் கல்லாதோரும் அடங்கிய பற்பல சபைகளில் பல வருடங்களாக வேதோபதேசம் புகட்டி வந்தார். அதனால் அடைந்த அநுபவத்திலிருந்து, இந்தியச் சபைகளுக்கு வற்புறுத்திப் போதிக்க வேண்டிய விசேஷ உண்மைகளும் உபதேசங்களும் யாவையெனக் கண்டார். அவைகளைக் குறித்து தாம் பெற்றிருந்த ஆழ்ந்த வேத அறிவுக்களஞ்சியத்திலிருந்து சிறந்த மணிகளைப் பொறுக்கி நூல்க ளாகத் தொகுத்தார். விசேஷமாக இரண்டு ஒழுக்கங்களைக் குறித்து திருமறை கூறுவதையெல்லாம் தெளிவாக எடுத்துக் கூறுதல் அவசிய மென்றுணர்ந்தார். அவற்றுள் ஒன்று கிறிஸ்தவ இல்லறம். நமது நாட்டில் பெண்பாலாருக்குச் சிற்சில சலுகைகள் இருந்தன. என்றாலும் அவர்களுக்கு விவாக நிலைமையில் ஆண்களுக்கிருந்த சில உரிமைகள் கிடையாது. ஒருவன் ஒரே மனைவியை மாத்திரமே மணந்துகொள்ள வேண்டுமென்றும், மணந்துகொண்ட மனைவியை எளிதில் தள்ளிவிடக் கூடாதென்றும், புதிய கிறிஸ்தவர்களுக்குப் போதித்தல் அவசியமாயிருந்தது. அதோடுகூட கிறிஸ்தவ வீடு பிள்ளை களை ஒழுக்கத்திலும், ஞானத்தின் ஆரம்பமாகிய தெய்வ பயத்திலும் பயிற்றுவிக்கும் பயிற்சிசாலையாயிருக்க வேண்டுமென்றும் வற்புறுத்து வது அவசியமாயிருந்தது. அதனால் கிறிஸ்தவ இல்லறத்தைக் குறித்து அசரியா ஒரு சிறு நூல் எழுதினார். ஹிந்து சமுதாயத்தில் கடவுளுக்குக் காணிக்கை படைப்பதும், வறியோருக்கு அன்னதானம் அளிப் பதும் அறநெறியின் பண்புகளெனக் கருதப்படுகின்றன. கிறிஸ்து சமயத்திலும் ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக் கிறான் என்று சொல்லி, தானமளிப்பது பக்தரின் கடமைகளுள் பிர தானமான கடமையென்று காட்டியிருக்கிறது. கிறிஸ்தவர்கள் இக் கடமையை எந்தெந்த முறையில் நிறைவேற்ற வேண்டுமென்றும், எந்த நோக்கத்தோடு, எந்த அளவில் தமக்கு ஈசன் உவந்தளித்த பொருளை அவருக்குக் காணிக்கையாகப் படைக்கவேண்டுமென்றும்

எடுத்துக் காட்ட அசரியா மற்றொரு நூல் வரைந்தார். குருமார், உபதேசிகராகிய சபைத் தலைவர்களுக்கும் ஏனைய சபையோருக்கும் வேத அறிவைப்புகட்ட சில வியாக்கியானப் புஸ்தகங்களும், ஜெபத்திற்கும் தியானத்திற்கும் உணவும் ஊக்கமும் அளிக்கத்தக்க சில கைவல்யங்களும் அவர் எழுதியுள்ளார். அவர் எழுதிய நூல்கள் சென்னைக் கிறிஸ்தவப் பிரசுரக் கழகத்தார் வெளியிட்டிருக்கின்றார்கள். அவை அடியில் கண்ட தலைப்புகளுள்ளவை: (1) பரிசுத்த விவாகம், (2) கிறிஸ்தவ இல்வாழ்கை, (3) பரிசுத்த ஞானஸ்நானம், (4) ஓய்வுநாள், (5) இந்தியாவும் கிறிஸ்தவ இயக்கமும். இவற்றுள் முதலாம், நான்காம், ஐந்தாம் இலக்கமிட்டவை தமிழ், தெலுங்கு, ஆங்கிலமாகிய மூன்று பாஷைகளிலும் வெளிவந்திருக்கின்றன. இவை தவிர தியானத்திற்கடுத்த வியாக்கியான நூல்கள் 1, 2 கொரிந்தியர் வெளிப்படுத்தின விசேஷம், யோபின் புஸ்தகம் ஆகிய வேதபகுதிகளுக்கும் எழுதியுள்ளார். அவருக்கிருந்த பொறுப்பான வேலையைச் செய்ய அவர் ஊர் ஊராய் அலைந்துகொண்டிருந்தும், புத்தகங்கள் எழுதச் சமயம் கண்டுபிடித்தது ஆச்சரியமே. எழுத்து வேலையிலும் அத்தியட்சரின் வாழ்க்கைத் துணைவியாகிய அன்பம்மாள் அவருக்குப் பெரிய ஒத்தாசை செய்தனர்.

கிறிஸ்து சமயப் புறக்கோலத்தை இந்திய மயமாக்குவதற்கு அடுத்தபடியாக, கிறிஸ்து சமுதாயத்திற்குள் சபைகளென்றும் மிஷன் சங்கங்களென்றும் இரு பிரத்தியேகமான இலாகாக்கள் வகுக்கப் பெற்றிருந்தது நீங்கவேண்டும். துவக்கத்தில் கிறிஸ்து சமயத்தைத் தழுவியவருள் பெரும்பாலார் தரித்திரரும் கல்லாதவர்களுமாயிருந்தனர். மேல்நாட்டு மிஷனெரிமார் அவர்களைச் சபைகளாகக் கூட்டிச் சேர்த்து, அவர்களுக்கு ஆலயங்களைக் கட்டி, குருக்களை நியமித்து, தற்காத்து வழிநடத்தி வந்தனர். இரண்டாம் மூன்றும் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் அறிவிலும் அநுபவத்திலும் தேர்ச்சியடைந்து விட்டார்கள். சபைகளின் ஆதரிப்புக்குப் பண உதவியும் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அப்பொழுதும் மிஷன் ஸ்தாபனங்களில் மிஷனெரிமார் தலைமைதாங்கி நிற்க, இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு உதவி ஊழியராயிருக்கும் சிலாக்கியம் கிடைத்ததே தவிர வேறு சலுகைகள் ஒன்றும் கிடைக்கவில்லை. கிறிஸ்து சமய முன்னேற்றத்தைக்குறித்து ஆலோசிக்கவும் திட்டங்கள் வகுக்கவும் பொறுப்பான உத்தியோகங்களை வகிக்கவும் இடமில்லாதிருந்தது. எடின்பரோ மாநாட்டுக்குப் பிறகு, மிஷன் சங்கங்கள் செய்யும் சகல பணிகளும் அந்நிய நாட்டாராகிய மிஷனெரிமாரின் தனிப்பட்ட அதிகாரத்தின் கீழல்ல, சுதேச சபைகளின் மேற்பார்வையில் அவற்றின் சேவையாக நடைபெறுவதே

கிறிஸ்து சமயத்தின் வளர்ச்சிக்கு அநுகூலமாக விருக்குமென்ற எண்ணம் பிறந்தது. ஆதலால் படிப்படியாக சபைகள் பெருகவும் மிஷன் சங்கங்கள் சிறுகவும் தக்க திட்டங்கள் வகுக்க மிஷன் ஸ்தாபனங்கள் நிறுவப் பெற்றிருந்த சகல நாடுகளிலும் முயற்சிகள் ஆரம்பித்தன. முதல் முதலாக மிஷன் சங்கங்கள் தனித்தனியே செய்து வந்த சுவிசேஷப் பிரசார வேலையையும், கல்வி வைத்தியத் துறைகளில் செய்துவந்த பரோபகாரச் சேவையும் ஒத்துழைப்பின் மூலமாகப் பலப்படுதல் அவசியமென்று மிஷன் சங்கத் தலைவர்கள் உணர்ந்தார்கள். அதற்காக இந்தியா, சீனு, ஜப்பான் முதலிய தேசங்களில் நாஷனல் மிஷனெரி ஆலோசனைச் சங்கங்களை ஏற்படுத்தினர்கள். சில வருடங்களுக்குப்பின் அவற்றை மிஷனெரி ஆலோசனைச் சங்கங்களென்றல்ல, கிறிஸ்தவ ஆலோசனைச் சங்கங்களென்றழைப்பதே பொருந்துமென்றும், அச்சங்கங்களில் சுதேச சபைகளின் பிரதிநிதிகள் பலர் இருக்கவேண்டுமென்றும் தலைவர்கள் தீர்மானித்து அப்படியே செய்தனர். இந்திய நாஷனல் கிறிஸ்தவ ஆலோசனைச் சங்கத்திற்கு அசரியா அத்தியட்சர் 1929-ம் ஆண்டு தலைவராக நியமிக்கப் பெற்றார். அப்பொழுது தொடங்கி அவர் மரணபரியந்தம் அப்பதவியை அவரே வகித்துவந்தார். அதன் மூலமாக, நமது நாட்டின் கிறிஸ்தவ இயக்கத்தின் தீவிர முன்னேற்றத்திற்கு அசரியா ஆற்றிய உதவி பெரிது.

இந்திய நாஷனல் கிறிஸ்தவ ஆலோசனைச் சங்கத்தின் (என்.ஸி.ஸி.) பிரதான வேலையாதெனில், மிஷனெரி சங்கங்களின் அநுபவத்தையும், ஆள் பலத்தையும், பொருளாதாரத்தையும் ஒருங்கு சேர்த்து, உத்வேகத்துடன் மாறிக்கொண்டிருக்கும் இந்திய சமுதாயப் பாங்கிற்கும், நாட்டின் தேவைக்கும், கிறிஸ்து சமய முன்னேற்றத்திற்கும் ஏற்றபடி பயன்படுத்திக்கொள்வதே யாகும். மிஷன் சங்கங்கள் தாம் ஆற்றும் திருப்பணியை மூன்று துறைகளில் நடத்தி வருகின்றன: கல்வி, மருத்துவம், சுவிசேஷப் பிரசாரம். கல்வித் துறையில் என்.ஸி.ஸி. யின் மூலமாக இந்தியாவிற்கு, விசேஷமாகத் தென் இந்தியாவிற்கு, நன்மை பெருகிற்று. 1928-ம் 29-ம் ஆண்டுகளில், கிறிஸ்தவக் கலாசாலைகள் செய்துவரும் சீரிய சேவையைப் பலப்படுத்தி, அது முதற்தரமான சேவையாக விளங்கச் செய்வது எப்படி என்று என். ஸி. ஸி. ஆலோசித்தது. உயர்தரக் கல்வியைச் சீர்திருத்தி, அதை முன்னிலும் அதிகப் பயனுள்ளதாக்க வேண்டுமென்ற கருத்து நாடெங்கும் பரவிற்று. தற்கால மேல் நாட்டுக் கல்விச்சுடரை இந்நாட்டில் பரப்புவதில் மிஷனெரிக் கலாசாலைகள் ஒப்புயர்வற்ற முயற்சியெடுத்து வந்தன. அவற்றைப்

போன்ற சிறந்த கலாசாலைகள் வேறு இங்கு இருந்ததில்லை. எனினும் அவற்றிற்குப்பின் தோன்றிய அரசாங்கக் கலாசாலைகளும் ஹிந்துக்களாலும் முகமதியர்களாலும் நிறுவப்பெற்ற சில கலாசாலைகளும், மிஷனெரி கலாசாலைகளைக் காட்டிலும் சிறந்தனவாக விளங்கின. அவற்றிற்கு வேண்டிய மூலதனமும், ஏற்ற கட்டடங்களும், சோதனை சாலைகளும் இருந்தன. கிறிஸ்தவக் கலாசாலைகளுக்குப் பெரிய புகழை ஈட்டிவைத்த உவில்லியம் மில்லர் பண்டிதர், இந்தியாவில் சுவிசேஷத்தைப் பரவச் செய்வதில் ஈட்டிக்கு முனை எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு மிஷனெரிக் கலாசாலைகளின் மூலமாக கிறிஸ்து பெருமானின் வாழ்க்கைச் சிறப்பையும் போதனையின் மேன்மையும் இந்திய வாலிபருக்கு எடுத்துப் புகட்டுவதும் அவசியமாயிருக்கிறதென்று கூறியிருந்தார். ஆதலால் இக்கலாசாலைகள் முன்போல புறமத வாலிபரைக் கவர்ந்துகொள்ள வேண்டுமென்றால், நாட்டின் கலாசாலைகளுள் முதன்மை பெற்றிலங்க வேண்டும். அவை தொகையிலல்ல; தாம் புகட்டும் கல்வியின் தரத்தில் முதலிடத்தை மறுபடியும் வகிக்கவேண்டும். அதற்கு வழி வகை யாதெனக் கண்டு அறிவிக்க இங்கிலாந்து, அமெரிக்கா தேசங்களின் ஆசிரிய சிரேஷ்டருட் சிலர் இங்கு போந்து, மிஷனெரிக் கலாசாலைகளைக் கண்டு அவற்றின் தாரதம்மியத்தைச் சீர்தூக்கிப் பார்த்தல் அவசியமென்று, என்.ஸி.ஸி. தீர்மானித்தது. இத்தீர்மானத்தை நிறைவேற்ற ஏ. டி. லின்ட்சே பண்டிதரின் தலைமையில் ஒரு கமிட்டி புறப்பட்டு வந்தது. அந்தக் கமிட்டி செய்த விசாரணையின் பயனாகவே, சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலையின் தாம்பரம் ஸ்தாபனம் விளைந்தது. அக்கலாசாலை சென்னை எஸ்பிளநேடில், நெருக்கமும் சந்தடி நிறைந்ததுமான இடத்திலிருந்து பெயர்ந்து முந்நூறு ஏக்கரா விஸ்தீரணமுள்ள அகன்ற வனத்திற்குச் சென்றது. அங்கு அது மாணவரும் ஆசிரியரும் குடியிருந்து கல்வி மாத்திரமல்ல ஒழுக்கமும் கற்றுக்கொள்ளத் தக்க காற்றோட்டமுள்ள பெரிய கட்டடங்களும், விளையாட்டுக் கட்டடங்களும், அகன்ற பாதைகளும், சிங்காரச் சோலைகளும் நிறைந்த கலைவளர்க்கும் சிறிய பட்டணமாகி விட்டது. அக்கலாசாலையின் பழைய மாணவராகிய அசரியா இவ்வுன்னத தேர்ச்சியைக் கண்டு எவ்வளவு பெருமை கொண்டார் என்பதற்கு ஒரு சிறிய குறிப்புக் காட்டுவோம். 1938-ம் ஆண்டில் கூடவேண்டிய அகிலலோக மிஷனெரி மாநாடு சீனாவில் கூடுவதாக ஏற்பாடு செய்திருந்தது. அவ்வருஷம் அத்தேசம் ஜப்பானியரின் படையெடுப்பினால் மிகுந்த குழப்பம் அடைந்திருந்தது. ஆதலால் மாநாடு இந்தியாவில் கூடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இதைப் பற்றி என்.ஸி.ஸி. யோசித்துக் கொண்டிருந்தபொழுது, அதன்

பிரதமராகிய அசரியா தாம்பரமே அப்பெரிய மகாநாடு கூடத்தக்க இடமென்று சொல்லி தமது கல்லூரியைக் கௌரவப்படுத்தினர். பாரின் சகல நாடுகளிலுமிருந்து கூடிய கிறிஸ்தவத் தலைவர்கள் தாம்பரத்தைப் பார்த்துப் புகழ்ந்தபோது, அசரியாவிற்கு அளவற்ற திருப்தி உண்டாயிற்று.

லின்ட்சே கமிஷன் விடுத்த அறிக்கையின் பலனுக மற்ருெரு கல்லூரியும் சென்னையில் நிறுவப்பெற்றது. உவெஸ்லி காலேஜ் என்றிருந்த இரண்டாந்தரக் கலாசாலை மறைந்து மெஸ்ற்றன் உபாத்தி மைப் பயிற்சிக் கலாசாலையாகத் தோன்றிற்று. அதன்பின் வேலூரி லிருந்த வைத்தியக் கல்விச்சாலை, பெண்களுக்கு மாத்திரமல்ல ஆண் களுக்கும் உயர்தர வைத்தியப் பயிற்சியளிக்கும் கலாசாலையாக வளர்ந் தது. இவை யாவற்றிலும் அசரியா மிகுந்த ஊக்கம் காட்டினர். செய்யக்குறித்த வேலை எத்துணை பிரயோஜனமானதாயிருந்தாலும், அதைச் செய்து முடிப்பதற்கு அவசியமான பொருளும், திறமையும், தியாக சிந்தையுமுள்ள செயலாளரும் கிடைப்பது நிச்சயமாகுமுன் அக்கருமத்தைச் செய்வது ஞானமல்ல என்று அசரியா சாதிப்பார். மேலும், அப்புதிய வேலையில் இந்தியத் திருச்சபைக்கு உரிமையும் பொறுப்பும் இருக்குமோ அல்லவோ என்றும் அவர் உசாவுவார். அவர் என்.ஸி.ஸி.யின் அக்கிராசனராக இருந்த கடைசி வருஷத் தில் சங்கம் அங்கீகரித்த பிரரேபணைகளுள் ஒன்று வேலூர் மிஷனெரி வைத்தியப் பாடசாலை அகில இந்திய மிஷனெரிக் கலா சாலையாகப் பெருகவேண்டுமென்ற பிரரேபணையாம்.

இம் மூன்று புதிய ஸ்தாபனங்களும் தமிழ்நாட்டில் நிறுவப் பெற்றது, தமிழனுகிய அசரியாவிற்கு மிகப் பெருமிதமூட்டியதென் பது சொல்லாமலே விளங்கும். அவர் கூறியது: சென்னையிலும் அதற் கருகிலும் ஒரு வைத்தியக் கல்லூரி, ஆண்களுக்கொன்றும் பெண்களுக் கொன்றுமாக இரண்டு சர்வகலாசாலைகள், அப்படியே இரண்டு உபாத்திமைப் பயிற்சிக் கலாசாலைகள், அவை ஒவ்வொன்றிலும் மாணவர் மாணவிகள் வசிக்க விடுதிகளும் குவிந்து நிற்கின்றன. ஆகவே தென்னிந்தியத் திருச்சபைக்கு என்னே பெரும் சிலாக்கியம் கிட்டியுள்ளதென்றெண்ணி அகமகிழ்க. அதோடுகூட இக்கலா நிலையங்களிலிருந்து நாம் நன்மைபெறுவது ஒருபக்கமிருக்க, அவற்றை ஆதரிப்பது நம்மேல் விழுந்த பொறுப்பென்றும் உணர்தல் அவசியம். சுதந்திர இந்தியாவில் நமக்கும் ஒரு கௌரவமான நிலை இருக்க வேண்டுமாகில், இவைகளை நமது சொந்தமாக்கிக்கொண்டு, முன் னேறி, ஒரு கிறிஸ்தவ யூனிவர்சிற்றியாக்கிவிடுதல் அவசியம். இது நமக்கு நமது மூத்த சகோதரராகிய மேல்நாட்டுக் கிறிஸ்தவர்கள்

வைத்திருக்கும் உத்தரவாதம். இவ்வுன்னத இலட்சியத்தைக் கைப் பற்றுவதற்கு நமது குழுவில் போதிய கல்வியறிவும் திறமையும் இருக்கிறதென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால் பணம் இருக் கிறதோ என்பதுதான் சந்தேகம். என்றாலும் நாம் பொது நன்மைக் கென்று கொடுக்கக்கூடிய அளவு கொடுக்கக் கற்றுக்கொள்ளவில்லை என்பதில் சந்தேகமுண்டோ?"

கல்வித்துறையிலும் வைத்தியத்துறையிலும் என்.ஸி.ஸி. எடுத்த முயற்சிகளுட் சிலவற்றைக் கூறிவிட்டோம். இனி சுவிசேஷப் பிரசாரத்துறையில் இச்சங்கம் சபைகளுக்குச் செய்த உதவியிற் சிலவற் றைக் கவனிப்போம். தொகுதி இயக்கங்களின் வழியாகக் கிறிஸ்து சபையின் நிழலுக்குள் வந்து சேர்ந்த கல்வியறிவற்ற ஏழை மக்கள் கிறிஸ்துவின் போதனைகளைக் கிரகித்துக்கொண்டு அவை காட்டும் நன்னெறியிற் செல்லவேண்டுமெனின் அவர்களது மனக்கண்கள் திறக்கப்படுதல் அவசியம். அசரியா அத்தியட்சர் இந்த இலட்சியத் தைத் தமது ஆதீனத்தின் குருமார் ஆசிரியர் முன் வைத்து, சபையோ ரில் வயது முதிர்ந்த ஆண்களும் பெண்களும் எழுத வாசிக்கக் கற்றுக் கொள்ளுவதற்குப் போதிய வசதிகளை ஏற்படுத்தினர். இராப்பள்ளிக் கூடங்களில் எத்தனை ஆயிரம் பேர் கல்வி கற்றுக்கொண்டனர் என்று முன்னரே பார்த்தோம். இத்தகையத் தேர்ச்சி டோர்னக்கல் அத்தி யட்ச ஆதீனத்திலிருந்த ஏழை மக்கள்மாத்திரம் அடைந்தது போதா தென்று அசரியா கருதினர். இந்தியக் கிறிஸ்தவ சமுதாயம் முழு வதுமே இத்தேர்ச்சியடையவேண்டுமென்று அசரியா விரும்பினர். சிறுவருக்குக் கல்வி கற்றுக்கொடுக்கும் சாதாரண முறையைப் பார்க் கிலும் எளிதானதும், அதி தீவிர தேர்ச்சியை அளிக்கக்கூடியதுமான ஒரு நூதன முறையை லாபாக் பண்டிதர் காட்டியிருந்தார். அம் முறையை அனுசரித்துத் தமிழ், தெலுங்கு முதலிய இந்திய பாஷை களில் வாசகத் தாள்களும் சிறு புத்தகங்களும் எழுதப்பட்டிருந்தன. இந்த உபகரணங்களை அமைப்பதற்கும், அவற்றை நாடெங்கும் கிறிஸ்து சபைகள் உபயோகிப்பதற்கும் வேண்டிய முயற்சிகளை என்.ஸி.ஸி. எடுத்துக்கொண்டது. வயது முதிர்ந்த கிறிஸ்தவ ஜனங்களுக்குக் கற்பிப்பதற்கென்று ஒரு பொது நிதியும் சங்கம் சேகரித்துவைத்தது. சபைகள் இப்பொது நிதியினின்று உதவிபெற்று தத்தம் சேகரங்களில் முதியோர் கல்வியை அபிவிர்த்தி செய்வதற் கென்று பிரத்தியேக ஆசிரியரை நியமிக்கவேண்டுமென்றும் ஓய்வின்றி முயன்றுவருகின்றது.

அடுத்தாற்போல, சபைகளின் கல்வித் தேர்ச்சிக்கும் ஆத்மீக வளர்ச்சிக்கும் சாதகமாக விளங்குவது மற்றொன்றுளது. குன்றாத

ஊக்கமும், ஊக்கத்தோடுகூட வேத அறிவும் நிறைந்த குருமார் தேவை. இத்தேவையைப் பூர்த்திபண்ணுவதற்கென்று, அசரியா முன் ஜாக்கிரதையாக டோர்னக்கல்லில் ஒரு வேத பாடசாலையை நிறுவினர். அது வருடத்திற்கு வருடம் முன்னேற்றமடைவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்தார். தாம்பரம் மாநாட்டுக்குப் பின் என்.வி.வி. ஏற்ற குருமாரையும் உபதேசிகரையும் வேண்டிய அளவு பயிற்றுவிக்கத்தக்க வேத பாடசாலைகளைத் தேசத்தின் பற்பல இடங்களிலும் ஏற்படுத்த முற்பட்டது. ஆங்காங்கு தனித்தனியே சபையின் கிளைச் சங்கங்களுள் ஒவ்வொன்றும் நிறுவியிருக்கும் வேத பாடசாலைகளைப் பலப்படுத்துவது எங்ஙனமென்று ஆராய்ச்சிசெய்வதற்குத் திறமைவாய்ந்த ஒரு மிஷனெரியைச் சங்கம் நியமித்தது. அவர் செய்த ஆராய்ச்சியின் பயனாக ஒவ்வொரு பாஷை பேசப்படும் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு முதற்தரமான வேத பாடசாலையை ஸ்தாபிக்கவேண்டுமென்ற நோக்கம் பிறந்திருக்கிறது. தனித்தனியே சிறு சிறு வேத பாடசாலைகளை வைத்து நடத்திவந்த மிஷனெரி சங்கங்கள் இரண்டு மூன்று சேர்ந்து, பொதுவானதும் பெரிதானதுமான ஓர் பாடசாலையை நிலைநாட்ட முன்வந்திருக்கின்றன. இது நம் நாட்டில் வேத சாஸ்திர முன்னேற்றத்திற்கு மிகுந்த அநுகூலமாயிருப்பதோடுகூட சபைகளின் ஒன்றிப்புக்கும் ஒரு முதற்படியாகின்றது.

கிறிஸ்தவப் பொதுமக்களின் கல்வியறிவும், அவர்களுடைய தலைவர்களின் வேத அறிவும் சுவிசேஷப் பிரசாரத்திற்கு அடிப்படையான சாதனங்களென்று அசரியா நன்குணர்வர். 1903-ம் ஆண்டில் இந்திய மிஷனெரி சங்கத்தையும், 1905-ம் ஆண்டில் நாஷனல் மிஷனெரி சங்கத்தையும் ஏற்படுத்த முன்வந்த காலம் முதல், அசரியாவின் மனத்துள் இந்த எண்ணமும் விருப்பமும் குடிகொண்டிருந்தன. ஆதலால் டோர்னக்கல் ஆதீனத்தின் வளர்ச்சிக்கு அடையாளமாக முதியோருக்குக் கல்வி கற்பிக்கும் பாடசாலைகளும் ஒரு நல்ல வேத பாடசாலையும் அமைந்தபின்னர், டோர்னக்கல் சபை மிஷனெரி ஊழியத்தையும் செய்ய முன்வந்துவிட்டது. அப்படியே இந்தியாவின் சகல சபைகளும் துரிதமாக முன்னேற்றமடையவேண்டுமென்றும், அவை ஒவ்வொன்றும் சுவிசேஷப் பிரசார வேலையைத் தமது முதற் பொறுப்பாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் வற்புறுத்துவது அசரியாவிற்கு மிகப் பிடித்தமான ஒரு தொழிலாயிருந்தது.

1939-ம் ஆண்டில் தாம்பரம் மாநாடு கொளுத்திய பக்திச் சுவாலை இதயங்களில் அனல் வீசிக்கொண்டிருக்கும்பொழுதே,

என்.ஸி.ஸி.யின் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. புதிய உற்சாகத்தோடு திருச்சபையின் பற்பல பணிகளையும் பரிசோதித்துப் பலப்படுத்துவதற்கென்று கூடிய அவையின்கண் பெருத்தவோர்க் கவலையும் புகுந்தது. ஹிட்லர் போர் தொடுத்துவிட்டான். ஆகையால் கிறிஸ்து சமயப் பிரசாரம் செய்துகொண்டிருந்த ஜெர்மானிய மிஷனெரிமார் யாவரும் இந்திய அரசாங்கத்தின் சத்துருக்களாகி விட்டனர். அவர்களைப் பிடித்துச் சிறையில் அடைக்க நேர்ந்தது. மேய்ப்பனை இழந்த ஆடுகள்போல் அவர்கள் ஆதரித்துவந்த சபைகள் தவிக்கலாயின. பாடசாலைகளுக்கும் வைத்தியசாலைகளுக்கும் ஜெர்மனியிலிருந்தும், அது தாக்கிய மற்ற நாடுகளிலிருந்தும் வந்து கொண்டிருந்த பணம் உடனே நின்றுவிட்டது. என்.ஸி.ஸி. இந்திய சர்க்காரை அணுகி, ஜெர்மானியர்பேரிலிருந்த மிஷன் ஸ்தாபனங்களையும் பொருட்களையும் சத்துருவின் சொத்து என்று பாவித்து அபகரித்துவிடாமல், தன்னுடைய பொறுப்பில் அவற்றை யுத்தம் ஓயுமட்டும் வைத்துவைக்கக் கேட்டுக்கொண்டது. யுத்தத்தினிமித்தம் தம் வருவாயை இழந்துவிட்ட மிஷன் ஸ்தாபனங்களைக் கைகொடுத்துத் தாங்குவதற்கென்று ஒரு நிதியையும் சங்கம் திரட்டிற்று. இதனால் அகதிகளாய் நின்ற சபைகளுக்குச் சமய சகாயம் செய்ய என்.ஸி.ஸி. சகல சபைகளையும் தூண்டிவிட்டது.

கடைசி பரியந்தம் அசரியா ஆங்கிலத் திருச்சபையின் அத்தியட்சராகவே இருந்துவிட்டார். இன்று அவர் உயிரோடிருப்பின் மூன்று பெரிய சபைகளின் ஒன்றிப்பால் ஏற்பட்ட ஒரு பெரிய இந்திய சபையின் ஓர் சிறந்த அத்தியட்சராக விளங்குவர். இந்த வாய்ப்பு அவருக்குக் கிட்டாவிடினும், என்.ஸி.ஸி.யின் அக்கிராசனராக அவர் தமது முதிர்ந்த அநுபவத்தையும் அறிவையும் இந்தியாவின் சகல புராட்டஸ்டண்ட் சபைகளுக்கும் தாராளமாகப் பகிர்ந்துகொடுத்தார். அவர் தம்மை ஒரு தொகுதிக்கே உரியவராகக் கருதாது, இந்தியக் கிறிஸ்தவ இயக்கத்தின் முன்னணியில் நின்ற தளகர்த்தனயினர். ஆதலால் அவர் கிறிஸ்து சமுதாயமனைத்தின் மதிப்புக்கும் நன்றிக்கும் அருகரானார். அவர் தலைமையின்கீழ் 1944-ம் ஆண்டில் கூடிய என்.ஸி.ஸி. பொதுக்கூட்டத்தில் இந்திய சபையின் பிரதிநிதிகளாக வந்திருந்தவர்களின் தொகையே பெரிதாயிருந்தது. அக்கூட்டத்தின் சகல விசாரணைகளிலும், அலுவல்களிலும் இந்தியக் கிறிஸ்தவர்களுக்கே அதிகப் பங்கு கிடைத்தது. கடந்த பதினறு வருடங்களுக்குள் இந்தப் பெரிய மாறுதல் ஏற்பட்டிருந்ததையும், இந்தியத் திருச்சபை எவ்வளவு தூரம் முன்சென்றுவிட்டது என்பதையும் பார்த்து அசரியா மிகுந்த சந்தோஷமடைந்தார். மெய்யாகவே மிஷன் சிறுகவும் சபை பெருகவும் ஆரம்பித்துவிட்டது.

அசரியாவின் தலைமையின்கீழ் என்.வி.வி. இந்நாட்டில் கிறிஸ்துவின் பரம ராஜ்யம் நிலைபெற்றோங்குவதற்கு ஒப்பற்ற பணி ஆற்றியிருக்கிறதென்று இந்திய சபைகள் யாவும் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளும். என்றபோதிலும் முற்போக்கான தாற்பரியங்கள் கொண்டிருந்த சில வாலிப இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு சலிப்பும் இருந்தது. அசரியாவும் வாலிபனாக இருந்தபொழுது முற்போக்கான எண்ணங்கள் கொண்டிருந்தார். மேல்நாட்டு மிஷனெரிமார் செய்த நன்மை அளவற்றதெனினும், அவர்களிடம் நன்மை பெற்று அவர்கள் பராமரிப்பிலிருந்த கிறிஸ்தவ சமுதாயத்தில், அடிமைத்தனமான மனோபாவனையும் நடத்தையும் ஒரு சிறிது தோன்றிக்கொண்டேயிருந்தன. இது இந்தியச் சபையின் முன்னேற்றத்திற்கும், சுவிசேஷப் பிரபல்லியத்திற்கும் முட்டுக்கட்டையாக விளங்கிற்று. இந்தியச் சபைக்கு மத விஷயத்தில் பூரண விடுதலை கிடைக்கவேண்டும். அது கிடைக்கவேண்டுமென்றால் மேல்நாட்டு மிஷனெரிகளின் ஆதிக்கம் ஒழியவேண்டும். கிறிஸ்துபெருமானை வழிபடுவதிலும், அவருடைய போதனையை வியாக்கியானப்படுத்துவதிலும், சுயமான இந்திய வேத சாஸ்திரமொன்றை நீர் ஊற்றி வளர்ப்பதிலும், இந்தியக் கிறிஸ்தவர்களுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்படவேண்டும் என்றெல்லாம் அசரியாவே ஒரு காலத்தில் வாதாடியிருக்கின்றார். என்றாலும் காலம் செல்லச் செல்ல, சீர்திருத்தம் செய்வதில் அவசரம் உதவாதென்று கருதியவர்போல், அசரியா நடந்துகொண்டார். விசேஷமாக இந்தியத் திருச்சபைக்குப் பூரண சுதந்திரம் தேடி வைப்பதில் அவர் மிதவாதியாகிவிட்டார். மேல்நாட்டிலிருந்து கொணரப்பெற்ற சபை நிர்வாக முறைகளையும், ஆராதனை ஒழுங்குகளையும், சில முக்கியமற்ற கொள்கைகளையும் இந்தியச் சபை மறந்துவிட்டு, கிறிஸ்துவின்பால் தான் கொண்டுள்ள பக்தியைத் தனக்குச் சொந்தமான இந்திய நாகரிகத்திற்கும், தன் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு நிர்மாணித்துக்கொள்ள இடம்பெற வேண்டுமென்று வாலிபக் கிறிஸ்தவர்கள் கூக்குரலிட்டனர். அப்பொழுது அசரியா, எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு, திருச்சபையின் ஈராயிர வருட அநுபவமாகிய ஆலையினின்று வடியும் கருப்பஞ்சாறாகிய கிறிஸ்தவ பாரம்பரியத்தை இந்தியச் சபை அலக்ஷியம்பண்ணக்கூடாதென்று வாதித்தார். முதல் முதலாக கிறிஸ்துவைப்பற்றிக்கொண்டு, அவரை அறியும் அறிவின் மேன்மையைக் கண்டுகொண்ட பின்னரோ, இந்தியத் திருச்சபை சடங்காசாரங்களையும், ஆளுகை முறைகளையும், வேத சாஸ்திரக் கொள்கைகளையும் சீர்தூக்கி நலமானவற்றை ஏற்றுக்கொண்டு, மற்றவைகளைக் களைந்துவிடக்கூடிய நிலையை எய்தும். கிறிஸ்துவைக் கலப்பற்ற வண்ணமாய் ஆதித்திருச்சபை அறிந்துகொண்டதுபோல்

இந்தியத் திருச்சபை அறிந்துகொள்ளுவதற்கு மேற்கூறியவை தடையாகவன்றோ இருக்கின்றன. கிறிஸ்துவின் திவ்விய வதனத்தை மேல்நாட்டுக் கிறிஸ்தவ அநுபவமும், அதன் பிளவுகளும், வாக்குவாதங்களும் திரைபோல் மறைத்துக்கொண்டிருக்கின்றனவே என்று அங்கலாய்த்த முற்போக்கான சீர்திருத்தக்காரருக்கு அசரியா அநுதாபங் காட்டவில்லை. இந்த முற்போக்காளர் இந்தியத் திருச்சபைக்குத் தீங்கிழைப்பவர்களென்று அஞ்சியவர்போல், அவர்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சபையின் அதிகாரம் பெற்ற சங்கங்களிலும் கமிற்றிகளிலும் பிரஸ்தாபிக்க அசரியா இடங்கொடுக்கவில்லை. தாம்பரத்தில் கூடின அகிலலோக மிஷனெரிக் கழகத்திற்கு இந்தியப் பிரதிநிதிகளை என்.ஸி.ஸி. தெரிந்தெடுத்தபொழுது இந்த முற்போக்காளருள் ஒருவருக்குமேல் இடங்கொடுக்க அசரியா அநுமதிக்கவில்லை. பாரம்பரியத்தையும், சரித்திர காலத்தில் சிறிது சிறிதாக வளர்ந்துவந்த சம்பிரதாயங்களுள் ஒரு பகுதியையும் பாராட்டும் ஆங்கிலச் சபையில் அசரியா நெடுநாள் அடைந்த பயிற்சியினால் அவருடைய நோக்கமும் கருத்தும் சற்று குறுகினவையாக விளங்கினவோ? அல்லவென்றால் முற்போக்காளர் எட்டாப்பழத்திற்குக் கொட்டாவிவிடும் மதியீனர்; விரும்பத்தக்கது பெரிதாயிருப்பினும் கிடைக்கக்கூடிய சிறியதை அலக்ஷியம்பண்ணக்கூடாதென்று அசரியா நினைத்தாரோ? சொல்லுவதற்கில்லை. தவிர முற்போக்காளர் ஒருபக்கமிருக்க, பிற்போக்காளரும் பலர் இருந்தனர். காரியம் கைகூடவேண்டுமென்றால் சமரசம் பேசக் கற்றுக்கொள்ளவேண்டும். உதாரணமாக தென் இந்தியச் சபை ஒன்றிப்புத் திட்டத்தில், அடிக்கடி இருதிறத்தாருக்கும் பிடித்தமான மூலக்கொள்கைகளையே தேடிப்பிடிப்பது அவசியமாயிற்று. அப்படி இணக்கமும் சமரசமும் இல்லாவிடத்து, அவர் மிக்க ஆவலோடு விரும்பிய சபை ஒற்றுமை ஏற்படாதுபோகும் என்றும் அசரியா எண்ணியிருப்பார். ஆதலால் இவ்விஷயத்தில் அசரியாவைக் குறைகூறுவது ஒருவேளை குற்றமாகும். அவர் மரித்தபின் என்.ஸி.ஸி. நிர்வாகக் கமிற்றி கூடியபொழுது, அசரியா சிறந்தவோர் "காரிய நிர்வாகர்" என்ற புகழுரை சாற்றிற்று. கனவுகளைக் காண்பதும், கண்ட கனவுகளையே பின்பற்றி ஓடுவதும், காரிய நிர்வாகிக்குப் பொருந்தாது. பொறுப்பற்ற தீர்க்கதரிசி அப்படிச் செய்யலாம். ஆதலால் அசரியா மிதவாதியாக நிற்பதையே தெரிந்துகொண்டார் எனல் தகும்.

11. கிறிஸ்தவ உலகின் தொண்டன்

டோர்னக்கல் அத்தியட்ச ஆதீனத்திற்கும் இந்தியத் திருச்சபைக்கும் அசரியா ஆற்றிய பணி சிறந்த பணியே. என்றாலும் அவருடைய சேவை இம்மட்டோடு நின்றுவிடவில்லை. இளவாலிபனாகவிருந்த பொழுதே அவருடைய மூபற்சி கடல்கடந்து சென்றது. முதல் முதலாக 1907-ம் ஆண்டில் ஜப்பானில்கூடிய கிறிஸ்தவ மாணவர் மகாநாட்டிற்கு அவர் சென்றதைக் கண்டோம். 1910-ம் ஆண்டில் முதல்முதலாக புராட்டஸ்டாண்ட் சபைகள் நிறுவிய மிஷனெரி சங்கங்களின் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து தாம் மேற்கொண்ட திருப்பணியின் முன்னேற்றத்தைக் குறித்து ஆலோசிப்பதற்கென்று எடின்பரோ பட்டணத்தில்கூடிய மகாநாட்டின்முன் அசரியா எழுந்துநின்று என்ன வைராக்கியத்தோடு பேசினாரென்றும் பார்த்தோம். ஆங்கிலச் சபையின் அத்தியட்சர் யாவரும் பத்து வருடங்களுக்கு ஒருமுறை கான்டர்பரி பிரதம அத்தியட்சரின் தலைமையின்கீழ் லாம்பெத் மண்டபத்தில் கூடுவர். அப்பெரிய ஆலோசனைக் கூட்டத்திற்கு அசரியா 1920-ம் ஆண்டிலும் 1930-ம் ஆண்டிலும் சென்றிருந்தார். 1930-ம் ஆண்டில் தென் இந்தியச் சபை ஒன்றிப்புத் திட்டத்தை அச்சபைக்கு விளக்கிக் காட்டி அதன் ஆதரவைத் தேடத்தக்க நல்ல சமயம் அசரியாவிற்குக் கிடைத்தது. அச்சமயத்தை அவர் நன்கு பயன்படுத்திக்கொண்டார். இந்தியாவில் பிரிந்து நிற்கும் கிளைச்சபைகள் ஒன்றுபடுவது எத்தனை அவசியமும் அவசரமுமான விஷயமென்று அசரியா எடுத்துக் கூறியதை முன்குறித்துள்ளோம். இந்தியாவிலும், மிஷனெரிச் சேவை நடைபெற்றுவரும் கிழக்குத் தேசங்களிலும் உள்ள சபைகள் மட்டுமல்ல, அவற்றின் அன்னைகளென்றழைக்கத்தகும் மேல்நாட்டுச் சபைகளும் ஒன்றுபடுவது மிகவும் விரும்பப்படத்தக்க ஒரு எதிர்நோக்கென்ற எண்ணம் துரிதமாகப் பரவிவந்துகொண்டிருந்தது. ஆதலால் பிரிந்து நிற்கும் சபைகளை ஒன்றையொன்று அணுகச் செய்வதற்கும் அறிவும் அநுதாபமும் அவசியம். சபைகளுள் வழங்கி வரும் விசுவாச அறிக்கைகள், அவை கையாண்டுவரும் ஆளுகை முறைகள், அவை விரும்பி அனுசரிக்கும் அர்ச்சனைகள், ஆசாரங்கள் ஆகிய இலக்ஷணங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றுள் ஒற்றுமைக்கு அடிப்படையாக நிற்கக்கூடியவை எவையென்று கண்டுகொள்ளுதல், திருச்சபையின் பிளவுகளை நீக்குவதற்கு முதற்படியாக விளங்கும். ஆதலால் இவ்விசாரணையைச் செய்வதற்கு, புராட்டஸ்டாண்ட் சபைகள் யாவும் லாசேனில் 1927-ம் ஆண்டில்கூடிய ஆலோசனைக் கழகத்திற்கு பிரதிநிதிகளைத் தேர்ந்து அனுப்பியிருந்தன. அக்கழகத்திற்கும் அசரியா சென்றார். கிழக்கு நாடுகளில் மேல்நாட்டின் சபைப் பிரி

வினைகளைச் சிந்தனையின்றிப் புகுத்துவிட்டதால் விளைந்துள்ள தீமைகளை வெகு தெளிவாக எடுத்துக் காட்டினர்.

லாசேனிலிருந்து திரும்புங்கால் அசரியா இங்கிலாந்திற்குச் சென்று அதன் பல நகரங்களிலும் இந்தியாவில் கிறிஸ்து சமயம் அடைந்துவரும் அபிவிர்த்தியையும், தமது அத்தியட்ச ஆதீனத்தில் நடைபெறும் பலவகையான கிறிஸ்தவ ஊழியத்தையும்பற்றி உபந்நியாசங்கள் பல செய்தார். எஸ்.பி.ஜி. சங்கத்தின் சார்பாக வெஸ்ற்மின்ஸ்றர் அபியிலும், ஸி.எம்.எஸ். சங்கத்தின் சார்பாக திரு. பவுல் அத்தியட்ச ஆலயத்திலும் கூடிய பெரிய வருஷாந்தரக் கூட்டங்களில் அசரியா பிரசங்கித்தார். "இன்றைய இந்தியா" என்ற பொருளின்மேல், லண்டன் நகரத்திலிருந்து ரேடியோ சொற்பொழிவு ஒன்று செய்தார். ஆங்கில வேதாகம சங்கத்தின் வருடோற்சவத்தில், பிரதம மந்திரியாயிருந்த பால்ட்வினோடு அசரியாவும் அச்சங்கத்தை ஆதரித்துப் பேசினர்.

"அப்சர்வர்" (*Observer*) என்னும் பத்திரிகையின் நிருபர் அசரியா இங்கிலாந்தில் செய்த உபந்நியாசங்களை மிகவும் பாராட்டி எழுதிவந்தார். அவர் எழுதிய குறிப்புகளிலொன்று, இந்தியத் திருச்சபையில் பாட்டும் நாடகமும் எத்துணை பயன்படுகின்றன வென்பதாகும். "தீண்டாத குலத்தவருள் நூற்றுக்கு எண்பத்தைந்துபேர் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள். அவர்கள் கிறிஸ்து சமயத்தைத் தழுவும்பொழுது, அவர்களுக்கு வேதோபதேசம் புகட்டுவது குருமாருக்கு மலைப்பாயிருக்கிறது. இந்த இடைஞ்சலை மேற்கொள்ளவோர் உசிதமான முறை தெலுங்கு நாட்டில் கையாளப் பெறுகின்றது. அது காலக்ஷேபம், அல்லது வேதக்கதைகளைக் கீர்த்தனைகளாக அமைத்து இசைக் கருவிகளுடன் பாடுவதேயாம். ஹிந்துப் புராணக் கதைகளும் காலக்ஷேப வாயிலாகவே கல்லாதவர்களுக்குப் போதிக்கப் படுகின்றன. தெலுங்கு மிக இனிமையான மொழி. மேலும் தீண்டாஜாதியாருள் கவியியற்றும் திறமையும் பாடும் வாழும் நிரம்ப இருக்கின்றன."

மகாத்மா காந்தியைப்பற்றி அசரியாவின் மதிப்பு யாதென ஆங்கிலேயர் அறிய ஆசித்தனர். அசரியா அவர்களுக்குச் சொன்னது யாதெனில்: "கிறிஸ்து சமயத்தைக் குறித்து முன் இராத ஒரு அபிமானம் இன்று இந்தியாவில் பிறந்திருக்கிறது. அதைப்பற்றி டாக்டர் ஸ்ற்றுன்லி ஜோன்ஸ் தமது நூல்களுள் ஒன்றில் எழுதியிருப்பது உண்மையே. இவ்வபிமானத்தை எழுப்பியவைகளுள் ஒன்று காந்தியடிகள் கிறிஸ்துவைக் குறித்தும், அவருடைய மலைப்பிரசங்கத்தைக் குறித்தும் அடிக்கடி சிலாகித்துப் பேசியதேயாகும். இர்வின் பிரபு

வும் இந்திய மக்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்று விரும்புகின்றார். விசேஷமாக கிராமவாசிகளின் நிலைமையை உயர்த்துவதில் மிகுந்த கரிசனை காட்டுகின்றார். அவருடைய களங்கமற்ற பேச்சும், உண்மைத் தன்மையும் ஜனங்களுடைய மனதைக் கவர்ந்துகொண்டிருக்கின்றன. அவர் சிறந்த கிறிஸ்து பக்தனாக விளங்குகின்றார். ஆதலால் இந்தியர் அவரைப் போற்றுகின்றார்கள்."

"ரெக்கர்ட்" (*Record*) என்னும் மற்றொரு பத்திரிகையும் அசரியாவின் உபந்நியாசங்களைக் குறித்தும், அவர் டோர்னக்கல்லில் செய்து வந்த சிறந்த சுவிசேஷ ஊழியத்தைக் குறித்தும் விரிவாகவும் மிகச் சிலாகித்தும் எழுதியிருந்தது. அசரியா பர்மிங்காம் பட்டணத்திற்குச் சென்றதைக் குறித்து இப்பத்திரிகை பின்வரும் பிரசாரம் வரைந்திருந்தது. இது அத்தியட்சர் இந்தியாவிற்குத் திரும்புமுன் செய்யப்போகும் கடைசி உபந்நியாசமானதால், திரளான கூட்டம் ஆலயத்தின் தோட்டத்தில் செறிந்து நின்றது. அன்றைய அந்திப்பொழுது, மழை பனியில்லாமல், மனிதருக்கு இன்பந்தரத்தக்க நிலையிலிருந்தது. ஹாமில்டன் அத்தியட்சர் பீடம் வகித்தார். அசரியாவின் நீண்டகால நண்பர் எவ். எஸ். கோல்டன் பாதிரியார் பர்மிங்காம் சபையின் பேரால் அசரியாவிற்கு நல்வரவு கூறினர். ஒருமணிநேரமாக அசரியா டோர்னக்கல் அத்தியட்ச ஆதீனத்திலுள்ள கிராமங்களிலிருந்து, தொகுதி தொகுதியாக கிறிஸ்து சபைக்குள் பிரவேசித்திருக்கும் ஆயிரக்கணக்கான ஏழை இந்திய மக்களையும், அவர்கள் கிறிஸ்துவின் கிருபையால் அடைந்துவரும் சரீர ஆத்தும முன்னேற்றத்தையும் கூடிய சபையோரின் மனக்கண்முன் திரையில் படிந்த சித்திரம் போல் வரைந்துகொண்டிருந்தார். முடிவில் அவருக்கு நன்றி கூறிய ஒருவர் (குருவல்லாதவர்) சொன்ன வார்த்தைகளை நாம் என்றும் மனதில் இருத்திச் சிந்தை செய்தல் நலம். அவர் பேசினதாவது: "கிறிஸ்தவர்களனைவரும் என்னென்ன அபிப்பிராய பேதங்களுடையோராயிருப்பினும், நமது நாட்டிலும் புற நாடுகளிலும் செய்வதற்கவசியமாக நிற்கும் சுவிசேஷப் பிரசார வேலையில் முனைந்து நிற்குங்கால், நமது பிரிவினைகள் ஒழிந்துபோம்" என்பதே. இந்த வார்த்தைகள் அசரியாவின் செவிக்கு மிக இன்பமாயிருந்தன. இங்கிருந்து அவர் அயர்லாந்திற்குச் சென்று பின் தம் சொந்த நாடு திரும்பினர். 1930-ம் ஆண்டு கூடிய லாம்பெத் மாநாட்டி லிருந்து திரும்புகையில், அவர் வெகுகாலமாகக்கொண்டிருந்த ஒரு வாஞ்சையைப் பூர்த்திபண்ணிக்கொண்டார். கிறிஸ்து பெருமானின் திருவடிகள் படிந்ததன் காரணமாகப் புண்ணிய பூமியாக விளங்கா நிற்கும் பலஸ்தீனாவிற்கும் யாத்திரை சென்றார்.

ஆஸ்ற்ரேலியா

ஆஸ்ற்ரேலியாவிலும், நியுசீலாண்டிலும் இருந்த கிறிஸ்தவ பக்தர் களனேகர், அசரியாவைப் பார்க்கவும் அவர் சொற்பொழிவுகளைக் கேட்டுக் களிப்புறவும் விரும்பினார்கள். ஆதலால் அவர் 1936-ம் ஆண்டில் இந்நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தார். ஆஸ்ற்ரேலியாவின் முதற்றரமான பத்திரிகைகளுள் ஒன்று, அசரியா மெல்போர்ன் நகரின் பிரதம ஆலயத்திற்செய்த பிரசங்கத்தின் சுருக்கத்தைக் கண்ணைக் கவரத்தக்க தலைப்பின்கீழ் பிரசுரித்தது. "தீண்டா ஜாதியார் அந்தஸ்திலும் ஒழுக்கத்திலும் தீவிரமான தேர்ச்சியடைந்து வருகின்றார்கள் என்னும் நற்செய்தியை இந்திய அத்தியட்சர் அறிவிக்கிறார். இந்தியாவில் கிறிஸ்து சமயம் துரிதமாக வளர்ந்து வருகிறது. தீண்டா ஜாதியாரான ஒடுக்கப்பட்ட ஜனங்கள் சுதந்திரம் பெறவும் நன்னெறியிற் செல்லவும் விரும்பி கிறிஸ்து சமயத்தைத் தழுவுகின்றார்கள். டோர்னக்கல் அத்தியக்ஷ ஆதீனத்தில் இரண்டு லக்ஷம் கிறிஸ்தவர்களிருக்கின்றார்கள். அவர்களுள் ஒரு லக்ஷம் கடந்த பத்து வருடங்களில் புதிதாகக் கிறிஸ்து சபையைச் சேர்ந்தவர்களாகின்றார்கள். அந்த ஒரு லக்ஷத்தில், எண்பதாயிரம்பேர் தீண்டா ஜாதிகளிலிருந்து பிரிந்து வந்தவர்கள்" என்று அப்பத்திரிகை விளம்பரம்பண்ணிற்று. மற்றொரு பத்திரிகை, அசரியா தெரிந்துகொண்ட பிரசங்க வசனத்தைத் தழுவி, பின்வரும் குறிப்பை வரைந்திருந்தது: "லூக்கா சுவிசேஷகர் ஒருவரே சத்தியவேத ஆக்கியோர்களுள் புறஜாதியாரைச் சேர்ந்தவர் என்னும் உண்மையை அசரியா அத்தியட்சர் சபைக்கு ஞாபகமூட்டினார். இவ்வுண்மை அசரியா பின்சொல்ல விரும்பிய நற்செய்திக்கு ஏற்ற முகவுரையாக இருந்தது. கிறிஸ்துவின் சுவிசேஷம் யூதருக்குமட்டுமன்று, சகல ஜாதியினருக்கும், தேசத்தினருக்கும் உரியதென்று ஏனைய சுவிசேஷகரைப் பார்க்கிலும், லூக்கா சுவிசேஷகரே மிகவும் வற்புறுத்தி எழுதியவர். டோர்னக்கல் அத்தியட்ச ஆதீனத்தில் முன்பு ஹரிஜனரெனும் தாழ்த்தப்பட்டோரும் பின்பு உயர்குல ஹிந்துக்களும் கிறிஸ்துபெருமானின் அடியாராகி வருவதை அசரியா அறிவித்தார். கடந்த ஐந்து ஆண்டுகளாக உயர்குல ஹிந்துக்கள் நூற்றுக்கணக்காக கிறிஸ்து சமயத்தைத் தழுவியிருக்கின்றார்கள். துவக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்களே கிறிஸ்துவின் சுவிசேஷம் தரும் விடுதலையின் மேன்மையை உணர்ந்து அதை ஏற்றுக்கொண்டனர். இப்பொழுது கிறிஸ்துவையும் அவர் உபதேசத்தையும்பற்றிய அறிவு சகல வகுப்பினருக்குள்ளும் பரவிவருகிறது." "டோர்னக்கல் சபையில், பதினான்கு குலங்களைச் சேர்ந்த ஹிந்துக்கள் சேர்ந்திருக்கின்றார்கள். என் தேச மெங்கும் ஒரு இயக்கம் தோன்றியிருக்கிறது.

சுவிசேஷத்தைக் கேட்க ஜனங்கள் திரள் திரளாய்க் கூடுகின்றனர். ஏனென்றால் கிறிஸ்து சமயம் அவர்களுக்குப் புது நம்பிக்கையை ஊட்டுகிறது" என்று அசரியா மிகுந்த சந்தோஷத்தோடு அறிவித்தார்.

மற்றொரு ஆலயத்தில் அசரியா பேசியபொழுது, இந்தியாவின் தேசீயக் கிளர்ச்சியைக்குறித்து பின்வருமாறு கூறினர்: "மிகப் பெரிய மாறுதல்கள் இந்திய தேசீய கிளர்ச்சியால் ஏற்பட்டிருக்கின்றன. ராஜதானிகளும் சிற்றரசுகளும் ஏக ஐக்கிய ஆட்சிக்குள் ஒன்றுபடுமென்று நான் எதிர்நோக்குகின்றேன். அப்பொழுது இந்தியா பூரண சுதந்திரம் பெற்றுச் சுகிக்கும். கடந்த இருபது ஆண்டுகளில் இந்திய மக்களுக்குள் ஒற்றுமையும் சுயமரியாதையும் வளர்ந்துவருகின்றன. இத்தேசீயக் கிளர்ச்சி, நாட்டின் கதவுகளை கிறிஸ்து சமயத்திற்குத் திறந்து வைத்திருக்கின்றதெனவே நான் காண்கிறேன். ஏனென்றால் தேசபக்தி ஒருபுறமிருக்க, கிறிஸ்து சமயத்தைப்பற்றிய நன்மதிப்பு மறுபுறம் தோன்றுகிறது." இந்தியா சுதந்திரம் பெற்றுவிடுமாகில், கிறிஸ்து சமயத்திற்கு இடைஞ்சல்கள் ஏற்படுமென்று திகிலுறும் கோழை நெஞ்சருக்கு, அத்தியட்சரின் திடநம்பிக்கை தைரிய மூட்டுமன்றோ?

அமேரிக்கா

திருச்சபையின் ஒற்றுமைக்காக அசரியா எடுத்துக்கொண்ட சோர்வற்ற முயற்சியைக்குறித்து மேல்நாட்டுக் கிறிஸ்தவர்கள் கேட்டறிந்து, அவரிடம் மரியாதைகொண்டிருந்தனர். ஆங்கிலத் திருச்சபையின் அத்தியட்ச கழகத்தின் ஓர் கண்ணியம்பெற்ற அங்கத்தினராக, இங்கிலாந்தின் கிறிஸ்தவ சமுதாயத்துடன் அசரியாவிற்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. அமெரிக்க கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் அவர் அந்நியராக இருக்கவில்லை. அது எப்படியென்றால் டோர்னக்கல் அத்தியக்ஷ ஆலயம் கட்டுவதற்கு அமெரிக்க நண்பருட் சிலர் பணஉதவி அளித்திருந்தனர். அத்துடன் அமெரிக்க நாட்டிலிருந்த அத்தியட்ச சபை டோர்னக்கல் சேகரத்தில் சுவிசேஷப் பிரசார வேலையும் செய்துகொண்டிருந்தது. அச்சபையின் இரண்டு மிஷனெரிமார் சிங்கரேணிக் கருகில் தொழில்புரிந்துவந்தனர். இக்காரணங்கள்பற்றி, 1937-ம் ஆண்டில் அமெரிக்கா அசரியாவை வெகு கனிவோடு வரவேற்றது. "உவாஷிங்டன் போஸ்ற்" என்ற பத்திரிகை அசரியாவை இந்தியாவின் காடுகளின் அத்தியட்சர் என்றும், லக்ஷத்து எழுபத்தையாயிரம் ஆத்துமாக்களின் உத்தம மேய்ப்பனென்றும் வர்ணித்து, அமெரிக்காவிற்கு அவரை அறிமுகப்

படுத்திற்று. 1937-ம் வருடம் அமெரிக்கச் சரித்திரத்தில் மகா முக்கியமான வருடம். அதற்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் அமெரிக்காவின் புதிய ஜனநாயகத் திட்டத்தில் கையொப்பமிட்டு, அந்நாட்டின் மாகாணங்களனைத்தும் ஒன்றுபட்டன. அச்சுப நிகழ்ச்சியை நினைத்து இறைவனைப்போற்ற உவாஷிங்டன் அத்தியக்ஷ ஆலயத்தில் மாபெரும் ஆராதனை நடைபெற்றது. அந்த ஆராதனையில் இந்தியாவின் பிரதிநிதியாக அசரியா பங்கெடுத்துக்கொள்ள அழைக்கப்பட்டார். உலகின் கண்ணுள்ள மனுமக்கள் யாவருக்கும் பூரண சுதந்திரம் அளித்தலும், ஒடுக்கப்படும் யாவரையும் கைகொடுத்து உயர்த்தலும், சுதந்திர நாடாகிய அமெரிக்காவின் கடமையென்று, அச்சமயத்தில் அசரியா கேட்டவர்களின் மனதை உருக்கத்தக்க விதமாகப் பரிந்து பேசினர். விசேஷமாகத் தமது நாட்டின் தீண்டா ஜாதியாரின் தாழ்ந்த நிலைமையைக்குறித்துச் சபைக்குச் சொன்னார். "மத்திய இந்தியாவில் பத்துலக்ஷம் ஜனங்கள் கிறிஸ்து மதத்தைத் தழுவியிருக்கின்றார்கள். கிறிஸ்து சபையின் தொகை வருடத்திற்கு வருடம் அதிகரித்துவருகிறது. இந்த ஜனத்தொகையின் பெரும்பான்மை தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்த ஏழை மக்களைக் கிறிஸ்து சபையில் சேர்த்துக்கொள்ளுவதால் பயன் யாதும் உள்ளதோவென்று அநேகர் கேட்கின்றனர். அக்கேள்விக்கு நான் எதிர்க்கக்கூடாத ஒரு முடிவான சமாதானம் சொல்லக்கூடும். நான் இன்று இம்மாபெரும் அவை யகத்தே நின்று பேசுவதே அக்கேள்விக்கு ஏற்ற விடையாகின்றது. நூறு வருடங்களுக்குமுன் என் தந்தை கிறிஸ்து சமயத்தைத் தழுவினார். என் பிறப்பையும் வளர்ப்பையும் நான் நினைத்துப் பார்க்கையில், கிறிஸ்து பெருமானின் வல்லமை எவ்வளவு மகத்துவமானதென்று உணருகிறேன். கிறிஸ்து சமயம் என் தந்தையையும் என் வீட்டாரையும் வியக்கத்தக்க வண்ணம் முன்னேறியிராதிருப்பின் நான் இப்பொழுது இந்த அத்தியட்ச ஆலயத்தில் நிற்கமாட்டேன்" என்று அசரியா வெகு ஊக்கமாகச் சாக்ஷி பகர்ந்தார்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கமடையேன்; ஏனெனில் அது விசுவாசிக்கும் யாரையும் மீட்டு இரட்சிக்கும் தெய்வ பலமாயிருக்கிறதென்று அப்போஸ்தலராகிய பவுல் பறைசாற்றினர். அதுபோலவே சென்றவிடமெல்லாம் தமக்கும் தம்மைப்போன்ற ஆயிரக்கணக்கான தம் தேச மக்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷம் செய்துவரும் ஒப்பற்ற நன்மையைப் பிரசுரிக்க அசரியா தாமதித்ததில்லை. சபை பெரிதாயினும் சிறிதாயினும், தேவாலய ஆராதனையிலாயினும், நண்பர் அளித்த உபசரிப்புக் கூட்

டத்திலாயினும், அசரியா பேசின வார்த்தைகளின் மத்திய கருத்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மகத்துவமொன்றேயாகும்.

இங்கிலாந்திற்குச் செய்த கடைசிப் பயணம்

அசரியா லண்டன் மாநகருக்குக் கடைசியாகச் சென்றிருந்த பொழுது, இங்கிலாந்தில் ஒரு மகா முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது. ஒரு அரசன் முடியை இழந்தான். அம்முடியைத் தேசமக்கள் தமது பார்லிமென்றின் மூலமாக அவன் தம்பிக்குச் சூட்டினர். ஆங்கில தேச சரித்திரத்தில் இத்துணை அதிர்ச்சியை உண்டாக்கிய சம்பவம் இதற்குமுன் ஒரே ஒருதரம் மாத்திரமே நடந்தது. அப்பொழுது தேசமக்களின் பிரதிநிதிகள் சங்கமாகிய பார்லிமென்றிற்கு அடங்க மறுத்து, ஜனங்களின் சுதந்திரத்தைக் கைப்பற்ற முயன்றதாகிய குற்றத்திற்கு மன்னன் முடியையும் முடிதாங்கிய சிரசையும் இழந்தனன். இன்று, தள்ளப்பட்ட ஒருவனுடைய மனைவியை அரசன் மணக்க விரும்பியதினிமித்தம், அவன் மரியாதையாகத் தன் முடியைக் கழற்றி வைத்துவிட்டு ஊரைவிட்டு வெளியேறவேண்டியதாயிற்று. அரசன் இப்படிச் செய்தது கிறிஸ்தவ ஒழுக்கத்திற்கும் இல்வாழ்க்கை நெறிக்கும் முற்றும் ஒவ்வாத செயல் என்று ஆங்கில தேசத்தவரனைவரும் எண்ணியதால் மற்றெல்லா விஷயத்திலும் மிகத் திறமை வாய்ந்தவனாக விளங்கிய அரசனுக்கு இத்துணை நஷ்டமும் இலச்சையும் நேர்ந்தது. ஜார்ஜ் இளவரசரை ஆறும் ஜார்ஜ் மன்னனாக மகுடாபிஷேகம் செய்விக்க ஏற்பட்ட வைபவத்தில், ஆங்கிலத் திருச்சபையின் அத்தியட்சருள் ஒருவராக அசரியாவும் கலந்துகொண்டார். வெஸ்ற்மின்ஸ்ற்றர் ஆலயத்தில் நடந்த அபிஷேக ஆராதனையை அசரியா கவனித்தபொழுது, அது தொன்று தொட்டு வழக்கத்திலிருந்து வரும் ஒரு சடங்காக மாத்திரமல்ல; ஆங்கில மக்கள் திருச்சபையின் அதிகாரத்தை மனப்பூர்வமாக அங்கீகரித்திருப்பதின் அடையாளமாகவும் இருந்ததென்று உணர்ந்தார். தமது அரசனுக்கும் அரசிக்கும் பதவியளிப்பதாகிய மகா முக்கிய கருமத்தைக் கடவுளுடைய சந்நிதானத்தில், திருச்சபையின் சம்மதத்தோடும், ஆசீர்வாதத்தோடும் செய்வதே முறையென்று ஆங்கில தேசத்தவர் கருதியது அசரியாவிற்கு மிகுந்த திருப்தியைத் தந்தது. திருச்சபைச் சட்டத்திற்கும் நன்னெறிக்கும் மாறாக அரசன் நடந்தபொழுது, அரசனென்று பாராது அவன் செய்தது குற்றமென்றே ஆங்கில மக்கள் பகிரங்கமாகக் கூறினர். குடும்ப வாழ்க்கையில் தம் குடிகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாயிருக்கத் தவறிய ஒருவன் அரச பதவிக்கு அருகனல்லவென்றும் சாதித்தனர். அவர்களுடைய

தைரியத்தையும், அவர்கள் ஒழுக்கத்தை ஓம்புவதில் காட்டிய ஊக்கத்தையும் அசரியா உன்னி உன்னி அகமகிழ்ந்தார்.

மகுடாபிஷேக ஆராதனை முடிவதற்குள் மழை பெய்யத் தொடங்கிற்று. ஆலயத்தினின்று வெளிப்போந்த அசரியா அருகிலிருந்த ஒரு சிறு சிற்றுண்டிச்சாலையில் ஒதுங்கினர். கொஞ்சம் தின்பண்டம் உண்டு தேனீர் பருகினர். முடிவில் அவர் கணக்கிட்டுக்கொடுத்த காசை ஹோட்டல்காரன் எண்ணிப்பாராமல் பெற்றுக்கொண்டான். அவர் எத்தனை கேக்குகள் சாப்பிட்டாரென்று அவன் கேட்கவேயில்லை. அவரோடு மேஜையில் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஒரு தொழிலாளி மகுடாபிஷேக வைபவத்தைக்குறித்து பேசிக்கொண்டிருந்தான். சிற்றுண்டி அருந்தியபின் அவனே அசரியாவின் செலவையும் கொடுக்க விரும்பினன். சிற்றுண்டிச்சாலையைவிட்டுப் புறப்படும்பொழுது மழை இன்னும் தூறிக்கொண்டிருந்தது. விடுதியின் வாயில்காக்கும் ஒரு பெண் தன் குடையை அவருக்குக் கொடுக்க வந்தாள். "என்னை உனக்குத் தெரியாதே. அப்படியிருக்க உன் குடையை எனக்குக் கொடுக்கிறேன் என்கிருயே, ஏன்?" என்று அசரியா அம்மாதைக் கேட்டபொழுது, "நீர் அதைத் திருப்பி கொடுப்பீர் என்று நம்புகிறேன்" என்று அவள் பதில் உரைத்தாள். இச்சிறு சம்பவங்கள் அசரியாவிற்கு மிகுந்த சந்தோஷமளித்தன. ஆங்கில தேசத்தவர் கள்ளங்கபடின்றி அந்நிய நாட்டாருக்குக் காட்டும் பட்சத்தையும் வினயத்தையும் அவர் மெச்சிக்கொண்டார்.

லண்டன் பட்டணத்தின் தெருக்களும் கட்டிடங்களும் அசரியாவிற்கு வெகு பழக்கமானவை. பட்டணத்தின் எவ்விடத்திற்கும் அவர் துணையின்றிச் செல்லுவார். அவர் பாராத பெரிய கட்டிடங்கள் ஒன்றுமில்லை. அவற்றுள் திரு. பவுல் அத்தியட்ச ஆலயம்தான் அவரது கண்களையும் மனதையும் கவரும் காட்சி. அது தமது தாய்ச் சபையின் மத்திய ஆலயம். பல நூற்றாண்டுகளாகப் பக்த தலைமுறைகள் ஆங்கு தோன்றி பின் மறைந்திருக்கின்றன. இந்த எண்ணங்கள் அவர் மனதில் உதித்த மாத்திரத்தில் கண்களில் நீர் ததும்பும். அவர் அதன் முன்நின்று எம்பிரானை உள்ளங்குழையப் போற்றுவார். சீயோன் திருநகரம் கோராவின் புத்திரரின் உள்ளங்களில் எத்தகைய உணர்ச்சியை எழுப்பிற்றோ அத்தகைய உணர்ச்சியை திரு. பவுல் அத்தியட்ச ஆலயம் அசரியாவின் உள்ளத்தில் எழுப்பிற்று. திருப்பதிகையைக் கண்டு மனமகிழும் யாத்திரிகரைப்போல் அவர் அவ்வாலயத்திற்குச் சென்றபொழுதெல்லாம் மகிழ்வுற்றார்.

அசரியா செய்த சுற்றுப்பிரயாணங்களில் அவர் பறைசாற்றிய மத்திய செய்தி கிறிஸ்துபெருமான் தென் இந்தியாவில் தாழ்த்தப்

பட்ட ஜனங்களுக்குள் செய்துவரும் இகபர நன்மைகளேயாகும். அடுத்தாற்போல தமது தாய்நாடாகிய இந்தியாவின் புராதன பெருமையையும், அதன் வருங்கால நம்பிக்கையையும் சமயம் வாய்த்த பொழுதெல்லாம் கூறினர். அவர் சென்றவிடமெல்லாம் ஜனங்களின் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றார். அவருடைய ஞாபகம் இன்றும் அநேக இடங்களில் கமழ்ந்துகொண்டு இருக்கிறது. என்றாலும் அவர் அதை நினைத்து இறுமாப்படையவில்லை. அவை தமதல்ல, தம்மைத் தடுத்தாண்ட இயேசுபெருமானுக்குரியனவென்றுணர்ந்து, ஜனங்கள் அவரைப் போற்றியபொழுதெல்லாம் புன்முறுவல் பூத்தார்.

எங்குச் சென்றாலும் எவரோடு பழகினாலும் தமது சொந்த நாடும், சொந்த சபையும், சொந்தக் குடும்பமும் அவர் உள்ளத்தைச் சூழ்ந்து நின்றது இயல்பே. சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு வீடு திரும்பியவுடன் உடல் நலிவையும் மனச்சோர்வையும் தீர்த்துக் கொள்ளத்தக்க குடும்பம் அவருக்குக் கிடைத்திருந்தது பெரிய சிலாக்கியமே. அவருக்கு மக்கள் ஆறு, நான்கு ஆண்பிள்ளைகளும், இரண்டு பெண்மக்களும். பேரப்பிள்ளைகள் பத்து. பிள்ளைகள் யாவரும் கற்றுத் தேறி நல்ல வேலைகளில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுள் ஒருவர், இரண்டாவது மகன், குரு அபிஷேகம் பெற்று டோர்னக்கல் வேத சாஸ்திரப் பாடசாலையில் ஒரு ஆசிரியராகப் பணி செய்துவந்தார். அவர் அசரியாவின் பக்கத்திலேயே இருந்தது தகப்பனுக்கு அதிக தைரியத்தையும் சந்தோஷத்தையும் கொடுத்தது. அசரியாவின் வீட்டை இணைத்துக்கட்டிய பாசம் யாதெனில் கிறிஸ்துவின் அன்பினாலும் அவரைச் சேவிக்க வேண்டுமென்ற ஆர்வத்தாலும் சுத்திகரித்து உறுதியடைந்த குடும்ப நேசமே. ஆதலால் அவர் வீடு தண்டின்மேல் வைக்கப்பெற்ற தீபத்தைப்போல் டோர்னக்கல் எங்கும் அன்பின் சுடர்களையும் பக்தியின் சுடர்களையும் தெளித்து நின்றது. அவருடைய முதல்மகள் அநேக வருஷங்களாக அவருடைய ஊழியத்திற்குப் பலவித உதவிபுரிந்து, இறுதியில் தாமே ஒரு மிஷனெரியாகச் சென்றனள். மக்களுள் ஒருவர் ஒரு மிஷன் வைத்தியசாலையில் பிரதம வைத்தியராகப் பணியாற்றச் சென்றார். மற்றொருவர் மிஷன் கலாசாலை ஒன்றில் பண்டிதராய் இருக்கின்றார். இரண்டாவது மகள் ஒரு குருவின் மனைவியாகத் திருச்சபைச் சேவையில் பங்குபெற்று வருகின்றாள். அநேக ஆண்டுகளுக்குமுன் Y.M.C.A. காரியதரிசியாக இருந்த ஒரு வாலிபனும், தெய்வ ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்கென்று உயர்தரக் கல்வி கற்று தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்ட ஒரு கன்னிகையும் மனம் ஒத்து இல்லறம் நடத்தத் தீர்மானித்தனர். அவர்கள் தம் வாழ்க்கையின் இலட்சியமாகக்

கொண்ட உன்னத விருப்பங்களைக் குறையின்றிப் பூர்த்தி செய்து கொண்டனர் என்பதற்கு இரண்டு அடையாளங்கள் உள. ஒன்று டோர்னக்கல் அத்தியட்ச ஆதீனத்தின் துரிதமான வளர்ச்சி. மற்றொன்று அசரியா அத்தியட்சரின் குடும்பம்.

அத்தியாயம் 12

இரண்டாவது மகா யுத்தம்

டோர்னக்கல் அத்தியட்ச ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பெற்ற எட்டாவது மாதத்தில், ஒரே தலைமுறையின் குறுகிய காலத்திற்குள், உலகம் இரண்டாம் முறை கொந்தளிப்படைந்தது. 1939-ம் வருடம் செப்டெம்பர் மாதம் ஜர்மானிய ஏகாதிபத்தியத்தைக் கைப்பற்றிய அடோல்வ் ஹிட்லர் போலன்டைக் காரணமின்றித் தாக்கி மேற்கிலும் கிழக்கிலும் புகைந்துகொண்டிருந்த பகை என்னும் தழலைப் பற்றி எரியச் செய்துவிட்டான். இதற்குச் சில ஆண்டுகளுக்குமுன் பெனிட்டோ முசலோனி என்னும் இத்தாலியத் தலைவன் சிதைந்து போன ரோம ராஜ்யத்தைத் திரும்ப நாட்டும் பொறுப்பைப் பெற்றவன்போல் அபிசீனியா என்னும் ஆட்டுக்குட்டியின்மேல் ஓநாய்போல் பாய்ந்தான். அதிகார மோகங்கொண்ட ஜப்பானியத் தளகர்த்தர்கள் கீழ்த்திசை நாடுகளுக்கெல்லாம் என்றுமில்லாத செழிப்பைக் கொண்டு வரப்போகிறோமென்று நய வசனிப்புக் கூறி, யாதொரு காரணமுமின்றி சீன தேசத்தின் மேல் படையெடுத்தார்கள். கடந்த உலகப் போரின் இறுதியில் உலகின்கண் நிலையான சமாதானத்தை நிலை நாட்டுவதற்கென்று நிறுவப்பெற்ற லீக் ஆப் நேஷன்ஸ் என்னும் சர்வ ஜன சங்கம் இந்த அக்கிரமங்களைத் தடுக்க இயலாது நின்றுவிட்டது. அயல் நாட்டு விவகாரங்களுள் தலையிடக்கூடாதென்று அமெரிக்கா விலகிக்கொண்டது. ஜெர்மனி, இட்டாலி, ஜப்பான் ஆகிய மூன்று வல்லரசுகளையும் ஏககாலத்தில் விரோதித்துக்கொள்ள பயந்து, இங்கிலாந்து ஹிட்லரோடு நீண்ட காலம் சமரசம் பேசிக்கொண்டிருந்தது. ஹிட்லரைச் சாந்திபண்ண மத்திய ஐரோப்பாவின் சில சிறிய நாடுகளை ஜெர்மனி விழுங்குவதற்கு இங்கிலாந்து உடன்பட்டது. நாடுகளை விழுங்க விழுங்க ஜெர்மனியின் மண் ஆசை அதிகரித்ததேயொழிய குறையவில்லை. அதன் தாட்டிகம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டேவந்தது. ஜெர்மனியின் வலிமை பிரான்ஸ் தேசத்திற்கும், முடிவில் இங்கிலாந்திற்குமே அனர்த்தம் விளைவிக்குமென்று தோன்றியபின்னரே, இங்கிலாந்து ஹிட்லரை எதிர்க்கத் துணிந்தது. ஜெர்மனி போலன்டைத் தாக்கினதின் நிமித்தம்

இங்கிலாந்து ஜெர்மனியோடு போர் தொடங்கிற்று. இங்கிலாந்திற்கு ஆள் பலம் இந்தியாவிலிருந்துதான் கிடைக்கக்கூடும். ஆகையால் இந்தியாவும் யுத்தத்தில் கலந்துகொள்ளவேண்டுமென்றும், யுத்தத்தை நடத்துவதற்கு அவசியமான செலவில் இந்தியாவும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் வைசிராய் தீர்மானித்துவிட்டார்.

அச்சமயத்தில் முற்கூறிய இந்திய அரசியல் சீர்திருத்தத் திட்டத்தின்படி இந்திய மாகாணங்கள் பூரண சுதந்திரம் பெற்றிருந்தன. ஆறு பெரிய மாகாணங்களில் காங்கிரஸ் கட்சி அதிகாரம் வகித்து நின்றது. இந்தியாவை யுத்தத்தில் ஈடுபடுத்திய விஷயத்தில் வைசிராய் தேசப்பிரதிநிதிகளின் அனுமதியைக் கேட்கவில்லை. இது குற்றமெனக்கூறி காங்கிரஸ் கட்சியார் தங்கள் பதவிகளை உடனே ராஜிநாமா செய்துவிட்டனர். இந்த மாகாணங்களில் கவர்னர்களின் ஏகாதிபத்தியம் ஏற்பட்டது. நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் ஆங்கில அரசாங்கத்துடன் வாதம் தொடுத்துவிட்டது. யுத்தமும் மும்முரமாகி ஜப்பான் சிங்கப்பூரையும் பின் ரங்கூனையும் கைப்பற்றிவிட்டது. பர்மாவிலிருந்து இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்புரத்திலும் ஜப்பான் கால் வைத்துவிட்டது. அப்பொழுது ஆங்கில அரசாங்கத்திற்கு யுத்தத்தை நடத்தும் விஷயத்தில் யாதொரு ஒத்தாசையும் செய்யக்கூடாதென்று தீர்மானித்து, ஆங்கிலர் தங்கள் அதிகாரத்தை இந்தியர் வசம் ஒப்புவித்தாலொழிய இந்திய மக்கள் தம் நாட்டைப் பாதுகாப்பதில் ஊக்கம் செலுத்தமாட்டார்களென்றும் காங்கிரஸ் பறைசாற்றிற்று. ஒரு பக்கம் காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்; மறுபக்கம் காங்கிரஸ் அனுதாபிகள் உள்நாட்டுக் கலகத்தை எழுப்பிவிட்டனர்.

இது அநேக இந்திய தேசபக்தருக்கு மிக ஆபத்திற்கிடமானதும் உசிதமற்றதுமான கிளர்ச்சியாகத் தோன்றிற்று. ஜப்பானியப் படைகள் இந்தியாவின்மீது நெருங்கி வந்துகொண்டிருக்கும் சமயத்தில் காங்கிரஸ் கட்சி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியது என்ன நோக்கத்துடன் என்று அறிந்துகொள்வதும் கடினமாயிருந்தது. ஹிட்லர் தொடங்கிய போர் அதர்மப் போரென்றும், அவன் தன் நாட்டில் நிலைநிறுத்தியதும் மற்ற தேசத்தார்மீது சுமத்த விரும்பியதுமான அரசியல் மனிதருடைய சுயாதீனத்தை அடியோடு ஒழித்துவிடும் கேடான முறையென்றும் காங்கிரஸ் கூறிற்று. ஜெர்மனியும் அதன் கூட்டாளிகளாகிய இட்டலியும் ஜப்பானும் வெற்றியடைவது உலகத்தை அடிமைத்தனத்திற்குள் ஆழ்த்திவிடக்கூடிய மாபெரும் விபத்தாகுமென்றும் காங்கிரஸ் தலைவர்கள் சாற்றினர். அஹிம்சா தர்மத்தை விட்டு ஒருக்காலும் விலகக்கூடாதென்று சாதித்துவந்த மகாத்மா

காந்தியும் யுத்தம் ஆரம்பித்தபொழுது இந்தியர் போலன்டிடம் பூரண அனுதாபம் கொள்ளவேண்டுமென்று கூறினர். போலன்ட் தன்மீது அநியாயமாகப் படையெடுத்துச் சென்ற ஹிட்லர் கணங்களை எதிர்க்க யுத்த ஆயுதங்களைக் கையில் எடுத்தது அஹிம்சா தர்மத்திற்கு விரோத மான செயல் அல்லவென்றும் காந்தி வாதித்தார். அப்படியிருக்க வைசிராய் தேசப்பிரதிநிதிகளின் அனுமதியின்றி யுத்தத்தில் நாட்டை ஈடுபடச்செய்தது பெருங் குற்றமெனக்கூறி, ஒத்துழையாமை என்னும் ஆபத்துக்கிடமான கருவியைக் காங்கிரஸ் பிரயோகிக்கத் தீர்மானித்தது அநேகருக்கு நியாயமும் உசிதமுமாகத் தோன்றவில்லை. அப்படி எண்ணியவர்களுள் ஒருவர் அசரியா அத்தியட்சர். காங்கிரஸ் எடுத்துக்கொண்ட முயற்சியை ஆமோதிப்பதும் நேச நாடுகளின் வெற்றியை விரும்பி ஜெபிக்க மறுப்பதும் இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு அடுக்காதென்று அசரியா அபிப்பிராயம் கொண்டிருந்தார்.

இந்தியத் திருச்சபையைப் பொறுத்த அளவில் யுத்தத்தினால் விளைந்த முதற்கேடு இங்கிருந்த ஜெர்மானிய மிஷனெரிகளெல்லாம் கைது செய்யப்பட்டு சிறைவாசம் புகுந்ததேயாகும். சில மாதங்களுக்குப்பின் ஹிட்லர் மேற்றிசையிலிருந்த சில ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றியபின் அந்நாடுகளிலிருந்து இந்தியாவின் மிஷனெரி ஊழியத்திற்கென்று வந்துகொண்டிருந்த பணம் முழுவதும் நின்று போய்விட்டது. இந்த நாடுகள் ஆதரித்துவந்த சபைகளையும் பாடசாலைகளையும் இந்தியாவின் மற்ற சபைகள் தம் குறைந்த வருமானத்திலிருந்து சிறிது இவைகளின் ஆதரிப்புக்கென்று கொடுக்க அவசியம் நேரிட்டது. இந்த முயற்சியை நாஷனெல் கிறிஸ்தவ சங்கம் தனது பொறுப்பாக ஏற்றுக்கொண்டு, யுத்தத்தின் கொடுமையினால் இந்தியாவிலிருந்த ஒரு சபையாகிலும் தத்தளிக்காது இருக்க பார்த்துக்கொண்டது. அசரியா அச்சங்கத்தின் தலைவராக இந்நன்முயற்சிக்கு உற்சாகமும் ஆலோசனையும் வழங்கிவந்தார். ஹிட்லர் வெற்றியின்மேல் வெற்றியடைந்து ஐரோப்பா முழுவதையும் தன் குதிங்காலால் மிதித்து அழுத்திக்கொண்டிருந்தான். உலகமெங்கும் திகில் என்னும் கருமுகில் படர்ந்திருந்தது. அந்த நாட்களில் அசரியா தமது சபைகளுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினர். அந்நிருபத்தில் அசரியா சபைகளுக்குள் சொன்ன தேறுதல் மொழிகள் யாதெனில், "உலகச் சரித்திரத்திலேயே இதன்முன் ஏற்படாத கஷ்டம் ஏற்பட்டிருக்கும் இந்நாட்களில், கிறிஸ்து சபையின் கடமை யாதென்று சந்தேகிக்க நிமித்தமில்லை. மேதினியின்கண் என்ன கொடுமைகள் நேர்ந்தாலும் உலகம் கடவுளின் ஆட்சிக்குட்பட்டு நிற்கிறதென்ற திட நம்பிக்கை சபைகள் கொண்டிருக்கவேண்டும். அது மனுமக்களுக்காக

ஓயாது பரிந்து மன்றாடவேண்டும். யுத்தத்தின் இன்னல்களைச் சுமந்து தவிக்கும் மக்கள் யாவருக்கும் தன்னால் இயன்ற உதவியை மனப்பூர்வமாகவும் தாராளமாகவும் செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்துவின் சோரிதோய்ந்த சிலுவைக் கொடியை உயர்த்திப் பிடிக்கவேண்டும். சாந்தப் பிரபுவின் எச்சரிப்பையும் அவருடைய சுவிசேஷம் அளிக்கும் நம்பிக்கையையும் நொறுங்கிச் சுக்கலாகிக்கொண்டிருக்கும் உலகின் செவிகளிலும் இதயத்திலும் பதியத்தக்கதாக எடுத்துக்கூறவேண்டும்."

யுத்தகாலத்தில் ஒவ்வோர் இரவும் 9 மணிக்கு டோர்னக்கல் அத்தியட்ச ஆலயத்தின் மணியோசை போர்க்களத்தில் அன்று மடிந்த ஆயிரக்கணக்கான மக்களை மணியோசை கேட்கும் யாவருக்கும் நினைப்பூட்டும். அதன்பின் அநேகர் ஆலயத்திற்குள் பிரவேசித்து யுத்தத்தின் கொடுமையைப் பொறுக்கவொண்ணாது தவிக்கும் யாவரையும் எம் பிதாவாகிய கடவுளின் திருச்சன்னிதானத்தில் பரிந்து மன்றாடும் மன்றாட்டின் மூலமாகக் கொணர்ந்து நிறுத்துவார்கள். அந்நிய நாட்டாரின் துன்பங்களை நினைத்துப் பிரார்த்திப்பதோடுகூட நமது நாட்டின் மக்களுக்காகவும் பிரார்த்தித்தல் அவசியமாயிற்று. அநேக தமிழரும் தெலுங்கரும் மலேயாவிலும் பர்மாவிலும் வசித்து வந்தனர். 1941-ம் வருடக் கடைசியில் ஜப்பான் இந்நாடுகளைக் கைப்பற்றியபின் இவர்கள் நிலைமை என்னவாயிற்றோ என்று கவலையுற நேர்ந்தது. வெகு சீக்கிரம் பர்மாவிலிருந்து இந்திய மக்கள் உயிர்தப்ப ஓடிவந்து கொண்டிருந்தனர். உடுத்திய உடையோடு கால் நடையாக இவர்கள் காடுகளையும் மலைகளையும் தாண்டிவந்தார்கள். அவர்களுள் அநேகர் வழியிலேயே பசிக்கும் பிணிக்கும் இரையாயினர். இந்தச் சம்பவங்கள் நாடெங்கும் மிகுந்த கலக்கத்தையும் கவலையையும் பரப்பின. அந்த வேளையில் ஜப்பானிய யுத்த விமானங்கள் பறந்துவந்து ரங்கூனை அழித்ததுபோல நமது பட்டணங்களையும் அழித்துவிடுமோ? இன்றைக்கோ நாளைக்கோ ஜப்பானிய யுத்தக்கப்பல்கள் கடற்கரையிலுள்ள பட்டினங்களின்மீது பீரங்கிக் குண்டுகளை வீசுமோ? எந்த இடத்தில் ஜப்பானியச் சைனியங்கள் வந்து இறங்குமோ? என்ற பயம் அநேகரைப் பீடித்தது. 1942-ம் ஆண்டு எப்ரல் மாதம் அசரியா மசூலிப்பட்டணத்திற்குச் சென்றார். அது ஜப்பான் தாக்கக்கூடிய துறைமுகப்பட்டினங்களில் ஒன்று. ஆதலால் அங்கிருந்தவர்களுக்கு எந்த நேரமும் ஆபத்திற்கு இடமான நேரமாகத் தோன்றிற்று. அச்சமயத்தில் அசரியா அத்தியட்சர் ஒருவாரம் அங்குத் தங்கியிருந்து தினந்தோறும் ஆலயத்தில் ஆராதனை நடத்தி ஜனங்களுக்குத் தைரியமூட்டிவந்தார். அவ்வாராதனைகளுக்குப் பின் ஈஸ்டர் பண்டிகையும்

வந்தது. அந்தப் பண்டிகையின் ஆராதனையில் அசரியா அத்தியட்சர் 22-ம் சங்கீதத்தைத் தெரிந்துகொண்டு அதை வியாக்கியானம் பண்ணினர். இதுவே அவர் செய்த பிரசங்கம். உயிர்த்தெழுந்த பண்டிகையன்று தியானிக்கத் தெரிந்துகொள்ளத்தக்க பொருள் துன்பமல்ல; என்றாலும் நமது ஆண்டவர் சிலுவையின் கொடிய வேதனையைச் சகிக்க நேர்ந்தபொழுது 22-ம் சங்கீதத்தைதான் ஞாபகப்படுத்திச் சிந்தித்தார் என்று எண்ணுவதற்கு இடமுண்டு. ஏனெனில் அந்தச் சங்கீதத்தின் ஓர் வசனத்தை ஏசுபெருமான் வாய்திறந்து உச்சரித்தார். "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்!" என்பதே அந்த வசனம். அத்தியட்சர் அன்று 22-ம் சங்கீதத்தைச் சபைக்குப் படித்துக்காட்டி அதன் பொருளை விளக்கியதன் காரணம் யாதென்று ஊகித்துக்கொள்ளுவது கடினமல்ல. துன்பத்தின் வழியாகக் கர்த்தர் தமது மந்தையாகிய மனுமக்களை நடத்திச்சென்று, அவர்களுடைய துன்பங்களை இன்பமாக மாற்றி அவர்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்த வல்லவராய் இருக்கின்றார் என்பதைச் சத்துருவின் படையெழுச்சியை எதிர்நோக்கி கலக்கமுற்றிருந்தவர்களுடைய உள்ளங்களுக்குப் பலன் ஊட்டும் ஔஷதமாக அத்தியட்சர் கையாண்டார். அதற்கு அடுத்தவாரம் ஜப்பானுடைய தாக்குதலை எதிர்பார்த்த அதிகாரிகள் மசூலிப்பட்டினத்தை விட்டு உள்நாடுகளுக்குச் செல்வது உசிதமெனப் பறைசாற்றினார்கள். ஆனால் அந்தப் பக்கங்களிலிருந்த ஒரு கிறிஸ்தவ குருவேனும் தன் ஊரையும் சபையையும் விட்டுவிட்டு ஓடவில்லை. அத்தியட்சர் கற்பித்தபடியே யாவரும் தத்தம் சபைகளோடு நின்றுகொண்டனர். அப்பொழுது அசரியா கூறியது யாதெனில், "ஏசாயா தீர்க்கன் சொன்னதுபோல அமரிக்கையிலும், நம்பிக்கையிலுமே நமது பலம் இருக்கவேண்டும். நமது குருமாரும் மற்ற சுவிசேஷ ஊழியரும் கடவுளை நம்பும் நம்பிக்கையிலிருந்து பிறக்கும் அமரிக்கையையும் தைரியத்தையும் பெற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். கிறிஸ்தவர்களாகிய நாம் தைரியத்திலும் துன்பத்தைத் தாங்கும் சகிப்பிலும் மற்றோர் யாவருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும். ஏனெனில் யுத்தத்தின் கொடுமையிலும் கடவுள் தமது சித்தத்தை நிறைவேற்றிக்கொள்ளும் ஆற்றலுடையவராய் இருக்கிறார் என்பது நமது விசுவாசம். இந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் நாம் பிறருக்குப் புகட்டக் கூடியவர்களாய் இருத்தல் அவசியம்."

யுத்தம் இந்தியத் திருச்சபையின்மேல் மற்றொரு பொறுப்பையும் சுமத்திற்று. காங்கிரஸின் ஆட்சேபனையை மதியாது ஆயிரக்கணக்கான இந்திய வாலிபர் ராணுவத்தில் சேர்ந்து போர்முனைகள் யாவற்றிற்

கும் சென்றிருந்தனர். சென்னை ராஜதானியிலிருந்தும் திரளான வாலிபர் சைனியங்களில் சேர்ந்துகொண்டனர். அவர்களுள் தெலுங்கு தேசத்துக் கிறிஸ்தவ வாலிபரின் தொகை சிறிதல்ல. அவர்களுடைய ஆத்தும நன்மையைப் பேணும்பொருட்டு அசரியா தமது சேகரங்களிலிருந்து பல குருமாரை அனுப்பியிருந்தார். அத்தியட்சர் சற்று இளைப்பாறச்சென்று இருந்தவிடத்தில் கிறிஸ்தவப் போர் வீரர் அவரைச் சந்தித்து தங்களுக்குத் தெலுங்கு வேதாகமமும் கீர்த்தனைப் புத்தகங்களும் வேண்டுமென்று கேட்டனர். அவர்கள் ஒவ்வோர் இரவிலும் ஒரு சிறு அறையில் கூடி ஒழுங்காக ஜெபித்து வருவதைக்கேட்டு அசரியா அதிக சந்தோஷமடைந்தார். அந்தச் சிறு கூட்டத்தை அவர் மூன்றுதரம் சந்தித்தார். அவர் அவர்களை மூன்றாம்தரம் சந்தித்தபொழுது அவர்கள் மூலமாகக் கிறிஸ்துவின் அன்பை அறிந்து ருசித்த ஒரு பாலிய வீரனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். சைனியங்களுடன் சென்றிருந்த பாதிரிமார் இந்தியக் கிறிஸ்தவ போர் வீரரின் நன்னடக்கையையும் பக்தியையும் மெச்சிப் பேசியதை அத்தியட்சர் அடிக்கடி கேட்டார். கிறிஸ்து சமயம் இந்த வாலிபரின் உள்ளங்களில் எவ்வளவு ஆழமாகப் பதிந்து நின்றது என்பதை அவர் அறிந்து எம்பெருமானுக்கு நன்றி செலுத்தினார்.

ஜப்பானியர் இந்தியாவிற்குள் புகுந்து இங்கு இருக்கும் ஆங்கில அமெரிக்க மிஷனெரிமார்களைச் சிறையில் அடைத்துவிட்டால் சபையின் வேலைகள் தடையின்றி நடைபெறுமோ என்ற கவலையும் அந்நாட்களில் உதித்தது. உயர்தரக் கலாசாலைகளும் சில பெரிய வைத்தியசாலைகளும் நிலைநிற்பது கடினம். பெண்களின் முன்னேற்றத்திற்கென்று செய்துவரும் சகல கிறிஸ்தவ முயற்சிகளும் தடைபெறும். ஆனால் சபைகளின் பராமரிப்பில் யாதொரு இடைஞ்சலும் நேரிடாது. ஏனென்றால் சபைகளின் கண்காணிப்பு முழுவதும் இந்திய குருமாரின் பொறுப்பிலிருந்தது. அவ்வாறே மற்ற மிஷனெரிச் சேவைகளையும் இந்திய கிறிஸ்தவர்கள் கை நெகிழவிடாது செய்துகொள்ளக்கூடுமாகில் இந்தியத் திருச்சபையின் நிலைமை எத்துணை திருப்திக்கு இடமான நிலைமையாயிருக்குமென்று அசரியா அந்நாட்களில் அடிக்கடி எண்ணி ஏங்கினர். தகுந்த பயிற்சி பெற்ற இந்தியக் கிறிஸ்தவப் பெண்கள் உபாத்திமைத் தொழிலையும், வைத்யத்தொழிலையும் செய்ய முன்வந்துள்ளனர். ஆனால் சுவிசேஷ பிரசார வேலையைச்செய்ய அநேகர் துணியவில்லை. இந்த வேலையை மேல்நாட்டுப் பெண்களே பார்த்துவந்தனர். இப்படி இருக்க 1940-ம், 1942-ம் வருடங்களில் உயர்தரக் கல்விகற்ற மூன்று இந்தியக் கிறிஸ்தவப் பெண்கள் சுவிசேஷப் பிரசாரவேலை செய்ய விரும்பினர். அதைக்

கண்டு அசரியாவிற்கு அளவற்ற ஆனந்தம் பெருகிற்று. அவர்களுக்குத் தகுந்த பயிற்சி கொடுப்பதில் கூர்ந்த கவலை எடுத்துக்கொண்டார். அவர்கள் வேத சாஸ்திரம் கற்று முடித்தபின் 1944-ம் வருடத்தில் டோர்னக்கல் அத்தியட்ச ஆலயத்தில் அவர்களைச் சுவிசேஷ வேலைக் கென்று அசரியா ஆசீர்வதித்து அதிகாரம் கொடுத்தார். பெண்களுக் கும் பிள்ளைகளுக்கும் செய்யப்பட்டு வந்த சகல சேவையையும் அவர் களுடைய மேற்பார்வைக்கு ஒப்புவித்தார். இந்தச் சுப சம்பவம் சபையில் தோன்றவிருக்கும் ஓர் சிறந்த இயக்கத்தின் முன் அடை யாளமாக இருக்கிறதென்று அத்தியட்சர் கருதி களிகொண்டார். அத்தகைய இயக்கம் சபைக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்யு மென்பது அவருடைய நம்பிக்கை. ஒரு சபையின் தேர்ச்சி அச் சபைப் பெண்களின் தேர்ச்சிக்கு மேற்பட்ட தேர்ச்சியாயிருக்க முடியாதென்று அவர் அடிக்கடிச் சொல்வது உண்டு. தமது சபை களில் பெண்களுக்கு வகுப்புகளும் ஆலோசனைக் கூட்டங்களும் ஒழுங்கு செய்வதில் அவர் குன்றாத ஊக்கம் கொண்டிருந்தார். பெண் கள் சபைகளின் மூப்பர்களாக நியமிக்கப் பெறுவது அவருக்கு நன்மையாகத் தோன்றிற்று. கிராமப் பஞ்சாயத்தின்முன் ஒரு பெண் ணின்மீது சாற்றிய குற்றத்தையோ அல்லது அவள் கொண்டுவந்த பிராதையோ விசாரிக்கும்பொழுது பஞ்சாயத்தாருள் ஒருவர் பெண்ணுயிருக்கவேண்டுமென்று அசரியா சபைகளுக்கு உத்தரவிட் டிருந்தார். மற்ற நிர்வாகச் சங்கங்களிலும் பெண்களுக்கு உரிமை அளிக்க அவர் விரும்பினர். சபையின் பெண்களும் ஆண்களைப் போலவே கல்வியில் தேர்ச்சி அடைந்தால் ஒழிய சபையின் பற்பல வேலைகளையும் செய்யத்தக்க ஆட்கள் கிடைப்பது கடினம். படித்த மனைவிமாரும் தாய்மாரும் சபைக்குத் தூண்களாக விளங்குவார்கள். அவர்கள் மாத்திரமே குடும்பங்களை அன்பு, ஒழுக்கம், தெய்வ பக்தி ஆகிய நற்சீரின் உறைவிடமாக்கக் கூடியவர்கள். இவ்வுண்மைகளை உணர்ந்து அசரியா தமது சபையின் பெண்களின் முன்னேற்றத்திற் காக மிகுந்த கவலையோடு முயற்சித்தார்.

இந்த நாட்களில் அவருக்கு மற்றொரு கவலையும் ஏற்பட்டது. கிராமங்களிலும் பட்டணங்களிலும் வாலிபருக்கு நேரிடும் பாவ சோதனைகள் அத்தியட்சருக்கு கவலையைப் பெருகிற்று. வாலிபப் பருவம் அடைந்துவரும் காலத்தில் சிறுவரும் சிறுமிகளும் தம் உடலில் தோன்றும் வளர்ச்சியையும் உள்ளத்தில் தோன்றும் புதிய விருப்பங்களையும் விளங்கிக்கொள்ளக்கூடாது தயங்குகின்றனர். அவற்றின் தன்மையையும் பயனையும் நன்கு அறிந்து அவற்றை அடக் கிப் பரிசுத்தப்படுத்தும் வழிகளைக் கற்றல் அவசியமென்று அசரியா

உணர்ந்தார். குருமார், உபாத்திமார், உபாத்தினிமாரிடம் இவ்விஷயத்தைக் குறித்துத் தெளிவாகப் பேசினர். அனுவசியமான கூச்சத்தையும் வெட்கத்தையும் அகற்றிவிட்டு, வாலிபப் பிள்ளைகளுக்குத் தங்கள் உடலிலும் உள்ளத்திலும் உண்டாகும் புதிய தீவிர வளர்ச்சியையும் உணர்ச்சியையும்பற்றிய உண்மைகளை எடுத்துக் கூறவேண்டுமென்று அவர் ஆலோசனை சொன்னர். ஏனென்றல் இவற்றைக் குறித்து அரைகுறையானதும் நேர்மையற்றதுமான எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் வாலிபப் பிள்ளைகள் பல வழிகளில் அறிந்து ஏற்றுக்கொள்ளுகின்றூர்கள். நேர்மையும் பரிசுத்தமுமான உண்மைகளை கற்றுக்கொடுத்தல் அத்தியந்த அவசியமாயிருக்கின்றது. அவற்றைக் கற்றுக்கொடுக்கவேண்டியவர்கள் குருமார், உபாத்திமார், பெற்றோர் ஆகிய இவர்களேயாகின்றனர். இவர்கள் தம் கடமையையும் பொறுப்பையும் செய்யத் தவறியிருப்பதால் வாலிபப்பிள்ளைகள் மேய்ப்பன் அற்ற மந்தையைப்போல் அலைகின்றனர். அவர்கள் தீய எண்ணங்களையும் வழக்கங்களையும் கற்றுக்கொள்ளுகின்றூர்கள். ஆதலால் சிலர் கற்புநிலை தவறிக் கொடிய துன்பத்திற்குள்ளாகின்றனர். இவர்களுக்கு வழி காட்டுவது குருமார், பெற்றோர், உபாத்திமாருடைய பொறுப்பென்று அசரியா வற்புறுத்தினர்.

புதிதாகக் கிறிஸ்து சமயத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்குக் கொடுக்கும் பயிற்சி அவர்களுடைய பிள்ளைகள் அடங்கிய இரண்டாம் தலைமுறைச் சபைக்கு முற்றும் பொருந்தியதாகாது. இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் கல்வியிலும் நாகரிகத்திலும் ஒழுக்கத்திலும் தேர்ச்சியடைந்தவர்களே, என்றூலும் புதிதாகக் கிறிஸ்து சமயத்தை ஏற்றுக்கொண்டவர்களின் ஒரு முக்கிய அனுபவம் இவர்கள் அடைந்ததில்லை. விக்கிரக ஆராதனை, ஜாதிக் கட்டுப்பாடுகள், மூடபக்தியாகிய அந்தகாரத்தினின்று கிறிஸ்து சமயத்தின் வெளிச்சத்தை முதல் முதலாகக் காணுங்கால் விளையும் வியப்பும் களிப்பும் மதவைராக்கியமும் இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் அனுபவித்தறியார். தவிர குழந்தைப் பருவத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் பகுத்தறிவு பெற்றபின் மனப்பூர்வமாக கிறிஸ்துபெருமானைத் தமது இரட்சகராக ஏற்றுக்கொள்ளாவிடில், அவர்கள் பேருக்குக் கிறிஸ்தவர்களாக மாத்திரமே இருப்பார்கள். ஆதலால் கிறிஸ்துவின் இரட்சண்யமாகிய பரம சுதந்திரத்தை இவர்கள் மதித்து ஏற்றுக்கொள்வது அவசியம். இதற்கு அவர்களை நடத்திச் செல்வது முதியோரின் பொறுப்பு.

ராபர்ட் நோபல் மசூலிப்பட்டினத்திற்கு மிஷனெரியாக வந்தது 1841-ம் வருடம். அவர் சுவிசேஷ வேலை ஆரம்பித்ததின் ஞாப

கார்த்தமாக நூற்றாண்டு விழா மசூலிப்பட்டினத்தில் நடைபெற்றது. அச்சமயம் திருவிருந்து ஆராதனையில் அசரியா அத்தியட்சரும் பதினாறு குருக்களும் திருவிருந்து பரிமாறியும் ஆராதனைக்கு வந்தவர்கள் யாவருக்கும் அப்பமும் இரசமும் கொடுத்து முடிக்க இரண்டு மணி நேரம் பிடித்தது. திருவிருந்து அருந்தியவர்களுட் சிலர் 80 வயதும் சிலர் 60 வயதுமுள்ள வயோதிகராய் இருந்தார்கள். ஆனால் முக்கால் பங்கு 40 வயதிற்குட்பட்டவர்களேயாவர். ஆதலால் சபையின் முக்கால்வாசி அங்கத்தினர் இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்களாய் இருந்தார்களென்பது தெற்றெனத் தோன்றியது. அவ்வருடம் அத்தியட்சர் குருமாருக்குக் கூறிய எச்சரிப்புச் செய்தியில் இந்தியாவிலுள்ள சகல குருமாரும் சபைத் தலைவர்களும் கவனிக்கவேண்டிய உண்மைகள் இருக்கின்றன. அச்செய்தியில் ஒரு பகுதியை இங்கு எடுத்துக் காட்டுதல் நன்மை பயக்கத்தக்கதாகும்.

“இது ஒரு புதிய சந்ததி. இது விக்ரக ஆராதனைக்கும் மூடபக்திக்கும் விலகி நிற்கும் சந்ததி. இது கிறிஸ்தவ நாகரிகத்தின் புறம்பான பண்புகளையும் ஒழுக்கங்களையும் கைப்பற்றி நிற்கிறது. என்றாலும் இச் சந்ததியார் இதன் காரணமாகவே பாவ மன்னிப்பைப்பெற்று புதிய வாழ்க்கை வாழ்வதின் அவசியத்தை உணராதிருக்கலாம். இவர்கள் கிறிஸ்தவ சமுதாயப் பாங்காகிய சூழ்நிலையில், கோவில் மணியோசைக்கிடையே வளர்ந்து வந்திருக்கின்றார்கள். கிறிஸ்துவின் ஜீவிய சரிதையும் போதனையும் இவர்கள் சிறுபிராயம் முதற்கொண்டே கேட்டுக் கற்ற விஷயங்களாகின்றன. அவற்றின் உட்கருத்தை இவர்கள் உணர்ந்துகொண்டு இருக்கின்றார்களென்று சொல்லுவதற்கு இடமில்லை. நாங்கள் கிறிஸ்தவர்களென்று வெகு துரிதமாகவும் பெருமையோடும் சொல்லிக்கொள்ளும் யாவரும் கிறிஸ்து சமயம் பக்தர்மேல் சுமத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல. உண்மையை எளிதில் அறிந்துகொள்ளுவதில் தீங்கும் இருக்கின்றது. சத்திய உபதேசத்தைக் கக்கத்தில் வைத்தும் கருத்தில் வைக்காதிருத்தலே அத்தீங்கு. கிளிப்பிள்ளைப் பாடமாக விசுவாசப் பிரமாணத்தையும் பத்துக் கற்பனைகளையும் முணுமுணுத்தபோதிலும் அவற்றின் உட்கருத்தை ஓர்ந்து அவற்றின் விதிவிலக்கை மனப்பூர்வமாக அங்கீகரித்து ஒழுகாதவிடத்து பக்தியல்ல மாய்மாலமே பிறக்கும். இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் இந்தச் சோதனையினின்று தற்காக்கப்படவேண்டும்.”

“தவிர இவர்கள் நூதன சுதந்திரம் பெற்றிருக்கின்றார்கள். அதன் காரணமாகவே உலகப்பற்றும் கண்களின் இச்சையும் வாழ்க்கையின் பெருமையும் அவர்களைச் சூழ்ந்து நிற்கின்றன. இவை கிறிஸ்தவ

ஒழுக்கமாகிய பயிரை நசுக்கும் களைகளாய் இருக்கின்றன. இந்த விக்கினத்திற்குள் சிக்கிக்கொண்டவர்களுட் சிலர் திருச்சபையையும் அதன் குருக்களையும் குறித்து அபவாதம் கூறுகின்றார்கள். தெய்வ ஆராதனையும் நற்கருணை என்னும் சாக்கிரமந்தையும் அலட்சியம் பண்ணுகிறார்கள்."

அத்தியட்சர் சுட்டிக்காட்டிய விபத்து டோர்னக்கல் சபையை மாத்திரமல்ல, சகல சபைகளையும் நெருங்கி நிற்கிறது என்பதைக் குருமார் யாவரும் அறிவர்; அறிந்தும் கலக்கமுற்று இருக்கின்றனர். ஆபத்து நெருங்கியிருக்கிறதென்று எச்சரிப்பு மாத்திரம் கூறிவிட்டால் போதாது. அதை விலக்க வழி வகை யாதேனும் உண்டோ என்று உசாவிக்கண்டு அறிவிப்பது அவசியமே. ஆதலால் அசரியா தம் குருமாருக்கு ஏற்ற ஆலோசனையையும் கூறினர். பவுல் அப்போஸ்தலர் தம் நிருபங்களை முதல் தலைமுறைக் கிறிஸ்தவர்களுக்கே எழுதினார். ஆகையால் இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்களுடைய சோதனைகளை எதிர்த்து மேற்கொள்ளும் வழியை அந்நிருபங்களில் தேடுவதில் பயனில்லை. யோவான் அப்போஸ்தலரின் சுவிசேஷத்திலும் நிருபங்களிலும், வெளிப்படுத்தின விசேஷத்திலும் மிகப் பிரயோஜனமான கருத்துகள் கிடைக்குமென்று அசரியா கருதினார். நல்ல வியாக்கியான நூல்களின் உதவியைக்கொண்டு அவற்றை அவர் கருத்தாய்ப் படித்தார். தாம் கற்ற உண்மைகளை தம் குருமாருக்கும் புகட்டினார். முதலாம் தலைமுறையில் கடவுள் தமது பரிசுத்த ஆவியின் மூலமாகத் தொடங்கிய மீட்பின் கிரியையைப் பின் சந்ததியாருக்குள் தொடர்ந்து செய்யும் வழி யாதென்று கண்டார். ஆலய ஆராதனை, பரிசுத்த நற்கருணை கிறிஸ்துவுடன் ஒன்றுபட விரும்பும் விருப்பம், இருள் சூழ்ந்த மேதினியின்மீது சுவிசேஷ மெய்ச்சுடரை வீசுதல் ஆகிய மத அனுசாரங்கள் திருச்சபை பூரண வளர்ச்சி அடைவதற்கு கடவுள் கையாளும் முறைகளாயிருக்கின்றன என்று அசரியா அறிந்துகொண்டார்.

அத்தியாயம் 13

ஓட்டத்தின் முடிவு

1944-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி அசரியா தமது 70-ம் பிறந்த நாளை டோானக்கல்லில் கொண்டாடினர். அவர் 20 வயது வாலிபனாகத் தெய்வ பணிவிடைக்கென்று தமது காலத்தையும் பலத்தையும் அறிவையும் திறமையையும் பிரதிஷ்டை செய்தநாள் முதற்கொண்டு ஓய்வின்றிப் பொறுப்பும் பாரமுமான பற்பல சேவைகளில் ஈடுபட்டிருந்தார். அவர் அலைந்த அலைச்சலுக்கும் செய்த

உபந்நியாசங்களுக்கும் கணக்கில்லை. அவர் விரும்பி ஆதரித்த சங்கங்களும் இயக்கங்களும் பல. அவர் எத்தனை ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகிய கிறிஸ்துவின் மந்தையாகிய ஜனங்களின் ஆத்தும ஈடேற்றத்தை நாடிக் கவலையோடும் பெருமூச்சோடும் பரிந்து மன்ருடி வந்தாரென்பது அவருக்கும் அவர் சேவித்து வந்த ஏசுபெருமானுக்கும் மாத்திரமே தெரியும். சரீரப் பிரயாசத்தையும் மனோதத்துவங்களையும் உணர்ச்சிகளையும் அளவில்லாது ஐம்பது வருடகாலமாக வாரியிறைத்துக்கொண்டிருந்த இவருக்குத் தம் 70-ம் பிறந்த நாளில் என்னென்ன ஞாபகங்கள் வந்தனவோ, எவ்வெவ் விஷயங்களில் திருப்தியும், எவ்வெவ் விஷயங்களில் அதிருப்தியும், அன்று அவர் உள்ளத்தில் புகுந்ததோ யாவரே அறிவர். என்ருலும் அத்தியட்சர் அன்று தம் முழு மனதோடும், முழு உள்ளத்தோடும் முழுபலத்தோடும் தம்மைத் தடுத்தாண்ட கிறிஸ்து பெருமானை வாழ்த்திப் போற்றினுர் என்பதில் ஐயமில்லை. தமது வாழ்க்கை இலட்சியங்களில் முதலிடம் வகித்திருந்த டோர்னக்கல் திருச்சபையின் சிறந்த தேர்ச்சியின் அறிகுறியாக டோர்னக்கல் அத்தியட்ச ஆலயம் அவர் கண்முன் நின்றது. தமது குடும்ப வாழ்க்கையில் நிலவிய சந்தோஷம், சமாதானம், தெய்வ பக்தி ஆகிய அரிய தன்மைகளின் சின்னங்களும் அவரைச் சூழ்ந்து நின்றன. அச்சின்னங்கள் அவருடைய அரிய பத்தினியும், பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளுமேயாம். அவர்கள் அவரது உள்ளத்தில் முழங்கிய தோத்திர கீதத்தை எதிரொலித்தனர். 70 வயது வரைக்கும் சுகத்தோடும் பலத்தோடும் பிழைத்திருக்கும் சிலாக்கியம் இந்திய மக்களுள் வெகு சிலருக்கே கிடைக்கக்கூடியதாயிருப்பதை நினைத்து, அசரியாவும் அவர் வீட்டாரும் அன்று அளவற்ற அன்புடன் ஆண்டவரை அர்ச்சித்துப் போற்றினர்.

எழுபது வருடகால ஓட்டமும் ஐம்பது வருட ஓயாத உழைப்பும் அசரியாவை ஒரு சிறிதே பலவீனப்படுத்தியதாகத் தோன்றிற்று. அவருடைய ஆழ்ந்தபொறுமை சற்றுக்குன்றியதாகக் காணப்பட்டது. சங்கடங்களையும் இடையூறுகளையும் அவர் முன்போல சாந்தமாகத் தாங்கக்கூடாதிருந்தார். ஒருநாள் முழுவதும் கூட்டங்களையும் ஆராதனைகளையும் நடத்தியபின் அந்தி வேளையில் சிறிது களைப்புற்றவராகக் காணப்பட்டார். இவை தவிர அவர் தமது சேவையில் முன்போலவே குன்ருத ஊக்கமும் அரிய புத்திக்கூர்மையும், மிகுந்த விழிப்புமுள்ளவராக விளங்கினுர். முதுமை அவருடைய உணர்ச்சிகளைக் கனியச் செய்திருந்தது. பாலியபருவத்தின் மூடுக்கும் வீராமும் குறைந்து சாந்தமும் பட்சமும் நிறைந்திருந்தது. அவரை யாவரும் திகிலின்றி அணுகத்தக்கதாக அவருடன் பிறந்த முகமலர்ச்சி அதிகரித்திருந்தது.

அசரியா தமது சபைக்கு எழுதிய கடைசி நிருபத்தில் மார்த்தோமா ஸிரியன் திருச்சபையைக் குறித்து அவர் கொண்டிருந்த அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தினர். ஆங்கிலத் திருச்சபையையும் மார்த்தோமா திருச்சபையையும் சேர்ந்த குருமாருக்கு ஒரு தியானக் கூட்டம் நடத்த அசரியா திருவாங்கூர் சென்றிருந்தார். அங்கிருந்து டோர்னக்கல் திரும்பியவுடன் அவர் தமது சபைக்குக் கடைசி நிருபத்தை எழுதினர்:—

"மார்த்தோமா திருச்சபைகளுடன் நாம் ஒரு சிறிதளவே நற்கருணை ஆசரிப்பில் பங்கு பெற்றிருக்கிறோம். தினையளவு தொடங்கியிருக்கும் இவ்வொற்றுமை பெருகி உறுதியடைந்து இவ்விரு சபைகளின் ஆன்மத் தேர்ச்சிக்கு அனுகூலமாக விளங்குமென்று நான் நம்புகிறேன். திருவாங்கூரிலிருக்கும் நமது சபைகள் மார்த்தோமா சபையினிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய நன்மையான விஷயங்கள் பல உள. அவ்வாறே அச்சபையும் நமது சபைகளிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய சில பண்புகளும் இருக்கின்றனவென்று நான் தாழ்மையாகக் கூறுகின்றேன். இவற்றைக் கற்றுக்கொண்டு இவ்விரண்டு சபைகளும் எம்பெருமானாகிய கிறிஸ்துவின் மகிமைக்கென்று ஒன்றையொன்று பலப்படுத்தவேண்டுமென்று இறைவனை நோக்கிக் கெஞ்சிக்கொண்டேன். நான் திருவாங்கூரில் இருந்து திரும்பினேன்" என்று அசரியா அந்நிருபத்தில் எழுதியிருந்தார். சபைகள் ஒன்றிப்படையவேண்டுமென்றும் அவை ஒன்றையொன்று தேற்றி உற்சாகப்படுத்திக் கர்த்தராகிய கிறிஸ்தேசுவின் சத்திய ஆட்சியை நம் நாட்டில் பலப்படுத்தவேண்டும் என்றும் அசரியா கொண்டிருந்த தீராத வாஞ்சை இச்சொற்களில் தொனிக்கிறது.

கிறிஸ்துவின் உத்தம தளகர்த்தனாகிய அசரியா தமது கடை மூச்சோயும் வரைக்கும் போர் முனையில் நின்று சமர் புரிந்துகொண்டிருந்தார். 1944-ம் வருடம் டிசம்பர் மாதம் 22-ம் தேதி டோர்னக்கல் ஆதீனத்தின் ஒரு மூலையிலிருந்த பார்க்கல் என்னும் கிராமத்திற்குச் சென்றார். கிறிஸ்மஸ் பண்டிகை வாரத்தை அங்கு களிக்க விரும்பினார். அங்கிருந்த சபைகளின் தேர்ச்சி சற்றுக் குறைவாகவே இருந்தது. அங்கு மார்த்தோமா சபை தமது பிள்ளைகளுள் இருவரை மிஷனெரி ஊழியஞ் செய்ய அனுப்பியிருந்தது. திருவாங்கூரிலிருந்து அசரியா திரும்பிய சில தினங்களுக்குள் அங்கு செல்லுவதில் அவருக்கு ஒரு புதிய ஆர்வம் பிறந்திருந்தது. டோர்னக்கல்லிலிருந்து 70 மைல் தூரம் மோட்டார் பஸ் வண்டியில் பிரயாணம் செய்தார். பார்க்கலில் இருந்த முசாபரி பங்களாவை அவர் அணுகியபோது சூரியன் அஸ்தமித்து விட்டது. கிராமச் சபையார் அத்தியட்சரை வரவேற்க

மேளவாத்தியத்தோடு காத்து நின்றார்கள். மலையாளியாகிய தம் குருவும் ஒரு தெலுங்கு உபாத்திபாயரும் ஜனங்களை நடத்தச் சிறுவர்கள் குதித்துக் கூத்தாட அத்தியட்சர் வெகுகெம்பீரமாய்ப் பங்களாவிற்கு நடந்து சென்றார்.

அடுத்த நாள் அதிகாலையில் அவர் ஒரு மாட்டு வண்டியில் ஏறி ஒரு சிறு கிராம ஆலயத்தில் திடப்படுத்தல் ஆராதனை நடத்தச் சென்றார். ஆலயம் மண்சுவராலும் ஓலை முகட்டாலும் அமைந்த ஒரு கேவலமான கட்டடம். கூடியிருந்த ஜனங்கள் துயிலாடை அணிந்தவர்கள் அல்ல. அவர்கள் உடுத்தியிருந்த உடையில் அநேக கிழிச்சல்கள் இருந்தன. அவர்கள் கல்லாத பேதை மக்கள், என்றாலும் அவர்களையும் கிறிஸ்து சமயப் போதனையில் திடப்படுத்துவதை அசரியா அற்பமான தொழிலெனக் கருதவில்லை. திடப்படுத்தலடைய ஆயத்தமாயிருந்த ஆண்களும் பெண்களும் பாயில் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். அத்தியட்சர் அவர்கள் மூன் ஒரு ஆசனத்தில் அமர்ந்தார். கிறிஸ்துவின் சரிதையைக் கூறும் ஞானக் கீர்த்தனைகளில் எத்தனைக் கீர்த்தனைகளை அவர்கள் மனப்பாடம் பண்ணியிருந்தார்களென்று விசாரித்தார். கர்த்தருடைய ஜெபமும் விசுவாசப்பிரமாணமும் அவர்கள் கற்றிருந்தார்களா என்று பார்த்தார். ஞானஸ்நானத்தில் இரட்சகர் பக்தர்களுக்கு அளிக்கும் வாக்குகள் எவை என்று கேட்டார். ஊடே ஊடே சிறு வியாக்கியானங்களை அவர்களுக்குக் கூறினார். ஊக்கமும் விழிப்பும் அவர் கண்களில் பிரகாசித்தது. பேதை மக்கள் சொன்ன தவறான விடைகளைக் கேட்டு சில வேளைகளில் அவர் மெதுவாக நகைத்தார். விசுவாசப் பிரமாணத்தை ஒப்பிக்கும்பொழுது சிலர் குழப்பமடைந்தார்கள். அவர்களுக்கு அப்பிரமாணத்தின் கருத்தை விளக்கிக் கூறினார். யாரோ ஒரு பாடகன் அவர்களுக்குக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த ஒரு கீர்த்தனை கற்றுக்கொடுத்திருந்தார். அக்கீர்த்தனையில் அழுகையும் புலம்பலும் தொனித்தது. அதை ஜனங்கள் பாடக்கேட்டபொழுது அசரியா வியப்புற்றார். "கிறிஸ்து அரசனின் வருகை பக்தருக்கு அளவற்ற சந்தோஷத்தையல்லவோ அளிக்கவேண்டும். இந்தக் கீர்த்தனை அழுகையும் புலம்பலுமாகவல்லவோ இருக்கிறது. இதென்ன விபரீதம்" என்று அவர் ஜனங்களுக்குப் புத்தி புகட்டினார்.

இப்பேதை மக்களின் கிறிஸ்து சமய உபதேசத்தின் அறிவைக் குறித்து பரிசோதிப்பதில் மிகக் கடினமாயிருத்தல் கூடாது. அசரியா ஒருவரையும் எளிதில் தள்ளிவிடுவதில்லை. ஒரு பெண்பிள்ளை கேட்ட கேள்விகள் ஒன்றுக்கேனும் விடை கூறாது மௌனம் சாதித்தாள். யாவரும் விசுவாசப் பிரமாணத்தை ஒப்பிக்கும்பொழுது ஒருவன்

வாய்திறவாமல் அங்குமிங்கும் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்தான். இவர்கள் இருவரும் இன்னும் கொஞ்சம் நாள் பாடம் கேட்கவேண்டு மென்று இவர்களை ஒதுக்கிவிட்டார். பரிசோதனை முடிந்தபின் தமது ஆடுகளுள் மிகவும் குறைந்த அறிவுள்ள இவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் குறித்தும் அவருடைய வல்லமையைக் குறித்தும் இவர்கள் விளங்கிக் கொள்ளத்தக்க விதமாக அத்தியட்சர் சிறிது நேரம் உபதே சித்தார். பின்பு அவர்கள் அவர்முன் முழந்தாள் ஊன்றி நிற்க அவர் கள் சிரங்களில் தமது கரங்களைவைத்து ஆசீர்வதித்து ஒவ்வொருவர் மேலும் சிலுவையடையாளத்தைத் தம் விரல்களால் வரைந்தார்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. அன்று பார்க்கல் ஆலயத்தில் திருவிருந்து ஆராதனை நடத்த அசரியா திரும்பினார். கிராமச் சபைக ளில் ஆராதனை நடத்தும்பொழுதெல்லாம் அவர் முழு நேரமும் சபைக்கு எதிர் முகமாகவே நிற்பார். அது ஏனென்று கேட்டால் குருவானவருடைய கண்கள் அவர்கள்மேல் இல்லாதபொழுது கிராமச் சபையோருடைய கவனம் சிதறுகிறதென்றும், சிலர் அங்கு மிங்கும் பார்க்கவும் முணுமுணுவென்று பேசவும் தூண்டப்படுகிறார் களென்று அத்தியட்சர் சொல்லுவார். பெரிய விஷயங்களில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும்பொழுது சில சிறிய விஷயங் களையும் ஒருவர் கவனித்துக் கொள்ளாதவிடத்து, பெரிய விஷயங் களைக்கொண்டு செலுத்துவதில் இடையூறுகள் ஏற்படுமென்று அச ரியா நன்கு அறிவார். திருவிருந்து ஆராதனையில் பத்துக் கற்பனை களைச் சபைக்கு நினைப்பூட்டும்பொழுது சபை செய்யும் பிரார்த் தனையை ஒரு சிறு பல்லவியாக அமைத்து அதைப் பாடுவது வழக்கம். அதை யாவரும் கருத்தோடு பாடவேண்டுமென்று அசரியா அடிக்கடி வற்புறுத்துவார். புதிதாகக் கிறிஸ்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் தம் ஒழுக்கத்தைச் சீர்திருத்திக் கொள்ளுவதற்குக் கடவுள் மோசேயின் மூலமாக இஸ்ரவேலருக்கு விதித்த தசப்பிரமாணங்கள் மிக அனுகூல மானவை என்றும் இஸ்ரவேலரைப் போலவே புதிய கிறிஸ்தவர்க ளும் பக்தி நெறியை விட்டுவிலகி விக்கிரக ஆராதனைக்கும் வீண் சடங்காசாரத்திற்கும் உடன்படுவார்கள் என்றும் அறிந்து அவர் அப் படிச் செய்தார். இரசம் பரிமாறுவதில் அவர் ஒரு நூதன முறையை அனுசரித்து வந்தார். பாத்திரத்திலிருந்து குடிப்பதற்குப் பதிலாக இரசத்தைக் கரண்டியில் எடுத்து திருவிருந்து அருந்த வருபவர்களு டைய வாயில் ஊற்றுவார். இந்த முறையை மார்த்தோமா சபை அனுசரித்து வருகிறது. மேலும் பானபாத்திரத்தை வாயில் வைப்பது அசுசியான வழக்கமென்று இந்தியர் கருதுகின்றார்கள். இந்தப் புதிய முறை சுகாதார முறையாகவும் இருக்கின்றது.

அவர் அதிகமாக நேசித்த கிராம வாசிகளாகிய ஏழைக் கிறிஸ்தவ சகோதரருடன் பார்க்கலில் அத்தியட்சர் தமது கடைசி கிறிஸ்மஸ பண்டிகையைக் கொண்டாடினார். சபை சிறிய சபை என்றாலும் அவருக்கிருந்த சந்தோஷத்திற்குக் குறைவில்லை. உலக மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பை நினைத்து மனமகிழ்ச்சியுற்றபொழுது அவதார சம்பவத்தில் வெளிப்பட்ட அளவற்ற தெய்வ அன்பு சிலுவையில் பரிபூரணமடைந்ததையும் நினைத்துக்கொள்ளத் திருவிருந்து ஆராதனையையும் அசரியா அன்று நடத்தினார். சத்திரத்தின் முன்னணையிலிருந்து கொல்கதா மலைவரைக்கும் அவருடைய மனம் துரிதமாக எம்பெருமானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்றது. மீட்பின் கிரியையையும் அதன் அளவற்ற மான்மியத்தையும் அன்று அவர் நினைத்து நினைத்து புளகாங்கிதம் அடைந்தார். கிறிஸ்மஸ்தினக் கொண்டாட்டத்தின் முடிவாக அன்று சாயங்காலம் அவர் கிராமச் சிறுவருக்குப் பரிசுகள் வழங்கினார். பரிசு பெற வந்தவர்களுள் மூன்று சிறுமிகளும் ஒரு சிறுவனும் இருந்தார்கள். அவர்கள் பாடசாலையிலிருந்து பண்டிகை நாட்களைத் தம் பெற்றோரோடு கழிக்க வந்திருந்தார்கள். அவர்களுக்கும் மற்ற கிராமப் பிள்ளைகளுக்கும் பெரியதோர் வேற்றுமைத் தோன்றிற்று. அவர்கள் உடை சுத்தமாயிருந்தது. அவர்கள் இனிமையாய்ப் பாடக் கற்றிருந்தார்கள். அதைக் கவனித்த பொழுது தமது சபைகளிலுள்ள எல்லாப் பிள்ளைகளும் கல்வி கற்றுக் கொள்ளத்தக்க வசதி இன்னும் ஏற்படவில்லையே என்று அசரியா கவலையுற்றார். அதோடுகூட போர்டிங் பாடசாலைகளில் கல்விகற்கச் சென்ற சில ஆண்டுகளுக்குள் கிராமப்பிள்ளைகள் எவ்வளவு தேர்ச்சியடைந்து விடுகிறார்களென்றும் கண்டு அவர் சந்தோஷப்பட்டார்.

இப்படியாக அசரியா கிராமச் சபைகளைச் சந்தித்துக்கொண்டு வரும்பொழுது நம்பிக்கையூட்டும் சிலவற்றையும் விசனமூட்டும் சிலவற்றையும் கண்டார். ஒருநாள் அந்திவேளையில் ஒரு கிராமச் சபையைச் சந்தித்துவிட்டு முசாபரி பங்களாவிற்குத் திரும்பும் வழியில் வேலையை முடித்து வீடுதிரும்பிக்கொண்டிருந்த ஒரு இடைப் பையனைப் பார்த்து அவனோடு பேச விரும்பி, "தம்பி நீ எங்கிருந்து வருகிறாய், மத்தியான சாப்பாட்டிற்கு என்ன செய்துகொண்டாய்? நீ கிறிஸ்தவனா?" என்று கேட்டார். "நான் கிறிஸ்தவனல்ல" என்று பையன் சொன்னான். "உங்கள் கிராமத்தில் கிறிஸ்தவர்கள் இல்லையா?" "இல்லை" "ஏன்?" "ஒருவரும் எங்களுக்குக் கிறிஸ்து சமயத்தைப் போதிக்கவில்லை." இதைக் கேட்டவுடன் அசரியா மௌனமாகப் பங்களாவை நோக்கி நடந்தார். சுவிசேஷத்தைக் கேட்காத ஜனங்கள் இன்னும் எத்தனையோ கோடி தமது நாட்டில் இருக்கின்றனரே என்று அவர் கவலையுற்றார்.

ஒரு கிராமத்தில் ஒருவன் கிறிஸ்து சமயத்தைச் சேர விரும்பினான். அவன் இரண்டு மனைவிகளுடையவன். கிறிஸ்து சபையில் இரண்டு மனைவிகளோடு வாழ்கிறவனுக்கு இடமில்லை என்றாலும் இவனுக்கும் இவன் மனைவிமார்களுக்கும் கிறிஸ்தவர்களாக வேண்டுமென்ற உண்மையும் உறுதியுமான வாஞ்சையும் இருந்தன. இதைக் குறித்து அசரியா ஒரு ஒழுங்கு செய்தார். இரண்டு மனைவிகள் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தது அந்தப் பெண்களின் குற்றமல்ல. ஆகையால் அவர்கள் வேத உபதேசம் பெற்று ஞானஸ்நானத்தின் மூலமாகத் திருச்சபையில் சேர்ந்துவிடலாம் என்றும் அவர்கள் கணவனோ இருமனைவிகளும் உயிரோடிருக்கும் வரையில் சபையில் சேரமுடியாது என்றும் அசரியா முடிவுசெய்தார். ஆனால் அவன் ஆலய ஆராதனையிலும் குடும்ப ஜெபங்களிலும் கலந்துகொள்ளுவதற்கு அவர் இடம் கொடுத்தார். இந்த ஒழுங்கு அநேகருக்கு ஏற்ற ஒழுங்காகக் காணப்படாது. என்றாலும் வேறு என்ன வழியிருந்தது. மனைவிகளுள் ஒருத்தியைத் தள்ளிவிடுவது நியாயமாகாது. அப்படித் தள்ளிவிடுவதென்றாலும் எவளைத் தள்ளிவிடுவது என்று தீர்மானிப்பதும் எளிதல்ல. அந்தக் குடும்பம் முழுவதும் பேய்களையும் விக்கிரகங்களையும் வணங்குவதை விட்டு மெய்ப்பொருளாகிய கிறிஸ்து பெருமானை வழிபடுவது உசிதமென்று ஒப்புக்கொள்ளும். ஆதலால் அத்தியட்சர் செய்த யுக்தமான ஒழுங்கு நல்ல ஒழுங்கென்றே சொல்லவேண்டும்.

மற்றொரு கிராமத்தின் சபையார் அனலற்று வெறும் பேருக்குக் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருந்தனர். அவர்களைப் பார்த்து அவர்களுக்கு எச்சரிப்பும் புத்திமதியும் அசரியா கூறிவிட்டு மனதிலும் உடலிலும் தளர்ச்சியுற்றவராய்ப் பங்களாவிற்குத் திரும்பினார். அவர் ஏறிச்சென்ற வண்டியின் எருதுகள் எதையோ கண்டு பயந்து பூட்டும் கயிற்றைக் கழற்றிக்கொண்டு ஓடின. அசரியா உடனே வண்டியிலிருந்து கீழே குதித்துவிட்டார். சற்று நேரத்தில் எருதுகள் பக்கத்திலிருந்த வயலுக்குள் ஓடிப் பயிரைக் கடித்தன. நிலத்தின் சொந்தக்காரன் கோபாவேசம் கொண்டு, "ஏன் ஐயா உமது எருதுகளை என் வயலுக்குள் ஓட்டினீர்?" என்று கேட்டான். இந்த அநியாயமான முறைப்பாட்டிற்கு அசரியா சாந்தமான மறுமொழி பகர்ந்தார்.

அடுத்த நாள் பரி. யோவான் அப்போஸ்தலரின் திருநாள். அன்று காலையில் அசரியா தமது குடும்பத்தோடும் மூன்று சபை ஊழியரோடும் சேர்ந்து நற்கருணையை எடுத்துக்கொண்டார். அப்பொழுது யோவான் அப்போஸ்தலரின் வாழ்க்கையில் கிறிஸ்துவைப்பற்றிய

அறிவின் மேன்மையும் அவரோடு ஆத்மார்த்தமாக ஐக்கியம் அடையும் அனுபவத்தின் சிறப்பும் எவ்வளவு தெளிவாக விளங்குகிறதென்று அத்தியட்சர் உபதேசித்தார். இவ்வாராதனையில் ஆங்கில ஜெப நூலைப் படித்தார். அதிலிருந்து பரிசுத்த ஆவியை வேண்டி அழைக்கும் மன்றாட்டையும் ஓதினார். உங்களோடு என்றும் தங்கியிருக்கும் மற்றொரு தேற்றரவாளனை அனுப்புவேன் என்று கிறிஸ்து ஏசு கொடுத்த வாக்குறுதி அசரியாவிற்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. இதுவே அசரியா நடத்திய கடைசித் திருவிருந்து ஆராதனை. அந்த நாள் முழுவதும் அவர் அருகிலிருந்த கிராமங்களுக்குச் சென்று சபையோரைச் சந்தித்து அளவளாவினார்; சபை ரிஜிஸ்டர்களைப் பரிசோதித்தார். உபதேசிகருக்கும் உபாத்திமாருக்கும் உற்சாகமூட்டத்தக்க வார்த்தைகளை உரைத்தார். பொழுது விழுந்தபின் தூரத்திலிருந்த ஒரு கிராமத்தைப் பார்க்க வண்டியிலும், நெல் வயல்களினூடே கால் நடையாகவும் சென்றார். அவர் பங்களாவிற்குத் திரும்பிவர வெகு நேரமாகிவிட்டது. டிசம்பர் மாதக்குளிரில் நெல் வயல்களினூடே ஈரத்தில் நடந்ததினால் அவருக்கு ஜலதோஷம் கண்டது.

அசரியாவிற்கு வேலை அதிகமாய் இருந்த நாட்களிலும் கூட இரவில் இளைப்பாறவேண்டிய நேரத்தில் அவர் படிப்பதும் எழுதுவதுமாகிய தமக்குப் பிரியமான தொழிலைக் கைநெகிழ விடுவதில்லை. அவர் திருவிதாங்கூர் சென்று மார்த்தோமா சபையுடன் உடனுறவாடி வந்தார் என்று கண்டோம். இதன் பலனாக அச்சபையின் ஜெப ஆராதனை நூலை பார்க்கல் சபையில் இருந்த மலையாள குருவினுடைய உதவியைக்கொண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக்கொண்டிருந்தார். இந்தப் பூர்வீக சபை பல்லாண்டுகளாகச் சொல்லிவந்த தோத்திரங்களும் பிரார்த்தனைகளும் மற்ற சபைகளுக்கும் பயன்படுமென்பது அசரியாவின் கருத்து. இது ஒரு வேலை. இதோடுகூட இந்தியாவின் நாலுபாகங்களில் கிறிஸ்து சபை எப்படிப் பெருகி வந்திருக்கிறதென்று கண்டுபிடிக்க இந்திய சர்க்காரால் கடைசியாக எடுக்கப்பட்ட குடிமதிப்புப் பிரசுரத்தைத் துருவிக்கொண்டிருந்தார். ஒருபுறம் சபைகளின் ஆத்மீக முன்னேற்றத்திற்கடுத்த முயற்சி, மறுபுறம் சபைகளின் ஜனப்பெருக்கத்தைக் குறித்த ஆராய்ச்சி. இவை அசரியா இந்தியத் திருச்சபையின் தேர்ச்சியைக் குறித்துக்கொண்டிருந்த பூரண வைராக்கியத்தை வெளிப்படுத்துகின்றன. வயது முதிர்ந்த காலத்திலும் கூட அசரியா படிப்பை நிறுத்தவில்லை. புதிய புத்தகமொன்று கையில் கிடைத்தால் அவர் அதைக் கவனமாய்ப் படிப்பார். கிறிஸ்மஸ் தினமன்று அவர் பெற்ற நன்கொடைகளிலொன்று W. P. லாட் என்பவர் எழுதிய ஜெப தியான உபவாசத்தைப்பற்றி

நூல். அதையும் அவர் ஆவலோடு படித்துக்கொண்டிருந்தார். அதிலொரு பாகத்தை அடியில் கோடிட்டுக் குறித்திருந்தார். அந்தப் பாகத்தின் தலைப்பு "பூமியில் சமாதானம்" அதனடியில் ஆக்கியோன் இங்ஙனம் எழுதியிருந்தார். "கிறிஸ்து சமய அனுசாரங்களில் பரிசுத்த நற்கருணையைத் தகுந்த அளவு முக்கியப்படுத்துவது இந்நாட்களில் மிக அவசியமல்லவா? கிறிஸ்மஸ் திருநாளில் எண்ணிறந்த இடையரும் மன்னரும் மற்ற பக்தரும் முன்னணையைச் சூழ்ந்து நின்று பாலகனாகத் தோன்றியிருக்கும் உலக மீட்பரைப் போற்றி வணங்குகின்றார்கள். அதே சமயத்தில் எம்பெருமான் அன்பின் விருந்தும் ஒருமைப்பாட்டின் கட்டுமாக நியமித்த நற்கருணையையும் அனுசரிப்பது மிகுந்த நன்மையை விளைவிக்கும். அதனால் உலகின் கண் இணக்கத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டத்தக்க நவயுகம் தோன்றலாம். இந்தச் சாக்கிரமெந்தை சகல பண்டிகைகளோடும் கலந்துவிடுவதால் அதன் மதிப்பு குறைந்துவிடுமென்று அஞ்சுகின்றோமோ? அப்படி அஞ்சக் காரணமில்லை. இது கர்த்தருடைய விருந்து. பலிபீடம் அவருடைய சாப்பாட்டு மேசை, நாம் அனைவரும் அவருடைய அதிதிகள். நமக்கு அளிக்கப்படும் உணவு வான அப்பம், நாம் அடையும் ஒன்றிப்பு அவருடைய புனித உடலுடன் ஒவ்வொரு நற்கருணை ஆசரிப்பிலும் தூதர்களோடும் பிரதான தூதர்களோடும் சேர்ந்து பக்தர் 'உன்னதத்திலுள்ள தேவனுக்கு மகிமையும்!' என்று ஆர்ப்பரிக்கிறவர்களாயிருக்கின்றார்கள்."

பார்க்கல் சேகரத்தின் கிராமங்களைச் சந்தித்துக் களைப்புற்றவராக 28-ம் தேதி டோர்னக்கல்விற்கு அசரியா திரும்பினார். அவர் வீடு வந்து சேருமுன் அவருக்குக் கண்டிருந்த ஜலதோஷத்தினால் ஜுரம் ஆரம்பித்து விட்டது. சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பும்பொழுது அவர் அலுப்பினால் ஜுரத்தோடு வருவது சகஜமே. ஆதலால் இந்த முறையும் அவர் தம் உடல் நிலையைக் குறித்து கவலையுறவில்லை. அடுத்த நாள் 29-ம் தேதி அவர் அத்தியட்ச அபிஷேகம் பெற்ற தினம். அன்று அவர் அபிஷேகம் பெற்று 32 வருஷங்கள் பூர்த்தியாயிற்று. அந்த நன்னாளில் வழக்கம்போல அவர் நற்கருணை ஆராதனையை நடத்த இயலாதவராக இருந்தார். என்றாலும் அவர் படுக்கையைவிட்டு எழுந்து அன்று நடைபெற ஒழுங்காகியிருந்த வைபவங்களில் பங்கெடுக்கத் தம்மை ஆயத்தம் பண்ணிக்கொண்டார். அதன்பின் பலவீனம் அதிகரித்ததால் வைபவங்களை ரத்து செய்துவிட்டார். அடுத்த வாரம் டோர்னக்கல் அத்தியட்ச ஆலயப் பிரதிஷ்டையின் வருடாந்தரக் கொண்டாட்டம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அம்மகோற்சவத்தில் தலைமை வகிக்கவரும் சென்னை அத்தியட்சரையும் டோர்னக்கல் ஆதீனத்தி

லுள்ள சகல குருமாரையும் வரவேற்று உபசரிக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அவற்றிலும் அசரியா ஆலோசனைகளைச் சொல்லிக் கொண்டும் திட்டங்களைப் போட்டுக்கொண்டுமிருந்தார். இவற்றிற் கிடையில் தமக்கு அருமையான ஒருவருக்கு அவர் விரும்பிய வேத பாடக் குறிப்புகளையும் சொல்லி எழுதப் பார்த்துக்கொண்டார். 31-ம் தேதி வருஷத்தின் கடைசிநாள், கடைசி ஓய்வுநாள், அன்று திரு விருந்து ஆராதனை நடத்தவும் பிரசங்கிக்கவும் அவர் எதிர் நோக்கி யிருந்தார். ஆனால் அன்று அவர் அதிக பலவீனமடைந்து வந்தார். என்றாலும் சந்தோஷமாகவும் தைரியமாகவுமிருந்தார். திங்கள் காலை புதுவருட தினமன்று வைத்தியரை அவசரமாக அழைக்கவேண்டிய தாயிருந்தது. வைத்தியர் வந்து பரிசோதித்துவிட்டு அத்தியட்சர் இன்னும் 24-மணி நேரம் இருப்பாரென்று சொல்லுவதற்கு இட மில்லை என்று கூறினர். அன்று மதியம் அசரியா திடீரென்று கண்ணை மூடிப் புன்முறுவலோடு பிராணனை விடுத்தார். தம் அருகிலிருந்த மனைவிக்கும் இரண்டு பெண் மக்களுக்கும் கூட அவர் ஒரு வார்த்தை யும் கூறவில்லை. அவருடைய மற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனர் அதிக வியாதியாய் இருந்தாரென்றும் தெரியாது. அவர் மரிக்கும் சமயத்தில் அவர்கள் அவர் அருகில் இல்லை. தேவ ஆலயப் பிரதிஷ் டையின் வருஷோற்சவத்திற்கு வந்து கொண்டிருந்தவருட் சிலர் தம் தலைவர் தம்மை விட்டுப் பிரிந்ததை வரும் வழியில் கேட்டுத் திடுக்கிட் டார்கள். வேறு சிலர் டோர்னக்கல் சேர்ந்தபின் அத்தியட்ச ஆலயத் தில் சாவுமணி அடிப்பதைக்கேட்டு விசாரித்தபொழுதுதான் அசரியா உயிர் நீத்த துக்க செய்தியைக் கேட்டுத் திகைத்தனர்.

அடுத்த நாள் முழுவதும் அசரியாவின், அழிவிற்குரிய, கூடாகிய உடல் கெம்பீரமாகக் கிடத்தி வைக்கப்பட்டிருந்தது. அவரை அறிந்தயாவரும் அன்று வரிசை வரிசையாக வந்து அவருடைய அசை வற்ற மலர்ந்த முகத்தைப் பார்த்து பெருமூச்செறிந்தனர். அத்தியட்ச ருடைய வீட்டில் அழுகையும் புலம்பலும் தொனிக்கவில்லை. அவரு டைய மனைவி திடீரென்று தமதுமேல் விழுந்த பாரத்தைச் சுமப்ப தோடுகூட துக்கித்தயாவருக்கும் ஆறுதல் கூறிக்கொண்டிருந்தனர். 70 வருட காலமாகத் தமது கணவனை ஜீவனுள்ளோரின் தேசத்தில் இருத்திவைத்து, 50 வருட காலமாக அவருடைய தாலந்துகளை எல்லாம் தமது மகிமைக்கென்று உபயோகித்து அவரைக் கிருபையின லும் இரக்கங்களினலும் முடிசூட்டிய தேவனுக்கு அன்று நன்றி செலுத்துவதே தம் கடன் என்று எண்ணியவர் போல், அந்த அம்மாள் அமரிக்கையாகத் தலைவணங்கி நின்றனர். சரீர வேதனையும் மனக் கலக்கமும் அடைந்து வருந்தாது, சொற்பப் பிணிகண்டு, சடுதியாக அசரியா தமது நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். அவர்

தமது கடைசி மூச்சு ஒடுங்குமளவும், தாம் நேசித்துப் பூஜித்த இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்திற் கடுத்த விஷயங்களைக் கவனித்துக்கொண்டிருக்கும் சிலாக்கியம் பெற்றார். சூரியன் மேற்றிசையை நோக்கி மறைந்து சென்றுகொண்டிருக்கும்பொழுது அவர் கருத்தோடு ஊகித்துக் கட்டியமைத்த அத்தியட்ச ஆலயத்தின் பூங்காவில் கிழக்குச் சுற்றுச் சுவருக்கு அருகில் பலிபீடம் இருந்த திசையில் அவருடைய உடலை நல்லடக்கம் செய்தார்கள். அவருடைய சவப்பெட்டியைச் சுமந்து செல்லுகையில், "உயிர்த்தெழுந்த கர்த்தருக்கு ஜெயம், ஜெயம்" என்ற பல்லவியை உடைய தெலுங்குக் கீர்த்தனையைச் சபையோர் மெதுவாகப் பாடி நடந்தனர். தெய்வ சுதனாகிய கிறிஸ்து அடைந்த வெற்றியின் ஒரு பங்கு அவரை நம்பும் பக்தர் யாவருக்கும் விசேஷமாக அவருடைய சேவையில் தம் வாழ்நாட்களைக் கழித்த உத்தமத் தொண்டர் யாவருக்கும் உண்டன்றோ!

அசரியாவை நினைத்த மாத்திரத்தில் கண்முன் ஒரு உருவம் தோன்றுகிறது. சுமார் ஆறு அடி நீளமுள்ள ஒரு ஆள் உயரத்திற்கேற்ற பருமன்; அனாவசியமான நிணக்குவியல்கள் இல்லாது உறுதியான தசைகள் பொதிந்த உடல், மேனி இளங்கருப்பு; கனத்ததும் வெகு மிருதுவானதுமான குரல், கணுக்கால் வரைக்கும் நெகிழ்ந்து தொங்கும் ஊதாநிற அங்கியும் இடையில் அதே நிறக்கயிறும், மார்பின்மேல் அதே நிறநூலில் கட்டித் தொங்கிக்கொண்டிருக்கும் வெள்ளிச் சிலுவையும் விரலில் ஊதா நிறக்கல் பதித்த ஒரு வெள்ளி மோதிரமும் தோன்றுகின்றன. இவை அவ்வுருவத்திற்கு அழகு செய்கின்றன. அறிமுகமானவர்களைக் கண்டவுடன் மலர்ந்த முகத்தோடும் குளிர்ந்த கண்களோடும் கனிவததும்பும் இனிய குரலோடும் சற்று குனிந்து அவர் பேசும்பொழுது நண்பர் மனத்தில் இன்பம் பிறக்கும். இயல்பிலேயே வசீகரமுடைய ஒரு மனிதரின் முகத்தில் சாந்தமும் அமரிக்கையான உள்ளக்களிப்பும் தவழும்போது அவரைப் பார்க்கவும், அவரோடு பேசவும், யாவரும் விரும்பியது ஆச்சர்யமல்ல. தர்க்கத்திற்குரிய விஷயங்களைப் பேசும்பொழுதும் அசரியாவின் அமைதி சிதறுவதில்லை. அவருடைய முகமலர்ச்சியின் இரகசியம் என்ன? அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்த சமாதானத்தின் ஊற்று யாது? அவருடைய சாந்தத்திற்கும் முகமலர்ச்சிக்கும் ஊற்றாயிருந்தவை சில உள. அவற்றுள் பிரதானமானவை இரண்டு: வேதவாசிப்பும் ஜெபத்தியானமும் ஆம். அவர் வேதத்தைத் திரும்பத்திரும்பப் படித்தார். ஒவ்வொரு தரமும் பழைய வசனங்களில் புதிய கருத்துக்களைக் கண்டார். அவர் தமக்கென்றும் தமது உதவி ஊழியருக்கென்றும் ஓயாது தேடிக்கொண்டிருந்தார். இளமையிலேயே கிறிஸ்துவின் இரட்சிப்பின்

ஆச்சர்யமான கிருபையையும் அதனால் விளையும் பரிசுத்த சந்தோஷத்தையும் ருசித்தார். இவர் அவற்றை என்றும் சிந்தை செய்து களிப்புற்று வாழ்ந்தார். அவருக்கு இருந்த கவலை ஒன்றே ஒன்றுதான். அவர் இலவசமாகப் பெற்ற தெய்வ கிருபையையும் அன்பையும் யாவரும் பெற்று ஆத்ம ஈடேற்றம் அடையவேண்டுமென்பதே. அதற்கென்று தம்மால் இயன்றதைக் கடவுளின் ஒத்தாசையைக்கொண்டு செய்ய வேண்டுமென்பது ஒன்றே அவர் வாஞ்சை. இவற்றைத் தமது வாழ்க்கையின் இலட்சியமாக வைத்துக்கொண்டு இவற்றிற்காக இடைவிடாமல் பரிந்து மன்றாடுவார், பேசுவார், எழுதுவார், பிரசங்கிப்பார். இப்படித் தேவனுடைய வலது பாரிசமிருக்கும் மேலானவைகளை நாடிக்கொண்டிருந்த ஆத்மாவில் உலகம் தரக்கூடாத உன்னத சமாதானம் குடிகொண்டிருந்தது ஆச்சர்யமல்ல.

அடுத்தாற்போல பரம பிதா தம் மக்களுக்கென்று ஏராளமாக உலகில் குவித்து வைத்திருக்கும் நன்மைகளைக் களங்கமற்ற மனதோடு அசரியா அனுபவித்தார். செடிகள், மலர்கள், கனிகள், வீட்டில் வளரும் பறவைகள் மிருகங்கள் யாவும் இவருக்கு உற்சாகமூட்டி வந்தன. அவர் வீட்டின்முன் ஒரு பெரிய புறாக் கூண்டிலிருந்து மிருதுவான சத்தங்கள் பிறந்துகொண்டிருக்கும். வீட்டிற்குப் பின்புறத்தில் அழகான தோட்டம். அசரியாவின் சொந்த உழைப்பாலுண்டான ஒரு தோட்டம் இருந்தது. குடும்ப நேசம், நட்பு, பாலகருடைய புன்சிரிப்பு முதலிய இலவசமானதும், பொன்னால் கொள்ளக் கூடாததுமான கடவுளின் நன்கொடைகளை அசரியா பெரிதும் பாராட்டினார்; அவற்றில் மகிழ்ச்சிகொண்டார்.

காலத்தை ஆதாயம் பண்ணிக்கொள்வதில் அசரியா வெகு சமர்த்தர். அவர் செய்துவந்த வேலையோ மிகப் பொறுப்பானதும் ஒருவருடைய முழு நேரத்தையும் பலத்தையும் கவர்ந்துகொள்ளத்தக்கதுமாயிருந்தது. இது போதாதென்று இந்தியாவின் கிறிஸ்தவ இயக்கங்கள் யாவற்றோடும் கலந்துகொண்டார். சிலவற்றிற்குத் தலைவராகவும் தூண்டுகோலாகவுமிருந்தார். இவையும் போதாதென்று பெரிய பெரிய சமய நூல்களையும் மற்ற புத்தகங்களையும் ஒழிந்த நேரமெல்லாம் படிப்பார்.

இப்படிப்பட்ட ஒருவர் தென் இந்தியச் சபையில் முதல் முதலாக அத்தியட்ச பதவிக்கு உயர்த்தப்பெற்றது அப்பதவிக்கும் தென் இந்தியக் கிறிஸ்தவக் குழுவிற்கும் கௌரவத்தையே கொடுத்தது. அவர் அறிவிலும் திறமையிலும், குணத்திலும், பக்தியிலும் அப்பதவிக்கு அருகராகவே விளங்கினார். கிறிஸ்தவ நாடுகளிலெல்லாம் அவருக்குச் சிறப்பும் புகழ்ச்சியும் கிடைத்தது. என்றபொழுதிலும்

அசரியா மமதை கொள்ளவில்லை. அவர் எந்த நிலையிலிருந்து எந்த நிலைக்கு உயர்த்தப் பெற்றார் என்பதையும், அப்படி அவரை உயர்த்தியது யாது என்பதையும் அவர் ஒருநாளும் மறந்துவிடவில்லை. "நான் அடைந்த நிலையை கர்த்தருடைய கிருபையாலேயே அடைந்தேன்" என்று அவர் தமக்குத்தாமே நினைப்பூட்டிக்கொள்வார். "ஆத்ம வளர்ச்சியின் சிகரத்தை அடைந்த சிலர் ஒவ்வொரு மதத்திலும் தோன்றியிருக்கின்றார்கள். உதாரணமாக, அசிசியூர் பிரான்ஸிஸ் துறவியையும், மகாத்மா காந்தியையும் எடுத்துக் கூறலாம். ஆனால் சாதாரண மனிதர் மாற்றிப் பிறந்து நன்னெறியிற் செல்லும்பொழுது தான் கிறிஸ்து சமயத்தின் வல்லமை துலங்குகிறது" என்று அசரியா ஒரு தரம் கூறினார். அவர் அடைந்த சித்தியின் இரகசியம் இது வென்றே சொல்லவேண்டும். அவர் சாதாரண பேதைமக்களை நேசித்தார், அவர்களும் நல்லொழுக்கத்திலும் தெய்வ பக்தியிலும் முன்னேறிச் செல்லக்கூடுமென்று திரும்பத்திரும்ப இடித்துரைத்து பாமர மக்களுள் புதிய நம்பிக்கையை எழுப்புவதில் அசரியா ஒரு தீரன். அவர் தம்மை ஒரு அத்தியட்சர் என்றல்ல, சாதாரண சுவிசேஷகனென்றே அழைக்க விரும்பினார். வருங்காலத்தில் அவருக்கு ஒரு உன்னத நிலைமை அளிக்கப்படுமோ அல்லவோ; சொல்ல முடியாது ஆனால் ஒன்று நிச்சயம். இந்தியக் கிறிஸ்தவர்கள் அனைவரும் அவரைக் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பெற்றவர் என்றே கருதுவார்கள். சென்ற தலைமுறையில் தோன்றிய இந்தியக் கிறிஸ்தவத் தலைவர் மூவர் என்று ஸ்ரீ B. L. ராலியாராம் சொல்லுகின்றார். அவர்கள் மூவரும் நண்பர், மூவரும் Y.M.C.A. சேவையில் தம்முதற் பயிற்சியை அடைந்தவர்கள். அவர்கள் நாமங்களாவன K. T. பால், S. K. தத்தா, V. S. அசரியா.

SAMUEL VETHANAYAGAM AZARIAH

BY

G. V. JOB

விலை ரூபாய் 1-14-0